# விருப்ப நிலை பயிற்சியாளர் கையேடு

## (ஆர்வநிலை பயிற்சியாளர் கையேடு)

### இறைத் திருவுளச் சபை

**Trois –Rivieres, Canada**

(2001)

# பொருளடக்கம்

**சபை நிறுவுநர் கடிதம்** ........................................................................................................

**சபையின் இயக்குநர் கடிதம்**.........................................................................................

**அறிமுக உரை**.............................................................................................................................

**1. சபையின் வரலாற்றுப் பின்னணி**

**முன்னுரை**

1:1 : சபை நிறுவுநர்

**a) மனிதப் பண்பாளர் :**

**b) வாழ்க்கை வரலர்று:**

**1:2 : சபைத் தோற்றம்**

**a) தனிமையில் வாழ்ந்த மறைப்பணியாளர்**

**b) அமலமரி அன்னையின் மறை பரப்பு சபை**

**c) இறைத் திருவுளச் சபை :**

1:3 : சபையின் வளர்ச்சி

**a) முதல் விரிவாக்கம் :**

**b) மறைப்பணி விரிவாக்கம் :**

**c) உள் கட்டமைப்பு :**

**d) திருமணத் தம்பதியர் :**

**தொகுப்புரை** :

**2. அழைப்பின் குரல்**

**முன்னுரை :**

**2:1 : இறையழைத்தல், அது என்ன?**

**a) பழைய ஏற்பாட்டில் காணும் இறை அழைத்தல்கள்:**

**b) புதிய ஏற்பாட்டில் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டோர்:**

**c) கடவுளின் அழைத்தல்கள் பல வகை :**

2.2 துறவறக் குடும்பங்களில் அர்ப்பண வாழ்வு:

a) பொதுவான அர்ப்பணவாழ்வு:

b) துறவறக் குடும்பங்களில் அர்ப்பண வாழ்வு:

c) உலகியல் சார் துறவறத்தில் அர்ப்பண வாழ்வு:

2:3: இறை அழைப்புக்கு என˙பதில்

a) அழைப்பைத் தேர்ந்து தெளிதல்

b) இறைஅழைத்தல்களுக்கு செவிமடுக்க துணைபுரிபவை

2:4: சபையில் வாழ வேண்டும் என்ற ஆர்வம் (விருப்பம்) :

தொகுப்புரை :

## 3. சபையின் அப்போஸ்தலிக்க நோக்கம்

முன்னுரை:

பொது விளக்கம்:

தொகுப்புரை :

4. ஐந்து அடிப்படை மதிப்பீடுகள்

முன்னுரை:

4:1 : முதல் அடிப்படை மதிப்பீடு : ஆன்மீக வாழ்வு :

4.2 : இரண்டாவது அடிப்படை மதிப்பீடு : குழு

4:3 அடிப்படை மதிப்பீடு : நேர்மறை எண்ணம் :

4:4: நான்காவது அடிப்படை மதிப்பீடு தற்போதைய நிலை

4.5: ஐந்தாவது அடிப்படை மதிப்பீடு : கிறிஸ்தவ தொடர்புகள்:

தொகுப்புரை :

5. பொதுத் தொகுப்புரை

சபையின் ஆன்மீகம்

செபம்:

பின்னிணைப்பு :

**A.** தொடக்கநிலைப் பயிற்சி:தொகுப்பு விருப்பநிலை

**B.** திருமுழுக்கு அழைப்பு

**C.** மறைத்தூதுப் பணியின் நோக்கம் ஓர் இறையியல் கண்ணோட்டம்

**D.** குழு உருவாக்கப் பயிற்சிப் பள்ளி

அன்புள்ள சபை உறுப்பினர்களே!

‘விருப்ப நிலை பயிற்சியாளர் கையேட்டை இப்போதுதான் படித்து முடித்தேன். என்ன அருமை! ஆன்மீக ஊட்டத்திற்கான இறையருள் அனைத்தும் நிரம்பிக்கிடப்பதைக் கண்டேன். இந்தக் கையேட்டில் குறிப்பிடப்பட்ட நெறிமுறைகளை ஒருவர் கடைப்பிடித்தால் அவர் நிச்சயம் புனிதத் துவத்தை அடைய முடியும். இத்தகைய மனநிலையில் நாம் நிலைத்திருந்தால், நிச்சயம் நாம் நம் ஆண்டவர் விரும்புகின்ற சாட்சியாளர்களாக வாழ முடியும்.

இக்கையேட்டை வாசித்துக் கொண்டிருக்கும் போது நான் பலமுறை இவற்றால் கவர்ந்து இழுக்கப்பட்டேன். இதற்காக நம் ஆண்டவர் இயேசுவுக்கும் அன்னை மரியாளுக்கும் நன்றி செலுத்தினேன். அன்று சிமியோன் குழந்தை இயேசுவைக் கைகளில் ஏந்தி கடவுளுக்கு நன்றிப் பாடல் பாடிய போது இருந்த அதே உணர்வைப் பெற்றேன். நானும் எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிக் கீதம் பாடினேன்.

இயேசுவை அறிவதிலும், அன்பு செய்வதிலும் அவருக்குப் பணிபுரிவதிலும், இயேசுவால் ஆட்கொள்ளப்படுவதிலும் எந்த விதத்திலும் நம் சபை சளைத்ததல்ல.

நம் சபையைத் தொடங்குவதற்கு கடவுள் தந்த அருளுக்கும், சபை உறுப்பினர்களுக்கு உயர்ந்த எண்ணங்களோடு, இயேசுவின் சாட்சியாளர்களாக மகிழ்வோடு வாழ தங்களைக் கையளிக்க ஐந்து ஆன்மீக நடைமுறைகள் வழியாக வாழ முன்வரும் ஒவ்வொருவரையும் நினைத்து நான் கடவுளுக்கு ஒவ்வொரு நாளும் நன்றி கூறுகிறேன்.

 லூயி மரிய பாரண்ட்.

Cap-de-laMadeleine, Quebec

ஆகஸ்ட் 30, 2000.

அன்புள்ள விருப்பநிலை பயிற்சியாளரே!

கடந்த சில நாட்களாக, நீங்கள் உலகு சார் சபையில் உங்களை அர்ப்பனித்து வாழ விருப்பம் கொண்டீர்கள். இப்போது இறைத் திருவுளச் சபையில் விருப்ப நிலைப்பயிற்சியைத் தொடங்க இருக்கிறீர்கள். உங்கள் பயிற்சிக்காலம் பல ஆண்டுகள் நீடிக்கும். இப்பயிற்சிக் காலங்களில் நீங்கள் தூய ஆவியானவரின் வழிகாட்டுதல்களைத் தேட வேண்டும். ஒவ்வொரு அழைத்தலும் கடவுளின் அழைத்தலுக்குச் செவிமடுத்து, உங்கள் இதயத்தின் ஆழத்திலிருந்து இதற்கு ஆம் என்று பதில் கொடுப்பதே ஆகும். பெந்தகோஸ்தே திருவுவிழாவில் இயேசுவால் அனுப்பப்பட்ட தூய ஆவியானவரிடம் செல்ல தயங்க வேண்டாம். அவர் தான் உங்களுடைய உண்மையான நண்பர், உங்களுள் புதைந்து கிடக்கும், நல்லவற்றையும். அழகானவற்றையும் இனம் கண்டு கொள்ள துணை நிற்கிறார் என்பதை நம்பலாம்.

இந்த விருப்ப நிலைப் பயிற்சியாளர் கையேடு பல்வேறு செய்திகளைத் தாங்கி கருவூலம் ஆகும். நீங்கள் இவற்றை ஆழ்ந்து படித்து, சிந்தித்து, தியானித்து இந்தக் கருத்துக்களை, சபையின் சக நண்பர்களோடு கலந்துரையாடித் தெளிவு பெற வேண்டும். இறைத் திருவுளச் சபையில் நாம் ஒரு குழுவாகச் செயல்பட வேண்டும் என்பது நம் அடிப்படைக் கொள்கையாகும். எனவே அடிப்படைக் கொள்கையான குழுவாழ்விற்கு, விருப்ப நிலைப் பயிற்சியாளர் கையேடு வழித் துணையாக இருக்கிறது. உலகுசார் அர்ப்பண வாழ்விற்கு உங்களை கையளிக்கும்போது நீங்கள் தனியாள் அல்ல, மாறாக உங்கள் அழைத்தலை, அர்ப்பணத்தை, வாழ்வில் கடைப்பிடிக்க, உன் சபையின் சக உறுப்பினர்களும் உனக்கும் பெருந்துணையாக இருக்கிறார்கள். நீங்கள் ஒவ்வொருவரும் எங்களுக்கு முக்கியமானவர்கள். அதிலும் சிறப்பாக பயிற்சிக் காலத்தில் உங்களை முழுவதும் அர்ப்பணித்து, முழு ஈடுபாட்டோடு வாழ முன்வரும் போதும், இன்னும் நீங்கள் எங்களுக்கு உரியவர்களாகிறீர்கள்.

பயிற்சிக் காலத்தின் முதல் படிதான் விருப்பநிலைப் பயிற்சி. இப்பயிற்சி இறைத் திருவுளச் சபையின் நோக்கம், வாழ்வு, பணிகள், மறைத்தூது நோக்கம் இவற்றை அறிந்து கொள்ளத் துணை புரிகிறது. இதன் வழியாக இயேசுவை இன்னும் நெருங்கிப் பின்பற்ற இந்தப் பயிற்சி உங்களைப் பயிற்றுவிக்கிறது.

அன்னை மரியாள், உங்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்து உங்களுக்குத் துணை புரிவாராக!

# அறிமுக உரை அமைப்பு

இறைத் திருவுளச் சபையில் உறுப்பினர்களாக சேர விருப்பமுள்ளவர்களுக்குத் தரப்படும் பயிற்சி மூன்று நிலைகளைக் கொண்டது. (1) விருப்பநிலைப் பயிற்சி (2) தகுதிகாண் பயிற்சி (3) உறுதி மொழி அல்லது அர்ப்பணப் பயிற்சி.

இங்கே விருப்ப நிலைப் பயிற்சி வழியாக உங்களை வழிநடத்தி இறுதியில் சபையில் நிலைப்புத் தன்மை உறுப்பினர்களாக வாழ உங்களை இட்டுச் செல்கிறது. பல்வேறு குழுக்கள் இவற்றைச் சிந்தித்து சீர்தூக்கித் தயாரித்து இறுதியில் இந்த கையேட்டைத் தொகுத்து வழங்கிய அனைத்து நல் உள்ளங்களையும் நன்றியுணர்வோடு நினைவு கூர்கிறோம்.

உலகிலுள்ள பல்வெறு நாடுகளில் பரவி, இறைப் பணி ஆற்றி வருகின்ற இறைத் திருவுளச் சபை குடும்பத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கிறோம். நீங்களும் எங்களில் ஒருவராக இணைந்து பணியாற்ற அன்புடன் அழைக்கின்றோம்.

உங்களுடைய பயிற்சிக் காலம் முழுவதும் நீங்கள் தான் பயிற்சியின் ஊற்று. அதற்காக நீங்கள் தனித்து விடப்படமாட்டீர்கள். ஏற்கனவே நீங்கள் இறைத் திருவுளச் சபை உறுப்பினர்களோடு கொண்டுள்ள உறவு உங்களுக்கு வழிகாட்டுதலாகவும், வழித் துணையாகவும் இருக்கும். எனவே நீங்கள் எங்கள் குடும்பத்தின் உறுப்பினர்களாக இணைவதை நினைத்து மகிழ்ச்சியடைகின்றோம், பெருமைப்படுகின்றோம்.

விருப்பநிலைப் பயிற்சியின் முக்கிய நோக்கம் சபையானது உங்களைப் பற்றி முழுமையாகத்தெரிந்து கொள்வதற்கே! சிறப்பாக உங்களுடைய பண்பு நலன்கள், நோக்கங்கள், விருப்பங்கள் இவற்றைக் கண்டு கொள்வதற்கே. அதே வேளையில் பயிற்சியாளர் சபையின் நோக்கம், வாழ்வு முறை, ஒழுங்குகள், பணிகள் இவற்றைத் தெரிந்து கொள்வதற்கும் இப்பயிற்சி பயன்படுகின்றது. (சபை ஒழுங்குகள். அதி II, எண் 67).

எனவே உங்கள் அழைத்தல் வாழ்வில் முக்கியமான நிலையாகும். ஏனென்றால் உங்கள் அழைத்தல் வாழ்வைப் பற்றித் தேர்ந்து, தெளிந்து தீர்க்கமான முடிவு எடுக்கவும், இறைத் திருவுளச் சபையின் வாழ்வு, பணி, ஒழுங்கு முறைகள் உமது வாழ்வுக்கு ஏற்றதாக உள்ளதா என்பதைக் கண்டு கொள்வதநற்கும் இப்பயிற்சி உங்களுக்குத் துணை புரிகிறது. நீங்கள் சபையின் பிற உறுப்பினர்களோடும், குழுவோடும் இணைந்து வாழ்ந்து பல்வேறு அனுபவங்களைப் பெற்று, நீங்கள் சபையைப் பற்றி, படித்த, கேட்ட, சிந்தித்த, தியானித்த பல்வேறு அம்சங்களை பிற உறுப்பினர்களோடு இணைந்து வாழும் போது இறைத் திருவளச் சபையின் உள்ளார்ந்த வாழ்வைக் கண்டு கொள்ள உங்களைப் பண்படுத்த இப்பயிற்சி உங்களுக்குப் பெருந்துணைபுரிகிறது.

இந்தக் கையேட்டில் குறிப்பிட்டுள்ள அம்சங்களை உன்னோடு இருக்கின்ற குருவோடோ, அல்லது உறுப்பினரோடோ, அல்லது உனது வழிகாட்டியோடோ, கலந்து ஆலோசித்து, சிந்தனை செய். அதே வேளையில் உன் இதயத்தின் ஆழத்தில் உன்னோடு பேசும் ஆவியானவரின் குருலுக்கும் செவி கொடுக்க மறந்திடாதே! உலகியல் சார்ந்த துறவற சபையில் தன் வாழ்வை அர்ப்பணிக்க வந்த நீ, உலகியல் சூழலில் உன் அர்ப்பண வாழ்வை வாழ முன்வர வேண்டும். இந்த அர்ப்பண வாழ்வு நற்செய்தியின் ஒளியிலும், சபையின் நெறிமுறைகளுக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். எனக்கு நேரம் இல்லை என்று கூறாதே! மாறாக நான் நேரத்தை எடுத்துக் கொளவேன் என்று கூறவேண்டும்.

சில சமயங்களில் நீ தனிமையை உணரலாம். இப்படிப்பட்ட தருணங்களில் செபத்திற்கு கடவுள் உன்னை அழைக்கிறார் என் கடவுளுக்கு நேர்மையோடு அர்ப்பணி. அதேவேளையில் நீ உனக்குள்ளே ‘நான் நேரத்தை ஒதுக்கி என் பயிற்சியில் முழு ஈடுபாட்டோடு பங்கு கொள்வேன் என் சுதந்திரத்தை பொறுப்புள்ள விதத்தில் பயன்படுத்துவேன் என்று உறுதி எடு. எப்போதும் தனிமையில் இருப்பது அர்ப்பண வாழ்வில் ஈடுபட்டவர்க்குப் பலன்தராது. ஏனென்றால் நாம் உலகில் புளிக்காரமாக இருந்து, நமது அர்ப்பண வாழ்வின் மூலம், இயேசுவுக்குச் சான்று பகர நமது எடுத்துக்காட்டான வாழ்வின் மூலம் வெளிப்படுத்த அழைக்கப்படுகிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது.

அதே வேளையில் நாம் பிறரைப் பிரிந்து தனிமையைத் தேடக்கூடாது. ஏனென்றால் விருப்பநிலைப் பயிற்சிக் காலத்தில் பிறரின் உதவி மிக அவசியமாகத் தேவைப் படுகின்றது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

என் சபையில் விருப்ப நிலைப் பயிற்சியைத் தேர்ந்து கொண்டதின் மூலம் உங்கள் வாழ்வில் அழகான சவாலைத் தேர்ந்து கொண்டீர்கள், நீங்கள் வெற்றி பெற வேண்டும் என்பதை மனதில் கொள்ளுங்கள். இறைத் திருவள சபை உங்களை நம்புகின்றது. தாய்த் திரு அவை உங்களை நம்புகின்றது. இயேசுவும் உங்களை நம்புகிறார். இயேசு உங்களை இறைத் திருவுளச் சபையில் பயிற்றுவித்து உங்களை உலகிற்கு அனுப்பி, பணி புரிய இயேசு விரும்புகிறார்.

பயனுள்ள விருப்ப நிலை அனுபவத்தைப் பெறுங்கள்.

## 1. சபையின் வரலாற்றுப் பின்னணி

**முன்னுரை :**

நம்சபையின் மூன்றாவது பாதுகாவலர் வணக்கத்திற்குரிய ஆயர் பெர்னான்ட் லாகிரோயிக்ஸ் CJM அவர்கள் நம் சபையின் வெள்ளி விழா ஆண்டின் போது, பின்வருமாறு குறிப்பிடுகிறார். “25 ஆண்டுகள் என்பது திரு அவையில் உள்ள ஒரு

நிறுவனத்திற்கு நீண்ட நெடிய காலம் அல்ல, மாறாக இது ஒரு தொடக்கம் தான்.'' இன்னும் தொடக்க கால உற்சாகமும், நம்மோடு வாழும் சபை நிறுவனரின் தனிவரமும் இன்றும் நம்மில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. உங்கள் சபையின் நிறுவனரான அருட்திரு லூயி மரிய பாரண்ட் OMI, அவர்களின் வேகமும், விறுவிறுப்பும் கடவுளுக்கு நன்கு தெரியும் (Album-Souvenir 25, 1938, p.4)

உண்மையிலேயே அருட்திரு பாரண்ட் அவர்களைத் தனிப்பட்ட முறையில்தெரிந்தவர்களுக்கு மட்டும்தான் அவரது உற்சாகத்தையும் ஈடுபாட்டையும் கண்டுகொள்ள முடியும், அவரது இரங்கும் உள்ளம், திருத்தூதர்களின் உள்ளம், கட்டுப்பாடற்ற கடமையுணர்வையும் அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் மிக எளிதில் கண்டு கொள்வார்கள். இந்த அதிகாரத்தில் நம் ஆர்வத்தை நிறைவு செய்கின்ற கருத்துக்களைக் குறிப்பிடுவது மட்டுமல்ல மாறாக நம் சபை தோன்றுவதற்குக் காரணமாக இருந்த வரலாற்றுப் பின்புலத்தையும், துறவற வாழ்வு, மறைத் தூதப் பணி இவற்றின் மீது நம் சபை நிறுவனர் கொண்டிருந்த ஆர்வத்தையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதற்காகவே!

நம் சபை நிறுவனர் அருட்திரு லூயி மரிய பாரண்ட் அவர்களின் எண்ணங்களும், மறைத் தூதுச் செயல்பாடுகளும் தந்தையவர்களைத் தூண்டியெழுப்பி. அவரது விசுவாச வாழ்வின் உச்சகட்ட வெளிப்பாடாக இந்த திரு அவைக்கு, இறைத் திருவுளச் சபையைக் கொடுக்க இறைவனின் அருள் அவரை வழிநடத்தியதை நாம் தெளிவாகக் கண்டுணரலாம். நம் சபை தோன்றிய வரலாற்றுப் பின்னணியைப் பார்க்கும்போது நம் விண்ணகத் தந்தை தன் மக்கள் மீது அன்பு கொண்டு அவர்களின் நல் முன்னேற்றத்திற்காகச் செயல்பட்டுள்ளார் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி கண்டு கொள்ளவும், விண்ணகத் தந்தையின் மகத்தான செயல்களைக் கண்டு வியந்து அவருக்கு நன்றி செலுத்தவும் நம்மை தூண்டியெழுப்புகிறது.

எனவே நமது சபையின் தோற்றத்திற்கான மூன்று நிலைகளைச் சுருக்கமாகக் காண்போம். இவை நம் கடவுள் எவ்வாறு தன் இறைத் திட்டத்தில் நம் சபையை ஏற்படுத்தி, இன்றும் அதைத் தொடர்ந்து வழி நடத்திவருவதையும் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்வதையும், நன்றியுணர்வோடு கடவுளைப் போற்றிப் புகழவும் நம்மை இட்டுச் செல்கின்றது. பின்வரும் பக்கங்கள், கீழ்க்கண்ட தலைப்புகளில் நமக்குத் தெளிவைத் தருகின்றது.

1:1 : சபை நிறுவுநர்

1:2 : சபைத் தோற்றம்

1:3 : சபையின் வளர்ச்சி

**1:1 : சபை நிறுவுநர்**

திரு அவையிலுள்ள எல்லாத் துறவற சபைகளின் தோற்றத்தைக் கண்யோக்கும் போது அது சபை நிறுவுநரின் உள்ளத்தின் ஆழத்தில் எற்பட்ட மாற்றத்தின் விளைவாகத்தான் அமைந்துள்ளது என்பதை நாம் கண்டுணர்கிறொம். மனித வாழ்வின் தொடக்கமும் வளர்ச்சியும் போல துறவற சபையின் அருள் தோன்றி வளர்ந்த காலமாகக் கருதப்படுகின்றது.

இதேபோலத்தான் நம் சபை நிறுவநர் அருட்திரு லூயி மரிய பாரண்ட், தன் உள்ளத்துக்குள் வேரூன்றி வளர்ந்த அனுபவம் காலம் நிறைவுற்றபோது கடவுளின் அருளால் அது ஒரு உலகியல் துறவற சபையாக உருவெடுத்தது. இவ்வாறு நம் சபை நிறுவுநர் உள்ளத்தில் இருந்த இறை அனுபவம் வளர்ந்து ஓர் ஆன்மீகக் குழந்தையாக வெளிவந்தது.

ஒவ்வொரு சபையின் நிறுவுநர் அல்லது ஆன்மீக இயக்கங்களைத் தொடங்கியவர்களை கண்ணோக்கும் போது கடவுள் இவர்களின் வழியாக உலகுக்குக் கொடுத்த அருளின் கொடையாகவே காண்கின்றோம். கடவுள் இத்தகைய பணிவாழ்வு இலவ்வுலகுக்கு வழங்க முன்வரும் போது இதற்கென்று ஒருவரைச் சிறப்பாகத் தேர்ந்தெடுத்து, தனிப்பட்ட விதத்தில் அவரைத் தயார் செய்து, சிறப்பாக அவரை சிறு பருவ முதல் அவரைப் பல வகைகளில் பண்படுத்தி. சில நாட்களில் இறை வெளிப்பாடுகளைக் கொடுத்து வழி நடத்தி வருவதைக் கண்டு கொள்கிறோம்.

இவ்வாறு கடவுள் தான் தேர்ந்து கொண்டவர்களின் உள்ளத்தில் சிறப்பான அருளைத் தந்து, தனிப்பட்ட வரத்தில் அவர்களை ஆவியானவர் தம் அருட் கொடைகளால் வழிநடத்தி வருவதையும், இவை சிறிது சிறிதாக வளர்ந்து செயல்பாட்டுக்கு இட்டுச் செல்லும் வரை கடவுளின் அருள் இவர்களை வழிநடத்தி வருவதைக் கண்டுணர்கிறோம்.

இவ்வாறு கடவுள் தான் தேர்ந்து கொண்டவர்களின் உடல், உள்ளம், பலம், கொடைகள் அனைத்தையும் ஆவியின் அருங்கொடைகளால் ஒருங்கிணைத்து, ஒரு குறிப்பிட்ட காலத்தில் செயல்பாட்டுக்கு இட்டுச் செல்லும் வரையிலும் அவர்களைத் தொடர்ந்து அதே ஆற்றலிலும், ஆர்வத்திலும் நிலைத்து நின்று மனம் தளராமல் செயல்பாட்டுக்கு வரும் வரை அவர்களைப் பாதுகாத்து, வழி நடத்தி வருகிறார்.

இத்தகைய ஆவியானவரின் செயல்பாடுகளை நம் சபையின் நிறுவநர் அருட் திரு பாரண்ட் அவர்களின் வாழ்வில் வெளிப்ட்டதையும், செயல்பட்டதையும் கண்கூடாகக் காண்கின்றோம்.

**a) மனிதப் பண்பாளர் :**

யாரையும் பார்த்தவுடன் தன் வயப்படுத்தக் கூடியவர். அனைவருடன் எளிதாகப் பழகக்கூடியவர். அவரிடம் செல்லும் அனைவரும் அவருடைய பாசமான வரவேற்பைப் பெறமுடியும்.

மிக உயரமான உருவம் கொண்டவர். ஆனால் கனிவான, இரக்கம் நிறைந்த முகத்தை உடையவர். அவரது கனிவான பார்வையும். சிரித்த முகமும் அனைவரையும் கவர்ந்திழுக்கும் ஆற்றல் கொண்டது. அவருடைய ஆழமான இறையனுபவமும், கள்ளம் கபடற்ற உள்ளமும் அவரது முகத்தில் மிளர்வதை அவரைப் பார்ப்பவர் அனைவரும் எளிதில் கண்டுணரலாம். அவர் நம்மோடு உரையாடும் போது அவரது தெளிவான, நேர்மையான கருத்துக்கள் நம் இதயத்தையும் கவர்ந்து இழுக்கும் ஆற்றல் கொண்டது. அன்றொரு நாள் இயேசுவைச் சந்தித்த நத்தானியேரிடம் இயேசு, ‘‘நான் உன்னை அத்திமரத்தின் கீழ் இருந்த போதே கண்டு கொண்டேன்’’ என்று கூறியது போல, தன்னைச் சந்திக்க வருபவரின் உள்ளத்து உணர்வுகளைக் கண்டு கொண்டு அவர்களைக் கவர்ந்து இழுக்கும் காந்த சக்தி குணம் கொண்டவர். அவருடன் சிறிது காலம் வாழ்ந்தாலே போதும் அவரது தந்தைக்குரிய பாசத்தை உணரமுடியும். மேலும் அவரது பல்வேறு திறமைகளைக் கொண்ட ஆளுமையைக் கண்டு கொள்ளலாம்.

நம் சபை நிறுவநர் ஓர் நேர்மறை மனிதர், பிறரிடம் உள்ள நல்ல எண்ணங்களை எளிதில் கண்டு கொள்ளும் வல்லமை படைத்தவர். குறைகள் பல கண்டாலும் நிறைவையே காணும் பண்புடையவர். இத்தகைய பண்பு இன்று நேற்றல்ல மாறாக அவரது குழந்தைப் பருவத்திலிருந்து இருந்து வந்ததை இவருடன் பழகியவர்கள் மிக எளிதில் கண்டு கொள்வர்.

பிறருக்கு உதவி புரிய வேண்டும் என்ற நல்லெண்ணம் வெறும் எண்ணத்தில் மட்டுமல்ல செயல்வடிவங்களிலும் வெளிப்படுத்தப்பட்டன. இவரது பணிகளைப் பெற வந்தவர்கள் இவரது இனிய எளிய வரவேற்பையும் உதவி புரிய வேண்டும் என்ற பரந்த உள்ளத்தையும் கண்டு கொண்டனர். இவ்வாறு இவருக்குள் இருந்த இத்தகைய உறவுநிலைதான் பிற் காலத்தில் தன் சபையில் உள்ளோரும் இத்தகைய உள்ளத்தையும் செயல்பாட்டையும் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக மூன்று ஐந்து வகையான ஆன்மீக செயல்பாடுகளை முன்னிருத்துகின்றனர்.

தன் பணிவாழ்விலவ் சந்தித்த சிக்கலான சூழ்நிலைகளும், இத்தகைய சிக்கலான சூழ்நிலைகளை மேற்கொள்ள இறைவனிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆற்றல்களும் மற்றவர்களைவிட இவருக்கு அதிகமாகக் கைகொடுத்தன. பல்வகைக் குணங்களையுடைய பண்பாளர். இவரிடம் மறைந்து உள்ள அனைத்துப் பண்புகளையும் நாம் காண்பது அவ்வளது சுலபமல்ல.

ஆனால் அவரால் கவர்ந்திழுக்கப்பட்டவர்கள் அல்லது அவரிடமிருந்து உதவி பெற்றவர்கள் இவரிடமிருந்து கண்டுகொண்ட பண்பு நலன்கள் பலருக்கும் இவர்மேல் நாட்டங் கொள்ளவும் இவரது மன உணர்வுகளைப் புரிந்து இவரைப் பின்பற்றுவதற்குப் பேருதவியாக இருந்தது.

பிறர் சொல்வதைக் கூர்ந்து கேட்கும் பண்பு இவரிடம் மேலோங்கி இருந்தது. தன்னைச் சந்திக்க வருபவர்களுக்கு நேரம் ஒதுக்கி அவர்களின் கருத்துக்களை மிகக்கூர்ந்து கவனித்துக் கேட்கம் பண்பு இவரிடம் உண்டு. இத்தகைய உயர்ந்த பண்பை நம் ஆண்டவர் இயெசுவிடமிருந்து நிச்சயமாகப் பெற்றிருக்க வேண்டும். ஏனென்றால் இயேசு இவரிடம் பேசுவதைக் கூர்ந்து கேட்கும் பண்பை வளர்த்துக் கொண்ட காரணத்தால் தான் பிறருடைய கருத்துக்களையும், குறைகளையும் செவிகொடுத்துக் கேட்கும் பண்பு இவரிடம் மிகுந்திருந்தது என்று நம்மால் கண்டு கொள்ள முடிகிறது.

பிறருக்கு உதவும் பண்பு இவரில் மிகுந்திருந்தது. கடவுளின் திட்டம் மக்களிடமும், நிகழ்வுகளிலும் வெளிப்படுத்தப்படுகிறது என்பதை உணர்ந்த காரணத்தால் தான் பிறருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் இவரிடம் மேலோங்கியிருந்தது. கடவுளின் திட்டம் மரியாளுக்கு அறிவிக்கப்பட்டவுடன் மனமுவந்து அவற்றை நிறைவேற்ற தன்னை முழுவதும் கடவுளுக்கு அர்ப்பணித்த அன்னை மரியாளைப் போல நம் சபை நிறுவநரும் இறைவனின் திட்டம் இதுதான் எனத் தெரிந்ததும் அதைச் செயல்படுத்த தன்னை முழுவதும் இறைவனுக்கு ஒப்புக் கொடுத்தார்.

இவரது செபவாழ்வு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதிகாலலையில் எழுந்து செபத்திலும், காட்சித் தியானத்திலும், ஆன்மீக வாசகங்களை வாசிப்பதிலும் அதிக நேரம் செலவிட்டார். இவரது நற்கருணைக் கொண்டாட்டமும், திருப்பலியில் கேட்ட வாசகங்களைச் சிந்தித்தவற்றிலிருந்தும்தான் இவரது ஆன்மீகமான 'ஐந்து வகை' ஆன்மீக செயல்பாடுகள் தோன்றின எனலாம். இதுவே இவரது மறையுரைகளிலும் சொற்பொழிவுகளிலும் எதிரொலித்தன.

இவர் ஆன்மாக்கள் மீது கொண்ட தணியாத தாகம் தான் இவரைப் பிறரண்புப் பணிகளில் ஈடுபட இவரைத் தூண்டியது. எனவே தான் மறையுரைகள், சொற் பொழிவுகள், ஒப்புரவு அருட்சாதனம் மற்றும் ஆன்மீக வழிகாட்டுதல்கள் போன்ற செயல்பாடுகளில் அதிகநேரம் செலவிட்டார், இதற்காக வெகுதூரம் செல்லவும் தயங்கவில்லை. இத்தகைய இவரது செயல்பாடுகளைக் கண்ட பலரும் வியந்து பார்த்தனர். ஆனால் மறைபரப்புப் பணியில் இவர் கொண்டிருந்த ஆர்வம், இத்தகைய

பணிகளைச் செய்ய இவருக்கு ஆற்றலும் சக்தியும் அளித்து தன் வாழ்வில் அதிகமான நேரங்களை இதற்கென்று ஒதுக்க இவரை உந்தித்தள்ளியது.

அன்னை மரியாள் மீது இவர் கொண்ட அளவு கடந்த பக்தி இவரை வழிநடத்தியது மட்டுமல்ல இந்த அன்பை பிறரரோடும், மற்றும் தனது மறையுரைகளிலும் எப்போதும் எடுத்துரைத்தார். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அன்னை மரியாளைப் பற்றி எடுத்துரைக்காமல் இருக்க மாட்டா, ஒரு வேளை வாய்ப்பு இல்லையென்றாலும் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ளத் தவறவில்லை.

இவரது தாழ்ச்சி உண்மையானது, நேர்மையானது. இவரது சீடர்கள் இதன் வெளிப்பாட்டைப் பலமுறை இவரது வாழ்க்கையில் கண்டு கொண்டார்கள். இவரது பொறுப்புக்களைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளத் தயங்கியதில்லை. கடவுளின் திருவுளப்படி இவர் தேர்ந்து தெளிந்து சில நேரங்களில் தன் பொறுப்புக்களில் இருந்து முழுமையாக விலகி பிறரிடம் ஒப்படைப்பார் தேவைப்படின் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளாமல் மற்றவர் ஏற்று வழிநடத்துமாறு முன்வருவார். இவ்வாறு தனது வாழ்வின் நிகழ்வுகள் மூலம் சாட்சிய வாழ்வு வாழ்ந்தார். தன் சகோதர சகோதரிகளின் உண்மையான தொண்டனாக பணியாற்றுவதில் இன்பம் கண்டார்.

அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவராக வாழ்ந்தார். தோல்விக்கோ, சோகத்திற்கோ ஒருபோதும் அடி பணியமாட்டார். தான் சந்திக்குமு் ஆண்கள், பெண்களிடம் முழு நம்பிக்கை கொள்வார், கடவுள் அவர்களுக்கு வழங்கிய கொடைகளை கண்டு கொள்ள தயங்கியதில்லை. நம்பிக்கையில் வேரூன்றி, கடவுளின் பராமரிப்பில் வாழ்ந்த காரணத்தினால்தான் பிறரை நம்பி ஏற்று வாழுகின்ற பண்பு இவரில் குடி கொண்டிருந்த காரணத்தினால்தான், பல புதிய செயல்பாடுகளை முன்னெடுக்க இவருக்கு உறுதுணையாக இருந்தது.

இத்தகைய அனைத்து பண்புகளால் இவர் எப்போதும் அமைதி நிறைந்தவராக வாழ்ந்தார். இக்கட்டான சூழ்நிலைகளிலும், தீர்க்க முடியாத பிரச்சனைகள் மத்தியிலும் இவர் எப்போதும் ஒற்றுமையை நிலைநாட்டுவதிலே கவனம் செலுத்தினார், மக்கள் மத்தியிலும், குழுக்கள் இடையேயும் நட்புறவை வளர்ப்பதிலே நாட்டம் கொண்டார். இத்தகைய ஆற்றல் மிக்க பண்புகள் அனைத்தும் இவரது நம்பிக்கையில் வேரூன்றி இருந்தது. மேலும் குடும்ப சூழலிலிருந்தும் பெற்றுக் கொண்டார். மேலும் அமல அன்னையின் மறைபரப்பு சபையில் இவர் பெற்றுக் கொண்ட ஆன்மீக பயிற்சிகளும் இவருக்குப் பெருந்துணையாக இருந்தது என்றால் அது மிகையாக!

**வாழ்க்கைச் சரித்திரம் :**

ஒருவருடைய ஆளுமையும், இலட்சிய வாழ்வும் வேரூன்றி வளர்வதற்கேற்ற விளைநிலம் எது என்றால் அது ஒருவரின் குடும்ப சூழ்நிலையும், மற்றுமு் அவர் இளமையில் பெற்ற பயிற்சி அனுபவங்கள் தான் என்பது மறுக்கமுடியாத நம்பிக்கை.

லூயி மரிய பாரண்ட் ஒரு நல்ல கிறிஸ்தவக் குடும்பத்தில் 1910 ஆண்டு ஜூலை 12 ஆம் நாள் பிறந்தார். கியூபெக் மாநிலத்தில் உள்ள புனித கமில் தே பெல்லகாசே என்ற கிராமப்புற பங்கில் வாழ்ந்தார். எனவே இவரது இளமை வாழ்வு பங்குக் கோவிலைச் சுற்றியே அமைந்திருந்தது. எனவே நல்ல நம்பிக்கைச் சூழலிலே வாழ்ந்தார். அதன்பின் இவரது குடும்பம் கியூபெக் நகரிலுள்ள புனித சவ்வேயூர் பங்கிற்குச் சென்று வாழ்ந்தார்கள்.

இவருடைய தந்தை கிலேயோபாஸ், எளிமையும், அடக்கமும் நிறைந்த, பயந்த குணம் உடைய முன்னாள் பள்ளி ஆசிரியை மணந்து கொண்டார். இவரது தாய் ஒரு நல்ல பக்தியுள்ள பெண்மணி. இவளது பெயர் அடெல் ஜோபின். இவர் தனது குடும்ப வாழ்வின் மூலம் 13 குழந்தைகளுக்குத் தாயானார். ஆனால் இறுதி மூன்று குழந்தைகள் மட்டும்தான் உயிரோடு இருந்தார்கள். இவர்கள் ரோலண்ட், லூயி மரியா, செசிலே ஆகிய மூவரும் ஆவர்.

இவரது தந்தை ஒரு கடின உழைப்பாளி. இவரது கடின உழைப்பின் மூலம் தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். இவர் பல்வேறு பணிகளை மேற்கொண்டார். நெல்மணி மற்றும் வைக்கோல் வியாபாரி, குதிரை வியாபாரி, அரசியல் ஒருங்கிணைப்பாளர் போன்ற பணிகள் குறிப்பிடத்தக்கவை. எனவே தான் தன் தந்தையைப் போல நம் சபை நிறுவுநரும் பல திறமைகளில் சிறந்தவராக வாழ்ந்தார். இவரது குடும்ப சூழலும், அவர் தங்கியிருந்த பங்கின் வாழ்க்கை அனுபவமும் இவர் பல திறமைகளில் சிறந்தோங்கவும், நல்ல ஆற்றல் உள்ளவராகவும் வளர இவருக்கு இத்தகைய சூழல் பெருந்துணைபுரிந்தது.

மகிழ்வோடு சென்று கொண்டிருந்த இவர்கள் குடும்பத்தில் புயல் ஒன்று வீசியது. அருட்தந்தையின் தந்தை தனது 37ஆவது வயதில் இறையடி சேர்ந்தார். அப்போது 34 வயது நிரம்பிய இவரது தாயாருக்கு குடும்ப சூழலை மனதில் கொண்டு தேசிய சபையில் செயலராகப் பணிபுரிய வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால் அவரது தாயார் அதை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டுத் தன் குடும்பத்தோடு, கியூபெக் நகரிலுள்ள புனித சாவுவேர் பங்கிற்கு இடம் பெயர்ந்தார். அங்கு சிறு சிறு வேலைகளைச் செய்து தன் குடும்பத்தைக் கவனித்து வந்தார்.

திருமதி பாரண்ட பிறப்பிலேயே உளவியல் பண்புகளைக் கொண்டகாரணத்தினால், ஒவ்வொரு நாளும் மாலையில் தன் பிள்ளைகளை ஒன்று கூட்டி கலந்துரையாடல் செய்வதுண்டு. அப்போது பல்வேறு கருத்துக்களை அவர்கள் கருத்துப் பரிமாற்றம் செய்யும் பழக்கத்தை வளர்த்து வந்தார். இதன் மூலம் தன் பிள்ளைகளின் மன உணர்வுகளையும், எண்ண ஓட்டங்களையும் நன்கு கண்டு கொண்ட அவர்களின் தாயார் ஒவ்வொருவரின் எண்ண ஓட்டத்திற்கு ஏற்ப வழி நடத்திவந்தார்.

கனிவோடும். அதே வேளையில் கண்டிப்புடனும் தன் பிள்ளைகளை வளர்த்து வந்தார். ஒவ்வொரு நாளும் தவறாமல் தன் பிள்ளைகள் திருப்பலியில் பங்கெடுக்கவேண்டுமென்று வலியுறுத்துவார். இவ்வாறு இவரது தாயின் வழிகாட்டுதலாலும், பொறுப்புணர்வாலும் வளர்க்கப்பட்ட லூயி மரிய பாரண்ட் இக்கட்டான சூழல்களில் எவ்வித பாதிப்பும் இன்றி நிறைவுள்ளவராக வளர்க்கப்பட்டார்.

இளம் வயதை அடைந்த லூயி மரிய பாரண்ட் துடிதுடிப்பும் குறும்புத்தனம் நிறைந்தவராக விளங்கினார். ஆனால் தவறு செய்பவர்களிடம் அன்புடனும், தாராளமனத்துடனும் நடந்து கொள்வார். கியூபெக் நகரில் பாத்ரோ என்னுமிடத்தில் பணியாற்றிய வினசெந்தியன் குருக்களின் மேற்பார்வையில் வழிநடத்தப்பட்ட இளையோர் குழுவில் முழு ஈடுபாட்டுடன் கலந்து கொண்ட இவருக்குப் பல்வேறு பண்பு நலன்களைக் கற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. இங்கு பெற்ற பயிற்சிகளின் பலனாக பண்படுத்தப்பட்ட குணநலன்களையும், இளவயதில் உள்ள முழு ஆற்றலையும் ஆக்கப் பூர்வமான செயல்களில் ஈடுபட்டு தன்னை ஒரு பண்பாளாராக உயர்த்திக் கொண்டார். இவருக்கு விளையாட்டிலும் ஆர்வம் எப்போதும் இருந்ததால் நல்ல பயிற்சிகளைப் பெற்று தன் உடல் நலத்தை வளர்த்துக் கொண்டார். இவரது இருபதாவது வயதில் அமெரிக்க தரைப்பந்துக் குழுவில் சேர்ந்து விளையாட இவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது (யுஅநசைையட டீயளநடியடட வுநயஅ). ஆனால் கடவுளோ இவருக்கென ஒரு மாற்றத்திட்டத்தை வைத்திருந்தார். ஏனென்றால் தனது நான்காவது வயது முதல் குருவாக வேண்டும் என்ற அழைப்பை உணர்ந்தார். இவருக்கு ஒன்பது வயது நடக்கும் போது இவரது மாமா பணிபுரிந்த இடத்திற்குச் சென்றார். அங்கு சமையல்காரர் சிறு சிறு கேக்குத் துண்டுகளை கையில் வைத்து பிறருக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் போது நமது அருட்தந்தை ‘நான் கையில் கேக்குத் துண்டுகளை வைத்து பிறருக்குக் கொடுக்க மாட்டேன் மாறாக இயேசுவின் திருவுடலாகிய நற்கருணையைத்தான் பிறருக்குக் கொடுப்பேன்’, ஏனென்றால் நான் ஒரு குருவாவேன் என்று அந்த இளம் வயதிலேயே சொன்னவர்.

வீட்டிற்குத் திரும்பும் வழியில் இவரது மாமா, மீண்டும் நினைவுபடுத்தி உண்மையிலேயே நீ குருவாகப் போகிறாயா? அல்லது புரியமால் சொல்கிறாயா? எனக் கேட்டதற்கு உடனே தன் மாமாவிடம், நான் உண்மையிலேயே நான் ஒரு குருவாக விரும்புகிறேன் என உறுதியுடன கூறினார். அப்படியென்றால் கடவுளிடம் உருக்கமாக மன்றாடு ஏனென்றால் அவர்தான் குருக்களை உருவாக்குகிறார் என்று அறிவுரை கூறினார். எனது அழைத்ததலுக்கு அடிப்படை காரணம் கடவுள் ஆனால் கடவுளின் குரலைக் கேட்க எனக்குக் கருவியாகவும், வழிகாட்டியாகவும் இருந்தவர் அமலமரி சபையைச் சார்ந்த அருட்தந்தை லெல்லிவியர் அவர்கள்தான் என நம் அருட்

தந்தையே குறிப்பிடுகிறார். பல மணிநேரச் செபத்திற்குப்பின் அருட்தந்தை லெல்லிவியர் நம் அருட் தந்தையைப் பார்த்து ‘‘அழைத்தல் ஒரு போதும் எடுக்கப்படாது’’ என்று கூறினார். இவ்வார்த்தைகள் அருட் தந்தை லூயி மரிய பாரண்ட் அவர்களின் மனதில் மிக ஆழமாகப் பதிந்தது. சொன்ன சொல்லையும், விடுத்த அழைப்பையும் கடவுள் மீண்டும் திரும்ப எடுத்துக் கொள்ளவே மாட்டார் என்பதை நம் தந்தை தன் வாழ்வில் அனபவப் பூர்வமாக கண்டு கொண்டார்.

இத்தருணத்திலிருந்து மூன்று எண்ணங்களைத் தன் மனதில் பதிய வைத்தார். அதாவது தான் ஒரு குருவாக வேண்டும், புனிதனாக வேண்டும், மறைபரப்புப் பணியாளனாக வேண்டும் என்ற எண்ணங்களுக்கு வடிவம் கொடுக்க முழு ஈடுபாட்டுடன் வாழ்ந்தார். பின்வரும் நாட்களில் பின்வரும் கருத்தையும் தனதாக்கிக் கொண்டார். அதாவது ‘‘நான் ஒரு மறைபரப்புப் பணியாளனாக வட துருவத்திற்குச் செல்ல வேண்டும். ஏனென்றால் அங்குதான் பல பேரை கடவுள்பால் இட்டுச் செல்ல முடியும், பனிபடர்ந்த சூழல் மத்தியில் நான் அதிக நேரம் செபிக்க முடியும், இவ்வாறு கடவுளோடு ஒன்றித்திருக்க முடியும். கடவுளுக்காக கடினமானதும், சவால் நிறைந்ததுமான செயல்களையே செய்ய விரும்புகிறேன் எனக் குறிப்பிடுகிறார்.

குருவாகும் தன் இலட்சியக் கனவை நனவாக்க அருட் தந்தை பல்வேறு துன்பங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஏனென்றால் தெய்வீகத் திருப்பணியைச் செய்ய முன் வந்தோமென்றால் துன்பமின்றி வெற்றியைச் சந்திக்க முடியாது என்பது எதார்த்தம். சிலுவையின்றி உயிர்ப்பு இல்லை என்பது நன்கு உணர்ந்திருந்தார். உலகை மீட்பதற்கு என்னுடைய உதவி கடவுளுக்குத் தேவையில்லை எனென்றால் என் உதவியின்றி அவரால் எதையும் சாதிக்க முடியும் என்பதை அருட்தந்தையவர்கள் அடிக்கடி சொல்வார்கள். இவரது நவதுறவறப் பயிற்சியின் போது உடல் நலக் குறைவால் பல நாட்கள் அறையிலேயே இருக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார். ஒரு முறை இரண்டு மாதங்களுக்கு பேசமுடியாத அளவிற்கு இவரை நோய் வாட்டியது. மருத்துவரும் அருட்தந்தையால் மீண்டும் பேசும் திறமையை பெறமுடியாதெ என்றே கூறினார்கள். ஆனால் இவரது நவதுறவறப் பொறுப்பாளர் தந்தை இவரிடம் நம்பிக்கையிழக்காமல் கடவுளிடம் மன்றாடு அவருக்கு வாக்குக் கொடுத்து மன்றாடு என்றார். அதன்படி அருட் தந்தையும் ‘‘நான் இனிமேல் புலால் உணவு எடுக்க மாட்டேன்’’ என கடவுளுக்கு வாக்குக் கொடுத்தார். ஆனால் இந்த வாக்குறுதியை கடைப்பிடிப்பது சில சமயங்களில் எவ்வளவு கடினமாக இருந்தது என்பதைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார். எட்டு ஆண்டுகளுக்கு நல்ல புலால் உணவு உண்ண வாய்ப்பு இருந்த போதும் நான் அவற்றைத் தவிர்த்து வெறும் உருளைக்

கிழங்கை மட்டும் உண்பேன் அப்போது எல்லோரும் என்னை ஒருவிதமாகப் பார்ப்பார்கள்.

அதிகமான துன்பத்தைக் கொடுத்தது ஆன்மீக சோதனைதான் ஆனால் அருட்தந்தை லூயி மரிய பாரண்ட் சிலுவையில் பெற்றக் கொண்ட அருளாலும், ஞானத்தாலும் இவரால் பெற்றுக் கொண்ட அருளாலும், ஞானத்தாலும் இவரால் மேற்கொள்ள முடிந்தது. ‘யாரைத் தெர்ந்து கொண்டாரோ, அவர்களைக் கடவள் அழைக்கிறார். அப்படி அழைத்தவர்களை தனது அடையாள முத்திரையால் அவர்களைப் பாதுகாத்து வழி நடத்துகிறார்.

ஒரு குருவானவர் இளைஞனான லூயி மரிய பாரண்ட்டிடம் ‘கடவுள் உன்னை அழைத்திருக்கிறார் அது ஒரு போதும் உன்னிடமிருந்து எடுக்கப்படமாட்டாது’ என்று கூறினார். ஆனால் இளம் பருவத்தில் பல்வேறு ஆன்மீகப் போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. நம்பிக்கையில்லாத சூழலும் இவரை ஆட்டிப்படைத்தது. ஒரு விளையாட்டு வீரராக இரந்ததால், வீரமும், துடிதுடிப்பும் இவரை அலைக்கழித்தது. தன் ஆற்றலை எவ்வாறு ஆக்கப்பூர்வமான வழிகளில் பயன்படுத்துவது என்று தெரியாமல் திகைத்தார். பலமுறை வெறுப்பும், விரக்தியும் தான் வந்தது. இருந்தாலும் கடவுளின் அருளால் இறையழைத்தலில் அர்ப்பண உணர்வுடன் வாழ்ந்தார்.

வாழ்க்கையின் பல கட்டங்களில் கடவுளின் மீது கொண்ட நாட்டம் குறைய ஆரம்பித்தது. கடவுளைப் பல சமயம் தனது சுய நல தேவைகளுக்காக மட்டுமே தேடினார். ஆனால் இவர் செய்த ஒரு தியானம் இத்தகைய நிலையிலிருந்து இவரை விடுவித்தது. ஆனால் சோனைகளும் போராட்டங்களும் தொடர்ந்தது. ஆனால் இவைகள் தான் இவரது அர்ப்பண வாழ்வில் வேரூன்றி நிற்க உறுதுணையாக இரந்தது. இரண்டரை ஆண்டுகளாக நான் திருப்பலியில் பங்கு கொண்டு கடவுளிடம் வேண்டினேன் ‘இறைவா!’ என் அழைத்தலை வேறுயாருக்காவது கொடு, என்னை விட்டுவிடுங்கள் என்று உருக்கமாக வேண்டினேன். ஆனால் என் செபம் கேட்கப்படவில்லை மாறாக என்னை அழைத்த இறைவன் இன்னும் அதிகமாக என்னைப் பற்றிக் கொண்டார்.

லூயி மரியமாவுக்கு நல்ல உடல்நலம் இல்லாத போதும் அன்னை அமலமரி சபையில் இவர் இறையியல் படிப்பைப் படித்தார். இந்தப் படிப்பின் போது பல சமயங்களில் மருத்துவமனைகளிலும், வீட்டிலுள்ள நோயாளர் அறையிலும்தான் செலவிட்டார். இந்த சமயத்தில் இவருக்கு கடுமையான இதய நோயும் வந்தது. இவர் ஓராண்டு தான் வாழ்வார் என்று மருத்துவரும் கூறிவிட்டார். இவ்வாறு அடங்காக் குதிரையாகிய என்னை கடவுள் அவருக்கே உரிய முறையில் என்னை அடக்கினார்.

இவ்வாறு பல்வேறு போராட்டங்களைச் சந்தித்த லூயிமரி வெற்றிகாண முடிந்தது என்றால் அதற்கு முக்கியக் காரணம் அவருடைய உள்ளத்தில் வேரூன்றி இருந்த

கடவுள் நம்பிக்கை தான். இவர் இறையியல் படிப்பின் போது நோய் வாய்ப்பட்டிருந்ததால் வகுப்புகளுக்குச் செல்ல முடியவில்லை. எனவே, பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாவைக் கேட்டுத்தான் படித்தார். இவருக்குப் படிப்பில் உதவி செய்ய இவரது வகுப்புத் தோழர் ஒருவரை பொறுப்பாளர்கள் நியமித்தார்கள். ஆனால் அவர் ஒரு நல்ல விளையாட்டு வீரர், பதந்தை லூயி மரியாவை எதிர்த்துத்தான் விளையாடுவார். முதல் தேர்வில் இவருக்குப் பயிற்சி கொடுத்த இந்த நபரை விட அதிகமான மதிப்பெண்கள் பெற்றார். இதைப் பார்த்து இருவரும் சிரித்தார்கள். அதுமுதல் இவருக்குகிடையே இருந்த உறவு நெருங்கிய நட்பாக மாறியது. இருவரும் நெருங்கிய நண்பர்களாயினர்.

இத்தகைய இக்கட்டான கால கட்டத்தில் லூயி மரியா தனது எனது எதிர்காலத்தை நினைத்து கலங்கி நின்றார். இவர் மட்டுமல்ல இவருக்குப் பொறுப்பான தலைவர்கள் கூட இவரது எதிர்காலத்தை நினைத்து வருத்தப்பட்டனர். லூயி மரியா ஏற்கனவே தொலை தூரக் கல்வி மூலம் இதழியல் படிப்பில் பட்டயம் பெற்றிருந்த காரணத்தால் ‘லா சர்வேயன்ஸ்’ என்ற மேற்கத்திய கனடாவில் உள்ள பத்திரிகை நிருபராக அனுப்பலாமா, என்ற பேச்சும் இருந்தது. எதுவுமே கிடைக்க வில்லையென்றால் உரோமையில் உள்ள அமல மரி சபையின் தலைமையகத்தில் ஆவணக் காப்பாளராக இருந்து விடலாம் என்றும் கனவு கண்டார்.

இவ்வாறு லூயி மரியாவின் எதிர்காலம் தெளிவானதாக தோன்றவில்லை. எதுவாக இருந்தாலும் கடவுளின் திட்டத்தை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும். என்னை அழைத்த அறைவன் என்னைக் கைவிடமாட்டார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை உணர்வுடன் அனைத்து நிகழ்வுகளையும் இறைத் திருவுளத்திற்கு ஏற்ப ஏற்று வாழ்ந்தார். இத்தகைய அனுபவங்கள் வழியாக கடவுள் பிற்காலத்தில் ஒரு சபையைத் தொடங்க வழிநடத்தி வருகின்றார். அதற்காக இவரைப் பண்படுத்தி வருகிறார் என்பதை லூயி மரியா உணர்ந்திருக்கவில்லை. அனைத்தையும் நம்பிக்கையின் அடிப்படையில் திறந்த உள்ளத்துடன் அனைத்து இக்கட்டான சூழல்களையும் எதிர் கொண்டார்.

இவ்வாறு பல்வேறு போராட்டங்களுக்குப்பின் லூயி மரியா குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். கியூபெக் நகரில் லூயி மரியா தனது 12 தோழர்களுடன் 1937 ஆம் ஆண்டு மே திங்கள் 23 ஆம் நாள் ஆயர் யூஜின் லிமோஜஸ் அவர்களின் திருக் கரங்களால் அருட் பொழிவு செய்யப்பட்டார்.

நம் சபையின் நிறுவுநரைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள விருப்ப முள்ளவர்கள் பின்வரும் பகுதிகளைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

Tome 1 : En route vers Quelgu’un:

(1910 / 1938) / Louis Marie Parent. Coll. Voluntaries de Diera, 1997;

Tome 2 : En route avee Quelgu'un :

(1938 – 1957) / Louis Marie Parent. Coll. Voluntaries de Diera, 1999.

குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட லூயி மரிய பாரண்ட் அவர்களைத் தவிர அவரோடு குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்ட 12 குருக்களும் மறை பரப்புப் பணிக்காக பல நாடுகளுக்கு அனுபப்பப்பட்டனர். ஆனால் இவரது உடல் நலம் கருதி இவரை வெளிநாடுகளுக்கு அனுப்பவில்லை. இவ்வாறு கடவுள் தனது திட்டத்தை நிறைவேற்ற செயல்பட்டார் என்பதைப் புரிந்து கொள்கிறோம்.

1938 ஆம் ஆண்டு அதாவது இவரது குருப்பட்டத்திற்கு அடுத்த ஆண்டு, மேறகுக் கனடாவில் உள்ள ஆயர் உபால்டு லாங்லாய்ஸ் சபை நிறுவநர் தங்கியிருந்த குழுமத்திற்கு வந்தார். வந்தவர் லூயி மரிய பாரண்ட் அவர்களை ஆல்பெர்டா நகரிலுள்ள வட்டார மறைப்பணிக்கு அழைத்துச் சென்றார். நம் அருட் தந்தையர்களும் தனது அதிபரின் அனுமதியோடு சென்றார். தனது உடல் நலம் ஒத்துழைக்குமா என்ற சந்தேகம் இருந்தாலும் கடவுளுக்கு விருப்பமானால் அவர் தருவார் என்ற நம்பிக்கையுடன் சென்றார்.

1938 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் நாள், காணிக்கை மாதா திருவிழாவன்று லூயி மரியா அவர்கள் குருவார்டு மறைப் பணித் தளத்திற்குச் சென்றார். பல ஆண்டுகளுக்குப் பின் இந்த நாளை மறக்காமல் நம் தந்தை குறிப்பிடுவார். ஏனென்றால் அன்று தான் அன்னை மரியாள் தன்னை நோயிலிருந்து குணப்படுத்தினாள். அன்றிலிருந்து பல ஆண்டுகள் வேதனைப்பட்ட நோயிலிருந்து அன்னை மரியாள் என்னை முழுமையாக குணப்படுத்தினாள் என நன்றிப் பெருக்கோடு குறிப்பிடுகிறார்.

லூயி மரியா அவர்களும் தனது நன்றிப் பெருக்கின் அடையாளமாக அன்னை மரியாளைப் பற்றியம் அவரது அளவு கடந்த பரிந்துரையையம் தனது மறையுரைகளில் எல்லாம் போதித்து வந்தார்.

குருவார்டு நகருக்கு வந்த போது முதன் முதலாக ஆயரின் செயலாக நியமிக்கப்பட்டார். துடிதுடிப்பும் ஆர்வமும் உள்ள நம் அருட் தந்தைக்கு இந்தப் பணி பொருத்தமானது அல்ல என்பதை உணர்ந்த ஆயர் அவர்கள் நான்கு மாதங்கள் கழித்து. பால்கர் என்ற இடத்தில் உதவிப் பங்குத் தந்தையாக நியமனம் செய்து அங்கிருந்து மறைப்பணித்தளங்களான ஒயிட்மட் மற்றும் பாலாட்டர் போன்ற இடங்களின் பொறுப்பும் வழங்கப்பட்டது. ஏறத்தாழ 275 கிலோமீட்டர் பரப்புள்ள இடத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வாழ்ந்த 200 கிறிஸ்தவ குடும்பங்களை கண்காணித்து வழி நடத்தும் பொறுப்பு வழங்கப்பட்டுது. நான் பல சமயம் எனக்குத் தேவையான பொருட்களை ஒரு பையில் எடுத்துக் கொண்டு ஒரு நாளைக்கு ஏறத்தாழ 45 கிலோ

மீட்டர் நடந்து சென்றேன். இவ்வாறு மூன்று ஆண்டுகள் செய்தேன். இதுவே என் உடல் நடத்திற்கும் நல்ல பயனுள்ளதாக அமைந்திருந்தது.

1942 ஆம் ஆண்டு முதல் 1944 வரை டாங்கென்தே. ஆல்பெர்டா பங்குகளின் பங்குத் தந்தையாக இருந்து கொண்டு, ஈகிள் ஸ்கெம், வாட்டின் மற்றும் கோடஸ்ஸா போன்ற மறைப் பணித்தளங்களைக் கவனிக்கும் பொறுப்பும் வழங்கப்பட்டது. லூயி மரியாவின் விருப்பத்திற்கேற்ப நடந்து சென்று நற்செய்திப் பணி யாற்றும் மறைப் பணியாளராகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் பனி படர்ந்த இடங்களுக்குச் செல்ல நாய்கள் பூட்டிய சிறப்பு வாகனமாக “ஸ்லெட்ஜ்” வண்டி தேவைப்பட்டது.

**a) தனிமையில் வாழ்ந்த மறைப்பணியாளர் :**

இந்த காலகட்டத்தில் தான் நம் சபை நிறுவுநர் அதிகம் முக்கியத்துவம் கொடுத்த மற்றும் வருங்காலத்தில் அவர் தொடங்கவிருந்த சபைக்கும் அடித்தளமிட்டது.

குருவார்டு மறைவட்டத்திற்கு வந்த பின்பு குருக்களை வழிநடத்த மறை மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். இந்த பொறுப்பானது அவ்வளவு முக்கியமான ஒன்றாக மறைமாவட்ட ஆயரால் எண்ணப்படவில்லை. ஏதோ ஒருவரை நியமிக்க வேண்டும் என்பதற்காக நம் அருட் தந்தை நியமிக்கப்பட்டார். ஆனால் நம் அருட் தந்தையர்களோ இந்தப் பொறுப்பை மிக முக்கியமானதாகக் கருதி அதில் தனது முழு ஈடுபாட்டைச் செலுத்திப் பணிபுரிந்தார்.

இந்தப் பணிதான் பிற்காலத்தில் மறைப் பணி வாழ்வுக்கு மிகவும் பயன்பட்டது என்பதை தந்தையவர்கள் குறிப்பிடுகின்றார். எனக்குத் தரப்பட்ட இந்தப் பணியில் முழுக் கவனம் செலுத்தினேன். ஒவ்வொரு மறை மாவட்ட குருவும் வாரத்திற்கு ஒரு முறை ஒரு மணி நேரம் நற்கருணைச் சந்திப்புக்கு ஒதுக்க வேண்டுமென்று பணித்தேன். ஒருசிலர் ஏற்றுக் கொண்டனர். ஆனால் பலர் தங்கள் பணிச் சுமையைக் காரணம் காட்டி, இந்தப் பயிற்சி நடைமுறைக்கு உதவாது என மறுத்தனர். எனவே நான் அத்தகைய இடங்களில் பொதுநிலையினரை வர முடியாத குருக்களுக்காக நற்கருணை ஆராதணையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டேன். இவ்வாறு வளர்ந்து வந்த இந்த இயக்கம் மூன்று ஆண்டுகளுக்குப் பின் மறை மாவட்ட அளவில் இரவு நேர நற்கருணை ஆராதனை பங்கேற்பாளர்கள் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்தேன்.

பிற்காலத்தில் குருக்களுக்குப் பதிலாக நற்கருணை ஆராதனைக்கு பொது நிலையினர் மத்தியில் குழுவை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திற்கு வித்திட்டது இந்த சூழ்நிலைதான். இந்தக் குழுவிலுள்ள ஒவ்வொரு வரும் தங்கள் வாழ்வில் மூன்று

வகையான அர்ப்பண உணர்வை வாழ அழைக்கப்பட்டார்கள். முதலாவதாக மாட்டுத் தொழுவத்தில் இயேசுவின் எளிமை, இரண்டாவதாக சிலுவையில் தன்னையே முழுவதும் அர்ப்பணித்த இயேசுவின் தியாகம், மூன்றாவதாக நற்கருணைப் பக்தி.

ஒவ்வொருவரும் பிறருக்கு உதவுவதில் முக்கியக் கவனம் செலுத்துவதும், அமைதியான வாழ்வு வாழ தங்களையே அர்ப்பணிப்பதும், வாரத்திற்கு ஒரு முறை, ஒரு மணி நேரம் மட்டும் உரையாடி மகிழ்வதும் வழியுறுத்தப்பட்டது. ஆனால் பிற்காலத்தில் நட்புறவை வளர்த்துக் கொள்வதற்காகவும் மனநல வளர்ச்சிக்காகவும் உரையாடல் நேரம் கூட்டப்பட்டது. தனிமையில் இருக்கும் மறைப் பணியாளர்கள் என்ற ஒரு குழு உருவாக்கப்பட்டது. அதற்கு இயேசு மேரி என்ற பெயர் இடப்பட்டது. இந்த குழு உருவானபோது தந்தை லூயி மரியா பாரண்ட்க்கு வயது 33 ஆகும். 1944 ஆம் ஆண்டு பால்கர் என்ற இடத்தில் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டார் அப்போது தான் தொடங்கிய இந்த குழுவையும் தன் பங்கிற்கே அழைத்துச் சென்றார்.

இந்த குழுவை ஏற்படுத்தியதன் நோக்கம் என்ன என்பதை நம் மனதில் ஆழமாக பதியவைக்க வேண்டும். அதாவது. மறைப் பணியாற்றுகின்ற குருக்களுக்காகக் செபிக்கத்தான் இந்தக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டது. இந்த அருட் சகோதரிகளும், மறைப் பணியாளர்களாகக் கருதப்பட்டனர். தங்களது செபம், தியாகம், ஒறுத்தல், நற்கருணை ஆராதணை, அமைதி இவற்றின் வழியாகச் சிறப்பாக கனடாவின் வட பகுதியில் மறைப்பணியாற்றிய குருக்களோடு ஆன்மீக உறவை கொண்டிருந்தார்கள். தொடர்ந்து லூயி மரியா பாரண்ட் அவர்கள் மக்கெனான் மறை மாவட்டத்திலுள்ள ஆல்பெட்டா என்ற இடத்திற்குப் பணிமாற்றம் செய்யப்பட்டார்கள். “அமைதி ஆறு” (ீயஉந சுளைநச) என்ற இடத்தை தலைமையிடமாகக் கொண்டு மறைப்பணித்தான இடங்களை தோற்றுவிக்கும் பணிக்கு நியமிக்கப்பட்டார். எனவே பல்லாயிரம் மைல்கள் பயணம் செய்து பல்வேறு மறைப்பணித் தளங்களை நிறுவினார். வருடத்தில் ஆறுமாதங்கள் கனடாவின் கிழக்குப் பகுதிகளுக்குப் பணயம் செய்து ஆன்மீகத் தியானம் கொடுத்து வந்தார். மீதமுள்ள ஆறு மாதங்களில் மேற்குப் பகுதிகளுக்குச் சென்று ஆன்மீகத் தியானங்கள் கொடுத்து அவர்களை உறுதிப்படுத்தினார். இந்தப் பணியானது 1945 முதல் 1953 ஆம் ஆண்டு வரை நீடித்தது.

இத்தகைய நீண்ட கால அனுபவத்தின் விளைவாக முக்கிய அனுபவம் ஏற்பட்டது. ஆகவே லூயி மரிய பாரண்ட் அவர்களின் மறைத் தூதப் பணி ஓர் ஈர்ப்பைப் பெற்றது. 1945 ஆம் ஆண்டு நவம்பர் தாங்கள் அன்று அமலமரி சபையின் அதிபர் அவர்களின் கருத்து ஒரு புதிய கோணத்திற்கு வழிவகுத்தது. நீங்கள் செய்துவரும் முயற்சி கனடாவின் மேற்குப் பகுதியில் மிகுந்த பலன் தராது. இவையனைத்தும் விழலுக்கு இறைத்த நீரே என்று சற்று கடுமையான வார்த்தைகளால்

குறிப்பிட்டார். அதுமட்டுமல்ல மாறாக எப்படிப்பட்ட குழுக்களை உருவாக்க வேண்டும் என்று சில ஆக்கப்பூர்வமான பரிந்துரைகளையும் கூறினார். இந்தக் கருத்துக்கள் தான் இன்றைய திருவுளச் சபையின் உருவாக்கத்திற்கும் வித்திட்டது. "அர்ப்பணிக்கப்பட்டவர்கள் உலகின் மத்தியில் வாழ்ந்து, தங்களது கிறிஸ்துவ சாட்சியத்தில் மறைப் பணியாற்ற வேண்டும். அதாவது சுருங்கச் சொல்ல வேண்டுமென்றால் அவர்கள் இவ்வுலகில் புளிக்காரம் போல இருக்க வேண்டும்.

அருட் திரு லூயி மரிய பாரண்ட் தனது அதிபரின் கருத்துக்களால் அதிகம் கவர்ந்து இழுக்கப்பட்டார். ஆனால் சிந்தித்துப் பார்த்தபோது பல்வேறு இடர்ப்பாடுகள் நிறைந்த மறைப்பணி வாழ்வுக்கு எப்படி இது சாத்தியமாகும் என உணர்ந்தார். அப்போது அதிபரே மேலும் தயங்கிய தந்தையிடம் கூறினார். 'அருட்தந்தை பாரண்ட் அவர்களே! இத்தகைய பணியைச் செய்ய நீங்கள் ஏன் ஒரு கருவியாக இருக்கக்கூடாது என் சிந்திக்க வைத்தார். இதை ஏன் உங்கள் வாழ்க்கைப் பணியாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று சிந்திக்கத் தூண்டினார்.

இதே வேளையில் கத்தோலிக்கத் திரு அவையும். திரு அவையின் தலைவராக இருந்த திருத்தந்தை 12ஆம் பத்திநாதரும் 'Provida Mater Ecelesina' (பெப்ரு : 2, 1947) என்ற திருத்தூதக் கொள்கையையும் வெளியிட்டார். இதுவே 'உலகியல் துறவு அமைப்பு' தோன்ற வழிவகை செய்தது.

**b) அமலமரி அன்னையின் மறை பரப்பு சபை :**

திருஅவையின் இத்தகைய திருத்தூதக் கொள்கை வரைவின் அடிப்படையில் பெண்களுக்கான உலகியல் துறவறசபை தொடங்க காரணமாக இருந்தது.

1945 முதல் 1952 வரை அருட் தந்தை லூயி பாரண்ட் அவர்கள் உலகியல் துறவற சபையைத் தொடங்க நான்கு முறை முயற்சி செய்தார் மூன்று முறை வெற்றி கிடைக்க வில்லை. ஆனால் நான்காவது முயற்சியில் அவரது எதிர்பார்ப்பிற்கும் மேலாக வெற்றி கிடைத்தது. தூய ஆவியானவரின் வல்லமையால் உலகியல் துறவற சபையில் சேர உறுப்பினர்கள் முன் வந்தார்கள். எனவே 1952 ஆம் ஆண்டு 'அமல மரி தியாகிகள் மறை பரப்பு சபை' என்ற பெயரில் (O.M.M.I.) தொடங்கப்பட்டது.

அருட் தந்தை பாரண்ட் அவர்கள் மூன்றும் ஐந்தும் என்ற ஆன்மீக வழிகாட்டுதல்களை உறுப்பினர்களுக்குக் கொடுத்தார். இந்த சிந்தனை அருட் தந்தையின் மனதில் எவ்வாறு தோன்றியது என்பதை பின்வருமாறு விளக்குகிறார்.

துறவறக் குடும்பங்களுக்கு மறையுரை ஆற்றும் போது இத்தகைய எண்ணம் தோன்றியது எனக் குறிப்பிடுகின்றார். உயர்ந்த பண்பு நலன்களை அனைவரும் கடைப்பிடித்து வந்தனர். ஆனால் மிகச் சிறிய அதே வேளையில் அவசியமான பண்புகள் முக்கியத்துவம் பெறவில்லை. அதாவது தேவையில்லாமல் முறையிடுவதும்,

குறை கூறுவதும் ஒவ்வொரு துறவறக் குடும்பத்திலும் மலிந்து கிடந்தன. ஆனால் இவை தான் துறவறக் குடும்பங்களில் அனைவரும் இணைந்து பிறரன்புப் பணிகளில் ஈடுபடத் தடையாக இருந்தது என்பதையம் உணர்ந்தார்.

எனவே இத்தகைய தீமையை ஒழிக்க, கடவுளின் பிரசன்னத்தை மையப்படுத்துவதுதான் சிறந்தது என்பதை அருட் தந்தை பாரண்ட் நன்கு உணர்ந்தார். கடவுளின் பிரசன்னத்தில் வாழ்பவர்கள் தான் நம்பிக்கை ஒளியில் வாழ்கிறார்கள. மாறாக புறங்கூறுதல் இருளின் வேலையாகும் இது கடவுளின் பணியையும், புனித நிலையை நோக்கி நடை பயிலும் ஒருவரின் விருப்பத்தையம், செயல்பாட்டையம் தடுக்கிறது. எனவே கடவுளின் பிரசன்னத்தில் வாழ்பவர்கள் தான், இறைச் சாயலாகப் படைக்கப்பட்ட பிறரிலும் இறைவன் உண்ட என்பதை உணர்ந்து அவர்களுக்கு மதிப்பளிப்பார்கள் என்பதை அருட்தந்தை நன்கு உணர்ந்தாகள். மேலும் அருட்தந்தை லூயி மரிய பாரண்ட் அவர்கள், பலரும் தங்களுடைய பணிகளைப் பற்றியும், வாழ்க்கைச் சூழல் பற்றியம் பல்வெறு முறைப்பாடுகளை சொல்வதைக் கவனித்தாகள். இதற்கு அடிப்படைக் காரணம் அவர்களுக்குள் இருக்கும் சுயநல நாட்டங்களின் வெளிப்பாடுதான் என்பதை நன்கு உணர்ந்தார். இந்தக் கொடிய பண்பு அவர்களை மட்டுமல்ல அவர்களோடு வாழும் பிறரையும் பாதிப்பதை நன்கு கண்டு கொண்டார். எனவே இத்தகைய தீமையை ஒழிக்க வேண்டுமென்றால் இயேசுவின் முழு உருவத்தின் ஓர் அங்கமாக விளங்கும். பிறருக்கு முழுமனதோடு பணிபுரிவதன் மூலம் சுயநலத்தை எதிர் கொள்ளும் நல்ல பண்பை வளர்த்துக் கொள்வதன் மூலம் தான் இதைச் சாதிக்க முடியும் என்பதை நன்கு உணர்ந்து செயல்பட விரும்பினார். இத்தகைய நல்ல பண்புதான் நம்முன் வியப்புக்குரிய ஆர்வத்தைத் தூண்டியெழுப்பி, முணுமுணுப்பின்றி அர்ப்பணிப்பு உணர்வுடன் பிறருக்குப் பணிபுரிய நம்மை தூண்டி வழிநடத்தும். இதன் கனிகளாக துறவறக் குழுக்களில், நற்செய்தி அறிவுரைகளின் உயர்ந்த வெளிப்பாடான அமைதி குழுக்களில் நிலவும் என்பதை ஆனித்தரமாக உணர்ந்தார்.

எனவே தான் இந்த சாதாரண ஆனால் ஆற்றல் மிக்க, மூன்று, ஐந்து, ஆன்மீகம் உருவாக ஆரம்பித்தது.

இந்த இலட்சியத்தை அடைய வேண்டுமென்றால்

**பிறரன்பு** : ஒரு நாளைக்குக் குறைந்தது ஐந்து பிறரன்புச் செயல்களைச் செய்தல்

**ஊட்ட சக்தி** : இறைப் பிரசன்னத்தை உணர்தல்

**உந்து சக்தி** : இயேசு, மரியாள் இவர்களின் வாழ்வைப் பின்பற்றி, பிறருக்குப் பணிபுரிய முன் வருதல்

**பலன்கள்** : உள் மனதில் இருக்கும் எதிர் மறை எண்ணங்கள், முணுமுணுப்பு போன்றவை மறையும்.

**கனிகள்** : அமைதி தோன்றும்

இத்தகைய வாழ்க்கை முறையை நம்முள் தொடர்ந்து வாழ நமக்கு ஊற்றாக இருப்பது – செப வாழ்வு (ஐந்து வகையான ஆன்மீக செயல்பாடுகள்).

**c) இறைத் திருவுளச் சபை :**

1952க்குப் பிறகு சில இறைஞர்கள் அருட் தந்தை லூயி மரிய பாரண்ட் அவர்களிடம் நாங்களும் அந்தக் குழுவைப் போல வாழ விரும்புகிறொம் எனத் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். தொடக்கத்தில் அருட் தந்தையவர்களுக்கு உடன்பாடு இல்லை. அர்ப்பண வாழ்வு வாழவேண்டும் என்ற விருப்பம் இருந்தால் அமலமரி அன்னையின் மறை பரப்புச் சபையிலோ அல்லது வேறு ஏதாவது துறவற சபையிலோ சேர்ந்து இறைப்பணி ஆற்றலாம் என மறுத்துவிட்டார். ஆனால் இறைஞர்கள் அருட்தந்தையை விடுவதாக இல்லை. தொடர்ந்து அவரை வற்புறுத்தி ஆண்களுக்கும் இத்தகைய சபையை உருவாக்கவேண்டும் என்று அருட் தந்தையைச் சம்மதிக்க வைத்து விட்டார்கள்.

1954 ஆம் ஆண்டு அருட் தந்தை மரியா அவர்கள் Cap – de – a – Madeleine என்ற அமைப்பை இளைஞர்களுக்கென்று தொடங்கினார். இரண்டு ஆண்டுகளுக்குள் 21 உறுப்பினர்கள் இதில் இணைந்தார்கள். இவர்கள் அன்னை மரியின் மாசற்ற இதய சபை என்ற பெயரைப் பெற்றார்கள் (Oblates du Coeur Immacule’ de Marie).

டிராய்ஸ் ரிவியீர் என்னுமிடத்தில் வீடற்றவர்கள் தங்குவதற்கு தனி ஓர் இடம் அமைத்து பாதுகாத்து வந்தார்கள். கடவுளின் அருளாலும், மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு உந்துதலாலும் இந்த இறைஞர்குழு நீடித்து நிலைத்து இருக்க மாட்டார்கள் என உணர்ந்தார். இந்தப் புதிய அமைப்பு உண்மையிலேயே கடவுளின் விருப்பம் தானா எனக் கண்டு கொள்வதில் தெளிவு கிடைக்கவில்லை. ஏனென்றால் இந்த இறைஞர்கள் அமைப்பைத் தொடங்க தனது மேலதிகாரிகளிடமிரந்து எந்தவித தூண்டுதலோ. அனுமதியோ வரவில்லை. எனவே, அருட் தந்தையவர்களுக்குத் தயக்கம் இருந்தது. மீண்டும் ஒரு முறை எதிர்பாராத நிகழ்வு ஒன்று அருட்தந்தையின் சந்தேகங்களுக்கு விடை கொண்டு வந்தது. ஒரு நாள் அன்னை மரியாளின் திருத்தலத்தில் இருந்த அமலமரித் தியாகிகள் வாழ்ந்து வந்த துறவறக் குடும்பத்திற்கு அறிவாற்றலில் சிறந்த ஒரு குருவானவர் வந்தார். 35 குருக்கள் கூடியிருந்த அந்த கூட்டத்திற்கு மத்தியில் எழுந்து, அருட் தந்தை லூயி மரிய பாரண்ட் அவர்களின் செயல்பாடுகளை துணிச்சலுடன் விமர்சனம் செய்தார். “அருட் தந்தை பாரண்ட் அவர்கள் இரண்டு பெண்களின் உலகு சார்ந்த துறவறக்

குடும்பத்தை தொடங்கியுள்ளார்கள். இயல்பாகவே பெண்கள் பணிந்த உள்ளம் கொண்டவர்கள். எதிர்க்கும் குணம் இயல்பாக அவர்களிடம் இல்லை. ஆனால் அண்மையில் அருட் தந்தை பாரண்ட் அவர்கள் அண்களுக்கென்று ஒரு உலகு சார் சபையைத் தொடங்கியுள்ளார்கள். ஆண்களுக்கென்று ஒரு சபையைத் தொடங்க வேண்டுமென்றால் தொடங்குபவர் ஒன்று புனிதராக இருக்க வேண்டும் அல்லது பெரிய மேதையாக இருக்க வேண்டும் எனப் பகிரங்கமாகக் கூறினார். அவர் கூறியதில் உண்மை இருப்பதை உணர்ந்த அருட் தந்தை புன்முறுவல் பூத்தது மட்டுமல்ல. அவர் கூறியது முற்றிலும் உண்மை என்பதைத் தனக்குள் உணர்ந்தார். எனவே தான் தொடங்கிய ஆண்களின் துறவற சபையைக் களைத்து விட எண்ணினார். எனவே அனைவரையும் அழைத்துத் தன் விருப்பத்தைத் தெரிவித்தார். யாரும் எதுவும் கூறாமல் அனைவரும் கலைந்து சென்றனர். இருந்த சொத்துக்களையும் விற்று அனைவர்க்கும் பகிர்ந்து கொடுத்தார். இது நிகழ்ந்தது 1956 ஆம் ஆண்டு. கடவுளின் திருவுளம் எதுவென அருட் தந்தையவர்களால் கண்டு கொள்ள முடியவில்லை. மீண்டுமொரு நிகழ்வு அருட் தந்தையின் வாழ்வில் நிகழ்ந்தது, இந்நிகழ்வு எவ்வாறு கடவுளின் திருவுளத்தைத் தேர்ந்து தெளிவது என்ற பாடத்தைக் கற்றுக் கொடுத்தது. அது ஒரு வசந்த காலம் 1958 ஆம் ஆண்டு அமல மரித் தியாகிகள் சபையின் அதிபரான மேன்மைமிகு லியோ டெஸ்காடேலட் அவர்கள் அருட் தந்தை பாரண்ட் இருக்கும் துறவறக் குடும்பத்திற்கு வந்திருந்தார்கள். அருட் தந்தை பாரண்ட் அவர்களும், சிலியன் மறைப் பணித்தளத்தில் தன் பணிகளை முடித்துவிட்டு அப்போது தான் திரும்பியிருந்தார்கள். இன்னொரு அருட் தந்தையுடன் நின்று கொண்டிருந்த அருட் தந்தை மரிய லூயி பாரண்ட் அவர்களை அமல மரித் தியாகிகள் சபை அதிபர் சந்தித்தார். அவர் அருட் தந்தை பாரண்ட் அவர்களைப் பார்த்து நீங்கள் ஆண்களுக்கென்று உலகுசார் துறவறச் சபையைத் தொடங்க வேண்டும், உங்கள் அருகில் இருக்கும் அருட் தந்தையவர்கள் இந்த உங்கள் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்றார்.

இதைக்கேட்ட அருட்தந்தை பாரண்ட் அவர்கள் அதிர்ச்சியும். ஆச்சரியமும் கொண்டார்கள். கடவுள் தன் விருப்பத்தை இவ்வாறு தெளிவாக, உறுதியுடன் மனதில் பதிய வைத்துவிட்டார் என்பதை உணர்ந்தார். இதைப் பின்வரும் வார்த்தைகளில் குறிப்பிடுகின்றார். சபை அதிபர் டெங்காதெலட் கூறிய வார்த்தைகளின் பொருளை அங்கிருந்த இருவருள் நான் ஒருவன் மட்டுமே மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டேன் கடவுள் என் மனதில் இருந்த மனப் போராட்டத்தை அறிந்து மிகத் தெளிவாக ஒரு உலகுசார் துறவறச் சபையைத் தொடங்குவதுதான் கடவுளின் திருவுளம் என்பதை நன்கு உணர்த்திவிட்டார் என்பதை நன்குத் தெளிவாகக் கண்டு கொண்டார். எங்கள் சபையின் அதிபர் வழியாகக் கடவுள் தனது திருவுளத்தை எனக்கு உணர்த்திவிட்டார்

என்பதை நன்கு உணர்ந்து கொண்டார். இனிமேல் எந்தத் தயக்கமும் இருக்கக்கூடாது மாறாகத் துணிவான முடிவெடுக்க வேண்டும் என உணர்ந்து, தனது எண்ணத்திற்குச் செயல்வடிவம் கொடுக்க தகுந்த நேரத்தைக் கடவுள் காட்டுவார் எனக் காத்திருந்தார்.

சபை அதிபரைச் சந்தித்த சிறிது காலத்திற்குப் பின் ஆயர் இல்லத்தில் பணியாற்றி வந்த அமல மரித் தியாகிகள் சபையினரைக் காணச் சென்றார். அங்கே 11 இளைஞர்களும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்ற இரண்டு குருக்களையும் சந்தித்தேன். அந்த இரண்டு குருக்களில் ஒருவர் என்னிடம் வந்து 'அருட்தந்தையெ தாங்கள் ஒரு துறவறச் சபையைத் தொடங்கினால் நானும் வருவேன் என்று கூறினார். உடனெ அருகிலிருந்த இரண்டு இளைஞர்கள் நாங்களும் வந்து சேர்ந்து கொள்வோம் என்று கூறினர். ஆனால் நான் அதற்கு உடன்பட மறுத்து அவர்கள் விருப்பத்தைத் தடுத்து நிறுத்தினேன். எனென்றால் தவத் திரு அவை ஆயர் அவர்கள். கடினப்பட்டு அவர்களைத் தன் மறைமாவட்டப் பணிக்காகத் தயாரித்து வருகிறார். இந்தச் சமயத்தில், இவர்களை நாம் எடுத்துக் கொண்டால் சரியாக இருக்காது என்று உணர்ந்த அருட் தந்தையவர்கள் அவர்கள் விருப்பத்திற்குத் தடைபோட்டார்.

சில நாட்களுக்குப்பின் மீண்டும் தன் மறைப் பணியைச் செய்ய மற்றுமொரு மறைமாவட்டக் குருவானவருடன் பயணமானார். அவ்வாறு செல்லும் போது இறை ஏவுதலால் தான் தொடங்கப் போகும் சபைக்கு 'இறைத் திருவுளச் சபை' எனப் பெயர் வைக்க வேண்டும் என்ற ஒளியைப் பெற்றார். ஆனால் இந்தப் பெயர் அவரோடு பயணம் செய்த அருட் தந்தையவர்களுக்கு எந்தவிதமான ஈர்ப்பையும் கொடுக்கவில்லை. எனவே ஏன் இந்தப் பெயர் வைக்க விரும்புகிறீர்கள் என விளக்கம் கேட்டார். நான் அவரிடம் கடவுளே விரும்பியதால், இதுவே அவரது திருவுளமானதால் 'இறைத் திருவுளச் சபை' என அழைக்க விரும்புகிறேன். எனப் பதில் கொடுத்தார். கடவுளின் திருவுளத்தை உணர்ந்து அதன்படி வாழ விருப்பமுள்ளவர்கள் இந்தச் சபையின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்று தன் மனதில் இருத்தினார்.

தூய போனிபாஸ், மனிதோபாவை அடைந்தபின் அங்கே தான் ஏற்கனவே பிரின்ஸ் ஆல்பர்ட் என்ற இடத்தில் சந்தித்த அதே இளைஞர்களை அங்கு சந்தித்தார். அங்கே ஐந்து இளைஞர்கள், ஒரு குரு மற்றும் இரண்டு குருமாணவர்களையும் சந்தித்தார். இவர்கள் ஏற்கனவே ஒன்று கூடி சிந்தித்துப் புதிய சபையில் தாங்கள் சேர வேண்டும் என்று எற்கனவே முடிவெடுத்திருந்தார்கள். சபையின் விருதுவாக்கையும், சபையில் இருக்கும் குருக்கள் அணியக் கூடிய சிறப்பான அங்கியும் எப்படி இருக்க வேண்டும் என்பதையம் முடிவெடுத்திருந்தார்கள். நண்பகல் வேளையில் அவர்களோடு கொண்ட நீண்ட நெடிய கலந்துரையாடல் மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்குப்பின் அருட்தந்தை லூயி மரிய பாரண்ட் அவர்கள் தன்னோடு கூடிநின்றவர்களிடம்

இப்பொழுது இறைத் திருவுளச் சபை தொடங்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள் என்றார்.

மேலும் கியூபெக்கில் உள்ள கேப்தேலா மாதலின் என்ற இடத்தில் ஜுலைத் திங்கள் 2ஆம் நாள் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வோம் என்று கூறினார். அந்த நாள்தான் அதிகாரப் பூர்வமாக இறைத் திருவுளச் சபை தொடங்கப்பட்ட நாளாகும்.

ஜுலை 2ஆம் நாள் நடந்த கூட்டத்தில் மொத்தம் 12 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். இவர்களுள் ஒரே ஒருவர் மட்டும் தான் 1954 ஆம் ஆண்டு தொடங்கிய திரு இருதய அன்னை சபையின் உறுப்பினர் மற்ற அனைவரும் புதிதாக வந்தவர்கள், குருமாணவர்கள் மற்றும் திருமணம் ஆகாத பொது நிலையினர் சில ஆண்டுகளுக்கு முன் அருட் தந்தை பாரண்ட் அவர்களால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளுக்கு ஏற்ப தொடங்கப்பட்ட புதிய சபையாகும்.

இறைத் திட்டத்தின் அடையாளமாக சில நாட்களுக்குப் பின், டிராய் ரிவெரெஸ் நகருக்கு வெளியே அமைந்திருந்த தூய சலேத் அன்னை ஆலயத்திற்கு வெளிப்புறம் உள்ள மைதானத்தில் கிரானைட் (பளிங்கு) கல் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதில் சில ஆண்டுகளுக்கு முன், பிரின்ஸ் ஆல்பெட் என்னுமிடத்தில் சில இளைஞர்களால் உருவாக்கப்பட்ட விருது வாக்கு அடையாளத்தை ஒத்து அமைந்திருந்தது. இந்தக் கல்லானது பிரான்ஸ் நாட்டிலுள்ள லா சலேத் என்னுமிடத்தில் அன்னை மரியாள் 1846 ஆம் ஆண்டு காட்சி தந்ததின் நினைவாக 1946 ஆம் ஆண்டு செதுக்கப்பட்ட கல்லாக இருந்தது.

மேலும் அங்கிருந்த சக்கறீஸ்து அறையில், குருக்கள் அணிவதற்காக, புனித பொனிபாஸ் நகரில் சில இளைஞர்கள் தயாரித்த அங்கியைப் போல மூன்று கிடைக்கப்பெற்றன. இந்த ஒரு அடையாளம் தான் அருட்தந்தை லூயி மரிய பாரண்ட் உள்ளத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கையைக் கொடுத்தது. அதாவது தான் தொடங்கியுள்ள இறைத்திருவுளச் சபையானது இறைவன் திட்டத்திற்கு ஏற்ப அவரின் அருளின் துணையால் தான் தொடங்கப்பட்டுள்ளது. எனவே இதை இனி எந்த சக்தியாலும் தடுக்கமுடியாது என்ற எண்ணத்திற்கு வந்தார்.

இதற்குள் தன்னால் தொடங்கப்பட்ட இந்த புதிய சபைக்கு வேண்டிய அனுமதிகளை திரு அவையிடமிருந்து பெற்றார். துணிச்சலும் அதே வேளையில் நம்பிக்கை உணர்வும் கொண்ட மேதகு ஆயர் ஹென்றி ரூத்தியர் அவர்களும் கடவுளின் திட்டத்தில் நம்பிக்கை கொண்டு, இந்தப் புதிய சபைக்கு அனுமதியும், அங்கீகாரமும் அளித்து மறைபரப்புப் பணிகளில் ஈடுபட உதிவிபுரிந்தார். மேதகு ஆயர் அவர்கள் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் திருச்சபைச் சட்டப்படி பக்த சபை (Pious Union) என்ற அங்கீகாரத்தை வழங்கினார். இதுதான் திரு அவையின் அதிகாரப் பூர்வமாக எடுக்கப்பட்ட முதல் அடியாகும்.

1958 ஆம் ஆண்டு ஜுலை 2 ஆம் நாள் கேப்தே லாமாதலென் என்னும் இடத்தில் அன்னை மரியாளின் பாதுகாவரினாலும், அன்னைக்குரிய அரவணைப்பிலும் பெரும் மகிழ்ச்சி காணப்பட்டது. இதயங்கள் நம்பிக்கை என்னும் உணர்வால் பொங்கி வழிந்தது. புதிய சாதனை ஒன்று தொடங்கப்பட இருந்தது. புதிய அமைப்புக்கு வரலாற்றில் ஓர் அடித்தளம் இடப்பட்டது, அதற்கு இறுதிவரை அனைவரும் தங்களை முழுவதும் அர்ப்பணிக்க வேண்டும் என உணர்ந்தார்கள். நற்கருணைக் கொண்டாட்டத்தின் போது வார்த்தைப்பாடுகள் எடுக்கப்பட்டன. ஒரு குருவும், மூன்று குருமட மாணவர்களும் தங்கள் வார்த்தைப்பாடுகளைக் கொடுத்தார்கள். அருட்தந்தை லூயி மரிய பாரண்ட் அதைப் பெற்றுக் கொண்டார்கள். மூன்று குருமட மாணவர்களுள் மௌரீஸ்ராய், மற்றும் பால் கூட்டு இவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். அருட் தந்தை லூயி மரிய பாரண்ட் அவர்கள் மேலும் ஐந்து குருமட மாணவர்களைத் தகுதிகாண் காலப் பயிற்சிக்கு (Probation) தேர்ந்து கொண்டார்கள். இவர்களுள் லாரண்ட் பால் ஜென்ரான், மரியோ லாரேஜே, மற்றும் ஜெரால்டு மிக்காடு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். மேலும் மார்செல் பாரெஸ்ட் அவர்களை விருப்ப நிலைப் பயிற்சிக்கும் (Aspirancy) தேர்ந்து கொண்டார்கள்.

மேலும் கோடை காலத்தில் இன்னும் பல குருமட மாணவர்கள், மற்றும் பொது நிலையினர், இந்தக் குழுவுடன் சேர்ந்து கொண்டார்கள். இவர்களுள் மௌரீஸ் பவராசா, ஆலிவர் தலரே, மிஷல் லாரேஜே, போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள். அருட் தந்தை அகஸ்தீன் ஸ்டெப்கோவும் இக்குழுவில் இணைந்து கொண்டார். அக்டோபர் மாதத் தொடக்கத்தில் ஏறத்தாழ 20 உறுப்பினர்கள் இருந்தனர். அருட் தந்தை பாரண்ட் அவர்கள் இந்தக் குழுவின் பயிற்சியை மேற்பார்வையிட்டார்கள். குழு உறுப்பினர்களுக்கு புதிய துறவற அமைப்பின் நோக்கம், அர்ப்பணம், பணி வாழ்வு இவற்றைக் கருத்தரங்குகள், வகுப்புக்கள் மூலம் மிகத் தெளிவாக அவர்கள் உள்ளத்தில் பதிய வைத்தார். சிறப்பாக அர்ப்பண வாழ்வைப் பற்றியும், மூன்று ஐந்து ஆன்மீக நெறிமுறைகளையும் மிகத் தெளிவாக எழுடுத்துரைத்தார். சிறப்பாக பயிற்சி கொடுப்பதில் மிகக் கவனம் செலுத்தினார். இதற்குத் தேவையான தங்கும் இட வசதி மற்றும் தேவையான பொருட்கள், மேலும் வருங்காலத்தில் படிப்பதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் பொறுப்போடு செய்து கொடுக்க பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். அதே வேளையில் சபையில் சேருகின்றவர்களின் எண்ணிக்கையும் குறையாமல் பார்த்துக் கொண்டார்.

சிறிய கோவிலுக்கு மேல் இருந்த அறை போதிய வசதிகளின்றி இருந்தது. மேலும் குளிர் நீர் மட்டும் தான் இருந்தது. வகுப்புக்குள் கோவிலின் மணிக் கூண்டில் தான் நடத்தப்பட்டது. அருகிலிருந்து பள்ளியின் சாமான்கள் வைக்கும் அறை

இவர்களது படுக்கை அறையாக மாற்றப்பட்டது. பிற்காலத்தில் பயிற்சி மாணவர்கள், கிடைத்த பயன்படுத்தப்பட்ட கட்டிடப் பொருட்களைக் கொண்டு சிறு தங்கும் அறையைக் கட்டினார்கள். கடவுளின் பராமரிப்பில் நம்பிக்கை கொண்டு செபித்தோம், கடவுளினாலும் பிற நல்ல உள்ளங்களின் வழியாக எங்கள் வாழ்வுக்குத் தேவையான உணவையும், பொருள்களையும் கொடுத்து உதவினார்கள். சில சமயங்களில் சந்தை வெளிகளிலும், பொருட்களை விற்பவர்களிடமும் பிச்சையெடுத்து எங்கள் அன்றாட உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டோம். அவ்வேளையில் இவர்கள் ஏழைகள் மற்றும் பிச்சை எடுப்போர் இவர்களின் மன உணர்வைப் புரிந்து கொள்ள முடிந்தது என்பதைக் குறிப்பிட்டார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் பெற்ற நம்பிக்கையின் ஆழத்திற்கு ஏற்ப இத்தகைய செயல்களில், தயக்கமும் கூச்சமும் இன்றிப் பங்கெடுத்தார்கள். இத்தகைய நல் உள்ளத்தை அருட் தந்தை லூயி மரிய பாரண்ட் அவர்கள் தனது போதனையாலும், வழி நடத்துததாலும். வாழ்க்கை முறையாலும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

தொடக்க காலத்தில் சபை நிறுவுநரும், முதல் உறுப்பினர்களும் அடைந்த துன்பமும் வேதனையும் எண்ணிலடங்கா. ஆனால் இவற்றை அவர்கள் பொருட்படுத்தாமல் தளராத நம்பிக்கையுடனனும், உற்சாகத்துடனும், ஈடுபட்டதால் தான் இதைச் சாதிக்க முடிந்தது. இக்குழுவில் யாராவது ஒருவர் மனம் தளர்ந்து, சோர்ந்து விரக்தியடைந்திருந்தால் இன்றைய நிலையை நாம் அடைந்திருக்க முடியாது. எனவே உலகியல் துறவற சபையின் வருங்கால வாழ்வை மனக்கண் முன் வைத்து நம் சபை வழியாக திரு அவைக்குத் தொண்டாற்ற வேண்டும் என்பதற்காக எல்லாவித துன்பங்களையும் பொறுமையுடன் தாங்கி இறைவனுடைய பராமரிப்பில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்த நம் முன்னோர்களின் வாழ்வு நமக்கெல்லாம் ஒரு பாடமாகவும், வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும்.

நம் முன்னோர்களின் பயிற்சித் தளத்திற்கு அருகில்தான் அமலமரித் தியாகிகள் சபையின் பயிற்சி தளத்திற்கு அருகில் இருந்தது மிகவும் உறுதுணையாகவும் இருந்தது. ஏனென்றால் ஆன்மீக வழிகாட்டுதல்களுக்கும், மற்றும் பல்வேறு கல்வி மேம்பாட்டு முயற்சிகளுக்கும் அமலமரி தியாகிகள் சபை உறுப்பினர்களின் பங்கு உறுதுணையாக இருந்தது. ஆன்மீக வாழ்வில் மட்டுமல்ல மாறாக உணவரை தேவைகள், தங்கும் அரை தேவைகள் மற்றும் பல தேவைகளையும் இவர்கள் பொருளாகவும், பணமாகவும் கொடுத்து உதவினார்கள். இவ்வாறு இரு குருக்களும் ஒருவருக்கொருவர் பல வகைகளில் உதவி புரிந்து வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

**1:3 : இறைத் திருவுளச் சபையின் வளர்ச்சி :**

சிறிய குழுவாகத் தொடங்கப்பட்ட நிறுவனம் நாளொரு மேனியம் பொழுதொரு வண்ணமாக, இறை அருளால் வளர்ந்து வந்தது, பயிற்சித் தளங்களில் பல்வேறு

படிகளைக் கடந்து இளையியல் படிப்புக்காக கியூபெக் நகரிலுள்ள டிராஸ் ரிவெயிர் என்னுமிடத்திலுள்ள குருமடத்தில் இறையியல் பயில அனுப்பப்பட்டார்கள். இவ்வாறு புனித போனிபாஸ், மாணிடோபா, எட்மான்ட்டன், ஆல்பெர்ட்டா போன்ற இடங்களுக்கும் இறையியல் படிப்புக்காக அனுப்பப்பட்டார்கள். இளங்குருமட மாணவர்களுக்கு டிராய்ஸ் ரிவெரீஸ் என்னுமிடத்தில் ஆன்மீகப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார்கள். சபையில் சேரும் உறுப்பினர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போக, இவர்களின் தங்கும் இட வசதியைப் பெருக்க வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டது. இத்தகைய பிரச்சனையைத் தீர்ப்பதற்காக, அருட் தந்தையவர்கள் தனது சபையில் இருந்த பல நண்பர்களின் உதவியை நாடினர். பல்வேறு நாடுகளில், பல்வேறு இடங்களில் இருந்த அவர்களின் உதவியைப் பெற்றார். ஒவ்வொரு கட்டத்திலும் இறைவனின் அருட் கரம் தன்னை வழி நடத்தி வருவதை நன்கு கண்டு கொண்டார்.

எட்மண்ட்ஸ்டன் நகர் ஆயர் மேதகு ரோமியோ கேக்னான் அவர்கள் எழுதிக் கொடுத்த இடத்தில் இளங்குருமடம் கட்டும் பணியை 1968 இல் அருட் தந்தை மரிய லூயி பாரண்ட் அவர்கள் தொடங்கினார். இந்த இடம் பெர்த் அன்டோவர் மற்றும் பிளாஸ்டர் ராக் என்னும் இரண்டு நகர்களுக்கு மத்தியில் அமைந்திருந்தது. செப்டம்பர் மாதத்தில் ஒரு குழுவினர் இங்கு தங்கி தங்கள் படிப்பை மேற்கொண்டனர். மற்ற குழுவோ ஏற்கனவே டிராய் ரிவெரெஸ் என்னுமிடத்தில் இருந்த குருமடத்தில் தங்கள் படிப்பைத் தொடர்ந்தனர்.

**a) முதல் விரிவாக்கம் :**

எதிர் பாராத விதமாக, அருட் தந்தை பாரண்ட் அவர்கள் கொண்ட தொடர்பின் காரணமாக பிற நாடுகளில் இருந்த சிலருடைய நண்பர்கள் வழியாக பிற நாட்டு மாணவர்களும் இச்சபையின் உறுப்பினர்களாக சேர விருப்பம் தெரிவித்தார்கள். கனடாவில் இருந்து வந்த மாணவர்களோடு பிற நாடுகளில் இருந்தும் வந்த மாணவர்களின் எண்ணிக்கை எந்த அளவுக்குக் கூடியதென்றால் ஒரு கட்டத்தில் இவர்கள் தங்குவதற்குக்கூட இடம் பற்றாமல் போய்விட்டது. கடவுளின் அருளால் இத்தகைய சிக்கல்களைத் தீர்க்க கடினப்பட்டாலும் பிரச்சனைகள் எழாமல் இருந்தது ஆறுதலைத் தந்தது. பற்றாக் குறையைச் சரி செய்ய நம் கவனத்தை அதிகம் செலுத்தி இறைவனின் அருள் துணையோடு சரிசெய்யப்பட்டன. 1964 ஆம் ஆண்டு தங்கியிருந்த குருமடங்களும், பயிற்சிப் படிப்பு முறைகளம் ஆய்வுக்குப்பின் மறு வரையறை செய்யப்பட்டன.

1954 ஆம் ஆண்டு தங்கியிருந்த குரு மடங்களும், பயிற்சிப் படிப்பு முறைகளும் ஆய்வுக்குப்பின் மறுவரையறை செய்யப்பட்டன.

அமலமரித் தியாகிகள் சபையினர் டிராய்ஸ் ரிவெய்ரஸில் நடத்திவந்த ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரி, கல்வித் திட்டத்தின் மாற்றம் காரணமாக பயிற்சிக் கல்லூரி இடமாற்றம் செய்யப்பட்டது. கடவுளின் அருள் துணையால் இந்த இடம் முழுவதும் இறைத் திருவுளச் சபையின் இளங்குருமடமாக மாற்றப்பட்டது. அதே வேளையில் “ரெட் ராபிட்ஸ்” வளாகம் இறையியல் பயிற்சிக் கல்லூரியாக மாற்றப்பட்டது. இறைத் திருவுளச் சபையில் இருந்த முதல் குருவானவர் ஏற்கனவே குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டதால் அமலமரித் தியாகிகள் சபையினர் அவருக்கு இறையியல் படிப்பிலிருந்து விலக்கு அளித்தனர். அத்தகையவர் தான் கனடா நாட்டைச் சார்ந்த அருட் தந்தை பால் கூட்டு.

இரண்டு நிறுவனங்களில் கொடுக்கப்பட்ட பயிற்சியும் அதன் விளைவாக வெளிவந்த குருமடமானவர்களின் வாழ்க்கை முறையும் கனடா நாட்டை விட்டு பிற நாடுகளிலில் இருந்துவரும் ஒரு மாணவர்களுக்கும் பயிற்சி கொடுக்கலாம் என்ற நம்பிக்கையைக் கொடுத்தது. எனவே பிற நாடுகளில் இருந்து மாணவர்கள் பயிற்சிக்காகவும், இறையியல் படிப்புக்காகவும், இறைத் திருவுளச் சபையின் வாழ்க்கை முறையைக் கற்றுக் கொள்வதற்காகவும் வந்தார்கள். இவ்வாறு வந்தவர்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்பிச் சென்று இறைத் திருவுளச் சபையைத் தங்கள் சொந்த நாட்டிலும் வேரூன்றச் செய்தார்கள். இவ்வாறு கனடா நாட்டிற்கு வந்த அமெரிக்கா, இலங்கை, கீரேநாடா, லாவோஸ், ஹைதி, பிரான்ஸ் மற்றும் லாவோஸ் நாட்டு மாணவர்கள் தங்கள் நாடுகளுக்குச் சென்று இறைத் திருவுளச் சபையை தங்கள் நாடுகளிலும் வேரூன்றச் செய்தார்கள்.

ஒரு பெரிய குருமடத்தைத் தொடங்கி குருமாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்பதே சபை நிறுவுநரின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. எட்மன்ஸ்டன் நகர் ஆயர் அவர்களின் விருப்பப்படி 4 பங்குத் தளங்களும், மறைப் பணித்தளங்களும் சபை நிறுவுநரிடம் ஒப்படைக்கப்பட்டது. பிளாஸ்டர் ராக், புளுபெல், அண்டர்கள் சாலை, ஆர்து ரெட் போன்ற இடங்களாகும், குரு மடத்தில் பணியாற்றிய ஆசிரியர்களாகிய குருக்கள் தங்கள் குருமாணவர்களின் ஒத்துழைப்புடன் ஒவ்வொரு இடத்தின் மேய்ப்புப் பணிகளை பொறுப்பேற்றுக் கொண்டார்கள். இவ்வாறு குருமாணவர்களுக்குத் தரப்பட்ட பயிற்சி நான்கு சுவர்களுக்குள் அடங்கிவிடாமல் பணிகிளின் மத்தியில் பயிற்சி பெற்றது அனைவராலும் பாராட்டப்பட்டது. ஏனென்றால் குரு மாணவர்கள் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தேர்ந்து தெளிந்து முடிவெடுக்கும் பண்பை வளர்த்துக் கொள்ள போதுமான பயிற்சிகளை குருமாணவர்களுக்கு வழங்கியது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் கோடிட்டுக் காட்டிய மறைபரப்பு பணிகள் எல்லாம் நம் நிறுவநரின் தனிவரமாக இருந்தது என்பதை அனைவரும் கண்டு கொண்டார்கள். நம் சபை நிறுவுநர் கையாண்ட குரு மாணவர்களின் பயிற்சி முறைகள்

அன்றைய கால கட்டத்தில் வியப்பாகவும், விநோதமாகவும் தோன்றினாலும், பிற்காலத்தில் அனைத்து குருமாணவர்களின் பயிற்சி இல்லங்கள் பின்பற்றின என்பது வரலாறு நமக்குக் கற்றுத்தரும் பாடமாகும்.

எனவே ஒரு விதத்தில் நம் சபை நிறுவுநர் வருங்காலத்தை மனதில் கொண்டு செயல்பட்ட ஓர் இறைவாக்கினராகச் செயல்பட்டார். நம் சபை நிறுவுநர் மனதில் குருமாணவர்களாக பயிற்சி பெறுபவர்கள் பயிற்சி பெறும் போதே பங்குத்தள அனுபவத்தைப் பெற வேண்டும் அப்போது தான் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டபின் அவர்கள் ஆர்வத்தோடும், ஈடுபாட்டுடனும் மறைபரப்புப் பணிகளில் ஈடுபட முடியும் என்பதை நன்கு உணர்ந்திருந்தார். ஏனென்றால் அவரது எண்ணப்படி இறைத் திருவுளச் சபையைச் சார்ந்த குருக்கள் அனைவரும், ஆயர்களின் விருப்பத்திற்கிணங்க, உலகின் கடையெல்லை வரை சென்று, மறைப் பணி ஆற்றுவதில் ஈடுபடவேண்டும் என விருப்பம் கொண்டார்.

மேலும் ஆங்கில மொழி பேசும் மக்கள் மத்தியில் பணிகள் இருந்த போதிலும் பயிற்சிகள் பிரெஞ்சு மொழியில் கொடுக்கப்பட்டது ஒரு விதத்தில் பயனுள்ளதாக இருந்தது. ஏனென்றால் பயிற்சியை முடித்துவிட்டு பணித்தளத்திற்கு வந்த குருக்கள் இரண்டு மொழிகளிலும் புலமை பெற்றிருந்ததால் உலகின் பல இடங்களுக்கும் சென்று பணியாற்ற அவர்களுக்குப் பேருதவியாக இருந்தது.

இந்த தருணத்தில் இரண்டு முக்கியமான கருத்துக்களை நம் மனதில் இருத்த வேண்டும். முதலாவதாக நமது சபை நிறுவுநர் பங்குப் பணிகள் மற்றும் மறைப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவது மற்றம் இதுதான் நம் சபை தொடங்குவதற்கு அடிப்படைக் காரணம் என்பதையும் மறக்காமல் நினைவில் கொண்டு செயலாற்ற வேண்டும்.

இந்தக் கருத்துக்களை நம் சபை நிறுவுநர் குரு மாணவர்களாக பயிற்சி பெறுபவர்களிடம் வலியுறுத்திக் கூறி அவர்கள் இதற்கென்று தங்களை முழு மனதுடன் தயாரித்துக் கொள்ள வேண்டும் என அடிக்கடி குறிப்பிடுவார். எனவே தான் எல்லா உறுப்பினர்களும் குருக்களாகத் திருநிலைப்படுத்தல்பட்டு மறைபரப்புப் பணிகளில் ஈடுபட வேண்டும். இவ்வாறு மறைபரப்புப் பணிகளில் ஈடுபடும் குருக்களுக்காகச் செபிக்க வேண்டியது பொது நிலையினரின் கடமையாகும். எனவே தான் அவர்களும் நம் சபையில் சேர்ந்து நமது ஆன்மீக வாழ்வைத் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்து, தங்கள் செப வாழ்வின் மூலம் குருக்களுக்கு அவர்களுடைய பணிவாழ்வில் உறுதுணையாக இருப்பது.

குருமடத்தில் இருந்த குருக்களைப் பல்வேறு மறைப் பணிகளில் ஈடுபடுத்தியதின் விளைவாக 1971 மற்றும் 1972 இல் இரண்டு குரு மடங்களும் குரு மாணவர்களைச்

சேர்த்துக் கொள்ள வில்லை. எனவே வயது கூடிய மற்றும் கல்லூரிப் படிப்பை முடித்த பல மாணவர்கள் சபையில் சேர ஆரம்பித்தார்கள். குருத்துப் பயிற்சி பெறுகின்ற குருமாணவர்கள் மறை மாவட்டம் நடத்துகின்ற குருமடப் பயிற்சித் தளங்களுக்கு அனுப்பப்பட்டார்கள்.அங்கே அவர்களை வழிநடத்த சில குழுக்கள் நியமிக்கப்பட்டு சபையின் உள்ளார்ந்த நோக்கத்தை அனைவரும் மனதில் ஆழாகப் பதித்துக் கொள்ள பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. வேறு இடங்களில் பயிற்சி பெற்றாலும் அவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு சபையின் நோக்த்திலிருந்து பிறழாமல் தொடர்ந்து வழிநடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இத்தகைய பயிற்சி சிறையில் சில தவிர்க்க முடியாத பிரச்சனைகள் இருந்தாலும், ஒரு விதத்தில் காலச் சூழலுக்கு ஏற்ப தங்களையே மாற்றியமைத்துக் கொண்டு, சபையின் இலட்சியத்தில் வேரூன்றி நிற்கப் பலன் தந்தது. எனவே பயிற்சி என்பது ஏதோ தேவையைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் மாறாக உலகில் ஈடுபாட்டுடன் மறைப்பணி ஆற்ற பயிற்றுவித்தது.

**b) மறைப்பணி விரிவாக்கம் :**

**வெளிநாடுகளில் :**

பிற நாடுகளுக்கும் சென்று மறைப்பணி ஆற்ற வேண்டும் என்ற எண்ணம் 1959 ஆம் ஆண்டு செப்டம்பர் 18 அன்றே தொடங்கிவிட்டது. திருத் தொண்டர் டானியல் ஒரூர்க்கே, மற்றும் ஆவிவியர் தாலேரே என்ற பொது நிலையினரும் லாவோஸ் நாட்டிற்குச் சென்ற போதே தொடங்கிவிட்டது. அமல மரித் தியாகிகள் சபையினரின் வேண்டுகோளின் படி வேதியர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் பணியில் உறுதுணையாக இருக்க அழைக்கப்பட்டார்கள். எனவே லாவோஸ் நாட்டின் தலைநகரான வியன்டியான் நகரில் வேதியர் பயிற்சிப் பள்ளியில் மறைப் பணிப் பயிற்சியோடு, விவசாயத்தைப் பற்றிய பயிற்சியும் வழங்கப்பட்டது. இவ்வாறு அவர்கள் மக்களின் நற்செய்தி அறிவுப் பணியில் ஈடுபடுவதோடு, மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் விவசாய வழிமுறைகள் மூலம் மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்காகவும் உழைக்க வேண்டிய பயிற்சிகளைப் பெற்றார்கள். இவ்வாறு மக்களின் முழு முன்னேற்றத்திற்கு உழைக்கும் நல்ல வேதியர்கள் இப்பயிற்சிப் பள்ளியில் உருவாக்கப்பட்டார்கள்.

1961இல் இரண்டு பொது நிலையினர் பொலிவியா நாட்டுக்குச் சென்றார்கள். தொடர்ந்து மிக்கேல் சார்பொன்னே, அவர்கள் ஈக்குவாடர் நாட்டிற்குச் சென்றார்கள். 1965-இல் ஹைதியில் பணியாற்ற உறுப்பினர்கள் சென்றார்கள். 1963இல் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் சில குழுக்கள் சென்று தங்கள் பணியைத் தொடங்கினார்கள். தொடர்ந்து சிலி. பொவிவியா, மொலீஷியஸ் போன்ற நாடுகளுக்கும் பரவின. மௌரீஸ் ராய் அவர்கள் அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோவிலும் நியூ மெக்ஸிக்கோவில் உள்ள நவஜோ இந்தியர்கள் மத்தியிலும் பணியாற்றச் சென்றார்கள்.

மிக்கேல் லாரோசே அவர்களின் துணையோடு 1971-இல் டொமினிக்கன் குடியரசு நாட்டில் மறைப்பணி தொடங்கப்பட்டது.

வேதபோகச் சபைக்குருவான அருட்தந்தை யுவஸ் பெர்ஜமான் அவர்கள் OMMI சபையினரின் தூண்டுதலால் கியூபாவில் பணியாற்ற ஒரு குழு அனுப்பிவைக்கப்பட்டது. எதிர்பார்ப்பு எண்ணத்திற்கு மாறாக கம்யூனிச அரசு இவர்கள் பணிக்குத் தடை விதித்தது எனவே இவர்கள் ஒன்று கூடி வர வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது.

நம் சபை தொடங்கிய நாளிலிருந்து மறைபரப்புப் பணியை உற்சாகத்துடனும், உயர்ந்த எண்ணங்களுடன் செயலாற்றி வந்ததைக் காண்கின்றொம். தூய ஆவியானவர் தொடர்ந்து நம்மை வழிநடத்தி, சிறப்பாக பிறநாடுகளில் மறை பரப்புப் பணியாற்ற விரும்புவர்களைத் தூண்டியெழுப்பி வழி நடத்தி வருகின்றார்.

கனடா நாட்டில் பல இடங்களில் நம் சபை தன் பணியைத் தொடங்கின. 1962 இல் கியூபெக் நகரில் ஒரு குருவானவர் மற்றும் குருமாணவர். பொது நிலையினர் இவர்களின் துணை கொண்டு மாற்றுத் திறனாளிகளிள் மற்றும் பல்வேறு குற்ற வழக்குகளுடைய சிறுவர்களுள் ஆகியோரின் முன்னேற்றத்திற்காகச் சிறப்பான நிறுவனம் ஒன்றை நிருவி இத்தகையோரின் முன்னேற்றத்திற்காக உழைத்தார்கள். 1963 ஆம் ஆண்டு இரு குருக்கள் பங்குத்தளப் பணியை ஏற்று பணிபுரிந்தார்கள். 1964 ஆம் ஆண்டு கனடா நாட்டின் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக உள் விடுதி ஒன்றை ஏற்படுத்தி அவர்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தினார்கள். இத்தகைய உள்விடுதி யூகான் பகுதியிலுள்ள, ஒயிட் கார்ஸ் என்னுமிடத்தில் தொடங்கப்பட்டது.

புதிதாக அருள் பொழிவு செய்யப்பட்ட குருக்கள் கியூபெக் நகரில், டிராய் ரிவெரெஸ் மறை மாவட்டத்தில் பல்வேறு குழுக்களை ஏற்படுத்தி அவர்களின் வாழ்வு முன்னேற்றத்திற்காக உழைத்தார்கள். இவ்வாறு பல்வேறு மாநிலங்களில் இவர்களின் பணியானது விரிவுபடுத்தப்பட்டது. இத்தகைய பணிக்குழுக்கள் கியூபெக் மாநிலத்தில் உள்ள மாண்ட்ரீல், ஹல், ஹௌடதரீஸ், காஸ்பே, ஆமோஸ் போன்ற இடங்களிலும் மற்றும் ஒட்டாவோ, ஒன்டாரியோ, எட்மன்ஸடன் போன்ற இடங்கள் குறிப்பிடத்தக்கனவாகும்.

**c) உள் கட்டமைப்பு :**

மேதகு ஆயர் ஹென்றி ரூத்தியர் OMI, 1958ஆம் ஆண்டு பக்தசபையாக அங்கீகரித்தார்கள். 1963 ஆம் ஆண்டு எட்மண்ட்ஸ்டன் நகர்ப் ஆயர் மேதகு ரோமியோ காக்னான் N.B. அவர்கள் திருச்சபைச் சட்டப்படி புனித நிலைக்குழுவாக (Association of Perfection) 'இறைத் திருவுளச் சபை' என்ற பெயரில் உயர்த்தினார்கள். 1965 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் நாள் மேதகு ஆயர் காக்ளான் அவர்கள் மறை மாவட்ட அதிகாரத்திற்கு உட்பட்ட, திருச்சபைச் சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட உலகியல் துறவற

சபையாக அங்கீகரித்தார்கள். துறவற சபை மற்றும் உலகியல் துறவற சபைகளுக்கான திருப்பேராயம், இதற்குத் தடையில்லாச் சான்று வழங்கியது. மேலும் 1965 ஆம் ஆண்டு உரோமையிலுள்ள பேராயம் சபையின் சட்ட ஒழுங்குகளுக்கு அனுமதி வழங்கியது.

1964 இல் அருட்தந்தை பாரண்ட் அவர்கள் சில முக்கியமான முடிவுகளை எடுப்பதற்குத் துணையாக ஆலோசனைக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தார். 1969 ஆம் ஆண்டு. சபையின் அதிகார அமைப்புகளை மாற்றியமைப்பதன் மூலம் முன்னேற்றப்பாதையில் செல்ல வசதியாக இருக்கும் என் உணர்ந்து இன்னும் சில மாற்றங்களைச் செய்தார்.

முதல் பொதுப் பேரவையைக் கூட்டுவதற்குத் தயாரிப்பாக ஒரு தயாரிப்புக் குழு ஒன்றை ஏற்படுத்தினார்கள். முதல் பொதுப் பேரவை ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நடந்தது. இப்பேரவை சபையின் பொது இயக்குநர் அவர்களைத் தேர்ந்தெடுத்தது மேலும் அகில உலகில் செயல்பட்டுவரும் செயல் திட்டாங்களையும், மற்றும் சபையின் நோக்கத்தையும் அது செல்லும் திசையையும். செயலாற்றலையும் கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுக்கப்பட்டன. இதன் விளைவாக அருட்பணியாளர்கள் ரெனே டிசிலிடெட், மரியோ லரோசே, யுவான் கார்பென்டியர், மற்றும் பிரான்காய்ஸ் ஹமல் போன்றோர் அருட் தந்தை பாரண்ட் அவர்களைப் பின் தொடர்ந்து இறைத் திருவுளச் சபையை வழி நடத்தி வந்தார்கள்.

சபையின் அமைப்பு வகையானது பூகோள வரைபடத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. அதாவது மாநில எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டன. 1972ஆம் ஆண்டு கனடா மாநிலம் உருவாக்கப்பட்டது. அதற்குப்பின் படிப்படியாக மற்ற மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. அவையாவன: ஹைதி, டொமினிக்கள் குடியரசு, கொலம்பியா ஈக்குவேடர், இந்தியா, இலங்கை, பிரெஞ்சு கயானா. சில இடங்களில் வசதிக்காக சில பிரிவுகள் பிரிக்கப்பட்டன. பணிபுரிகின்ற இடங்கள், வாழும் இடங்கள் இவற்றை மையமாகக் கொண்டு குழுக்களும் பிரிக்கப்பட்டன. ஏனென்றால் அவை ஒன்று கூடி செபிப்பதற்கும், நட்புடன் உறவாடுவதற்கும், பகிர்வதற்கும் பயனுள்ளதாக இருந்தது. குழுக்கள் வழியாகத்தான் ஒவ்வொரு உறுப்பினரும் சபையோடு நெருங்கிப் பிணைக்கப்பட்டிருந்தார்கள். குழுக்களின் வழியாகத்தான் ஒவ்வொரு உறுப்பினரும் சபைக்கு அறிமுகப்படுத்தப்பட்டார்கள். குழுவாழ்வு முக்கியத்துவம் பெற்றது. படிப்படியாக சபையானது தனது உறுப்பினர்களின் உருவாக்கப் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று சிந்திக்கத் தொடங்கினார்கள். எனவே இதன் வெளிப்பாடாக ஆண்டுக் கூட்டங்கள், பயிற்சி வகுப்புக்கள், குருமாணவர்கள், பொது நிலையினர், பின்பு

இல்லறத்தோர் என ஒவ்வொரு குழுவுக்கும் தனிப்பட்ட விதத்தில், தொடர்ந்து நடத்தப்பட்டன.

1977 ஆம் ஆண்டு நடந்த பொதுப் பேரவை, ஒழுங்கு முறை 4 இல் உருவாக்கப் பயிற்சிக்குத் தேவையான அம்சங்களைப் பட்டியலிட்டுச் சிந்தித்து முடிவெடுத்தது. சபையில் சேர வருபவர் தொடங்கி, சபையில் நிரந்தர அங்கத்தினராக சேரும் வரை. ஒவ்வொரு கட்டத்திலும் எப்படிப்பட்ட உருவாக்கப்பயிற்சி தர வேண்டும் எனத் தெளிவாகத் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டன. 1980 இல் நடந்த பொதுப் பேரவை உருவாக்கப் பயிற்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து உருவாக்கப் பயிற்சி இயக்குநர் என்ற தனிப் பதவியை ஏற்படுத்தி அவர் உருவாக்கப் பயிற்சிக்குத் தேவை வழிகாட்டி நூல்கள், கொள்கைத் திரட்டு, புத்தகங்கள் போன்றவற்றைத் தயாரிக்கவும், தேவையான வழிமுறைகளைப் பரிந்துரைக்கவும், ஒவ்வொரு மாநிலத்திலுள்ள பயிற்சி ஒருங்கிணைப்பாளருக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென போன்ற பொறுப்புக்கள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டு, உருவாக்கப் பயிற்சியின் முக்கியத்துவத்தை அனைவரும் உணர வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. வளர்ந்துவரும் காலச்சூழலுக்கு ஏற்ப, உறுப்பினர்களின் வாழ்க்கை நிலையை கருத்தில் கொண்டு 1974 இல் நடந்த பொதுப் பேரவை சபையின் சட்ட ஒழுங்குகளில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. 1980 ஆம் ஆண்டு திரு அவைச் சட்ட வல்லுநர்களின் துணையோடு ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழவானது 1983 இல் நடைபெறும் சிறப்புப் பொதுப் பேரவைக்குப் பரிந்துரை செய்ய பணிக்கப்பட்டது. இவ்வாறு பொதுப் பேரவையில் கலந்து ஆலோசித்து எடுக்கப்பட்ட, புதுப்பிக்கப்பட்ட சட்ட ஒழுங்கு முறைகள் உரோமையில் உள்ள துறவற சபை மற்றும் உலகியல் துறவற சபைகளுக்கான பேராயத்திற்கு அனுப்பப்பட்ட சபையானது பாப்பிறை அதிகாரத்திற்கு உட்பட்ட சபையாக அங்கீகரிக்கப்பட்டது. அதன் பின் நம் உரோமைப் பேராயம் சில மாற்றங்களைச் செய்ய கேட்டுக் கொண்டது. அதன்படி சில மாற்றங்களை 1986இல் நடந்த பொதுப் பேரவை அனுமதிக்காக மீண்டும் அனுப்பியது. இவ்வாறு 1987 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 12 ஆம் நாள் உரோமைப் பேராயம் இறைத் திருவுளச் சபையை பாப்பிறையின் அதிகாரத்திற்கு உட்பட்ட சபையாக, அதற்குரிய உரிமைகள், கடமைகளொடு அங்கீகரித்தது. இவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட நம் சபை ஒழுங்குகள் 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21 ஆம் நாள் உரோமைப் பேராயத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

**d) திருமணத் தம்பதியர் :**

1965 ஆம் ஆண்டில் தான் முதன் முதலாக திருமணமான ஒருவர் தன்னை இறைத் திருவுளச் சபையில் சேர்த்துக் கொள்ளும்படி விருப்பம் தெரிவித்தார்.

இவருடைய விருப்பத்தை பரிசீலிக்குமாறு உரோமையில் இருந்த பேராயர் சிஜிஸ்மோன்டி அவர்களுள், லாவோஸ் மறைமாவட்டத்தின் அமலமரி தியாகிகள் சபையின் மாநில அதிபராக இருந்தவர்களும், அந்த திருமணமானவருடைய விண்ணப்பத்தைப் பரிந்துரைந்து ஆவண செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். இவர் வேதியர் குழுவில் ஒருவராகப் பணியாற்றியவர். இவர் ஏற்கனவே 1963 முதல் நம் சபை உறுப்பினர்களைப் போது, மூன்று, ஐந்து ஆன்மீகத்தைப் பின்பற்றி நம் சபையோடு இணைந்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்றைய காலகட்டத்தில் மதம் சார்ந்த கலாபனைகள் (துன்பங்கள்) மேலோங்கிய நேரத்தில் இப்படிப்பட்ட தியாகம் நிறைந்த பொதுநிலையினரின் பங்களிப்பு மிக அவசியமாகக் கருதப்பட்டது. மேலும் இத்தகைய தியாகம் நிறைந்த, அர்ப்பணிப்பு உணர்வோடு பணிபுரிந்த பொது நிலையினரின் பணியும் மிகவும் தேவைப்பட்டது. லவோசியன் பண்பாட்டுச் சூழலை கணக்கில் கொண்டு, திருமணமான ஆண்கள் மட்டும் தான் சபையில் சேர விருப்பம் தெரிவித்தார்கள். எனவே அவர்கள் விருப்பத்திற்குச் சபையானது செவிமடுத்து அவர்களுக்கு கொள்கை அளவில் அனுமதி அளித்தது.

1974ஆம் ஆண்டுக்குப் பின் தான் நம் சபையானது அவர்களை உறுப்பினர்களாக ஏற்றுக் கொண்டது. முதன் முதலாக கனடா நாட்டு தம்பதியர் அதன்பின் டொமினிக்கள் குடியரசுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. இன்று உரோமையில் உள்ள துறவற சபை மற்றும் உலகியல் துறவற சபைகளுக்கான பேராயம் அனுமதி அளித்ததின் அடிப்படையில் இத்தகையவர்கள் சபையின் இணை உறுப்பினர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள்.

1998 ஆம் ஆண்டு நம் சபை உறுப்பினர்கள் மொத்தம் 685. இவர்களுள் குருக்கள் 87, திருமணம் ஆகாத ஆண்கள் 27, குருமட மாணவர்கள் 52 மற்றும் 310 திருமணமானவர்கள்.

திருமணமானவர்கள் நம் சபையில் இணை உறுப்பினர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டது ஆவியானவரின் செயலாகும். இத்தகையவர்களின் துணை திரு அவைக்கும் நம் சபைக்கும் ஆவியானவர் வழங்கிய அரும் பெரும் கொடையாகும். இணை உறுப்பினர்கள் அனைவரும் நம் சபையின் ஓர் அங்கமாக விளங்கினார்கள். அவர்களும் மற்ற உறுப்பினர்களைப் போல நம் சபையின் ஆன்மீக வாழ்வைக் கடைப் பிடிக்கக் கடமைப்பட்டவர்கள்.

திருமணமானவர்கள் நற்செய்தி நிறைவை அடைய கவர்ந்திழுக்கப்பட்டு, இயேசுவின் அழைப்பை ஏற்று இயேசுவை இன்னும் நிறைவாகத் தங்கள் வாழ்வில் பின்பற்ற வேண்டும் என்ற விருப்பத்தினால், துறவறசபை மற்றும் உலகியல் துறவற சபைகளுக்கான பேராயம் பரிந்துரைத்த ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப இத்தகையோர் சபையின் இணை உறுப்பினர்களாக முழுமனதோடு ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள்.

இவ்வாறு காலத்தின் தேவைக்கேற்ப இல்லறத்தோரும், புனிதத்துவத்தை அடைய இயேசுவின் அழைப்பை ஏற்றுக் கொள்வதை உரோமைத் திரு அவையும் வலியுறுத்தியதோடு மட்டுமல்லாமல் ஏற்றுக் கொண்டு உற்சாகமளித்தது. வல்லுநர்களும் காலத்தின் தேவைக்கேற்ற இந்த முடிவை வரவேற்றார்கள். இது ஆவியானவரின் செயல் தான் என்பதையும் ஏற்றுக் கொண்டார்கள் (SCRIS, 45, 48, May 10, 1976).

திருமணமான தம்பதியர் தங்களது திருமுழுக்கு நம்பிக்கையை ஆழப்படுத்தவும், புனிதத்துவத்தின் பாதையில் வழிநடக்கவும். நற்செய்திக்கு சான்று பகரவும், தங்கள் குடும்பத்திலும் மற்றும் தாங்கள் வாழும் சமூகத்தில் சாட்சிய வாழ்வு வாழவும், கடவுளுக்கு தங்களையே முழுவதும் அர்ப்பணித்து வாழவும் இறைத் திருவுள சபை அழைப்பு விடுத்தது.

**தொகுப்புரை** :

நம் சபை தொடங்கிய 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவின் போது, நம் சபை நிறுவுநர் அருட் திரு லூயி மரிய பாரண்ட் அவர்களின் சிந்தனைகளோடு இந்த இயலை நிறைவு செய்வோம். இவை நம் நிறுவநர் தந்தையை மட்டுமல்ல நம்மையும் ஆழ்ந்த சிந்தனைக்கும், சவால் நிறைந்த வாழ்வை எதிர் கொள்வதற்கும் நமக்குத் துணை புரிகிறது.

நம் சபையின் தொடக்க நாட்களில் உற்சாகம் நமக்கு அதிகமாக இருந்தது. இன்று நாம் நல்ல வளர்ச்சியை அடைந்திருக்கிறோம். நாம் நடந்து வந்த பாதையில் நாம் சந்தித்த சவால்களும். துன்பங்களும் நம்மை உறுதியடையச் செய்கிறது. நமக்கு ஞானத்தைத் தந்திருக்கிறது. நமது இளமையின் வேகமும், துடிதுடிப்பும் சற்றுக் குறைந்திருக்கிறது. அன்று இளமைத் துடிப்போடு சபையில் இணைந்த பலர் இன்று பல்வேறு முக்கியமான பணிகளை மற்றும் அமைப்புக்களை அர்ப்பண உணர்வோடு செய்து கொண்டிருக்கிறார்கள். நாம் கடவுள் பக்கம் நம் கண்களை திருப்பி, கடவுளின் வார்த்தையையும் (திருவிவியம்) நம் சபை ஒழுங்குகளையுமு், நம் சபையின் ஆன்மீகத்தையும் வாசித்துத் தியானிக்கும் போது நாம் உறுதி பெறுகிறோம். நம் வாழ்வை அர்த்தமுள்ள வாழ்வாக, முழுமையான வாழ்வாக மாற்றுகின்றார்.

நாம் ஏழைகளாக இருக்க விரும்பினோம் ஆனால் சொத்துக்களை அதிகம் சேர்த்துள்ளோம். தூய்மையுள்ளவர்களாக வாழ்வொம் என உறுதி பூண்டோம். ஆனால் நமது ஆசைகளும், உலக போக்குகளும் சில சமயம் நம்மைச் சோதித்து நம்மைத் தடுமாறச் செய்தன, நாம் என்றும் கீழ்ப்படிதலொடு, இயேசுவின் மனநிலையைக் கொண்டு, அவரைப்போல பணிவாழ்வு வாழ்வோம் என நாம் விரும்பினோம். ஆனால் பல சமயங்களில் நம் சுய விருப்பத்தை நிறைவேற்றவும், தற்பெருமையுடன்

செயல்படவும் செய்தோம். நாம் நம்மையே குழுவிலிருந்து தனிமைப்படுத்தி, தான் என்ற அகந்தையில் வாழ்ந்தோம். கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவதை மறந்து, நம் விருப்பத்தை நிறைவேற்றவும், தொடக்கத்தில் கடவுள் விருப்பத்தை நிறைவேற்ற, எந்த விதமான துன்பத்தையும், சவாலையும் ஏற்றுக் கொள்ள விருப்பம் கொண்டு வாழ்ந்தோம். ஆனால் அவற்றுள் இப்போது சற்று தளர்ச்சி உள்ளதை உணர்கின்றோம்.

இருந்தாலும் இவ்வுலகில் பிறரன்பைத் தூண்டியெழுப்பும் ஒளிச்சுடராகவும், இயேசு நம் ஒவ்வொருவரையும் அன்பு செய்வது போல நாம் பிறரை அன்பு செய்யவும், மகிழ்ச்சியின் தூதுவர்களாகவும் நம்பிக்கையின் இறைவாக்கினர்களாகவும், எங்கெல்லாம் இயேசுவின் நற்செய்தியைக் கொண்டு செல்ல முடியுமோ அங்கெல்லாம் இயேசுவைக் கொண்டு செல்லவும் நாம் ஒவ்வொரு நாளும் இணைந்து செயல்பட வேண்டும். இன்றைய உலகின் மத்தியில் இயேசுவின் தூதுவர்களாக வாழ்வோம். இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, கடவுளின் திருவுளத்தை நிறைவேற்ற அல்லும் பகலும் உழைத்த அன்னையின் திருக்கரத்தை உறுதிப்படுத்துவோம். (திருவுளச் சபையின் வெள்ளிவிழா நினைவு மலர், 1985, பக்: 1-3)

நம் சபை நிறுவுநரின் மேற்கண்ட சிந்தனை வாக்கியங்களில் நம் மனதைச் செலுத்தி, நம் சபையின் தனிவரத்தை, சபை தொடங்கப்பட்ட நாளில் இருந்தது போல நீடித்து நிலைத்து இருக்குமாறு நாம் ஒவ்வொருவரும் பார்த்துக் கொள்ள வேண்டும். மறைபரப்புப் பணி ஆர்வம் நம்மை ஒவ்வொரு நாளும் உந்தித் தள்ளி நம்மை வழி நடத்த வேண்டும்.

## 2. அழைப்பின் குரல்

**முன்னுரை :**

முதல் இயலில் சபையைப் பற்றி அறிமுகப்படுத்தப்பட்டீர்கள். இந்த இயலில் சற்றுமாறுபட்ட உங்களோடு தொடர்புடைய கருத்தைப் பற்றிச் சிந்திக்க இருக்கிறீர்கள். உங்களைப் பொறுத்த அளவில் இது ஒரு முக்கியமான பகுதியாகும். ஏனென்றால் நீங்கள் உங்கள் வாழ்வில் கடவுளின் குரலுக்குச் செவிமருத்து இறைத் திருவுளச் சபையில் இணைந்து உங்களையே இறைப்பணியில் ஈடுபடுத்திக் கொண்ட நிகழ்வைச் சிந்தித்து உங்கள் அழைத்தலை இறைத் திருவுளச் சபையில் உறுதிப்படுத்தப் போகிறீர்கள்.

இறைத் திருவுளச் சபையில் இணைந்து பணியாற்ற வேண்டும் என்ற ஆவல், உங்கள் உள் உணர்வில் இருந்தோ அல்லது பிறர் வழியாகவோ அல்லது ஏதாவது ஒரு நிகழ்வு மூலம் இயேசு உங்களை அழைக்கிறார் என்ற உணர்வு வழியாகவோ அல்லது இறைத் திருவுளச் சபையைப் பற்றிய துண்டு அறிக்கைகளைப் படித்ததன் விளைவாகவோ இருக்கலாம். மறை நூல்கள் வழியாகப் பேசுகின்ற இறைவன் பிறர் வழியாகவோ அல்லது நிகழ்வுகள் வழியாகவோ உன்னோடு பேசி உன்னை அவரது திட்டத்திற்கேற்ப பணியாற்ற அர்ப்பண வாழ்வுக்கு அழைக்கின்றார் என்பது வெள்ளிடை மலையாகும்.

இந்த இயல் வழியாக கடவுள் உன்னை எவ்வாறு அழைத்து இறைத்திருவுளச் சபை வழியாக தன் பணியை ஆற்ற எவ்வாறு தேர்ந்து கொண்டார் என்பதைச் சிந்தித்து உன் அழைத்தலை உறுதிப்படுத்த உனக்கு உறுதுணையாக இருக்கும்.

தேவ அழைத்தல் என்பது கடவுள் நமக்குத் தரும் ஒரு கொடையாகும். இந்த கொடையான இறைவனின் குரலுக்கு நாம் முழுமனதுடன் ஆம் என்று பதில் தரும் போது நம் மனதில் ஒரு இனம் புரியாத அமைதியும் மகிழ்ச்சியும் தோன்றும். இவை நம் வாழ்வில் நீடித்து நிலைத்து நிற்க வேண்டுமென்றால் நாம் நாள் தோறும் கடவுளின் குரலுக்கு ஆம் என்று பதில் சொல்வதில் நிலைத்திருக்க வேண்டும்.

இவ்வேளையில் இறைவாக்கினர் எசாயா அவர்களின் அழைத்தல் வாழ்வை வாசித்துச் சிந்திப்பது மிகப் பொருத்தமாகும் (எசாயா : 6: 1-8)

**இந்தப் பகுதியை வாசித்த பின் :**

- உன்னை அழைத்த கடவுளுக்கு நன்றி கூறு
- உன் நம்பிக்கை வாழ்வுப் பயணத்தை பின்னோக்கிப் பார்.
- இறைத் திருவுள சபைக்கு உன்னை வழிநடத்திய நபர்கள், நிகழ்வுகள் இவற்றைச் சிந்தித்து நன்றி உள்ளத்தோடு இறைவனுக்குப் புகழ்பாடு.

### 2:1 : இறையழைத்தல், அது என்ன?

இறையழைத்தல் என்ற வார்த்தையை எந்தப் பொருளில் பயன்படுத்துகிறோம் எனக் கூர்ந்து நோக்கினால் நல்லது. இறையழைத்தல் என்ற சொல் இலத்தீன் மொழியிலிருந்து வந்தது. 'Vox' என்பது இலத்தீன் மொழியில் உள்ள மூலச் சொல். இதன் பொருள் 'குரல்' என்று பொருள்படும். இதன் தொடர்ச்சிதான் 'அழைக்க' என்ற சொல்லும் வருகிறது. பேசுபவர் ஒருவரை அழைக்கத் தன் குரலைப் பயன்படுத்துகிறார். எனவே இறை அழைத்தல் என்ற சொல்லைப் பயன்படுத்தும் போது இருவர் அங்கே முக்கியத்துவம் பெறுகிறார்கள். ஒருவர் அழைப்பவர் மற்றவர் அந்த அழைப்புக்குச் செவி கொடுப்பவர். எனவே இறை அழைத்தலில் கடவுளே நமக்கு அழைப்பு விடுப்பவர் அந்த அழைப்புக்கு முழுமன சுதந்திரத்துனட ஆம் அல்லது என்று பதிலை நம்மிடமிருந்து கடவுள் எதிர்பார்க்கிறார். இதுதான் இறை அழைத்தல் என்பதாகும். நீ கடவுளால் அழைக்கப்பட்டதை உணர்ந்தால், அந்த இறைவனின் குரலுக்கு நீ பதில் கொடுக்க வேண்டும் என்பது முக்கியமாகும். அந்தப் பதிலும் நேர்மையுடன் இருக்க வேண்டும். எனவே எவ்விதச் சலனமும் இன்றி, சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்து, முழு மனச் சுதந்திரத்துடன் நமது பதிலைத் தெளிவாகவும், உறுதியுடனும் தரவேண்டும். ஏனென்றால் இந்த அழைப்பு வாழ்வை, நம் வாழ்வு முழுவதும் வாழப் போகிறோம். நம் வாழ்வொடு தொடர்புடையது. எனவே நமது பதில் தெளிவாகவும், உறுதியுடனும் இருக்க வேண்டும்.

இறை அழைத்தல் என்பது ஏதோ ஒரு துறவற சபையில் நாம் உறுப்பினராக இணைந்து வாழ்வது மட்டுமல்ல மாறாக நம் வாழ்வையே இறைவனுக்கு அர்ப்பணிப்பது அதாவது, குருவாகவோ, இல்லறவாசியாகவோ, அர்ப்பண உணர்வுடன் நம் வாழ்வின் இறுதிவரை வாழ முன் வருவது. உலகியல் துறவற சபையில் நம்மை அர்ப்பணித்து வாழ முன்வர கடவுள் நம்மை அழைக்கிறார். இதுதான் இறை அழைத்தல் என்ற வார்த்தைகளின் பொருளாகும்.

இந்த இறை அழைத்தலைப் பற்றி இன்னும் தெளிவு பெற விவிலியத்திலிருந்து சில அழைத்தல் நிகழ்ச்சிகளைச் சிந்தித்துப் பலன் பெறுவோம்.

**a) பழைய ஏற்பாட்டில் காணும் இறை அழைத்தல்கள்:**

கடவுள் இஸ்ராயேல் மக்களைத்தான் தேர்ந்தெடுத்த மக்களினமாக வாழ அழைக்கின்றார். அவர்களோடு ஒரு உடன் படிக்கை செய்து கொள்கிறார். அது ஓர் அழைத்தல். அர்ப்பண உணர்வோடு வாழ்வதற்கான அழைப்பு. இந்த அழைப்பின் மூலம் இஸ்ராயேல் மக்கள் தங்களை முழுவதும் தங்களை அழைத்த கடவுளுக்குச் சொந்தமான மக்களாக வாழ்ந்து, மற்ற மக்களின் வாழ்க்கையிலிருந்து வேறுபட்ட வாழ்வு வாழ்ந்து தங்களை அழைத்த கடவுளை மட்டும் நம்பி வாழ அழைக்கப்பட்டார்கள் (வி.ப. 19: 3-8; இ.ச. 7: 1-16)

**இஸ்ராயேல் மக்களுள் சிலரைக் கடவுள் தேர்ந்தெடுக்கிறார்:**

பழைய ஏற்பாட்டில் கடவுள் தன் உடன்படிக்கையை நிறைவேற்ற சிலரை இறைவாக்கினர்களாகவும், சிலரைக் குருக்களாகவும், சில அரசர்களாகவும் தேர்ந்தெடுத்தார். இவர்கள் வழியாக தனது மீட்புத்திட்டத்தை நிறைவேற்றவும், மக்களை அன்பு செய்யவும் விரும்பினார். கடவுள் தனக்கு விருப்பமானவர்களையே தேர்ந்தெடுத்தார். அகில உலகின் படைப்பாளராகவும், மக்களின் பாசமிக்க தந்தையாகவும் இருக்கும் கடவுள் இறைத் திட்டத்தின் படி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்கள் பெண்களை தன் உடன் படிக்கையின் பங்காளிகளாகத் தேர்ந்து கொண்டார். இவர்கள் மூலம் படைப்புக்களைப் பாதுகாக்கவும், மனித வரலாற்றில் தன் மீட்பின் திட்டத்தையும் வெளிப்படுத்த திருவுளமானவர். யாரையெல்லாம் கடவுள் அழைத்தாரோ அவர்களை ஆழ்ந்த அனுபவங்களால் அவர்களை நெறிப்படுத்தினார். இத்தகைய அனுபவங்கள் அவர்களுடைய வாழ்வின் துன்பமான சூழல்களில் அவற்றை எதிர் கொள்ள அவர்களுக்கு உறுதுணையாக இருந்தது. சான்றாக இறைவாக்கினர் எரேமியா வாழ்க்கை இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

**வாசித்துச் சிந்திக்க : எரேமியா: 1:4-10; 15:10-21; 20: 7-13**

இறைவாக்கினர் எசேயா 43:1-8 இவற்றில் உள்ள சில வார்த்தைகளை நம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

இவ்வாறு கடவுள் கூறுகிறார்: ‘கடவுளாகிய நானே உம்மை அழைத்தேன்.

**‘நான் தான் உன்னை அழைத்தேன்’:** அப்படியென்றால் அழைப்பு என்று ஒன்று இருக்கிறது அது கடவுளிடமிருந்தே வருகிறது.

**‘பெயர் சொல்லி அழைத்தேன்’:** தனிப்பட்ட நபருக்குரிய அழைப்பு.

**‘நானே உன்னைப் படைத்து உருவாக்கினேன்’:** கடவுளின் அன்புத் திட்டத்தின் படி நாம் புனிதமாக்கப்பட்டு மீண்டும் புதிய படைப்பாகப் படைக்கப்படுகிறோம். இத்தகைய புதிய புதிய படைப்பின் மூலம் நாம் கடவுளோடு மீண்டும் உறவை வளர்த்துக் கொள்கிறோம். இதற்கு விலையாகக் கடவுள் தன் உயிரையே கொடுத்தார். தன் விலை மதிப்பில்லா ரத்தத்தால் நம்மை பாவத்திலிருந்து கழுவி நம்மைத் தூய்மையாக்குகிறார்,பொறுமையாக நம்மை வழிநடத்துகிறார். இவ்வாறு நம்மை அவரது இதயத்திற்கு நெருக்கமான மக்களாக மாற்றுகிறார். அஞ்சாதீர்கள்! அமைதயின் இதயத்தை நான் உனக்குக் கொடுக்கிறேன். தகுதியற்ற நிலையை உன்னிடமிருந்து அகற்றிவிட்டு, என்அருளினால் உன் இதயத்தை நிரப்புவேன். தான் தேர்ந்து கொண்டவர்களின் இதயத்தில் இத்தகைய மாற்றங்களைச் செய்கின்ற எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி.

**b) புதிய ஏற்பாட்டில் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டோர்:**

கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்,அவரது அன்பார்ந்த மகன், கடவுளால் அழைக்கப்பட்டு, அனுப்பப்பட்டவர். அழைப்பது அனுப்பப்படுவதற்கே அதாவது கடவுளின் திருவுளத்திற்கு ஏற்ப அகில உலக மீட்புக்காக உழைக்க அனுப்பப்படுகிறார். இந்த அழைப்புக்குச் செவி மடுப்போர் முழுமன சுதந்திரத்துன் தங்களை ஒப்புக் கொடுத்து அனப்பியவரின் விருப்பத்தை எப்போதும் நிறைவேற்ற வேண்டும். எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல, இயேசு இதற்கு விதிவிலக்கானவர் அல்ல, ''அதனால்தான் கிறிஸ்து உலகிற்கு வந்தபோது, பலியையும் காணிக்கையையம் நீர் விரும்பவில்ல, ஆனால் ஓர் உடலை எனக்கு அழைத்துத் தந்தீர். எரி பலிகளும் பாவம் போக்கும் பலிகளும் உமக்கு உகந்தவையல்ல. எனவே நான் சுறியது: என் கடவுளே, உமது திருவுளத்தை நிறைவேற்ற, இதோ வருகிறேன் என்னைக் குறித்துத் திருநூல் சுருளில் எழுதப்பட்டுள்ளது என்கிறார்'. (எபிரேயர்: 10: 5-7)

**அன்னை கன்னி மரியாள் :**

இயேசுவின் பிறப்புப் பற்றிய நற்செய்தி அறிவிப்பு நிகழ்வு அன்னை மரியாளின்அழைப்புக்கு நல்ல ஓர் எடுத்துக்காட்டு. முன்னறிலிக்கப்பட்ட மெசியாவின் தாயாரும் பேறு. அன்னை மரியாளுக்கு வழங்கப்படுகிறது. அன்னை மரியாளும் நம்பிக்கை உணர்வோடு இதற்கு பதில் தருகிறார். ''இதோ ஆண்டவரின்அடிமை, உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும்'' (லூக் : 1 : 26-38) அன்னை மரியாளுக்குத் தரப்பட்ட அழைப்பும் அந்த அழைப்புக்கு அன்னை மரியாள் தந்த பதிலும் ஒரு உண்மையான கடவுளின் அழைப்புக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாகும்.

**அப்போஸ்தலர்கள்:**

நற்செய்தியில் வரும் கீழே குறிக்கப்பட்ட பகுதிகளைப் படித்து, அப்படிப்படிக்கும் போது உன் உள்ளத்தல் எழும் சிந்தனைகளைக் குறித்து வை. மாற்கு : 1 : 14-20, லூக் : 5:1-11.

கடவுளின் அழைப்பில் உள்ளடங்கியுள்ள பல கருத்துக்கள் இங்கே வெளிப்படுவதைக் காண்கிறோம். என்னை விட்டுவிடு நான் ஒரு பாவி: கடளை நெருங்கிச் செல்லும் போதும், அவரது ஒளி என் மேல்படும் போதும் நான் என் நிலையை நன்கு உணர்கிறேன். அதாவது என் பலவீனங்களையும் பாவங்களையும் உணர்கின்றேன்.

கடவுளின் அளவுகடந்த இரக்கத்தையும், பரிசுத்தத்தனத்தையும் கண்டு அவற்றின் முன் என் சிறுமையையும் மனித பலவீனத்தையும், பாவ நிலையையும் காண்கின்றென். எனவே இத்தகைய பரந்த வேற்றுமைகள் இருந்தாலும் கடவுள் எளியவனான என்னை ஏற்றுக் கொள்கிறார். இதற்கு அடிப்படைக் காரணம் கடவுளின்

இரக்கமும் அவரது அளவு கடந்த அன்புதான் காரணமாகும். இதை உணரும் பொழுது என்னுள் ஒரு மன மாற்றம் நிகழ்கிறது. சில நேரங்களில் எனது எண்ண ஓட்டமே ஒரு புதிய திசையை நோக்கிப் பயணம்செய்ய ஆரம்பிக்கிறது, என்னுடைய நடை முறையிலும், எண்ண ஓட்டங்களிலும் ஒரு புதிய திருப்பம் காணப்படுகிறது. புது வாழ்வு எண்ணில் தோன்றுகிறது.

**நம்பிக்கை:**

கடவுளின் அழைப்புக்குப் பதில் கொடுக்க நம்பிக்கை அவசியமாகும். இயேசு இன்றும் உயிருடன் இருக்கிறார், நம்மோடு பேசுகின்றார். அவரது வார்த்தை நம் உள்ளத்தைத் தொட்டு அவரைப் பின்பற்றி வாழ நம்மைக் கவர்ந்து இழுக்கிறது. கடவுளின் அருள் இருந்தால் தான் நாம் கடவுளின் அழைப்பை உணர்ந்து அவரது அழைப்புக்கு முழு மனதுடன் செவிமடுக்க முடியும். தூய ஆவியானவரின் துணையோடு மட்டும் தான் நாம் கடவுளின் அழைப்பைக் கண்டு கொள்ளவும், அவற்றைத் தேர்ந்து தெளிந்து தீர்க்கமான முடிவு எடுக்கவும்துணை புரிகின்றது.

**வந்து பார்:**

கடவுளின் அழைப்புக்குச் செவிமடுப்பது என்றால் நம்மில் இருப்பவற்றை விட்டு விடுவதாகும். அதாவது நமக்குள் இருக்கும், சுயநல எண்ணங்கள், நாட்டங்கள், செயல்கள் அனைத்தையும் விட்டுவிடுவது. நமக்குள் இருக்கும் குறுகிற மனப் பான்மையை விட்டுவிட்டு பரந்த உள்ளத்துடன், பிறருக்காக வாழ்கின்ற பண்புகளைப்பெற்று இயேசுவின் சீடர்களாக வாழ்வது.

**என்னைப் பின் செல்:**

இயெசுவைப் பின்பற்றுவதின் மூலம் தான் நாம் இயேசுவின் சீடர்களாக முடியும். அவரது அடிச்சுவட்டில் நடந்து, அவரது போதனைகளைக் கேட்டு, அவரது வாழ்வைத் தியானித்து, அவரை நெருங்கிப் பின்பற்றும் போதுதான் நாம் அவரது சீடர்களாகிறோம்.

இயேசுவை நம் தலைவராக ஏற்று அவரோடு இணைந்து வாழ முன்வருவது ஒரு பெரிய சவால்! உண்மையான அன்பு இல்லையென்றால் இது சாத்தியமாகாது. ஏனென்றால் இயேசுவோடு இணைந்து வாழ்வது என்பது அவரது வாழ்க்கை முறையையும், அவரது இலட்சியத்தையும் நமதாக்கிக் கொள்ளவேண்டும். எனவே இயேசுவைப் பின்பற்றுவதற்கு முன் இதை நம்மால் செய்ய முடியுமா? இறுதிவரை இயேசுவோடு நிலைத்து நிற்க நான் தயாரா? என்று சிந்தித்து ஒரு நல்ல தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டும்.

**நான் உங்களை மனிதர்களைப் பிடிப்பவராக்குவேன்:**

இயேசுவின் பெயரால் நாம் பணிகளைச் செய்ய வேண்டும். இயேசுவின் பெயரால் நாம் இவ்வுலகிற்கு அனுப்பப்படுகின்றோம். ஏனென்றால் அவரது மீட்புப் பணியை இவ்வுலகில் தொடர்ந்து ஆற்ற.

**அவர்கள் வலைகளை விட்டுவிட்டு இயேசுவைப் பின் தொடர்ந்தார்கள்:**

நம் உள்ளத்தில் எழும் உண்மையான அன்பு ஆர்வம் தான் இயேசுவின் அழைப்புக்குச் செவிமடுக்க நமக்குத் துணைபுரியும். தேர்ந்து தெளிந்து சிந்தித்துப் பார்த்தபின்பு தான் நமது தீர்க்கமான முடிவை எடுக்க முடியும். இதுதான் இயேசுவின் முதல் சீடர்களின் வாழ்வில் நிகழ்ந்தது இதைத் தொடர்ந்து வந்தவர்களின் வாழ்விலும் இத்தகைய மாற்றம் தான் செயல்பட்டது. இன்று அதே நிலை உள்ளிலும் நடந்து கொண்டிருக்கின்றது.

சில மனித்துளிகள் அமைதியான சூழலில் உன்னை நிலை நிறுத்தி, பின்வரும் சிறிய பயிற்சி மூலம், உன்னையும், கடவுள் எந்தெந்த வழிகளிலெல்லாம் வழி நடத்தி வந்துள்ளார் என்பதை சிந்தித்துப்பார்.

- முதல் முதலாக இயேசுவின் அழைப்பை உணர்ந்து, அவரை இன்னும் நெருங்கிப் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் உன்னில் தோன்றியதை, எத்தகைய அடையாளங்களால் உணர்ந்தாய்.
- அந்த வேளையில் உன்னில் தோன்றிய பயம், கலக்கம், போன்ற உணர்வுகளை எண்ணிப்பார்.
- அந்த வேளையிலிருந்து உன்னில்தோன்றிய மாற்றத்தை எவ்வாறு க்ண்டு கொண்டார்∴.
- இயேசுவின் மீது கொண்டுள்ள ஈடுபாடு, இயேசுவின் மறு உருவாக வாழ வேண்டும் என்ற எண்ணம் ஆகியவற்றின் மீது கொண்டுள்ள உறுதிப் பாடுகளை எவ்வாறு அளவிட்டுச் சொல்ல முடியும்.

**திரு அவை:**

கடவுள் எப்போதும் அழைத்துக் கொண்டே இருக்கின்றார். திரு அவை வரலாறு முடிந்துவிடவில்லை. மாறாக நம் இதயங்களில் தொடர்ந்து அது பொறிக்கப்படுகின்றது, நம் கால கட்டங்களில்அது தொடர்ந்த வெளிப்படுத்தப்படவும் செய்கின்றது. மனக்குலம் அனைத்தும் ஒரே மனநிலை உள்ளதாக இன்னும் நிறைவடையவில்லை மாறாக அந்த நிலையை நோக்கிப் பயணித்துக் கொண்டு இருக்கின்றது. கடவுள் திருஅவையில் தம் திருமகள் இயேசுவில் ஒன்று சேர்ந்த இறைச் சமூகம், கிறிஸ்துவின் திருவுடல், தூய ஆவியின் கோவிலாகத் திகழ்கின்றது. திரு அவையில் உள்ள அனைவரும் ஒரே குடும்ப உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட இனம். இத்தகையவர்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டு அவரால் அனுப்பப்பட்டவர்கள். ‘‘நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர், அவரது உரிமைச் சொத்தான மக்கள்’’ (1 பேதுரு 2:9).

கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்ற இறைமக்களின் கூட்டமாகும்.

இறை அழைத்தலில் எது முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்லி இந்தப் பகுதியை நிறைவு செய்வோம்.

இறை அழைத்தல் என்பது கடவுள் தான் விரும்பியவர்கள் தேர்ந்து கொண்டு, தான் விரும்பிய பணிகளைத் தொடர்ந்து ஆற்ற அவர்களை குறித்து வைத்துள்ளார். அதாவதுஅவரது மீட்பின் திட்டத்தை மக்களுக்கு வெளிப்படுத்த தேர்ந்து கொள்கிறார்.

**c) கடவுளின் அழைத்தல்கள் பல வகை :**

**இறையழைத்தல்:**

இறையழைத்தல் நம் வாழ்க்கை முறைகளையும், வாழ்வையும் பண்படுத்தி நிலைநிறுத்துகிறது. சான்றாக குருத்துவ வாழ்வு, இல்லறவாழ்வு, அர்ப்பண வாழ்வு, மணத்துறவு வாழ்வு. இத்தகைய வாழ்க்கை முறைகள் தன்னிலே தனித்து இயங்கக்கூடியவை அல்ல மாறாக என்றோடொன்று இணைந்தும் செல்லலாம். சான்றாக குருத்துவ வாழ்வில் ஈடுபட்டுள்ளவர் அர்ப்பண வாழ்வையும் தேர்ந்து கொள்ளலாம். இறை அழைத்தல் ஒருவருடைய சக்தி முழுவதையும் உள்ளடக்கிச் செயலாற்ற அழைக்கின்றது. அதாவது ஒரு குறிப்பிட்ட வழியில் குறிப்பிட்ட நோக்கத்திற்காக குறிப்பிட்ட வாழ்க்கை முறையை தேர்ந்து கொள்ள வைக்கிறது.

**பணி வாழ்வு:**

ஒரு சிலருக்குத் தாங்கள் வாழுகின்ற இடத்தில் உள்ள சகோதர சகோதரிகளுக்குச் சிறப்பான வகையில் கிறிஸ்துவின் மறையுடலைக் கட்டியெழுப்பக்கூடியவகையில் பணியாற்ற வாய்ப்பு கிடைக்கின்றது. சான்றாக இறை வார்த்தையைப் போதிக்கவும் அல்லது மறைக் கல்வியைப் பயிற்றுவிப்பதிலும் அல்லது அருட்சாதனக் கொண்டாட்டங்கள், அடையாளப் பணிகளில் ஈடுபடுதல், அல்லது பிறரன்புப் பணிகளில் ஈடுபட்டு தேவைப்படுவோருக்கும், நோயுற்றோருக்கும் உதவி புரிதல் அல்லது நிர்வாகத் துறைப் பணிகளில் ஈடுபடுதல் போன்ற பல வகைப் பணிகளில் வெளிப்படுத்தப்படுகின்றது.

இந்த அழைப்புக்கள் அனைத்தும் தொழில் சார்ந்ததோ. அல்லது பணி வாழ்வோ? எதுவானாலும்அனைத்தும் நமது தொடக்க அழைப்பான திருமுழுக்கு அழைப்பை அடிப்படையாகக் கொண்டது. உனது மீட்பை நீ உனது திருமுழுக்கில் பெற்றுக் கொண்டாய். அதாவது திருமுழுக்கின் மூலம் இயேசுவின் இறப்பிலும், உயிர்ப்பிலும் பங்கு கொண்டாய். கடவுளின் பிள்ளையாக மாறினாய். தூய ஆவியின் வல்லமையினால் மூவொரு கடவுளோடு ஒன்றிணைக்கப்பட்டாய். வாழும் இயேசுவின் மறையுடலான திருச்சபை குடும்பத்தின் உறுப்பினராக மாறினாய். கடவுளோடும் பிறரோடும் நட்பு உறவில் பங்கு கொண்டாய் இத்தகைய உயர்ந்த நிலைக்கு உன்னை

உயர்த்திய இயேசுக் கிறிஸ்துவுக்கும், இத்தகைய நிலையை உன்னில் உணரவைத்து உன் வாழ்வை வழிநடத்தும் தூய ஆவியானவருக்கும் நன்றி செலுத்து.

இத்தகைய திரு முழுக்கு அழைத்தல் வாழ்வுக்கு நீ உன்னை ஒவ்வொரு நாளும் அர்ப்பணமாக்க வேண்டும். அதாவது ஒரு புறம் பிறரன்புப பணிகளில் ஈடுபட்டு இயேசுவின் அன்புக்குச் சாட்சியாக வாழவும், மறுபுறம் கடவுள் உனக்குக் கொடுத்துள்ள சிறப்பான அழைத்தல் வரத்தின் மூலம், உனக்கு வழங்கப்பட்டுள்ள தனிப்பட்ட வரம் மற்றும் தனிக் கொடைகளைப் பயன்படுத்தி இறைவனுக்குகந்த பணிகளைச் செய்ய முன்வறுவது. உன்னுடைய திருமுழுக்கு மற்றும் உறுதிபூசுதல் என்னும் அருட் சாதனங்கள் மூலம் நீ பெற்றுக் கொண்ட கடவுளின் வல்லமையோடு, இயேசுவின் பாஸ்காப் பயணத்தில் பயணமாக முன் வரவேண்டும்.

சில மணித்துளிகள் தனிமையில் அமைதியாகத் திருமுழுக்கு வழியாக கடவுள் உன் மேல் பொழிந்துள்ள அனைத்து வரங்களையும் நினைத்து எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்து. இந்தப் பயிற்சிக்கு நீ திருமுழுக்கு அனுபவத்தை மீண்டும் மனதில் கொண்டு வந்து இறைவனுக்கு நன்றி செலுத்து. இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வை நற் செய்தியிலிருந்து எடுத்து வாசித்துப்பார். (மத் : 3 : 13-17).

இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வை நற்செய்தியிலிருந்து வாசித்தபின் அமைதியாகச் சிந்தித்து, உன் சொந்த செபம் அதிலிருந்து வெளிப்பட வேண்டும். முடிந்ததென்றால் பாஸ்காத் திருவிழிப்பின் போது நாம் எடுக்கின்ற திருமுழுக்கு உறுதி மொழிகளை மீண்டும் உச்சரித்து உன் பதிலைக் கொடு. அல்லது மெதுவாக ‘விசுவாசப் பிரமாணம்’ என்னும் செபத்தை தியானித்து நிறுத்திச் சொல். முடிவில் அர்ச்சிக்கப்பட்ட புனித நீரை உன் மேல் தெளித்து, தூய ஆவியானவரை அழைத்தது, நன்றிச் செபமோ அல்லது பாடலோ பாடி நிறைவு செய்யலாம்.

**அர்ப்பண வாழ்வுக்குரிய அழைப்பு:**

**பொதுவான அர்ப்பணவாழ்வு:**

அர்ப்பணவாழ்வு என்பது அது எந்த துறவற அழைப்பாக இருந்தாலும் அது இயெசுவின் வாழ்வைப் பிரதிபலிப்பதாகும். இயேசு தன் தந்தையின் விருப்பத்தை ஏற்று தன்னை முழுவதும் அர்ப்பணித்து கடவுளின் அன்பின் திட்டத்தை நிறைவேற்ற தன்னையே முழுவதும் கீழ்படிலுக்குள்ளாக்கினார் என்று நற்செய்தி நமக்கு அறிவுறுத்துகின்றது. இயேசு தன் வாழ்வை இவ்வுலகில் உள்ள சகோதர சகோதரிகளுக்காக அர்ப்பணித்தார். இது அவருடைய போதனையிலும், நோயாளர்களைக் குணமாக்குவதிலும் இவற்றிற்கெல்லாம் மணிமகுடமாக நம் அனைவரின் மீட்புக்காக சிலுவையில் தன்னையே முழுவதும் கையரித்து, தன் விலைமதிப்பில்லா இரத்தத்தால் நம் அனைவரையும் மீட்டார்.

இயேசு ஒருபோதும் தனக்காக வாழவில்லை. மனக் குலத்திற்காகக் கடவுள் நமக்குக் கொடுத்த மாபெரும்கொடையாகும். 'கடவுளின் கொடை இன்னதென்று உமக்குத் தெரிந்தால்' என்று இயேசு சமாரியப் பெண்ணிடம் கேட்டதைப் போல, இன்று இயேசுவுக்காக வாழும் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு கடவுள் இவ்வுலகுக்குக் கொடுத்த கொடை என்பதை நாம் உணர்ந்தால். இன்றைய உலகில், இன்றைய காலகட்டத்தில் மாந்தர் அனைவரின் மத்தியில் கடவுளின் பிரசன்னத்தை உணர்த்தும் கருவிகளாக அர்ப்பணிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என அறிந்து கொள்வோம்.

இது ஒரு புனிதமான அழைப்பு ஏனென்றால் இது கடவுளிடமிருந்து வருகிறது. இது தான் திரு அவையின் புரிதல். திரு அவை துறவற சபைகளையோ, அல்லது உலகியல் சார் துறவுநிலைகளை ஏற்றுக் கொண்டு அங்கீகரிக்கிறது. துறவற சபைகளில் அதன் உறுப்பினர்கள் தங்களை நற்செய்தி மதிப்பீடுகளின்படி அர்ப்பணிக்கின்ற பொழுது அந்த அர்ப்பணம் திருமுழுக்குபோல சிறப்பு வாய்ந்தது என திரு அவை அங்கீகரிக்கின்றது. இந்த அர்ப்பண வாழ்வு சிறப்பான விதத்தில் கடவுளின் பணிகளைச் செய்யவும், நம்மில் இருக்கும் இறையரசுக்குச் சாட்சிகளாக இருக்க வேண்டுமென்று திரு அவை விரும்புகின்றது. இதுவே நற்செய்தி மதிப்பீடுகளான ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் என்ற அர்ப்பண வாக்குறுதிகளின் படி வாழ முன் வருவது நமது திருமுழுக்கின் அர்ப்பணதின் படி வாழ முன் வருவதற்குச் சமமாகும். இதுவே நம்அர்ப்பண வாழ்வின் விளைவாகும் என்பதை உணர வேண்டும். நமது திருமுழுக்கு வாழ்வின் முன்னேற்றத்திற்காக நமக்குத் தரப்பட்ட வழிமுறைகள் அல்ல அப்படியென்றால் திருமுழுக்ககுப்பெற்ற அனைவரையுமே கடவுள் அழைத்திருக்க வேண்டும் மாறாக நம் அர்ப்பண வாழ்வு நற்செய்தி நிறைவுக்கு இந்த அர்ப்பண வாழ்வு இட்டுச் செல்கிறது.

### b) துறவறக் குடும்பங்களில் அர்ப்பண வாழ்வு:

துறவற வாழ்வு என்பது அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு அதாவது இயேசு வாழ்ந்த அதே வாழ்வை மிக நெருக்கமாக அவரைப் பின்பற்றி வாழ்வது. 'உனக்கு உள்ளதெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடு.... அதன் பின் வந்து என்னைப் பின செல்' (லூக் : 18:22).

இத்தகைய அர்ப்பண வாழ்வு மூன்று அம்சங்களைக் கொண்டது:

- நற்செய்தி மதிப்பீடுகளின் ஒளியில் தங்களையே அர்ப்பணித்துச் செயல்பாட்டு வாழ்வு அல்லது செப வாழ்வுக் குழுவில் வாழ்வது என்ற இருவகைப்படும்.
- வார்த்தைப்பாடுகள் வழியாகத் தங்களை அர்ப்ணிப்பது
- பொதுவான அல்லது கூட்டுறவு வாழ்வு வாழ்வது

நற்செய்தி மதிப்பீடுகளைப் பொருத்த அளவில், இவற்றைப் பற்றி மீண்டம் தகுதிகாண் காலக் கையேட்டில் தெளிவாகக் காண்போம். ஆனால் இப்போது இந்தக் கருத்தை நாம் மனதில் இருத்த வேண்டும். அதாவது இவர்கள் தங்களை முழுவதும் இறைவனுக்குக் கையளிக்கிறார்கள். அதாவது தங்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும், எல்லாச் செயல்பாடுகறிலும் அவர்கள் பெருமை, தன்னலம், உடலின்பம் ஆகிய மூன்று பாவத்தளைகளில் இருந்து தங்களை விடுவித்து நம்பிக்கையின் ஒளியில் தூய வாழ்வு வாழ முன்வருகிறார்கள். எனவே தூய ஆவியானவரின் துஸண்டுதலும் இன்றி அர்ப்பண வாழ்வுக்குப் பொருளில்லை, மாறாக ஆவியானவரின் துணையோடுதான் இவ்வுலகில் சாட்சிய வாழ்வு வாழ முடியும்.

கடந்த காலங்களில் திரு அவை பல்வேறு துறவற சபைகள் நிறுவனங்கள் தோன்றுவதையும் அவற்றை ஆய்ந்து அதற்கு ஒப்புதல்களையும் தந்துள்ளது. ஒவ்வொரு சபையிலும் கிறிஸ்துவ வாழ்வு வளம் பெற கடவுள் வழங்கிய மாபெரும் கொடை என்பதைக் கண்டு கொண்டிருக்கிறார்கள். நற்செய்தி ஒளியில் புனித வாழ்வு அடையும் வழிகள், காலத்தின் தேவைக்கேற்ப கடவுளின்செயல்பாடுகள் என்பதைப் புரிந்து கொண்டார்கள். பல்வேறு வகையான துறவற சபைகளின் வழியான ஆன்மீக உறவை திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்களுக்கு வழங்குகிறது என்பதைத் தெரிந்து கொண்டார்கள். இந்த ஆன்மீக உறவை துறவறச் சபைகளின் ஒழுங்குகள், அவர்களின் வாழ்க்கை முறைகள்,மறைத் தூதப் பணிகள் இவற்றை வெளிப்படுத்துவதோடு வலுப்படுத்துகின்றன.

**c) உலகியல் சார் துறவறத்தில் அர்ப்பண வாழ்வு:**

உலகியல் சார் துறவற சபையில், கடவுளின் அதிமிக மகிமைக்காக நற்செய் மதிப்பீடுகளின் அடிப்படையில் தங்களை அர்ப்பணிக்கிறார்கள். அப்போஸ்தலிக்க அர்ப்பணிப்பில் ஒரு முக்கிய அம்சம் அமைந்திருக்கிறது. அதாவதுஅர்ப்பணிப்பு உலகியல் சார்ந்தது. அதாவது உலகின் மத்தியில் மற்றும் உலகின் வழியாகப் பணிபுரிவது. உலகியல் சார் துறவற சபை உறுப்பினர்கள் நற்செய்தியின் மதிப்பீடுகளின் அடிப்படையில் தங்களை அர்ப்பணித்து உலகியல் சார் துறவற சபையின் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இதைத் தவிர வேறு எந்த விதத்திலும், தங்கள் சக உறுப்பினர்கள் அல்லது பணிகளில் ஈடுபடுத்தல் சமூகப் பொறுப்பு, ஓய்வு போன்றவைகளில் இருந்து மாறுட்டவர்கள் அல்ல, கடவுளின் நகரத்தைக் கட்டியெழுப்புவதே இதன் முக்கிய நோக்கமாகும். புளிக்காரம் போல உலகில் வாழ்ந்து அதே வேளையில் உலகைச் சாராதவர்களைப் போன்று இவ்வுலகில் செயல்படுவது. (யோவான் : 15 : 18-15, 17: 14-18) அதாவது நற்செய்தி மதிப்பீடுகளுக்கு எதிராக இல்லாத அனைத்திலும் ஈடுபட்டு உழைப்பது.

இவ்வுலகில் நேர்மையுடனும், அர்ப்பண உணர்வுடன் உலகியல் சார் துறவற சபை உறுப்பினர்கள் வாழ வேண்டுமென்றால் கடவுளோடு நெருங்கிய உறவு கொண்டவர்களாக இருக்க வேண்டும். இதற்காக அவர்களுடைய நிறுவனத்தின் ஆன்மீகம் வழிகாட்டியாக இருந்து இட்டுச் செல்கிறது. அந்தச் சபையின் சிறப்புத் தனிவரத்தின் படியும் அவர்களுடைய சபை உறுப்பினர்களுடைய ஒத்துழைப்புடனும் இவற்றைச் சாதிக்க முடிகிறது. எந்த அர்ப்பண வாழ்வாக இருந்தாலும் ஒருவருக்கிடையே உள்ள நட்புறவை வர்த்துக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

துறவற சபைகள் அனைத்தும்அவர்களுடைய கூட்டு வாழ்க்கையின் மூலம் இயேசு நிறுவிய புதிய உலகத்தைப் படைக்க உழைக்கிறார்கள். ஆனால் உலகியல் சார் துறவற, நிறுவனங்களோ, உலகில் மத்தியில் உலகத்தாரோடு வாழ்ந்து, உலகின் முன்னேற்றத்திற்காக வாழ்வது.

எனவே உலகியல் சார் துறவற சபையில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் ஒரு குழுவாக இணைந்து வாழ்வது குறிப்பிடத்தக்கது. நமது சபையில் இந்த குழு முக்கியத்துவம் பெறுகிறது. இந்தக் குழுதான் உறுப்பினர்களின் ஜெப வாழ்வில், பயிற்சியில், பகிர்வில் ஒருவருக்கொருவர் துணைபுரிதல், ஆன்மீக முன்னேற்றம், அப்போஸ்தலிக்கப் பணி வாழ்வில் ஈடுபாட்டுடன் உழைப்பது போன்றவை நம் சபையில் நிலைத்திருக்க வேண்டும்.

இன:று உரோமைப்பேராயத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல உலகியல் சார் துறவற சபை, நமது சபைகளில் நமது சபையும் ஒன்றாக இருக்கிறது. உலகியல் சார் துறவற சபையின் அர்ப்பண வாழ்வைப் பற்றி மற்றொரு இடத்தில் மிகத் தெளிவாக விளக்கப்படும். அப்போது நமது சபை எவ்வாறு இவற்றைப் புரிந்து ஏற்றுக் கொண்டுள்ளது என்பதை அறிய மிகுந்த ஆவலாய் இருப்பாய்.

தேவையென்றால் உனது வழிகாட்டி சபை ஒழுங்குப் புத்தகத்தின் துணையோடு உன் கேள்விகளுக்கு தெளிவான விளக்கம் அளிப்பார்.

சபை ஒழுங்குப் புத்தகம் : பகுதி 2, இயல் 1, பக்கம் 35-47,

திருமணத் தம்பதியர் : பகுதி 3, இயல் 2, பக்கம் 77-79.

இந்தப் பகுதிகளைப் படிப்பதால் இன்னும் பல விளக்கங்களைப் பெறலாம்.

**2:3: இறை அழைப்புக்கு என்பதில் அழைப்பைத்தேர்ந்து தெளிதல்:**

கடவுள் உன்னோடு பேசுவதையும் ‘என்னைப் பின் செல்’ என உன்னைத் தன் பணிக்கு அழைப்பதையும் பல வேளைகளில் நீ உணர்ந்திருப்பாய். இறைவனின் அருட் துணையால் இத்தகைய அழைப்புக்குச் செவி மடுத்து, நீயும் இறைத் திருவுளச் சபையில் இணைந்து பணி செய்ய வேண்டும் என்ற ஆவலில் இப்போது நீ ‘விருப்ப

நிலைப் பயிற்சியில்' சேர்ந்திருக்கிறார். இந்தப் பயிற்சி காலம் என்பது தேர்ந்து தெளியும் காலம் என்று உனக்கு சொல்லப்பட்டிருக்கும்.

அப்படியென்றால் என்ன?

அதாவது நீ உன் அழைத்தல் வாழ்வைப் பற்றிச் சிந்திக்க உனக்கு பல வாய்ப்புகள் நேரங்கள் தரப்படும். உன் சிந்தனையின் ஒளியில், தூய ஆவியானவரின் துணையோடு உன்னை அழைத்து வழி நடத்திவரும் இறைவன் நீ இறைத்திருவுள சபையில் இணைந்து, வார்த்தைப் பாடுகள் வழியாக உன் வாழ்வை அர்ப்பணித்து இறைவனுக்குப் பணிபுரிய நீ தயராக இருக்கிறாயா? என்று உன்னைத் தொடர்ந்து அழைக்கும் இறைவனின் குரலை நீ கேட்காமல் முடியாது. ஏனென்றால் நம் வாழ்வையே இறைவனுக்கு அர்ப்பணிக்க இருப்பதால் நாம் நம் முடிவை உடனடியாகச் சொல்ல முடியாது. மாறாக தொடர்ந்து சிந்தித்து, செப சூழ்நிலையில் சீர் தூக்கிப் பார்த்து, கடவுளின் அருளின் துணை கொண்டு நம் இதயத்திலும், மனத்தலும் ஆழமாகப் பதிந்து நம் பதிலை படிப்படையாக அதே வேளையில் ஆனித்தரமாக தர நம்மைப் பயிற்றுவிக்க வேண்டும்.

**செபவாழ்வு :**

அழைத்தல் கடவுளின் அழைப்பாக இருப்தால் கடவுளின் அருள் துணையில்லாமல் இதைப் புரிந்து கொள்ள முடியாது. நாம் நம்பிக்கையுடனனும், ஆர்வத்துடனும் இந்த அருளைப் பெற செபிக்க வேண்டும். செப வாழ்வின் துணையோடு நாம் நம் இதயத்தைத் திறந்து, கடவுள் விடுக்கும் அழைப்பின் குரலுக்குக் செவிமருந்து கடவுளுடைய திட்டம் நமக்கு என்ன எனபதைக் கண்டுகொள்ள வேண்டும். ஆவியானவரின் துணை கொண்டு ஆய்ந்து அறிந்து கடவுளின் திட்டத்தைக் கண்டு கொள்ள வேண்டும். கடவுள் நம்பிக்கைக்குரியவர். அவர் ஒரு போதும்நம்மைக் கைவிடமாட்டார்.

**படிப்பில், பகிர்தலில் வழியாக:**

இத்தகைய ஆன்மீக தேர்ந்து தெளிதலில் உனக்குத் துணையாக, இறைத் திருவுளச் சபையைப் பற்றியும் அதன் பணிகளைப் பற்றியும் உனக்கு விளக்கிச் சொல்லப்படும். உன்னுடைய வழிகாட்டியும், இந்தப் பயிற்சியின் ஒருங்கிணைப்பாளரும் உனக்குத் துணைபுரியும் கருவிகளாகச் செயல்படுவார்கள். எனவே உனது ஐயப்பாடுகளையம், விளக்கங்களையம் இவர்களிடம் பகிர்ந்து கொண்டு போதிய தெளிவு பெற ஒருபோதும் தயங்கக் கூடாது. தேவையில்லாமல் பலரிடம் சென்று உன் சிந்தனைகளைச் சிதற விடக் கூடாது. இந்தப் பயிற்சிக் காலத்தில் உனக:குத் துணை புரிய கீழ்க்கண்ட நபர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்: ஆன்மீக வழிகாட்டி சபையின் பொறுப்பாளர்கள், உன் குழுவில் குறிப்பிடத்தக்க உறுப்பினர், தேர்ந்து தெளியும் பயிற்சியில் நல்ல அனுபவம் பெற்றவர்.

உனக்குத் தேவையான, அழைத்தல் வாழ்வுக்கு அவசியமான கருத்துத்தெளிவுகளை இப்போது பெற்றுக் கொண்டால், குறிப்பிட்ட நேரத்தில் தேர்ந்து தெளிந்து நல்ல முடிவை எடுக்க உனக:கு உறுதுணையாக இருக்கும்.

**அனுபவங்களின் வழியாக:**

இறைத் திருவுளச் சபையைப் பற்றி மட்டும்அறிந்தால் போதாது மாறாக இந்நிறுவனத்தின் உறுப்பினரான உன்னைப் பற்றியும் நீ அறிந்திருக்க வேண்டும். இந்தச் சபையின் உறுப்பினராக இருப்பதில் ஆன்மீக ஊட்டம் பெறுகிறாயா? உனக்குக் கற்றுக் கொடுக்கப்பட்ட ஆன்மீக பயிற்சி முறைகள் உன்னுடைய செப வாழ்வின் முறைகளோடு ஒன்றிணைந்துள்ளதா? உன் அன்றாட வாழ்வில் இந்நிறுவனத்தின் மறைத்தூது நோக்கம் உனக:குச் சவால்களை உன் உள்ளத்தில் ஏற்படுத்துகிறதா? குழு வாழ்வி முக்கியத்தை உணருகின்றாயா? குழு வாழ்வில் வாழ்வது உனக்கு விருப்பமா? இக்குழுவாழ்வு உன் துறவற வாழ்வின் முன்னேற்றத்திற்குத் துணை புரிகின்றதா? இறைத் திருவுளச் சபையில் உன்னை இணைத்துக் கொண்டதால், அது உன் வாழ்விலே பெரிய மாற்றத்தையும், உன் பழக்க வழக்கங்கள், உன் சிந்தனைகள் ஆகியவற்றில் பெரிய தாக்கத்தை எடுத்துள்ளது என்பதை உணருகின்றீரா? இயேசுவின் மீது ஆழ்ந்த பற்று உன்னிடம் உள்ளதா? அவரைப் பின்பற்றி வாழ நீ விரும்புகிறாயா?

இந்நிறுவனத்தில் உன் வாழ்வின் அனுபவங்களை பெற்றுக் கொள்வதோடு மட்டுமில்லாமல் இந்த விருப்ப நிலைப் பயிற்சி உன்னுடைய மனித மற்றும் ஆன்மீக பண்புகளை ஆய்வு செய்து கொள்ள உனக்குத் துணைபுரிகிறதா? இயேசுவின் அழைப்புக்குச் செவிமடுக்கத் தடையாக இருப்பவற்றை இனம் கண்டு கொள். தாராள மனத்தோ, ஆவியானவரின் வழிநடத்துதலோடு உன் இதயத்தின் ஆழத்தில் நல்ல மனமாற்றத்தைச் சந்தித்து, உனக்கு இறைவன் காட்டுகின்ற மறைத்தூதப் புனிதத் துவத்தை நோக்கி அடியெடுத்துவை.

**தீர்க்கமாக: (முடிவாக)**

செப வாழ்வு, கருத்துச் சேகரிப்பு, உன்னையே முழுவதும் அறிந்து கொள்ளும் நிலை, மற்றும் சபையைப் பற்றிய விளக்கம் ஆகியவற்றின் துணையோடு உன் வாழ்க்கை அனுபவங்களை ஆய்வு செய்து. குறிப்பிட்ட நேரத்தில் முழு உணர்வோடும், முழு அறிவோடும் உன் தீர்மானத்தை தேர்வு செய். உன் பதில் உன் இதயத்தின் ஆழத்திலிருந்து வரவேண்டும். அது வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் திருவுளமாக இருக்க வேண்டும். பொதுவாகச் சொல்ல வேண்டுமென்றால் உன் பதிவானது அன்னை மரியாள் இறைவனின் திட்டத்திற்கு அடிபணிந்து தன்னையே முழுவதும் அர்ப்பணித்ததைப் போல இருக்க வேண்டும். ‘இதோ இறைவனின் அடிமை, உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும்’ (லூக் : 1:38) இயெசு தன்னையே தன்

தந்தைக்கு ‘இறைவா! இதோ உமது திருவுளத்தை நிறைவேற்றவந்துவிட்டேன்’ என்று கூறி தன்னை அர்ப்பணித்ததைப் போல இருக்க வேண்டும். நான் பிறரன்பப் பணிகள் மீது கொண்டுள்ள ஆர்வமே என்னுடைய தாராளமிக்க, நம்பகத்தன்மையுள்ள முடிவிகுக் காரணமாகும். என் அர்ப்பணம் தாரளமாகதாகவும், அர்ப்பணிப்பு உணர்வோடும் இருந்தால்தான் எனது முழுவும் உறுதியானதாகவும், நிலைத்து நிற்கக்கூடியதாகவும் இருக்கும்.

கீழ்காணும் சில அம்சங்கள் உன் வாழ்க்கைப் பயணத்தின் வளர்ச்சிக்குத் தேவைப்படுவனவாக இருப்பதைக் கண்டு கொள்வாய். கடவுளின் அழைப்புக்குத் தாரளமாக பதில் சொல்ல நீ தயாராக இருக்கிறாய் என்பதற்கு இவை அடையாளங்களாக இருப்பதைக் கண்டு கொள்வாய்.

- அனைத்தையும் கடவுளின் திருவுளத்திற்காகச் செய்ய வேண்டும் என்கிற நேர்மையான ஆவல்
- ஆவியானவரால் வழிநடத்தப்படுவதில் ஆனந்தம்
- தகுந்த அதிகாரம் உள்ளவர்கள் மற்றும் வாழ்வின் பல்வேறு நிகழ்வுகள் வழியாக உன்னைச் சந்திக்கும் கடவுளுக்குக் கீழ்ப்படிதல் உள்ளவனாக இருத்தல்.
- இறையியல் பண்புகளையும் (நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு) அறநெறிப் பண்புகளையும் (நீதி, நிலைத்திருத்தல், பொறுமை கடைப்பிடித்தல்) (Prudence, Justice, Fortitude, Temperance)

தூய ஆவியானவர் உன்னைத் தூண்டியெழுப்பி உன்னை வழிநடத்தி, உன்னோடு பேசும் கடவுளைக் கண்டு கொள்ளவும் அவர் காட்டும் அன்பில் நிலைத்திருக்கவும் உனக்குத் துணை புரிவாராக!

நீ கடவுளைப் பற்றி அறிந்து கொள்வதைப் பின்வரும் செயல்பாடுகள் வழியாகக் கண்டு கொள்ளலாம். அதாவது இறைவார்த்தையைப் படித்துத் தியானிப்பதிலும், திரு.அவையின் நம்பிக்கை அறிக்கையிலும், நம்பிக்கையாளர்களோடு உன் நம்பிக்கையை பகிர்வதிலும், சிறப்பாக சபையிலுள்ள உன் குழு உறுப்பினர்களோடு பகிர்ந்து கொள்வதிலும் வெளிப்படுத்தப்படுவதை அறிந்து கொள்வாய்.

**தன்னறிவு (தன்னுணர்வு)**

கடவுளோடு நான் கொண்டிருக்கும் உண்மை உறவானது நான் பிறரோடு கொண்டிருக்கும் நட்பு உறவிலும், உள்ளன்போடு நான் பிறரோடு கொண்டுள்ள உண்மையான உரையாடல் வழியாகவும் கண்டு கொள்ளலாம். இத்தகைய உறவின் மூலம் கடவுளுக்கும் உனக்கும் உள்ள சுதந்திரமான உறவை வழுப்படுத்தி, கடவுளாலும் உன்னையும் ஒன்றிணைக்கின்றது. எனவே நீ உன் சுய சிந்தனையோடு

செயலாற்றும் பொறுப்புள்ளவனாகவும், உண்மையிலும் அன்பிலும் நிலைத்து நிற்பவனாக வாழ்வதைப் பார்த்துக் கடவுள் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறார்.

இதன் விளைவாக, நீ உன்னைப் பற்றியும், உன் குண நலன்களைப் பற்றியும், நோக்கங்களையும், பண்புகளையும், திறமைகளையும், வலிமையையும், பலவீனத்தையும், உன் வலிமையின் எல்லைகளையும் கண்டுணரமுடியும். உன்னைப் பற்றிய தெளிவான அறிவு, குழப்பங்களையும் தளர்ச்சிகளையும் கண்டு கொள்ளத் துணை புரியும், மாறாக உன் சுய முன்னேற்றத்திற்காகவும். வாழ்வின் முன்னேற்றத்திற்காகவும், சுய ஆய்வுக்காகவும் துணை நின்று உன்னைத் தொடர்ந்து வழி நடத்தும்.

**இறைத் திட்டத்தோடு ஒத்துழைத்தல் :**

இறைத் திருவுளச் சபையில் இணைவதன் மூலம், கடவுளின் திருவுளம் எதுவெனக் கண்டு அதைத் தனது முழு பலத்தோடு நிறைவேற்ற முன்வருவது. கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுவதுதான் தன் வாழ்வின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். ஏனென்றால் அங்குதான் இயேசுவின் பொது வாழ்க்கைக்கு உந்து சக்தியாக இருந்த ஆற்றலைக் கண்டு கொள்கிறோம். ஏனென்றால் நாம் அனைத்திலும் விண்ணிலுள்ள கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுதல் மூலம் கிறிஸ்தவ வாழ்வின் புனிதத்துவத்தை அடைகின்றோம்.

எனவே முதலில் கடவுளின் திட்டம் என்றால் என்ன? என்பதை முதலில் தெளிவாகக் கண்டு கொள்ள வேண்டும். கடவுளின் கட்டளைகளையும், திருச்சபைக் கட்டளைகளையும், நற்செய்தி மதிப்பீடுகளையும், நம் சபையின் சட்ட ஒழுங்குகளையும் முழுமனதோடு நம் வாழ்வில் கடைப்பிடிக்கும் போது நாம் கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுகிறோம் என்பது உண்மையாகும். இதுதான் நம் வாழ்வின் நிலையாக கண்டு கொள்ளப்படுகின்றது.

மேலும் பெரும் மனமகிழ்வோடு கடவுளின் மிகச் சிறிய விருப்பங்களையும் நிறைவேற்ற முழு உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் முன்வருவது. இவ்வாறு கடவுள் தன் விருப்பங்களை மறைமுகமாக உன் வாழ்க்கை நிகழ்வுகள் மூலமாகவும், உன் உள்ளத்தின் ஆழத்தில் தூய ஆவியானவரின் அருள் ஆற்றல் வழியாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது. இந்தக் கடவுளின் குரலுக்குச் செவிமடுத்து மகிழ்வோடுதரும் நேர்மறை பதில் வழியாக நீ உன் பதிலைத் தர வேண்டும்.

**செப வாழ்வு :**

கடவுளின் அழைப்புக்ச் செவிமடுக்க பெரும் துணையாக இருப்பது செப வாழ்வு. சபையின் முதல் ஐந்து வகை ஆன்மீக வழிமறைகள் உன் தனிப்பட்ட செப வாழ்விலும், குழுமச் செப வாழ்விலும் உனக்குப் பெருந்துணையாக இருக்கும். செபத்தின் பல்வேறு வகைகளான, நற்கருணை, ஆராதனை, இறைப்புகழ், நன்றி

மன்றாட்டு, வேண்டுதல், மன்னிப்பு, விண்ணப்பம், பரிந்துரைச் செபம் போன்றவற்றின் மூலம் நீ உன் வாழ்வு முழுவதும் பெருமகிழ்ச்சியையும் மன நிறைவையும் பெறுவாய்.

**வெளி அடையாளங்கள் :**

**ஆன்மீக வழிகாட்டி:**

இது முக்கியமாகப் பரிந்துரைக்கப்படுகின்றது. உனது ஆன்மீக வழிகாட்டியாக ஒரு குருவானவரை நிரந்தரமாக தெரிந்து கொள். அவர் ஒப்புரவு அருட்சாதனத்தின் மூலம் உன் பாவங்களை மன்னிப்பது மட்டுமன்றி, நீ நாள் தோறும் உன் ஆன்மீக வாழ்வில் வளர வேண்டியதற்காக வழிகாட்டுதல்களையும் உனக்கு அருளுவார்.

**வாழ்க்கை நெறிமுறை:**

ஆன்மீக வாழ்வில் வளர்ச்சி காண விருப்பம் உள்ளவர்களுக்கு வாழ்க்கை நெறிமுறை மிகமிக அவசியமாகும். சபையில் உள்ள நமக்கு இந்த வாழ்ககை நெறிமுறை நம் சபையின் சட்ட ஒழுங்குகளிலும், நம் சபையின் ஆன்மீக மான மூன்று ஐந்து ஆன்மீக வழிமுறைகளிலும் அடங்கியிருக்கிறது. இதில் அடங்கியுள்ள அம்சங்கள் ஒருவர் இவ்வுலக வாழ்வில் நடைமுறையில் பின்பற்றக்கூடிய வகையில் ஏதுவானதாகவும் அதே வேளையும் ஆன்மீக வாழ்வில் தொடர்ந்து முன்னேற்றம் காண உதவியாக இருப்பதைக் கண்டு கொள்ளலாம். இம்முயற்சிகளை ஒன்றிரண்டு நாட்களுக்கு மட்டுமல்ல மாறாக நாள்தோறும் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். இதை ஒரு போதும் மறந்துவிடக் கூடாது.

**தொடர் ஆன்மீக பலம் :**

நம் உடல் ஆரோக்கியமாக இருக்க உணவு எவ்வாறு அவசியமானதாக இருக்கிறதோ அதேபோல ஆன்மீக பலத்திற்கும் உணவு தேவைப்படுகிறது. இவ்வாறு ஆன்மீக உணவாக ஐந்து வகை ஆன்மீகத்தை, அதிலும் முதல் ஐந்து வகை ஆன்மீக பயிற்சிகளை நமது ஆன்மீக உணவாகப் பரிந்துரைக்கின்றது. இந்த ஐந்து வகை ஆன்மீகப் பயிற்சிகள் பின்வருவன: (1) மனச் செபம் அல்லது தியானம், (2) இறைவார்த்தையை வாசிப்பது மற்றம் ஆன்மீக நூல்களைப் படிப்பது, (3) திருப்பலிக் கொண்டாட்டம், (4) நற்கருணை சந்திப்பு, (5) அன்னை மரியாளின் மீது கொண்ட பக்தி அதாவது செபமாலைத் தியானத்தின் வழியாக அன்னையைப் புகழ்வது.

**சமூக உறவுகளைப் புனிதப்படுத்துதல்:**

சமூக உறவுகளைப் புனிதப்படுத்துதல் உலகியல் சார் துறவற சபைகளின் முக்கியக் கோட்பாடாக இருக்கிறது. ஏனென்றால் உறுப்பினர்கள் உலகின் மத்தியில், சக மனிதர்களோடு வாழ்வதால் இது மிகத் தேவையான ஒன்றாகக் கருதப்படுகின்றது. இவ்வாறு பிறரைச் சந்தித்து உரையாடுவதின் மூலம் நம் மறை பரப்புப் பணியின் முக்கியப் பண்புகளான, இயெசுக் கிறிஸ்துவில் அமைதியையும், நட்புறவையும் வலுப்படுத்தலாம். இவ்வாறு நாம் உலகில் புளிக்காரமாக இருந்து இறையரசு மலரக்

காரணமாக இருக்கலாம். ஆனால் நம்மில் இது நிகழ வேண்டுமென்றால் கடவுளின் ஆவியில் வாழ்பவராகவும், வழி நடத்தப்படுபவராகவம் இருக்க வேண்டும். நாம் உலகில் உப்பாகவும், ஒளியாகவும் இருக்க வேண்டும். நமது சொல்லும் செயலும் இயெசுவின் வாழ்வுக்கு உகந்த விதத்தில் அமைய வேண்டும்.

**2:4: சபையில் வாழ வேண்டும் என்ற ஆர்வம் (விருப்பம்) :**

கடவுளின் அழைப்பைக் கண்டுகொள்ள, ஒருவர் சபையின் ஒழுங்குகளின்படி வாழ விருப்பம் உள்ளவராக இருக்க வேண்டும். இந்த விருப்பம் கடவுள் நமக்குத் தரும் ஒரு கொடையாகும், அவருடைய திட்டத்தின்படி நம் ஒவ்வொருவருக்கும் கடவுளால் தரப்படுகின்றது. இந்த கடவுளின் திட்டம் நமக்கு இரண்டு உதவிகளைச் செய்கிறது. (1) கடவுளின் அழைப்பைத் தேர்ந்து தெளியவும் (2) அவரது அழைப்புக்குத் தகுந்த பதில் தரத் தேவையான வலிமையையும் தருகிறது. இறைத் திருவுளச் சபையில் வாழ்வது என்பது உலகியல் சார் துறவற சபைகளின் பண்பு நலன்களுக்கு ஏற்ப வாழ முன்வருவது. இத்தகைய பண்பு நலன்களை பின்வரும் பகுதியில் காணலாம்.

**இறைத் திருவுளச் சபை ஓர் உலகியல்சார் துறவற சபை :**

நம் சபையில் இணைந்து பணியாற்ற விருப்பம் உள்ளவர்கள் பின்வரும் பண்பு நலன்களுக்குத் திறந்த உள்ளம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

- அனைத்திலும் கடவுளின் திட்டத்தை நாடவும் அவற்றை நிறைவேற்றவும் விருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
- சபையின் ஆன்மீகத்தைக் கடைப்பிடிப்பதில் பிரமாணிக்கம் உள்ளவராக இருக்க வேண்டும். இதன் வெளிப்பாடாக, தனிப்பட்ட மற்றும் குழுச் செபத்தில் ஆர்வம் உள்ளவராகவும், அனைத்திலும் நேர்மறை எண்ணத்தோடு அனைத்துச் சூழ்நிலைகளிலும் வாழக் கூடியராகவும், தன்னலமில்லா நோக்கத்தோடு பணிகளை நிறைவேற்றவும், மறை பரப்பப் பணிகளில் நாட்டம் உள்ளவராகவும் இருக்க வேண்டும்.
- இயேசுக் கிறிஸ்துவின் அமைதியையும், நட:புறவையும் நிலைநாட்டுபவராக இருக்க வேண்டும். இதன் விளைவாக நட்பறவை வளர்ப்பதிலும், குழுவாக இணைந்து பணியாற்றுவதிலும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இறைத் திருவுளச் சபை அர்ப்பண வாழ்வையுடைய துறவறச் சபையாகும்.

நம் சபையில் இணைந்து பணியாற்ற விருப்பமுள்ளவர்கள் அவரவர் வாழ்க்கை நிலைகளுக்கேற்ப ஏழையர்பால் ஈடுபாடு, கற்பு மற்றும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதல் போன்ற பண்புகளின் வழியாகப் பணியாற்றலாம். இப்படி வாழ விருப்ப முள்ளவர்கள்

பின்வரும் பண்பு நலன்கள் உள்ளதா இல்லையா? என்பதைத் தேர்ந்து தெளிய வேண்டும்.

- நற்செய்தி மதிப்பீடுகளில் ஒன்றான ஏழ்மையை உள்ளத்தளவிலும் அதே வேளையில் உண்மையாகவெ தங்கள் வாழ்வு நிலையில், மிகச் சாதாரண எளிய வாழ்வை வாழ்ந்து அதன் வழியாகத் தன்னோடு இருப்பதைப் பிறரோடு பகிர்ந்து கொள்தல்.
- கிறிஸ்து வாழ்வின் கற்பு என்ற உறுதிமொழி மூலம் மனமுவந்து தூய அன்பையும், இறையரசுக்காக மனத்துறவு ஏற்றுக் கொள்வதும் அல்லது திருமண உறவிலெ திரு அவையின் கோட்பாடுகளுக்கு ஏற்ப, நற்செய்தி மதிப்பீடான அன்பை இவ்வுலகுக்குக் கொடுக்கும் சாட்சிகளாக வாழ முன்வருதல்.
- மகிழ்வோடும், தாழ்ச்சி உள்ளத்தோடும் ஏற்கும் கீழ்ப்படிதல் என்னும் வார்த்தைப்பாட்டின் மூலம் உண்மையுள்ள பணியாளனைப் போல, திரு அவையின் வளர்ச்சிக்காக நம் சபையானது மேற்கொள்ளும் அனைத்துத் திட்டங்களிலும், அவரவர் வாழ்க்கை நிலைகளுக்கு ஏற்பவும், தங்களுடைய துறவு வாழ்வின் நிலைகளுக்கு ஏற்ப பணியாற்ற முன்வருதல்.
- மணத்துறவு மேற்கொண்ட துறவிகளுடனோ அல்லது சபையில் அர்பணத்தைக் கொடுத்துள்ள திருமணத் தம்பதியர்களுடனோ இணைந்து தாராள உள்ளத்துடன் அவரவர் அழைத்தலை நிறைவேற்ற உறுதுணையாக இருப்பது.

**இறைத் திருவுளசபை ஒரு மறைபரப்பச் சபையாகும்:**

இந்த சபைக்கு அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் பொதுவான மறைப்பணி நோக்கத்திற்கு இணைந்து உழைக்க முன் வரவேண்டும். அவையாவன.

- அமைதியை ஏற்படுத்துபவர்களாகவும், நட்பறவை வளர்ப்பவர்களாகவும் வாழ விருப்பமள்ளவர்கள்.
- திறந்த உள்ளத்தோடு தங்கள் அழைப்புக்குச் செவி மடுப்பவர்களாக இருக்க வேண்டும்.
- தன்னுடைய நேரம். திறமைகள், பொருட்கள் இவற்றைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் பண்புடையவர்களாக இருத்தல்.

இறைத் திருவுளச் சபை ஓர் உலகியல் சார் துறவற சபை. எனவே இதன் உறுப்பினர்கள் உலகின் மத்தியில் வாழ அழைக்கப்பட்டுள்ளார்கள்.

உலகின் மத்தியில் வாழுகின்றவர்களுக்கு துறவற வாழ்வில் பல்வேறு சவால்களைச் சந்திக்க நேரிடும் எனவே அவர்கள் பின்வரும் பண்பு நலன்களில் வேரூன்றியவர்களாக இருக்க வேண்டும்.

- தறவற வாழ்வில் வேரூன்றி, அவருடைய விருப்பத்திற்கும், வாழ்க்கை முறைக்கும் எதிராக வரும் அனைத்துச் சக்திகளையும் எதிர் கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும்.
- மனிதப் பண்புகளான, உணர்வுகளைக் கையாள்வதில் மதிர்ச்சி. கட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரம், பயிற்சித் திறமைகளில் வல்லமை, உறவுகளில் நேர்மை, இவற்றைப் பெற்றவராக இருக்க வேண்டும்.
- கிறிஸ்துவுக்குச் சாட்சிய வாழ்வு வாழ்வதில் துணிச்சல் உடையவராகவும், வாழ்வில் சந்திக்கும் எத்தகைய எதிர்ப்புகளையும் எதிர் கொள்ளக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- குழுவில் இணைந்து வாழும் பண்பும், அனைவரொடும் இணைந்து செயலாற்றுவதில் ஆர்வம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- உலகில் வாழும் அனைவரையும் அன்பு செய்து அவர்களோடு இணைந்து வாழும் பண்பு உடையவராக இருக்க வேண்டும்.

மேற்கண்ட பண்புகள் அனைத்தும் மிகத் தேவையானது. இத்தகைய பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். இத்தகைய பண்புகளில் வளர, வாழ்க்கை முழுவதும் பயிற்சிகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

விருப்பநிலைப் பயிற்சிக்குப்பின் அனைத்தும் முடிந்துவிட்டது என எண்ணக்கூடாது. ஏனென்றால் விருப்பநிலைப் பயிற்சி முடிந்தவுடன் ஒருவர் புனிதராக மாறிவிடுவது இல்லை. இது ஒரு புனித வாழ்வின் தொடக்கம் தான் மற்ற அனைத்தும் கடவுளின் அருளைப் பொருத்து அமைந்துள்ளது. ஒருவேளை நேர்மையான உள்ளத்தோடு சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்கும் போது, ஒருவர் இத்தகைய வாழ்க்கை தனக்கு ஏற்றதல்ல என்று உணரக்கூடும். இப்படிப்பட்ட தருணங்களில் இறைப்பிரசன்னத்தில் சிந்தித்து தேர்ந்து தெளிந்து முடிவெடுக்கவேண்டும். சில சமயங்களில் ஏழ்மை என்ற வார்த்தைப்பாட்டை எவ்வாறு என்றால் கடைப்பிடிக்க முடியும் என்ற தயக்கம் ஏற்படலாம். அத்தகைய தருணங்களில், திறந்த உள்ளத்துடன் இறையருளை வேண்டினால் அவர் நமக்குத் தெளிவான வெளிப்படுதலை நமக்குச் சிறிது சிறிதாகத் தந்து நம்மை உறுதிப்படுத்துவார். இந்த மாதிரித் தருணங்களில் நீ நமது சபையில் ஓர் உறுப்பினராகும் தகுதியைப் பெற்றிருக்கிறாய் எனக் கூறலாம். சபையில் சேர ஒருவர் புனிதனாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் சபையில் சேர்ந்த பின் புனிதத்துவத்தில் வாழ வளரக் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த வேளையில் சபை ஒழுங்குப் புத்தகத்தின் முகப்புரையில் நம் சபை நிறுவுநர் அருட் தந்தை லூயி, மரிய பாரண்ட் அவர்கள் கூறியுள்ள வார்த்தைகளை நம் கவனத்தில் எடுத்துக் கொள்வது நல்லது.

(சபை ஒழுங்குகள் பக் : XIII)

கடவுள் நம்மைப் புனிதர்களாக மாற்ற விரும்புகிறார். நம் சபை ஒழுங்குகளைத் தியானிக்கும் போது, இது சரிதான் என்று உணர நேரிடும். நம் ஒவ்வொருவரின் மீதும் இயேசு கொண்டுள்ள நம்பிக்கை பெரும் வியப்பை நமக்குள் ஏற்படுத்துகின்றது.

**முடிவுரை:**

ஆன்மீகத் தேர்ந்து தெளிதல் நிறைவடைந்த பின் ஒரு தெளிந்த தீர்க்கமான முடிவெடுக்கின்ற மனநிலை உருவாகும். இதன் உறுதிப்பாடு முதலில் நம் உள்ளத்தில் தான் தோன்றும். அதாவது ஓர் இனம் புரியாத மகிழ்ச்சி தோன்றும், நமது முடிவைப் பற்றி ஒரு மனநிறைவு தோன்றும். நமது முடிவைப் பற்றிய கேள்விகள் பல இருந்தாலும், நமது முடிவின் விளைவாகச் சந்திக்க வேண்டிய சவால்களும், எதிர்பார்ப்புக்களும் நமக்குள் ஒரு மனமகிழ்வைத் தரும்.

இறைவனுக்கு விருப்பமானால் உனது அர்ப்பணத்தை வெளிப்படுத்தும் ஒரு புற அடையாளத்தைத் தருமாறு உன செபத்தில் மன்றாடலாம். உமது அர்ப்பணத்தின் உறுதிப்பாட்டை அறியாத ஒருவரிடமிருந்து வரும் வார்த்தையின் வழியாக வெளிப்படலாம் அல்லது இறை வார்த்தையின் ஒரு வசனம் உன் இதயத்தில் மீண்டும் மீண்டும் ஒலிக்கலாம் அல்லது நீ எதிர்பாராத நிகழ்வு ஒன்று கூட நிகழலாம். இப்படி ஏதாவது ஒன்று நிகழ்ந்தால் அது உன் வாழ்வில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறும் அல்லது உன்னோடு உரையாடி உன்னை வலுப்படுத்தும். 'நம் சபையின் அப்போஸ்தலிக்க நோக்கம்' என்ற அடுத்த இயலுக்குப் போகுமுன் மேலே கறிப்பிடப்பட்ட பல்வேறுபட்ட மனநிலைகள். திறன்கள் இவற்றுள், நீ எவற்றோடு ஒத்துப் போகிறாய் என்பதைச் சிந்தித்துப்பார். இவற்றைப் பற்றி உனது வழிகாட்டி அல்லது ஆன்மீக குருவானவரிடம் இவற்றைப் பற்றிப் பேசி உறுதிப்படுத்திக் கொள். உன்னடைய அழைப்பைப் பற்றித் தேர்ந்து தெளியும் பயிற்சியில் எந்த நிலையில் இருக்கிறாய் என்பதை நீ கண்டு கொள்ளலாம்.

## 3. சபையின் அப்போஸ்தலிக்க நோக்கம்

**முன்னுரை:**

இதற்குமுன் இருந்த இயல்களில், இறைத் திருவுளச் சபையில் உன் அழைத்தலைத் தேர்ந்து தெளிய உனக்குத் துணைபுரிந்ததைக் கண்டிருப்பாய். ஏனென்றால் கடவுளிடமிருந்து அழைப்பைப் பெற்றாலொழிய ஒருவர் திடீரென உறுப்பினராக மாறிவிடமுடியாது. இன்றைய உலகில் மறைப்பணி ஆற்ற கடவள் விடுக்கும் ஒரு தெய்வீக அழைப்பாகும். நமது சபை நிறுவுநர் வழியாக மறைப்பணி அற்ற எப்படி அவரைத் தேர்ந்து கொண்டார் என்பதை நமக்கு அறிமுகப்படுத்துகின்றது.

அதாவது “இயேசுக் கிறிஸ்துவில் அமைதியையும் சகோதரத்துவத்தையும் நிலைநாட்டுவது” என்பதால் நம் சபையின் குறிக்கோள் என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. பகுதி ஒன்று, இயல் மூன்று எண்கள் 12 முதல் 15 வரை உள்ள கருத்துக்கள் சபையின் அப்போஸ்தலிக்கக் குறிக்கோளை மிகத் தெளிவாக விளக்குகிறது. நம் சபை ஒழுங்குகள் 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் நாள் உரோமையில் உள்ள உலகுசார் துறவற சபைகளுக்கான பேராயம் அங்கீகரித்துள்ளது என்பதை நாமறிவோம்.

**பொது விளக்கம்:**

நம் சபை ஒழுங்குகளின் உள்ளார்ந்த பொருள் என்னவென்றால் அப்போஸ்தலிக்கப் பணியை அல்லது மறைத் தூதப் பணியை, அகில உலகிலுமுள்ள இயேசுக் கிறிஸ்துவின் திரு அவையில் நிறைவேற்றுவது தான் நமது பணியாகும். இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால்:

**பணி அல்லது மறைப்பணி:**

நாம் இந்த சபையில் இணைந்து இன்றைய உலகில் பணியாற்றுவதின் நோக்கம் என்னவென்றால் நம் சபையின் தனிவரத்தின்படி, கடவளின் அன்பை அகில உலகில் உள்ள அனைத்து மாந்தருக்கும் அகில உலக திரு அவையின் எண்ணப்படி வெளிபடுத்துவதே ஆகும்.

**அப்போஸ்தலிக்கப்பணி:**

ஒவ்வொரு உறுப்பினர் வழியாக அனைத்து உலகுக்கும் அனுப்பப்படுகின்றோம். அப்போஸ்தலர்கள் ஆற்றிய மறைப்பணியை நாம் தொடாந்து ஆற்றுவதே நம் சபையின் பணியாகும்.

**அனைத்து உலகிற்கும்:**

திரு அவையின் அனைத்துலக மறைப்பணியை நிறைவேற்றுவதே நம் சபையின் மேலார்ந்த நோக்கமாகும். நமது பணித்தளம் அகில உலகமாகும். நம் சபை நிறுவுநர் வெளிப்படுத்தியபடி நம் சபையானது ஒவ்வொரு உறுப்பினரின் தனிப்பட்ட

அழைப்பின்படி, கிறிஸ்துவுக்கு எங்கெங்கு அதிகாரமுள்ளதோ அங்கெல்லாம் சென்று பணியாற்றுவதே நமது வாழ்வாக இருக்க வேண்டும்.

**ஆவியானவரின் அழைப்பின்படி:**

நமது சபையின் மறைப்பணி நோக்கத்தின் சூழலுக்கு ஏற்ப நாம் ஒவ்வொருவரும் நமது அழைப்பின் படி செயலாற்ற வேண்டும். நம்மில் ஒரு சிலரை வெளிநாடுகளில் மறைப்பணி ஆற்ற அனுப்பப்படலாம். அதற்காக அனைவருமே அனுப்பப்படுவோம் என்பது கட்டாயமல்ல. எனவே இங்கு எதைக் குறிப்பிட விரும்புகிறோம் என்றால் சபையிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரின் உள்ளத்திலும் மறைப்பணி ஆர்வம் இருக்க வேண்டும். நாம் நமது தாயத்திலொ அல்லது வெளி நாடுகளிலோ. எங்க பணியாற்றினாலும், மறைப் பணிக்குரிய சாட்சிய வாழ்வு வாழ எண்ணம் கொண்டிருக்க வேண்டும்.

சபையிலள்ள ஒவ்வொரு உறுப்பினரும் இயேசுவை அறிவிப்பதிலும், அன்பு செய்வதிலும் ஆர்வமுள்ளவராக இருக்க வேண்டும். தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதினால் உண்டாகும் மகிழ்ச்சியும், தந்தையின் திருவளத்திற்குக் கீழ்ப்படிந்து செயலாற்றும் கீழ்ப்படிதலுள்ள மகனாகவும், மகளாகவும் இருக்கவேண்டும். அயல்நாடுகளில் பணியாற்றுபவர்கள் சாட்சிய வாழ்வு வாழ வேண்டும் என்பத வலியுறுத்தப்படுகின்றது. தான் பணிபுரிகின்ற மறைப் பணித் தளங்களில் உள்ள சகோதர சகொதரிகளோடு ஒன்றிணைந்து தங்களிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து, மறைப்பணித் திட்டங்களுக்குத தேவையான பண உதவியைத் தருவதிலும் முழுமனதோடு ஒத்துழைக்க வேண்டும்.

**இயேசுக் கிறிஸ்துவின் திரு அவையில்:**

கிறிஸ்துவின் திருவுடலாக இருக்கின்ற திரு அவையில் தான் இறைத் திருவுளச்சபை வாழ்ந்து பணி செய்கிறது. கிறிஸ்துவழியாக சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் உலகில் அமைதியையும், சகோதரத்துவத்தையும் நிலைநாட்ட உழைக்கின்றார்கள். இன்றைய உலகின் மத்தியில் இறையரசைக் கட்டியெழுப்ப உழைக்கும் உறுப்பினர்களின் மனித உழைப்பு முயற்சி மட்டும் போதாது. மாறாக எல்லாம் வல்ல இறைவனின் அருளும் ஆற்றலும் இணைந்து சென்றால் தான் வெற்றி கிடைக்கும். நற்செய்தி அறிவிப்புப் பணியின் முக்கியப் பணி சாட்சிய வாழ்வு ஆகும். திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் குறிப்பிட்டதுபோல, “திரு அவையானது இவ்வுலகின் ஒரு அங்கமாகும். உலகில் பணிபுரிவதே அதன் நோக்கமாகும். உலகில் புளிக்காரத்தைப் போல செயலாற்ற அழைக்கப்பட்டது. தனது உயர்ந்த பண்புகளான அன்பு, நீதி. அமைதி ஆகிய உயர்ந்த மதிப்பீடுகளின் வழியாக அகில உலகைப் புனிதப்படுத்தவும் அர்ப்பணிக்கவும் அழைக்கப்படுகின்றது (Conference Mondale des Instituts Secukers: Secular Institutes. The Offical Documents p.72-73) இன்றைய

உலகில் அமைதியையும், சகோதரத்துவத்தையும் நிலைநாட்ட நாம் உழைப்பது நமக்குப் பெருமகிழ்ச்சியைத் தரவேண்டும். ஏனென்றால் இத்தகைய அப்போஸ்தலிக்கப்பணியானது ஒரு நற்பேறாக நமக்குத் தரப்பட்டுள்ளது.

- ‘அமைதியை நிலைநாட்டுவோர் பேறு பெற்றோர்’ அதாவது இவ்வுலகில் வாழும் சகோதரசகோதரிகள் மத்தியில் இறையரசைக் கட்டியெழுப்ப தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து வாழும் உறுப்பினர்கள் பேறு பெற்றோர்.
- ‘அவர்கள் கடவளின் மக்கள் என அழைக்கப்படுவர்’ – அமைதியை நிலைநாட்டுவது இறைமக்களின் பிள்ளைகளுக்குரிய பண்பு நலன்களில் ஒன்றாகும். இவ்வாறு தான் இறையரசின் வாழ்வும். செயல்களும், போராட்டங்களின் மத்தியில் தொடர்ந்து ஏற்ற உறுதி கிடைக்கிறது.

**முடிவுரை :**

இறையரசைக் கட்டியெழுப்புவது தான் இதன் முக்கியமான நோக்கமாகும். இயேசுவின் மீட்பை ஏற்றுக் கொள்கின்ற கடவுளின் பிள்ளைகளுக்கு, இறையரசு வாக்குறுதியாக வழங்கப்படுகின்றது. கடவுளின் வார்த்தை மறுவுருவெடுத்து சிலுவையில் மரித்து இவ்வுலகில் இறையரசை இவ்வுலகில் கட்டியெழுப்பியுள்ளார். இந்த இறையரசுக் குடும்பம் இயேசுக் கிறிஸ்துவின் அன்பினால் ஒன்றிணைக்கப்பட்டு நிலைநாட்டப்படுகின்றது. இந்த இறையரசை தாழ்மையான உள்ளத்தோடு, மகிழ்வோடு ஏற்றுக் கொள்ள விரும்புகிறவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. “ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது”. (மத் : 5:3)

நம் சபை நிறுவுனரை மறைத்தூதப் பணிக்கு இட்டுச் சென்ற இரண்டு மேற்கோள்களை இங்கே காண்போம்:

மனித கண்ணோட்டத்தின்படி பார்த்தால், உலகின் கடையெல்லைவரை உங்களை அனப்புவது வீணாகத் தோன்றும் ஆனால் கடவுளின் கண்ணோட்டத்தின்படி பார்த்தால் முதல் அப்போஸ்தலர்களைப் போல நாமும் நன்கு தயாரிக்கப்படுகிறோம். அவர்களது தயாரிப்புக் காலம் குறுகியதாக இருந்தாலும் ஆற்றல் மிக்கதாக இருந்தது. ஏனென்றால் அது நிறைவானது. கடந்த நூற்றாண்டுகளில் கடவுள் சோர்வடைந்துவிட்டாரா? அவரை ஆர்வத்தோடு தேடுகின்ற அவருடைய சீடர்களுக்குத் தன் ஆவியை அனுப்பமுடியாதவராக இருக்கிறாரா? இல்லவே இல்லை. எனவே நாம் அவரை நம்புவோம் அவரில் நிறைவு பெறுவோம். (ஏப்ரல் 1958)

உண்மையான அப்போஸ்தலன் யார் என்றால், இயெசுக்கிறிஸ்துவைப் போல பிறருடைய நிலைக்குத் தன்னையே தாழ்த்தி அவர்களை கிறிஸ்துவின் உயர்ந்த

உழைப்பவன். தன் இதயத்தைத் திறந்து அதைக் கடவுள் புனிதப் படுத்த வேண்டும் என்ற தன் தேவையை உணர்வது. கடவுள் அன்பு செய்வதைப் போல நாமும் பிறரை அன்ப செய்ய வேண்டும், கடவுள் பார்ப்பது போல நாமும் அவர்களைப் பார்க்க வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையான அப்போஸ்தலப்பணியைச் செய்கிறோம் என கூற முடியும். தேவைப்படுவோரை நாம் நெருங்கிச் சென்று பணியாற்றும் போது அவர்களுக்கு அறிவு தேவையில்லை மாறாக நம் அன்பும் இரக்கமும் நிறைந்த அரவணைப்புத்தான் அவர்களுக்குத் தேவை என்பதை உணர வேண்டும. (மே 1959)

1. கிறிஸ்துவுக்குள் திருமுழுக்கும் உறுதிபூசுதலும் பெற்ற நீ எப்போது மறைப்பணித் தூதுவனாக மாறினாய் என்பதைச் சிந்தித்துப்பார்?
2. இறைத் திருவுளச் சபையின் மறைபரப்புப் பணி நோக்கம் அதாவது ‘கிறிஸ்துவுக்குள் அமைதியையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துவது’ உன்னைப் போதுமான அளவு உந்தித் தள்ளுகிறதா?
3. எத்தகைய குறிப்பிட்ட சூழலில், இடத்தில் இந்த விருப்பத்தை நிறைவேற்ற விரும்புகிறார்.∴
4. உதவி தேவைப்பட்ட யாருக்காவது நீ உன் அன்பார்ந்த உள்ளத்தோடு அவர்களுக்குத் துணை புரியும் போது நீ ஒரு அப்போஸ்தலனாகச் செயல்பட்டாய் என்பதை உணர்ந்தாயா? அப்போது உன் அனுபவம் என்ன? இந்த அனுபவத்திலிருந்து என்ன கற்றுக் கொண்டாய்? இதிலிருந்து உன்னில் நிலைத்திருப்பது என்ன?

## 4. ஐந்து அடிப்படை மதிப்பீடுகள்

**முன்னுரை :**

உங்களுடைய விருப்ப நிலைப் பயிற்சியில் முக்கியமான நிலையை அடைந்துள்ளீர்கள். இறைத் திருவுளச் சபையின் ஆன்மீகத்தைப் பற்றி இந்த இயல் மிகத் தெளிவாக விளக்குகின்றது.

**4:1 : முதல் அடிப்படை மதிப்பீடு : ஆன்மீக வாழ்வு :**

சபை உறுப்பினர்கள் தங்கள் வாழ்வின் அடிப்படை நோக்கத்தை அடைய ஆன்மீக வாழ்வு மிகமிக முக்கியம் என்பதை மிகத் தெளிவாக முன்வைக்கின்றது. கடவுளின் திருவுள்ளத்தைத் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்த ஆண்டவர் இயேசுவையும், அன்னை மரியாளையும் நமக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் தருகின்றது (சபை ஒழுங்குகள் : எண் 7) இந்த இலட்சியத்தை அடைய தகுந்த ஆன்மீகத்தைச் சிறப்பாக அனைவரும் அறிந்த மூன்றில் ஐந்து என்ற ஆன்மீகத்தை நமக்கு முன் வைக்கின்றது.

சபை ஒழுங்குகள் இயல் II, எண் 6,7 போன்றவற்றில் மிகத் தெளிவாகக் காணலாம்

**முதல் ஐந்து : ஐந்து வகை ஆன்மீக வளர்சிகள்:**

முதல் ஐந்துவகையானது. ஒருவருடைய வாழ்க்கையில் அவரது அனுதினச் செபமுறை வழியாகக் கடவுளோடு ஒன்றிணைந்து வாழும் முறை. இதைச் சிறப்பாக ஐந்து வகை ஆன்மீகப் பயிற்சிகள் வழியாக அடையலாம். மனச் செபம் / தியானம், இறை வார்த்தையை வாசித்துத் தியானித்தல், ஆன்மீக புத்தகங்களை வாசித்தல், நற்கருணைக் கொண்டாட்டம் (திருப்பலி) நற்கருணை சந்திப்பு, மரியாளின் மீது கொண்ட பக்தி சிறப்பாக மீட்பின் மறை உண்மைகளைத் தியானித்து ஜெபமாலை சொல்வது.

இந்த பயிற்சி முறைகள் நமது வாழ்வை மாற்றுகிறது. நம் சிந்தனைகளை வழிநடத்துகிறது, கடவுளோடு மிக நெருங்கிய உறவை ஏற்படுத்துகின்றது. மீண்டும் மீண்டும் நமது ஆன்மீக வாழ்வைத் தூண்டியெழுப்பி இன்றைய உலகில், நாம் சந்திக்கும் உலக மதிப்பீடுகளினால் ஏற்படும் பய உணர்விலிருந்து நம்மை விடுவித்து மிகுந்த அர்ப்பண உணர்வோடு இன்றைய உலகில் பணியாற்ற நம்மைத் தகுந்த விதத்தில் தயாரிக்கின்றது.

அகில உலகத் திரு அவையில் உள்ள அனைத்துத் துறவிகளும் இத்தகைய ஆன்மீகப் பயிற்சிகளைத்தான் தங்கள் வாழ்வில் கடைப்பிடிக்கின்றார்கள். சிறப்பாக கணக்கற்ற பொதுநிலையினர் நமது முதல் ஐந்து ஆன்மீகப் பயிற்சிகளை, இறையரசை நோக்கிய பயணத்தில் அடித்தளமாகக் கொண்டு வாழ்கிறார்கள்.

**ஐந்தில் இரண்டாவது:**

மேலும் தெளிவான விளக்கம் மற்றும் எத்தகைய கண்ணோட்டத்தில் காண வேண்டும் என்பதற்காக சபை ஒழுங்கு இயல் II எண் : 7.2 வாசிக்கவும்.

ஐந்து வகையான மனநிலைகளைப்பற்றிய மேலோன கண்ணோட்டத்தை, இறைத் திருவுளச்சபை, உறுப்பினர்களுடைய உள்ளத்தில் எவ்வாறு வளர்க்கவேண்டும் என்பவற்றைப் பற்றி இப்பகுதியில் காண்போம்.

**இறைப் பிரசன்னம்:**

அதாவது கடவுளின் பிரசன்னத்தில் வாழ்தல் அல்லது அவரது பிரசன்னத்தை நம்மில் உணர்தல். அவருடைய பிரசன்னத்தை எந்த அளவுக்கு உணர்கிறாயொ, அந்த அளவுக்கு அவர் உன்னில் வாழ்ந்து உன் செயல்பாடுகளை வழிநடத்தி. உன் தனிப்பட்ட பண்புகளில் நீ வளர உனக்குத் துணை புரிகின்றார். கடவுளின் அருளால் தான் இந்த உலகில் நீ ஒரு மறு கிறிஸ்துவாக மாறுகிறாய் மற்றும் நற் செய்தியைப் பரப்புவதில் ஆவியானவரின் உண்மையுள்ள கருவியாக மாறுகிறாய், பிறர் மீது உண்மையான அன்பு செலுத்துவதில் வலிமை பெறுகிறாய் மேலும் இவ்வுலகில் அவரது மீட்புப் பணியைத் தொடர்ந்து ஆற்றும் கூட்டத்தில் நீயும் ஒரு உறுப்பினராக உன்னை இணைத்துக் கொள்கிறாய். கடவுளின் பிரசன்னத்தில் தொடர்ந்து வாழ்தல், ஆவியானவரின் செயல்பாடுகளில் உன்னையே முழுமனதோடு அர்ப்பணிக்க உன்னை வழிநடத்துகிறது. கடவுளின் ஆவியானவர், கிறிஸ்துவைப் போல உன்னைப் பண்படுத்தி இவ்வுலகில் இயேசுவின் சாட்சியாக வாழ உன்னை உருவாக்குகின்றது.

**குறைச் சொல்லுக்கு ஆளாகாமல் இருத்தல் :**

அழிவக்குரிய குறைச் சொல் நம் மனதைக் கலங்கப்படுத்தி, மன உறுதியைக் குலைத்து, அன்பின் இதயத்தைக் களங்கப்படுத்துகின்றது. அழிவுக்குரிய குறைச் சொல்லானது துருப்பிடித்த அனைத்தும் இழக்கச் செய்கின்றது. இவை அதிகமாகும் போது நஞ்சைப் போல நம்மை அழிக்கிறது, ஒரு வேளை குறைந்த அளவில் நம்மிடம் இருந்தால், நம் மதிப்பை இழக்கச் செய்து, நம் இதயத்தைப் பங்கப்படுத்தி, பிறர் மீது நல்லெண்ணம் கொள்ளாமல் நம்மை இருக்கச் செய்கிறது.

குறை சொல்லுக்கு ஆளாகாமல் பிறர் மீது நல்லெண்ணம் கொண்டிருப்பது ஓர் உயர்ந்த பண்பாகும். இத்தகைய பண்பை உடையவர்கள் திறந்த உள்ளத்தோடு பிறரை வரவேற்று அவர்களுடைய கருத்துக்களுக்குச் செவிமடுப்பார்கள். இத்தகைய மனநிலையை உடையவர்களின் இதயம் ஒரு நல்ல சோதனைக் கூடத்திற்குச் சமம். ஏனென்றால் இங்குதான் பிறரை மதிக்கவும். நிபந்தனையற்ற முறையில் பிறரை ஏற்றுக் கொள்ளவும் வேண்டிய மனநிலை இங்கு பரிசோக்கப்படுகின்றது. பிறரைக் குறைகூறாமல் இருக்கும் மனநிலை தான், பிறருக்காக நம் இதயத்தை எப்போதும் திறந்து வைத்திருப்பதற்குத் துணை புரிகின்றது.

**குறை கூறாமல் இருத்தல்:**

குறைகூறுவது என்பது நம் உடம்பில் உள்ள அரிப்பைப் போன்றது. தோல்வியாதிக்குச் சமம். நம் உயிருக்கு ஆபத்து இல்லையென்றாலும் எப்போதும் எரிச்சலைத் தருகிறது. சொரிய சொரிய சுகமாக இருந்தாலும் அதனால் ஏற்படும் புண் வளர்ந்து கொண்டே இருக்கும். குறை கூறும் பண்பு வளர வளர நம்மை வலுவிழக்கச் செய்யும், தாழ்வு மனப்பான்மையைத் தரும், பணியில் வெறுப்பைத் தரும், பணி வாழ்வில் தளர்ச்சியைத்தரும். நம் இதயத்தில் நச்சுத் தன்மையை ஊற்றி நம் அமைதியைக் குலைக்கும், முன்னேற்றத்தைத் தடை செய்யும், அவநம்பிக்கை மனம் படைத்தவராக ஒருவரை மாற்றிவிடும். குறை கூறா மனம் கொண்டவர்களால் குழுவில் வலிமையை ஏற்படுத்தி பணிகளை மிக்க மகிழ்ச்சியோடு ஆற்றக் கூடிய சக்தியைக் கொடுக்கும்.

**பணி வாழ்வு:**

பிறருக்குப் பணிபுரிவது, பிறருடைய இரக்கத்தைச் சார்ந்து வாழ்வதற்குச் சமம். தன்னையே கொடையாக பிறருக்குத் தருவது. தங்களையே பிறருக்கு தருவதற்குரிய ஒரு வழிமுறை. சுயநலத்தால் காயப்பட்ட இவ்வுலகை கட்டாயமுப்புவதற்குரிய முயற்சியாகும். பிறருக்குப் பணிவிடைபுரிய, அவர்களுடைய குறைகளுக்குச் சலிப்பில்லாமல் செவிமடுக்க, பிறருடைய வாழ்க்கைப் பயணத்தில் அவர்களோடு இணைந்து வழிநடக்க நமக்குத் துணைபுரியவையாகும். நம் இதயத்தின் ஆழத்தில் நாம் சென்று அங்கு பயன்படுத்தப்படாத நம் அற்றல்களையும். தாராள மனத்தையும் வெளிக் கொண்டு வர கடவுள் நமக்குத் தரும் ஒரு நல்ல வாய்ப்பாகும். குறுகலான வழியைத் தேர்ந்தெடுங்கள் என இயேசு நற்செய்தியில் குறிப்பிட்டது போல நம் ஒவ்வொருவரின் தன்னலத்தை நம்மிடமிருந்து அகற்றிவிட்டு, இயேசுவின் தெய்வீக குணத்தை நாம் அணிந்து கொள்வதாகும். எவ்வித முணுமுணுப்பும் இன்றி நாம் செய்யும் பணிதான் உண்மையான மிகச் சிறந்த பணியாகும். இதுதான் பிறரைக் கவர்ந்து இருக்கும் ஆற்றல் படைத்தது. இப்படிப்பட்ட உணர்வோடு நாம் செய்யும் பணிகளின் கரங்களில் நம் இதயத்தைக் காண முடியும், தாராள உள்ளமும், இரக்கமும் கனிவும் நிறைந்த பணிகளாக இருக்கும்.

**அமைதியை ஏற்படுத்துவோர்:**

இதயச் சூழலை வெளிப்படுத்துவதே அமைதி. கடவுளின் பிரசன்னத்தில் தங்களையே முழுமையாக இணைத்துக் கொண்டவர்கள் அமைதியை மட்டுமே நாடுவார்கள். கடவுள் என்னில் வாழ்கிறார் என உணர்பவர்களுக்கு, கடவுளெ தன் அருளை வாரி அவர்கள் மேல் பொழிகிறார். மகிழ்வொடு இருத்தல், அமைதி, பரபரப்பற்ற சூழல், எப்போதும் அமைதியில் மகிழ்ந்திருத்தல் ஆகியவை கடவுளின் பிரசன்னத்தில் வாழ்பவர்களிடம் வெளிப்படும். கடவுள் என்னில் வாழ்கிறார். அந்தக் கடவுளைப் பிறருக்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற உணர்வே அமைதியை

ஏற்படுத்துவோரின் வாழ்வை வழிநடத்தும். இத்தகைய அமைதியை அனைவரிடமும் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணமே சகோதர கூட்டுறவை வளர்க்கும். இத்தகைய உண்மையான அமைதி உணர்வில் வாழ்வோர் வேறு எதிலும் நம்பிக்கை வைக்கமாட்டார்கள். மேலே குறிப்பிடப்பட்ட நான்கு ஆன்மீக மனநிலைகளின் வெளிப்பாடே அமைதியாகும். அமைதியானது அதில் உள்ளடங்கியுள்ள ஆழமான பரிமாணங்களை உள்ளடக்கியது. நெர்மறை எண்ணங்களையுடைய ஒருவருடைய ஆர்வமும், கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள உண்மையான சார்பு நிலையும், பிறரை மதித்து நடத்துகின்ற பண்பும், நம்மிடம் மிகுந்துள்ள அளவு கடந்த ஆற்றலும். பிறருக்குப் பணி புரிய வேண்டும் என்ற அாப்பண உணர்வும் ஆகிய இவையனைத்தும் அமைதிய்ன கனிகளாகும்.

வாழ்க்கைப் போராட்டங்களின் மத்தியில். அமைதியானது நம் உள்ளத்தின் ஆழத்தில் நிலைத்திருந்து ஆற்றல் வழங்கக்கூடியதாக இருக்கிறது. இத்தகைய அமைதியை எவராலும் அழிக்க முடியாது. ஏனென்றால் இந்த அமைதியானது படைத்துவரும், வழிநடத்துபவரும், காப்பவரும் தாராள உள்ள வருமான கடவுளுக்கு இணையானது.

**தொகுப்புரை (நிறைவாக):**

ஐந்தில் இரண்டாவது ஐந்து ஆன்மீக மனநிலைகளை உள்ளடக்கி, சொல்ல வேண்டுமென்றால் இயேசுவின் மனநிலையையும், மக்கள் மத்தியில் வாழ வேண்டும் என்ற அவரது விருப்பத்தையும் எடுத்துரைக்கின்றது. இந்த மனநிலைகள் இயேசுவின் வாழ்வை நமக்கு விளக்குகிறது. அவர் மனிதர்களோடு கொண்டுள்ள உறவையும். அவர் எவ்வாறு நடந்து கொண்டார், எவ்வாறு அவர் கடவுளின் திருவுளத்தை எப்போதும் தன் மனதில் கொண்டு செயல்பட்டார் என்பதை எடுத்துரைக்கிறது. எதிர்மறை குறை கூறுதலைவிடுத்து, பிறர் உறவில் வளர இயேசுவைப்போல நீயும் அடிக்கடி இறைத் தந்தையிடம் மன்றாடு. அப்போது நீ உன் அயலாரை மதிப்பாய், நேர் மறை எண்ணத்தோடு அவர்களை அணுகுவாய், அவர்களை வெறுக்காமலும் தீர்ப்பிடாமலும் நடந்து கொள்வாய். முணுமுணுப்பதைத் தவிர்ப்பாய் மாறாக விடுதலையடைந்த உள்ளத்தை உடையவரைப்போல உனது எண்ணமும், செயலும் இருக்கும்.

உண்மையான ஆன்மீக வாழ்வுக்கு, இத்தகைய ஆரவாரமற்ற மனநிலையே தொடக்க நிலையாகும் என்பதை அனைவரும் அறிவர். இத்தகைய நிலை உன் மனதில் ஆழத்தில் வேரூன்றியிருந்தால் இது வளர்ந்து வேரின் அடியிலிருந்து வளர்ந்து மணமிக்க மலர்களைத் தரும் செடிகளைப் போல உன் வாழ்வும் இருக்கும். இத்தகைய மாண்புமிக்க மனநிலையை நாம் முணுமுணுப்பதை நிறுத்துவதின் மூலம் நம்மில் வளர்த்துக் கொள்கிறோம். பிறருக்கு உதவி புரிவதுதான் கிறிஸ்தவ அழைப்பு

என்பதை முழுவதுமாக உணர்ந்து கொள்வாய். இவ்வாறு கிறிஸ்துவின் பிரசன்னத்தை விசாலப்படுத்தத் துணை நிற்கும். ஏனென்றால் இயெசுவே கூறியதைப்போல் "மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" (மாற : 10:45)

இறுதியாக ஒருவர்: முதல் நான்கு அம்சங்களில் (கருத்துக்களில்) உண்மையுள்ள விதத்தில் நடந்து கொண்டால், இறைப் பிரசன்னத்தில் வாழ்வர், குறைச் சொல்லுக்கு ஆளாகாமல் இருப்பார், முணுமுணுக்காமல் இருப்பார், பிறருக்கு பணிபுரிவதில் ஆர்வம் உள்ளவராக இருப்பார். எனவே அவர் இயல்பாகவே அமைதி ஏற்படுத்துபவராக இருப்பார். முதல் நான்கு அம்சங்கள் அமைதி என்ற கனியைத் தரும் நல்ல கனி தரும் மரமாக இருக்கினறது. இந்தப் பண்புகளை கவனித்துக் கொண்டால் கடவள் அதன் கனிகளைக் கவனித்துக் கொள்வார்.

நமது ஆன்மீகத்தின் ஐந்து வகையின் இரண்டாவதைப் பற்றி இன்னும் ஆழமாக உணர்ந்து உள்வாங்கிக் கொள்ள விருப்பம் என்றால் நம் நிறுவுநர் அருட் தந்தை பாரண்ட் அவர்கள் எழுதிய 'இயேசுவின் அடிச்சுவட்டில்' என்ற புத்தகத்தைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

**ஐந்தில் மூன்றாவது: ஐந்து கிறிஸ்தவ தொடர்புகள்:**

ஐந்தில் மூன்றாவது கிறிஸ்தவத் தொடர்புகள் என அழைக்கப்படுகின்றன. இது பிறரன்புப் பணிகளைப் பற்றியது. (சபை ஒழுங்குகள் : இயல் II எண் 7.3) ஐந்தில் மூன்றாவது நடைமுறையைச் சார்ந்தது. இது மிகவும் எளிமையாக இருப்பதால் இதைப்பற்றிப் பலரும் அதிகக் கவனம் செலுத்துவதில்லை. நாம் தினம் தோறும் பிறருக்குப் புரிகின்ற பிறரன்புப் பணிகளைப் பற்றியது. நாம் விரும்பி ஐந்து முறை மீண்டும் மீண்டும் செய்யக் கூடியது. இவ்வாறு தினம் தோறும் இத்தகையச் செயல்களைச் செய்வதன் மூலம் ஒருவர் தனது ஆன்மீகப் பயிற்சிகளையும். ஆன்மீக உணர்வுகளையும் பிறரன்பின் கனிகளாகப் பெற்றுக் கொள்கிறார். இதன் முக்கியத்துவத்தை உணரும் வகையில், ஐந்தில் மூன்றாவதைப் பற்றிய சில விளக்கங்கள் இங்கே தரப்படுகின்றன.

**விளக்கம்:**

நாம் செய்கின்ற பிறரன்புச் செயல்களே இந்த ஐந்தில் மூன்றாவதில் அடங்கும். நம்மையே பிறருக்காக முழுமையாக கையளிக்கும் பண்பை நம்மில் வளர்த்துக் கொள்ள, முழுமனதோடு இலட்சிய வழியில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இது ஒரு தொடக்கம் தான். ஒவ்வொரு நாளின் தொடக்கத்தில் கடவுளுக்கும், பிறருக்கும் பணிபுரிய நம்மையே அர்ப்பணிப்பது.

இத்தகைய ஐந்து வகையான பிறரண்புப் பணிகளை முழுமனதோடு செய்ய தொடஙிகவிட்டு அதன்பின் இதை மறந்துவிடுவது நமது பணி வாழ்வில் தேக்கம், தளர்ச்சி ஆகியவை நம்மில் புகுந்துவிட்டன என்பதன் அடையாளமாகும்.

இந்த ஐந்து வகைப் பிறரன்புப் பணிகளை மட்டும் செய்துவிட்டு மற்றப் பணிகளை நிறைவேற்ற மறுப்பதும் அல்லது உயர்ந்த நோக்கத்தோடு பணியாற்றுவதை தவிர்ப்பதும் குழந்தைத் தனமான மற்றும் நகைப்புக்குரிய செயலாகும். இப்படிப்பட்ட மனநிலை இந்த ஐந்தில் மூன்று செயல்பாடுகளை பலம் இழக்கச் செய்யும். எனவே இந்த ஐந்தில் மூன்றாவது செயல்பாடுகள் அமைதியை நிலைநாட்டும் பணிகளைக் கடவுளை நோக்கிய வண்ணம் செயல்பட நம்மைத் தூண்டி வழிநடத்துகிறது. ஆவியானவரின் அருள் துணையோடு ஐந்தில் மூன்று செயல்பாடுகளை நம்மில் வளர்த்துக் கொள்ள நமக்குத் துணையாக இருக்க வேண்டும். திட்டமிட்ட பணிவாழ்வில் நம்மை வழிநடத்துவதோடு மட்டுமில்லாமல், கிறிஸ்தவத் தொடர்புகளை நம்மில் ஏற்படுத்திக் கொள்ள நம் இதயங்களை விசாலமாக்கிக் கொள்ள வேண்டும் மற்றும் இயேசு பிறரோடு கொண்ட உறவிலே கொண்டிருந்த பண்புகளை நாமும் கடைப்பிடித்து இயேசுவைப் போல வாழ முன் வரவேண்டும்.

ஐந்தில் மூன்றாவது பிறரோடு திறந்த உள்ளத்தோடு பழக துணை புரிகிறது. ஒவ்வொரு நாளும் களைப்பும், சலிப்பும் இன்றி உன் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளவும். நம்மால் முடிந்த அளவு பிறரண்புப் பணிகளில் ஈடுபடவும் உந்து சக்தியைக் கொடுக்கும் இந்த சக்தியானது நாள் முழுவதும் இத்தகைய மேலார்ந்த நோக்கத்தோடு உழைக்க உறுதி கிடைக்குமே ஒழிய மாற்றுச் சிந்தனைக்கு இடம் இருக்காது.

முழு உணர்வுடன் ஐந்து காரியங்களைச் செயல்படுத்த முயலும் போது, நாள் தோறும் நாம் சந்திக்கும் நட்புறவிலும் செயல்பாடுகளிலும் சாத்யக் கூறுகளை ஆய்வு செய்ய, தேர்ந்து தெளிய ஆவியானவர் துணை நிற்கிறார். இந்த ஐந்து பிறரன்புச் செயல்பாடுகள் நாம் நாள்தோறும் பிறரன்புப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபட நாளும் காலை வேளையில் கடவுளுக்கு உன்னை ஒப்புக் கொடுக்கொடுக்கின்ற வேளையில், அமைதி, மகிழ்ச்சி, அன்பைப் பகிர்ந்து கொள்வது, தாராள உள்ளம், பரிவு, பொறுமை, நன்னயம், தன்னடக்கம் போன்ற பண்புகளைக் கொடுக்கும் கடவுளின் கருவியாக வாழ தம்மையே அர்ப்பணிக்கின்றோம். (கலா : 5:22)

மூன்று ஐந்துவகை (555) ஆன்மீகத்தில் சபையானது முதல் ஐந்தில் தியான முயற்சிகளைக் கொடுக்கின்றது. இது ஆகாயவிமானத்தின் முழு அமைப்பைப் போன்றது. இரண்டாவது ஐந்து வகை ஆன்மீகத்தில் ஆன்மீக மனநிலைகளைத் தருகின்றது. இது ஆகாய விமானத்தின் சக்தியை வெளிப்படுத்துகின்றது. அதாவது ஆகாய விமானத்தால் செய்யக்கூடிய அனைத்துச் சக்திகளையும் இது குறிக்கின்றது.

மூன்றாவது ஐந்து வகை ஆன்மீகத்தில் பிறரன்புச் செயல்பாடுகளைக் குறிக்கின்றது. இதை ஆகாய விமானத்தின் புறப்பாடு, இறக்கம் மற்றும் சவாலான சூழல்களில் விமானத்தைக் கவனமாக ஓட்டுவதைப் போன்றது. அதாவது பிறரன்புப் பணிகளில் ஈடுபடுபவர்கள் திறமையுள்ளவர்களாகவும் அதே வேளையில் பதட்டப்படாமலும், கொண்ட கொள்கையில் தவறாமல் செயல்படுவது.

சபையின் உள்ளத்தைப் போன்று இருக்கக்கூடிய ஆன்மீகத்தைப் பற்றி நாம் சிந்தித்தோம். எனவே மூன்று ஐந்துவகை ஆன்மீகத்தைப் பற்றிய தெளிவான அம்சங்களை நாம் கவனமாக புரிந்து கொள்ள வேண்டியது மிகமிக அவசியமாகும். இந்த அம்சங்களை உனது ஆன்மீகக் குருவிடமும், சபையின் உறுப்பினர்களிடமும் நீ கலந்து ஆலோசிக்க வேண்டும். இந்த மூன்று ஐந்து வகை ஆன்மீகத்தில், எந்த வகையில் நீ அதிகக் கவனம் செலுத்தி வளர்ச்சி பெற வேண்டும் என்பதைத் தெரிந்து அவற்றில் வளர்ச்சியடைய முயற்சி எடு.

### 4.2 : இரண்டாவது அடிப்படை மதிப்பீடு : குழு

**விளக்கம்:**

குழு என்றால் ஒரு சில உறுப்பினர்கள் தங்களுடைய முழு ஆளுமையையும் அதாவது அவர்களுடைய திறமைகள், இயல்பான கொடைகள், தனிவரங்கள், கனவுகள், முயற்சிகள், பொறுப்புணர்வுகள் ஆகிய அனைத்தையும் பொது நன்மைக்காக அதாவது அமைதியை ஏற்படுத்துவதற்காக ஒன்றிணைந்து செயல்படுவது. இந்த உயர்ந்த பணிக்காக இவர்கள் தங்களுடைய அன்பு, அறிவு, நம்பிக்கை, பிறருடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் திறம் இவற்றை அர்ப்பணமாகத் தருகிறார்கள்.

ஒரு நபர் தனித்து ஒரு குழுவை உருவாக்க முடியாது, குழு உணர்வையும் வளர்க்க முடியாது. ஒரு நபர் பிறரை வெறுத்தாலோ அல்லது பிறரைத் தனது சுய நலனுக்காகப் பிறரைப் பயன்படுத்தினாலோ, அவர் மனிதனாக அழைக்கப்பட தகுதியற்றவர். மாறாகக் குழு ஒரு உருவாக்கப் பள்ளியாகும் (பின்குறிப்பு D காண்க). இங்கு ஒவ்வொருவருடைய பண்புகளை, ஆற்றல்களை, விருப்பங்களைக் கண்டு கொள்ள பயிற்சி பெறுகிறோம். இந்தக் குழு என்ற பயிற்சிப் பள்ளியில் நாம் நமது பண்புகளை பண்படுத்தவும். பிறரோடு இணைந்து செயலாற்றவும் பயிற்சி பெறுகிறோம். குழு என்பது ஓர் ஆய்வுக் கூடமாகும். இங்கு நம்மைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்ளும் ஆற்றலைப் பெறுகின்றோம், பிறரிடம் உள்ள உயர்ந்த பண்புகளையும் கண்டு கொள்கிறோம், ஒருவரையொருவர் புரிந்து ஏற்றுக் கொள்ளும் ஆற்றலைப் பெறுகிறோம் நமது ஆற்றலை அறிந்து கொள்ள நமக்குத் துணை புரிகின்றது. இதன்

பயனாக நாம் உலகில் பணியாற்றும் போது நமது வேலைகளையும், பணிகளையும் சிறப்பாகச் செய்ய நமக்குத் துணைபுரிக்னறது.

குழுவானது ஆய்வு செய்யவும், தேர்ந்தெடுக்கவும். வளர்ச்சிக்கும், பல்வேறு செயல்திட்டங்களை நிறைவேற்றவும் தவிர்க்க முடியாத தேவையாக அமைந்திருக்கிறது. எனவே நம்மையும், பிறரையும் முழுமையாக அறிந்து, எங்கெல்லாம் இயெசுவுக்கு உரிமை உள்ளதோ அங்கெல்லாம், அமைதியை நிலைநாட்டுவதில் இயேசுவோடு இணைந்து உழைப்பதற்கு உறுதுணையாக இருக்கின்றது.

அமைதியை நிலைநாட்டும் உயர்ந்த பணி நம் சபைக்குத் தரப்பட்டுள்ளது. குழுக்கள் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவிகளாகச் செயல்படுகிறார்கள். இந்தக் குழு உறுப்பினர்கள் எப்பொழுதெல்லாம் இணைந்து வாழ்ந்து உழைக்கும் போது சிறப்பு ஆற்றலை குழு உறுப்பினர்கள் பெறுகிறார்கள்.

**குழுவுக்குரிய பண்புகள்:**

நல்ல தரமிக்க குழுக்களின் உதவியின்றி நிறுவனம் உறுதியுடன் நிலைத்து நிற்க முடியாது. அனைத்து உறுப்பினர்களையும் ஒன்றிணைத்து ஆற்றல் மிக்கப் பணிகளை ஆற்ற துணைபுரிவது குழுக்களின் துணையோடு தான். இந்தக் குழுக்களில் தான் தனி உறுப்பினர் உற்சாக மூட்டி வளர்க்கப்படுகிறார்கள். இங்குதான் நமது தனிப்பட்ட ஆர்வமிக்க ஆன்மீகம் புரிந்து கொள்ளப்படுகிறது. இத்தகைய ஆன்மீகத்தின் நோக்கம் என்னவென்றால் நம் இதயத்தைத் தொட்டு, நம்மைப் பண்படுத்தி, சிறிது சிறிதாக அறிந்து, கற்று, உள்வாங்கி, செயல் முறைப்படுத்தத் துணை புரிகின்றது. நாம் எதையெல்லாம் தேடுகிறோமோ, அவற்றையெல்லாம் குழுவில் கண்டு கொள்கிறோம். நாம் மகிழ்ச்சி, புரிந்துகொள்ளும் திறன் இவற்றையெல்லாம் பெற விரும்பினால், முதலில் நாம் விரும்புவதை பிறருக்குக் கொடுக்க வேண்டும். நாம் அன்பு புரிந்து கொள்ளும் திறம், தாராள உள்ளம் இவற்றை எதிர்பாத்தோமென்றால் முதலில் இவற்றைப் பிறருக்கு வழங்கவேண்டும். அருட்தந்தை லூயி மரிய பாரண்ட் அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார். "குழுவிலிருந்து என்ன பெற்றுக் கொண்டோம் என்று கேட்பதை விட குழுவிற்கு என்ன கொடுத்தோம் என்று கேட்பது நல்லது". அப்போது தான் உன் குழுவானது ஆரோக்கியமுள்ளதாக உள்ளதா? இல்லையா? என்பதை உன்னால் கண்டு கொள்ள முடியும். உறுப்பினர்களின் உத்வேகம் குழுவில் தான் உள்ளது".

முதலில் குழுவானது நம்மனதின் எண்ணத்தைப் பொருத்து அமைந்துள்ளது. நம் ஒவ்வொருவரின் பங்களிப்பைப் பொருத்துத்தான் குழுவானது வலிமை பெறுகிறது. தன்னிலே புதுமைகள் புரியக் கூடிய ஆற்றல் இல்லை மாறாக நாம் எந்த அளவுக்குப் பங்களிப்பைத் தருகிறோமோ, அந்த அளவுக்குத் தான் அது சக்தி பெறுகிறது. இந்த

விளக்கம் மனத்துறவு கொண்டவர்களுக்கும், மணமானவர்களுக்கும் பொருந்தும். இல்லறத்தார் குடும்ப உணர்வோடு வாழ்வதும், தங்கள் பிள்ளைகளோடும் மற்றும் குழு உறுப்பினர்களோடும் இணைந்து வாழ அழைக்கப்படுகிறார்கள்.

குழுவின் சிறப்பு தனிப்பட்ட உறுப்பினர்களின் பங்களிப்பைப் பொருத்து அமைந்துள்ளது. எனவே ஒவ்வொரு உறுப்பினரும் தவறாமல் தனிப்பட்ட பண்புகளைக் கையாள வேண்டும். இவற்றோடு குழு உறுப்பினர்கள் ஒருவரையொருவர் அன்பு செய்வதும், பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவும் வேண்டும். குழுவாழ்வின் மேம்பாட்டிற்கு ஒருவர் சொல்லாமலே அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் தாழ்மையான உள்ளத்தோடு ஒருவரோடு ஒருவர் கருத்துக்களைப் பரிமாறுவதிலும், எண்ணங்களையும், திட்டங்களையும், முயற்சிகளையும் அமைதியான சூழலில் பகிர்ந்து கொண்டு முன்னேற்றத்தை நோக்கிப் பயணமாக வேண்டும். குழுவின் முன்னேற்றத்திற்கு நாம் தந்த கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றால் அதன் பின் அந்தக் கருத்துக்கு நாம் உரிமை கொண்டாடக்கூடாது. என்னால் தான் இது முடிந்தது எனப் பெருமிதம கொள்ளக் கூடாது. அதே வேளையில் நமது கருத்து புறக்கணிக்கப்பட்டது என்றால். நமது கருத்துத்தான் புறக்கணிக்கப்பட்டதேயொழிய நாம் புறக்கணிக்கப்படவில்லை என்பதை உணரவேண்டும். நம்மால் முடிந்ததைப் பகிர்ந்து கொண்டோம் என்ற மனநிறைவு மட்டும் நமக்குப் போதுமானது. நம் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதற்காக தாழ்வு மனப்பான்மையோ, வெறுப்புணர்வோ நம்மில் வளரவிடக்கூடாது.

**நிறுவனத்தில் குழு:**

குழுக்கள் ஆன்மீக எண்ணங்களைச் செயல்படுத்துவதின் மூலம் நிறுவனத்திற்குச் சிறப்பு ஆற்றலை வழங்குகிறார்கள். நம் துறவற நிறுவனத்தில் நாம் ஒரே இடத்தில் கூடி வாழ்வதோ அல்லது செயல்பாடுகளை இணைந்து செய்வதோ அல்லது ஒரு குறிப்பிட்ட இலக்கை அடையவோ நாம் செயல்படுவதில்லை. இருந்தாலும் ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு குழுவைச் சார்ந்தவர்கள், எனவே குழுவின் கூட்டங்களில் தவறாமல் பங்கு கொண்டு, பிறருடைய கருத்துக்களோடு ஒன்றிணைந்து, ஒருவர் ஒருவரை முழுமனதோடு அன்பு செய்து வாழ்வது நமது நோக்கமாக இருக்க வேண்டும். இது கடவுளின் கட்டளை என்பதற்காக மட்டுமல்ல மாறாக அமைதியான உலகை உருவாக்குவதற்கு நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்வது மிகத் தேவையான தொன்றாக இருக்கிறது. நல்ல மனித உறவுகளை நாம் வளர்க்க வேண்டுமென்றால், ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள நல்ல உறவும். பிறருடைய மன உணர்வுகளைப் புரிந்து செயல்பட்டால் தான் இது சாத்யமாகும்.

**குழுவின் நோக்கம்:**

நாம் குழுவாக இணைந்து வாழ்வது நமது அப்போஸ்தலிக்கச் செயல்திட்டங்களைச் செயல்படுத்த கலந்து ஆலோசிப்பதற்காக அல்ல மாறாக நாம் ஒருவரையொருவர் ஒற்று அன்பு செய்யவும் ஆவியின் வல்லமையோடு இயேசுவின் அடிச் சுவட்டைப் பின்பற்றத்தான் என்பதை நாமனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். மற்ற அனைத்துச் செயல்பாடுகளும் இதிலிருந்துதான் தொடங்க வேண்டும். திரு அவையிலிருந்து நமது துறவற நிறுவனம் பணியைப் பெற்றிருக்கிறது. அது என்னவென்றால் அமைதியை நிலைநாட்டுவது எனவே ஒவ்வொரு உறுப்பினரும் அமைதியை நிலை நாட்டுவோராகச் செயல்பட வேண்டும்.

**உறுப்பினர்களுக்கிடையேயான அன்புறவு:**

அனைவரும் சகே.உறவையும், அமைதியையும் நிலைநாட்ட முயலவேண்டும். கிறிஸ்து தன் அப்போஸ்தலர்களை அன்பு செய்ததைப் போல இறைத் தந்தை இயேசுவையும், இயேசு இறைத் தந்தையையும் அதை செய்தது போல, நாமும் ஒருவரையொருவர் முழுமனதுடன் அன்பு செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய அன்புறவை வளர்க்கும் போது ஒவ்வொருவரிடமும் எளிமையையும், மிகச்சிறப்பான திறந்த உள்ளத்தையும். பிறரை நிறைகுறைகளோடு ஏற்றுக் கொள்ளும் பண்பையும். பிறருடைய திறமைகள் மற்றும் அவர்களது குறைகளுக்கு அப்பாற்பட்டு அவர்களை அன்பு செய்யும் ஆற்றலையும் வழங்கி இணைந்த குடும்பமாக வாழ நமக்குத் துணைபுரிகிறது.

மூவொரு கடவுளின் இதயம் தூய ஆவியானவர். நம் துறவற நிறுவனத்தின் இதயம், குழக்களில் ஒருவருக்கிடையேயுள்ள அன்புறவாகும். இது ஒவ்வொரு உறுப்பினரின் உள்ளத்திலும் தூய ஆவியானவர் வாழ்கிறார் என்ற உணர்வைத் தருகிறது. தூய ஆவியானவர் தான் நம்மை ஒருங்கிணைப்பவர். அவரே நம் குழு வாழ்வின் ஊற்றும், மையமும் ஆவார். இவரே குழுவிலுள்ள ஒவ்வொருவரையும் ஒன்றிணைப்பதும், நம் மூத்த சகோதரரான இயேசுவோடு ஒன்றிணைப்பதும் இவரே.

பிறரண்பும், பணியும் குணநலனுக்கு அப்பாற்பட்டது. தூய ஆவியானவரே நம்மையும், நம் வழியாகக் குழுவையும் அன்பு செய்கிறார். இதுவே நம் துறவற நிறுவனத்திற்கு மிகத் தேவையானது. குருவானது தன் உறப்பினர்களை புனிதமான உறவிலும், அன்பினால் இதயங்கள் இணைவதிலும் மன்னிப்பதிலும், பரிவிலும் வளர உதவி புரிகிறது. இறைத் திட்டத்தையும், கடவுளின் திருவுளத்தையும் நிறைவேற்றுவதில் தனிக்கவனம் செலுத்தும் நம் துறவற நிறவனத்திற்குக் குழுக்கள் கண்கள் போன்றவர்கள்.

**பொறுப்புணர்வு:**

மற்ற துறவற சபைகளை விட நம் துறவற நிறுவனமானது அர்ப்பணிப்பு அமைப்பிலோ அல்லது உலகியல் அமைப்பிலோ அல்ல மாறாக நம் குழுக்களின்

அமைப்பில்தான் வேறுபடுகிறது. நாம் பிறரோடு ஒன்றிணைக்கப்பட்டுள்ளோம், ஒரே உணர்விலே வாழ அழைக்கப்பட்டுள்ளோம். எனவே நமது தனிப்பட்ட திறமைகள், கொடைகள் இவற்றில் தனிக்கவனம் செலுத்துவதைவிட தூய ஆவியின் அருள் துணையோடு நமது நிறுவனத்தில் இணைந்து இயேசுவுக்கு சான்று பகர்ந்து வாழ்வதே சிறப்பானது என்பதை உணர வேண்டும். நாமனைவரும் இணைந்து நமது நிறுவனத்தின் மனநிலையை நமது மனநிலையாகக் கொண்டு வாழ்கிறோம். நிறுவனத்தோடு, நிறுவனத்தின் வழியாக நாம் அமைதியின் தூதுவர்களாகப் பணியாற்றுகின்றோம். தனி உறுப்பினராகச் செயலாற்றினாலும், நாம் குழுவாகக் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்கின்றோம். நாம் அனைவரும் இணைந்து அமைதியின் தூதுவர்களாக வாழ பயிற்றுவிக்கப்படுகின்றோம். கடவுளின் திருவுளம் ஒன்று மட்டும் தான் நமது பணித்தளமாக இருக்க வேண்டும்.

உறுப்பினர்கள் தங்களையே முழுமையாக வழங்குவதும் தங்களிடம் உள்ள ஆற்றல்களையும், பொருட்களையும் ஒன்று சேர்த்துக் கொடுப்பதுதான், இறைத் திருவுளத்தைக் கட்டியெழுப்ப நாம் தரும் பொருட்கள் ஆகும். நமது பொறுப்புணர்வு என்னவென்றால் குழுவாழ்வில் நம்பிக்கை கொள்வது, ஈடுபாட்டுடன் இணைத்துக் கொள்வது, மிகத் தேவையான தொன்றாகக் கருதுவது, ஆக்க சக்தியை உணர்வது இதன் வழியாக நம் சபை நிறுவனத்தின் பணி வாழ்வு நிறைவேற்றுவது.

நம் சபை நிறுவனத்தில் நாம் தனியாகக் கடவுளை நோக்கிப் பயணமாவதில்லை மாறாகக் குழுவாகக் கடவுளை நோக்கிப் பயணமாகிறோம். மூவொரு கடவுளின் குடும்பத்தில் ஈடுபாட்டுடன் செயல்பட, ஆவியின் வல்லமையால் நம் ஒவ்வொருவருக்கும் தரப்பட்டுள்ள பக்தி நிலையே நமக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது. இந்த ஆற்றல் தான் நம்மை அன்பு வாழ்வுக்கும், அமைதியை நிலை நாட்டுவோர் நிலைக்கும் நம்மை வழிநடத்துகிறது. பல்வேறு உறுப்பினர்கள் குழுக்களுக்கு உயிர்த்துடிப்பையும். வாழ்வையும் தருவதற்கு பெருந்துணை புரிந்திருக்கிறார்கள். ஒருவரையொருவர் அன்பு செய்யவும், அமைதியை நிலைநாட்டுபவர்களாக வாழவும், உயிரூட்டமான வழிகளைக் கையாண்டுள்ளார்கள் எனத் துணிவுடன் கூற முடியும்.

எவ்வளவுதான் சுருக்கமாக இருந்தாலும், உனது குழுவாழ்வு அனுபவம், இறைஉறவில் உன்னை உறுதிப்படுத்தி, உன்னையும், உன் குடும்பத்தையும், பணித்தளத்தில் உள்ள உறுப்பினர்களையும் மற்ற சபை உறுப்பினர்களையும் அன்பு செய்து உறவிலே வாழ உனக்குத் துணை புரிந்துள்ளதா?

**4:3 அடிப்படை மதிப்பீடு : நேர்மறை எண்ணம் :**

நேர்மையான உள்ளத்தோட கடவுளைத் தேடுகின்ற ஒவ்வொருடைய வாழ்விலும் இது முக்கியமான கருத்து இந்தக் கருத்தைப் பற்றி முழுப்புத்தகமாகக் கூட எழுதலாம் இருந்தாலும் நம் சிந்தனைக்கு ஒரு சில கருத்துக்களை மட்டும் இங்கே பகிர்ந்து கொள்வோம். நாம் அனைவரும் நேர்மறை எண்ணங்களால் மூடப்பட்டுள்ளோம். இத்தகைய பண்புகளை நாம் நமக்குள் தேடி நம் உள்ளத்தின் ஆழத்திற்குச் செல்லுமாறு இறைத்திருவுளம் நம்மைப் பணிக்கின்றது. ஏனென்றால் இத்தகைய பண்புகளைத் தேடி அவற்றைக் கருவியாகப் பயன்படுத்துவதின் மூலம் தான் நாம் நமது அன்றாட வாழ்வில் அமைதிப் பணியைச் செவ்வனே செய்யமுடியும்.

**விளக்கம்:**

நேர்மறை எண்ணத்தை அவ்வளவு எளிதாக விளக்கி விட முடியாது. இருந்தாலும் இங்கே ஒரு சில விளக்கங்கள் உங்களுக்குத் தரப்படுகின்றன. இவற்றை உங்கள் ஓய்வு நேரங்களில் சிந்தித்துச் சீர்தூக்கிப் பாருங்கள்.

நேர்மறை எண்ணம் என்பது ஒருவருடைய உள்ளார்ந்த இயல்பின் வெளிப்பாடு. கடவுள் நமக்குக் கொடுத்துள்ள கொடைகளைப் பயன்படுத்துவதின் மூலம் நாம் பயனுள்ள மனிதர்களாக மாறுகிறோம். நேர்மறை எண்ணம் என்பது ஒருவருடைய மனதிலும் உள்ளத்திலும் உள்ள மனநிலையாகும். இதுவான் ஒருவர் தன்னிடமுள்ள மற்றும் பிறரிடமுள்ள, மற்றும் நிகழ்வுகளில் உள்ள நன்மைத் தனத்தை உறுதிப்படுத்துகின்றது. இந்த உள்ளுணர்வுதான் ஒருவருடைய தோற்றம், பண்புகள், முன்சார்பு எண்ணங்கள் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக இருக்கின்றது.

இந்த உள்ளுணர்வுதான் ஒருவருடைய அடிப்படை மதிப்பீடுகளைக் கண்டு கொள்வதற்கும், புதிய சூழலை உருவாக்குவதற்கும், பிறரில் மீது உள்ள நல்ல, உண்மையான அழகான பண்புகளை உருவாக்கவும் காரணமாக இருக்கின்றது.

இந்த உள்ளுணர்வுதான் பிறரிடம் உள்ள எதிர்மறையான பண்புகளை ஒப்பிட்டுப் பாத்து அதன்படி தீர்ப்பிடாமல் அவரிடமுள்ள நல்ல பண்புகளைக் கண்டு கொள்ள வேண்டிய ஆற்றலை ஒருவருக்குத் தருகின்றது. நேர்மறை நோக்கு என்பது ஒரு பள்ளியாகும். இதில் தான் ஒருவர் சூழல்களை அப்படியே நோக்கக் கற்றுக் கொள்கிறார். அதாவது இயற்கையில், மக்களில் மற்றும் பிறர் மீது நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளும் பண்பு நலன்களை வளர்த்துக் கொள்தல், ஒருவருடைய ஆளுஜமயை வளர்த்துக் கொள்தல், சலனமற்ற அமைதியான சூழலில் தங்களையே கொடையாகக் கொடுத்தல் ஆகிய பண்பு நலன்களில் வளர்கின்றார்கள்.

நேர்மறை எண்ணம் என்பது அமைதியின் கூறுகளையும் உள்ளடக்கிக் கொண்டதாகும். ஏனென்றால் கடவுளின் பிரசன்னத்தில் அமைதியைக் கண்டுகொள்ள முடியும். தன்னையே மறந்து பிறர் நலப் பணிகளில் ஈடுபடுபவர்களும் அமைதியைக் கண்டு கொள்வார்கள்.

**நேர்மறை எண்ணங்களை எப்படி வளர்த்துக் கொள்வது:**

பலவழிமுறைகள் உள்ளன. ஒருவருடைய புறத்தோற்றத்தை வைத்து மதிப்பிடுதல், குணநலன்களைக் கொண்டு தீர்ப்பிடல், தவறாகத் தீர்ப்பிடல் இன்னும் இத்தகைய செயல்களைத் தவிர்க்க வேண்டும். நம்முடைய முதல் பார்வை இயல்பாகவே தீர்ப்பிடுதல், குறை கூறுதல் போன்ற மனநிலைகளை உருவாக்கிக் கொள்கிறோம். ஆனால் இவற்றையெல்லாம் கடந்து அர்ச்சிக்கப்பட்ட ஒருவரிடத்தல் உள்ள நல்ல பண்பு நலன்களைக் கண்டு அவர் மேல் ஒரு நல்லெண்ணத்தை உருவாக்க வேண்டும். இவ்வாறு பிறரில் கடவுளைக் காண்பவர்தான், உயர்ந்தவர் பெருமைக்கு உரியவர் எனப் பாராட்டப்படுவார்.

நான் உண்மையிலேயே பிறரில் கடவுளைக் காண வேண்டுமென்றால் என்னுடைய பிரச்சனைகளையும், கவலைகளையும் பிறர் மேல் திணிக்கக்கூடாது. என்னை எரிச்சல் மூட்டக்கூடியவை, நான் விரும்பாத செயல்கள், பிறருடைய குறைகளைப் பெரிது படுத்துதல் ஆகிய செயல்களை நான் பெருமுயற்சி எடுத்துத்தவிர்க்க வேண்டும்.

நேர்மறை எண்ணத்திற்குத் தேவையானது என்னவென்றால் நாம் நம்மை மறந்து பிறருடைய மனநிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் மீது நாம் கொண்டுள்ள விருப்பு வெறுப்புக்களைக் கடந்து, நிபந்தனையற்ற முறையில் அவர்களை அன்ப செய்ய முன்வர வேண்டும். நேர்மறை எண்ணம் பெரும்பாலும் எதில் வெளிப்படும் என்றால், ஒருவருடைய மனநிலைகளை அன்போடு ஏற்றுக் கொள்வதும், ஒருவருடைய பலவீனத்தால் வெளிக்காட்டப்படும் குறைகளைப் பெரிதுபடுத்தாமல் அவர்களை முழு உள்ளத்தோடு ஏற்றுக் கொள்ளுதல்.

முடிவுகள் நமக்கு ஒத:துவராதபோது நாம் அவற்றை எத்தகைய மனநிலையில் ஏற்றுக் கொள்கிறோம். சூழ்நிலைகளுக்கு ஏற்ப நாம் நம்மையே மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கிறோமோ? நம்மை மறந்து பிறர் பணியில் ஈடுபடுவதில் நமது நிலை என்ன? ஒவ்வொருவரும் தங்கள் தனித்தன்மையை வளர்த்துக் கொள்ள உரிமையில்லையா. நாம் எவ்வாறு நமது சார்பு நிலையை எவ்வாறு வெளிப்படுத்துகின்றோம். பிறரை அன்பு செய்ய நாம் கையாளும் முறைகள் என்ன? பிற அன்புக்கு நாம் தரும் முக்கியத்துவம் என்ன? பிறநலப் பணிகள் எவையெவை? ஏழுமுறையன்று ஏழு, எழுவது முறை என்க கூறிய நம் ஆண்டவர் இயேசு கூறிய வார்த்தைகளின் பொருளை உணர்ந்து செயல்படுகிறோமா?

நேர்மை, நம்பிக்கை, துணிச்சல், உண்மைத் தன்மை, நிலைத்திருத்தல் போன்ற நல்ல பண்களை நாம் பிறரில் கண்டால், உண்மையான அன்போடு அவற்றை அங்கீகரிக்க வேண்டும். அங்கீகரிப்பதோடு மட்டுமல்ல மாறாக இவற்றைப் பிறருக்கும்

தெரிவிக்க நமக்குக் கடமையுண்டு. கூறை மீது நின்று அறிவிக்க நான் தயாரா? இத்தகைய பண்புகளை வளர்த்துக் கொள்ளும் போது நான் உயர்வடைகிறெனேயொழியத் தாழ்வடைவதில்லை. பிறருடைய நல்ல பண்புகளைக் கண்டு பாராட்டுவதுதான் நட்பின் உயர்ந்த இலக்கணமாகும் நட்புக்கு எதிரான அனைத்தையும் நம்மில் அகற்றுகின்றது. இத்தகைய உயர்ந்த நிலைதான் பிறர் மீது நாம் கொண்டுள்ள நேர்மறை எண்ணங்களை வளர்த்து நட்பையும் வளர்க்கின்றது.

இத்தகைய நெர்மறை எண்ணங்களை நாம் நமக:குள் வளர்த்துக் கொள்ள முடியவில்லையென்றால், அன்பு நம்மைவிட்டு விலகுகிறது. குறுகிய நலன்களுக்காக நாம் சுயநலவாதியாகின்றோம். நேர்மறை எண்ணங்கள் நம்மில் வளரமுடியாமல் அழிந்து விடுகிறது.

**நேர்மறைப் பண்புகளை எவ்வாறு தன்வயப்படுத்துவது**

- மகிழ்ச்சியைக் கூறுபடுத்திப் பார்த்தால் அதன் கூறுகளைக் கண்டு நாம் வியப்படைவோம்.
- அமைதியை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஆற்றல், நம் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் புதைந்து கிடப்பதைக் காண்கின்றோம்.
- நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் நமது தலைவிதிக்கு ஆற்றல் உண்டு என்பதை வார்த்தைகளில் கூறுகிறோம். ஆனால் அது பிறராலோ அல்லது நிகழ்வுகளாலோ நம்மை வழிநடத்த வேண்டும் என்பதற்காகக் காத்திருக்கக் கூடாது.
- முணுமுணுத்தல், குறை கூறுதல். பொறுமையிழத்தல் அல்லது வெறுப்போடு பிறரை நடத்துதல் போன்றவற்றிலிருந்து விடுபட்டு, பிறரை அன்பு செய்வதற்கு வேண்டிய அற்றலை நமக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் துன்புறுத்தப்படுகிறோம், அன்புசெய்யப்படவில்ல, கொடுமைப்படுத்தப்படுகின்றோம் என்று நமக்குள் தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளாமல் இவையனைத்திலிருந்தும் விடுபட வேண்டும்.
- நாம் ஒவ்வொருவரும் சுய ஆத்ம சோனை செய்து நமக்குள் இருக்கும் கடவுளின் கொடைகள், பண்பு நலன்கள், திறமைகள், நல்லெண்ணங்கள், ஆற்றல்கள்இவற்றைப் பெருக்கி, அமைதியை ஏற்படுத்தும் வேராகவும், அமைதியை விதைப்பவராகவும் செயல்பட முழு முயற்சியுடன் ஈடுபட வேண்டும்.
- ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு இயேசு எவ்வாறு ஐயாயிரம் பேருக்குப் பகிர்ந்து கொடுத்தாரோ அதே போல நமக்குள் இருக்கும் அற்றல்களையும், திறமைகளையும், இறைவனின் ஆவியின் வில்லமையோடு

பயன்படுத்தி, நம்மால் மகத்தான பணிகளை ஆற்ற முடியும் என்பதை உணர முடியும்.

- மனித அகந்தையின் மறு பெயர் பிறர் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத தன்மை. இக்கொடிய நோயை நம்மிடமிருந்து நீக்க வேண்டுமென்றால் நேர்மறை எண்ணத்தை நமக்குள் வளர்த்துக் கொள்வதன் வழியாகத் தான் முடியும் என்பதை கண்டுணர வேண்டும். இயல்பாகவே நாம் ஆணவமுள்ளவர்களாகப் படைக்கப்படவில்லை, மாறாக பல சமயங்களில் நம் எண்ணங்கள் கடவுளின் வழியிலிருந்து பிறழ்ந்து செல்லும் போது நாம் தற்பெருமைக்கு ஆளாகி விடுகிறோம். நம் வாழ்க்கையில் சந்திக்கின்ற சில குறுக்கீடுகளைக் கண்டு மனமிழந்து முறையிடுவதும், பொறுமை இழந்து செயல்படுவதையும் நாம் தவிர்க்க வேண்டும்.
- நம்மிடமுள்ள சிறு சிறு குறைகளையெல்லாம் கடந்து, நம்மிடமுள்ள ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதில் முழுக்கவனம் செலுத்தவேண்டும்.

நமக்கு நண்பர்கள் மிகக் குறைவானவர்களாக இருந்தாலும், அல்லது நமது நட்பு மிகக் குறுகிய காலத்திற்கு மட்டுமே நீடித்தாலும், நம்மிடமுள்ள சிறு சிறு குறைபாடுகள் தான் இவற்றைத் தடுப்பதற்கான முக்கிய காரணங்களாகும். இவற்றிலிருந்து நாம் விடுபட வில்லையென்றால் நமக்குத் தானே துன்பத்தை தேடிக் கொள்வதோடு மட்டுமல்லாமல், நோயையும் வரவழைத்துக் கொள்கிறோம். நாம் துன்பத்தைக் கண்டு கலங்கி நிற்பதற்கு, நம்மிலும், பிறரிலும் உள்ள நேர்மறை எண்ணங்களை கண்டு கொள்ளாததே இதற்கு முக்கியக் காரணமாகும். நேர்மறை எண்ணம் என்பது மனநிலை அதை நாம் அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட, குறைவுபட்ட நிலையில் உள்ள நிகழ்வில் மறைந்து கிடக்கும் அழகானவற்றை, நல்லதை, நாம் தேடிக் கண்டு கொள்ள வேண்டும்.

இறைத் திருவுளச் சபை உறுப்பினர்கள் ஒவ்வொரும், ஐந்து ஆன்மீக நிலைகளில் வெளிப்படுத்தப்படும் அன்பை தங்களுக்குள் வளர்த்துக் கொண்டு தங்களையே புதுப்பித்துக் கொள்ள வேண்டும். உன்னுடைய குழுவில் அர்ப்பண உணர்வோடு வாழ உன்னையே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் பிறரை அன்பு செய்வதற்கு மிகவும் தேவையான அடிப்படைக் கருவியாக அமைந்துள்ளது இத்தகைய பயிற்சிகளில் நம்மை வளர்த்துக் கொண்டால் அனைத்தும் நமக்கு வழங்கப்படும்.

நமது அழைத்தல் நேர்மறை எண்ணத்தில் நாம் புலமையடைவதற்கும், பிறரன்பில் சிறப்படைவதற்கும், எளிமையில் மேலோங்குவதற்கும், பிறரை அன்புடன் வரவேற்பதற்கும், சாட்சிய வாழ்வு வாழ்வதற்கும் நமக்குக் கற்றத் தருகிறது.

நேர்மறை எண்ணத்திற்கும், தாழ்ச்சிக்கும் உள்ள பொருத்தத்தைக் கண்டுகொள்கிறாயா? நேர்மறை எண்ணத்திற்கும் சிறப்பு நிலைக்கும், நேர்மறை எண்ணத்திற்கும் மகிழ்ச்சிக்கும் இடையேயுள்ள தொடர்பபைக் கண்டு கொள்கிறாயா? விளக்கம் தருக.

**4:4: நான்காவது அடிப்படை மதிப்பீடு தற்போதைய நிலை:**

நம் ஆன்மீக வாழ்வுக்குத் தற்போதைய சூழல் மிக முக்கியமானது சான்றாகச் சுவாதிப்பதற்குக் காற்று, குடிப்பதற்குக் தண்ணீர், சாப்பிடுவதற்கு உணவு, வழிநடத்த ஒளி, தூங்குவதற்கு இரவு ஆகிய அனைத்தும் நம் ஆன்மீக வாழ்வுக்குத் துணைபுரிகிறது. ஒவ்வொருவருடைய வாழ்விலும் தற்போதைய சூழல் அடிப்படை மதிப்பாக இருக்கிறது. இந்த மதிப்பு நீ கடவுளுக்கு எவ்வாறு முக்கியமானவன் என்பதை உனக்கு உணர்த்துவதை நீ உண்மையிலேயே நம்புகிறாயா?

**கடவுளோடும், உன்னோடும் தொடர்புடைய தற்போதைய சூழலைப்பற்றி இங்கு காண்போம்:**

**கடவுளோடு தொடர்புடையது:**

கடவுள் எப்போதும் பிரசன்னமாக இருப்பவர். கடவுளின் பிரசன்னத்தில் நேற்று, இன்று, நாளை ஆகிய அனைத்தும் பரந்து விரிந்து காணப்படும். கடவுள் தனது ஒரே பார்வையில், தனது மறுதவிப்புக்காகக் கண்ணீர் சிந்திய தூய பேதுருவைக் காண்கிறார், ஆர்வத்தோடு மறைப்பணி ஆற்ற கீழை மத்திய நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்ற தூய பவுலைக் காண்கிறார், உன்னையும் இங்கே, இப்பொழுது பார்த்துக் கொண்டேயிருக்கிறார்.

**அவருடைய பார்வையில் எதுவும் தப்பமுடியாது:**

கடவுள் உன்னுடைய எண்ணங்களை, விருப்பங்களை, உனது உள் மனது போராட்டங்களைக் காண்கிறார். உனது வாழ்வின் கடந்த கால, நிகழ்கால, எதிர்காலச் செயல்களையும் காண்கின்றார். அவருக்கு எல்லாம் தெரியும் அவருடைய பார்வையிலிருந்து எதுவும் தப்ப முடியாது.

முப்பொழுதும் பிரசன்னமாக இருக்கிற கடவுள் உன்னை இப்பொழுது பார்த்துக் கொண்டே இருக்கிறார். இந்த உண்மை உன்னுடைய அறிவுக்கு அப்பாற்பட்டது. ஆனால் உனது விசுவாச ஒளியில் இதை நம்பித் தான் ஆக வேண்டும். அவர் உன்னை நோக்குகிறார்.

அவர் உன்னை உற்று நோக்குகிறார். அவரது அறிவீலும் அன்பிலும் நீ வெளிப்படுத்தப்படுகின்றாய். அவர் உன் அருகில் உள்ளார். உன்னைப் பாதுகாத்து வழிநடத்துகிறார். அவர் உனக்குள் இருக்கிறார். உன் அருகில் இருக்கிறார். உன் வாழ்வையும், நிலையையும் நீ அறிந்திருப்பதற்கு மேலாக அவர் உன்னை அறிந்திருக்கிறார்.

உன்னைப் படைத்தவர் கடவுளே. உன்னை இந்த நிலைக்குக் கொணடு வந்தவரும், உன் வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் உன்னை உருவாக்கி வழிநடத்துபவரும் அவரே. அவரது அன்பினால் உன்னைத் தொடர்ந்து காத்து வருகிறார். அவர் உன்னைக் காத்து வழிநடத்துவதிலிருந்து ஒரு நிமிடம் விலகி நின்றால், நீ ஒன்றுமில்லாமல் மறைந்து போவாய். அவரது அறிவும் அனுமதியின்றி, உனக்கு எந்தக் கேடும் வராது. உன் ஒவ்வொரு செயலும், அவரது கண்களுக்குத் தெரியும். உன் ஒவ்வொரு வார்த்தையும் அவர் கேட்கிறார். அவரது அனுமதியின்றி உன் உடலில் ஒரு அசைவும் அசையாது. அவரது அருள் இன்றி உன்னால் எதுவும் செய்ய முடியாது. உன் ஆற்றல், வல்லமை அனைத்தும் அவரிடமிருந்தே வருகின்றன. அவர் உன் இதயத்தின் துடிப்பையும், மூச்சின் அசைவையும் அவர் கட்டுப்படுத்துகின்றார்.

**இறைச்சித்தம்**:

இன்னைறய சூழலில் கடவுள் உன்னைச் சந்திப்பதையே இறைச்சித்தம் என அழைக்கிறார். கடவுள் குனிந்து உன் காதில், தன் சொல்லைக் கூறுகின்றார். கடவுள் உன்னைப் பாதுகாத்து வழி நடத்துகின்றார். உன் கேள்விக்குரிய பதில் அவரிடம் உள்ளது. அவர் உன்னுடைய பிரச்சனைக்கு உடனடி தீர்வு காண்கின்றார். உனதுஅன்றாட தேவைகளை நிறைவு செய்கிறார்.உனக்கு வலுவூட்டி உன்னை வழிநடத்துகிறார். அவர் உன் வாழ்வின் நிகழ்வுகளை ஆட்சி செலுத்துகிறார். உன் முடிவே அவர் கையில் உள்ளது. அவர்மீது நம்பிக்கை வைக்க உன்னை அழைக்கிறார். உன்னுடைய விருப்பம், ஏக்கம் அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்துவிடு. கடந்தவற்றைப் பற்றியோ அல்லது எதிர்கலத்தைப் பற்றியோ கவலைப்படாதே. இறைச்சித்தம் என்பது ஒவ்வொரு நாளின் நன்மைத்தனத்தைக் கடவுள் உனக்கு வெளிப்படுத்துகிறார். இறைப் பராமரிப்புக்கு கடந்த காலம், எதிர் காலம் என்று ஒன்று இல்லை. அனைத்தும் நிகழ் காலமே ஆகும். உனது சுதந்திரத்தை மதித்துக் கடவுள் உனக்கு எப்போதும் சேவை செய்கிறார்.

உனது அன்றாடத் தேவைகளுக்கு கடவுளின் பதிலிலே இறைபராமரிப்பு ஆகும். நீ எந்த நேரத்தில் விழித்தாலும் அவர் தனது திருமுகத்தைக் காட்டி உனக்கு ஆசி வழங்குகிறார். அவரது அன்புப் பார்வை உன் இதயத்தின் ஆழத்தில் நுழைந்து தீயவைகளில் இருந்து உன்னைக் குணப்படுத்தி உன்னைப் பலப்படுத்துகின்றார். அவர் தனது தந்தையைப் பற்றிப் பேசும்போது மிகுந்த விளக்கமாகப் பேசுகிறார். மனுக்குல முன்னேற்றத்திற்காக அவர் தந்தை ஆற்றல் பணியை மிக விளக்கமாக வெளிப்படுத்துகின்றார்.

நீ அருள்வாக்கை வாசிக்கும்போது கடவுள் உன்னோடு உரையாடுகின்றார். அவர் உன்னோடு உரையாடுகையில் உனது சந்தேகங்களையும், பயங்களையும், கவலைகளையும் உன்னிடமிருந்து போக்குகின்றார். ஏன்ன உண்ண வேண்டும் என்பதைப் பற்றியோ, உன் உடலைப் பற்றியோ, உன் வாழ்வைப் பற்றியோ நீ

கவலைப்பட வேண்டாம். உணவைவிட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவை அல்லவா? இயேசு இனிமையானவர். இதை வலியுறுத்த பல்வேறு அடையாளங்களையும், உவமானங்களையும் பயன்படுத்துகறார். காட்டு மலர்களையும், வானத்துப் பறவைகளையும்விட நாம் உயர்ந்தவர்கள் என்பதை வலியுறுத்திக் கூறுகிறார்.

கடவுளால் படைக்கப்பட்ட இந்த சாதாரண படைப்புகளையே கடவுள் இந்த அளவுக்குப் பராமரிக்கிறார் என்றால், இதைவிடப் பன்மடங்கு மேலாக உன் இதயத்திற்கு வலுவூட்டும் வார்த்தைகளைக் கூறுகின்றார். எனவே, உன் கவலைகளையும், ஏக்கங்களையும் தூக்கியெறிந்துவிட்டு மேலான காரியங்களான இறையரசைப் பற்றியும், நீதியைப்பற்றியும் மட்டுமே கவனம் செலுத்து என இயேசு அன்போடும், கனிவோடும் உனக்கு வலியுறுத்துகிறார். கடவுளுக்குப் பணிபுரிவதில் மட்டுமே உன் வல்லமையையும், ஆற்றலையும் செலவிட வேண்டுமென அவர் விரும்புகிறார்.

**உன் தேவைகளை அவர் அறிவார்:**

கடவுள் உன் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவு செய்கிறார். அவர் உன்னைக் கவனித்துக் கொள்வதுபோல நீயும் அவரைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்று உனகது ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்கிறார். இதை நீ ஏற்றுக் கொண்டால் நீ உன் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியோடு இருப்பாய் எனக் கூறுகிறார். எனவே, நாளை தினத்தைப் பற்றி நீ கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. நாளைய தினம் தன்னையே கவனித்துக் கொள்ளும். அன்றைய தினமே உனக்குப் போதுமானது.

இயேசு உன்னைத் திடப்படுத்தப் பார்க்கிறார். அவருடைய திட்டத்தை நீ ஏற்றுக் கொணடால், உன்னுடைய மீட்பு உனக்கு உறுதியூட்ட அவர் உன்னைத் தன்னோடு இணைத்துக் கொள்வார். எனவே, இயேசு மீண்டும் தனது அழைப்போடு உன்னைத் தேடி வருகிறார். அன்று செல்வந்த இளைஞனின் மீது இயேசு தன் கண்களைப் பதிய வைத்ததுபோல இன்று இயேசு உன்மீது தம் கண்களைத் திருப்புகின்றார்.

உன் வாழ்க்கையைக் குழப்பமானதாக மாற்றிக் கொள்வதற்கு வேண்டிய நிலைப்பாடு உன்னிடம் உள்ளது. நீ உரக்கச் சிந்திப்பதற்கும், உனது எதிர்ப்புக்களையும், ஏமாற்றங்களையும் உரத்த குரலில் சொல்வதற்கு வேண்டிய இயல்பான நிலை உன்னிடம் உள்ளது. குறை கூறுவது எளிதானது. பிறரைத் தவறாகத் தீர்ப்பிடுவதும், தண்டிப்பதும் உன்னுடைய எண்ண ஓட்டத்திற்கு ஏற்ப பிறரைக் குற்றம் சுமத்துவது மிக எளிதான ஒன்றாக உனக்குத் தோன்றும். எப்போது என்றால், நீ கடவுளின் பிரசன்னத்தில் இருந்து வெகு தொலைவு விலகிச் சென்றிருக்கும்போது தான். எனவே, இயேசு உனக்குச் சாந்தமாக நினைவூட்டுகின்றார். உன் இதயத்தோடு பேசுகிறார். “ஆன்மாவைக் கொல்ல இயலாமல், உடலை மட்டும்

கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள். காசுக்கு இரண்டு சிட்டுக் குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றுள் ஒன்றுகூட உங்கள் தந்தையின் விருப்பமின்றித் தரையில் விழாது. உங்கள் தலைமுடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது. சிட்டுக்குருவிகள் பலவற்றைவிட நீங்கள் மேலானவர்கள். எனவே அஞ்சாதிருங்கள்.'' (மத். 10:28–31)

கடவுளின் அழைப்பை நம்பி அவருக்குத் தங்களையே அர்ப்பணித்த பலருடைய வாழ்க்கையைப் பற்றி விவிலியத்தை வாசிக்கும்போது கண்டு கொள்கிறோம்.

''ஆண்டவர்மேல் உன் கவலையைப் போட்டுவிடு. அவர் உனக்கு ஆதரவளிப்பார்; அவர் நேர்மையாளரை ஒருபோதும் வீழச்சியுற விடமாட்டார்.'' (சங்.55:22)

''உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள். ஏனென்றால் அவர் உங்கள்மேல் கவலை கொண்டுள்ளார்'' (1பேதுரு 5:7)

எதைப்பற்றியும் கவலைப்படவேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய இறைவேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களைத் தெரிவியுங்கள். அப்பொழுது அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளங்களையும் மனத்தையும் பாதுகாக்கும். (பிலிப். 4:6–7)

**உன்னைப் பற்றிய விளக்கம்:**

கடவுளுடைய பார்வையில் நீ யார்? நிச்சயமாக வானத்துப் பறவைகளைவிட, வயல்வெளி மலர்களைவிட நாம் மேலானவர்கள் தான்.

புனித பவுலடியார் தனக்கேயுரிய முறையில் கொரிந்து நகர மக்களை நோக்கி இவ்வாறு கூறுகிறார். ''யாவரும் வாசித்து அறிந்து கொள்ளும் முறையில் எங்கள் இதயத்தில் எழுதப்பட்ட நற்சான்றுக் கடிதம் நீங்களே. எங்கள் பணியின் வாயிலாகக் கிறிஸ்து எழுதிய கடிதம் நீங்களே என்பது வெளிப்படை. அது மையினால் எழுதப்பட்டது அல்ல: மாறாக வாழும் கடவுளின் ஆவியால் எழுதப்பட்டது. கற்பலகையில் அல்ல, மாறாக மனித இதயமாகிய பலகையில் எழுதப்பட்டது.'' (2கொரி 3:2–3)

கடிதத்திலுள்ள ஒருவரியை ஒருநேரத்தில் மட்டுமே படிக்க முடியும். இல்லையென்றால் அது குழப்பமாக மாறிவிடும். உன் வாழ்வே ஒரு கடிதம். அதை அமைதியான சூழலில் வாசிக்கும் போதுதான் உன் வாழ்வின் பொருளை உன்னால் புரிந்து கொள்ள முடியும். உன் வாழ்க்கைக் கடிதத்தை வார்த்தை, வார்த்தையாக, வரிவரியாகப் படிக்க வேண்டும். அப்போதுதான் கடவுளின் அருளால் பின்னிப் பிணைந்துள்ள உன் வாழ்வின் பொருளை முழுமையாகத் தெரிந்து கொள்ள முடியும்.

ஆவசரப்படாதே! பொறுமையாக நிறுத்தி வாசித்துப் பார். உன் வாசிப்புக்கேற்ப உன் வாழ்வைச் சிந்தித்துப்பார். வாழும் தற்போதைய நிலையை உணர்ந்து வாழக் கற்றுக்கொள்.

நிகழ்காலத்தில் உன் வாழ்வை மையப்படுத்தும்போது, பகல் கனவுக்களைத் தவிர்க்கலாம். ஆவியின் வல்லமையை பெற்றுக் கொள்ளலாம். செய்கின்ற வேலையை சிறப்பாகச் செய்யலாம். உன்னிடம் கொடுக்கப்பட்டிருக்கிற நேரத்தை பயனுள்ள விதத்தில் செலவிட உனக்கு வழிகாட்டப்படும். இவ்வாறு நிகழ்கால வாழ்வை நிம்மதியோடு வாழ்ந்தால் தேவையற்ற கவலையைக் களைந்து, பயன்தராத களைப்பைப் போக்கி, கடவுளின்மீது நம்பிக்கை கொண்டு, இறை பராமரிப்போடு உன் செயல்களைச் செய்ய உனக்கு வலிமை கிடைக்கும். இவ்வாறு கடவுள் உனக்காகத் தயாரித்து வைத்துள்ள வாழ்வின் நிறைவான முடிவைப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு படிப்படியாக உன் வாழ்வின் நிறைவை அடைய முடியும். அதுவே மரியாளின் நன்றிப் பாடலைப் போன்று உச்சநிலையை அடையும். உன்னுடைய நிகழ்கால வாழ்வின் நிலைதான், உன்னுடைய எதிர்கால நிலையான வாழ்வின் வெளிப்பாடாக அமையும். இன்று உன்னுடைய மதிப்புத்தான், கடவுளுக்குக் கொடுக்கும் உன் மதிப்பாக இருக்கும். எந்த அளவுக்குக் கடந்த கால வாழ்க்கை நிகழ்வுகளை நினைத்து மனதை இழக்காமலும், எதிர்கால வாழ்வை நினைத்துக் கவலைப்படாமலும் இருக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் நம் வாழ்வும் அமைதியான நிலையில் இருக்க முடியும்.

சோதனை நேரங்களில் இப்போது தாங்கக் கூடியவை வரும் காலங்களிலும் தாங்கக் கூடியதாக இருக்கும். இவ்வாறு நம் துன்பங்களை தீர்த்துப் போகச் செய்வதற்கு இது துணை புரியாதா? உன்னுடைய கடந்த கால, நிகழ்கால, எதிர் காலக் கவலைகள் அனைத்தையும் சேர்த்துச் சிந்தித்தால், இந்தக் கவலைகள் அனைத்தும் உன் வாழ்வை நிலை குலையச் செய்யும்.

**கடந்த கால நிலை:**

நிகழ்காலத்தில் நிகழும் செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், கடந்த கால நிகழ்வுகளை மட்டும் சிந்தித்துக் கொண்டிருப்பதில் ஏன் கவனம் செலுத்த வேண்டும். கடவுள் தனது பராமரிப்பினால் ஒவ்வொரு நொடிப் பொழுதும் உன்னைத் தேடி வருகிறார். இரக்கத்தோடும் கனிவோடும் உன் விருப்பத்திற்கேற்ப உன்னைத் தொடர்ந்து பாதுகாத்து வழிநடத்தி வரும் கடவுளின் செயல்களுக்குக் கவனம் செலுத்தாமல், மஞ்கள் காமாலையால் பாதிக்கப்பட்ட கண்களைப்போல மாறுபட்ட நோக்கத்தோடு ஏன் உலகைக் காண்கிறாய்? இயேசு தனது பாடுகளாலும்,மரணத்தாலும் உன்னை மீட்டு நீ கடவுளைப் போல வாழ வேண்டுமென்று விரும்புகின்ற கடவுளின் விருப்பத்தை புறம் தள்ளிவிட்டு, உன்னையே வெறுத்து, உன் ஆன்மாவை ஏன் வெறுக்கிறாய்? உன்னுடைய நிகழ் கால வாழ்வின் பலன்களை நீ

அறுவடை செய்ய வேண்டுமென்று கடவுள் தன் வல்லமையால் உனக்கு உறுதியையும், ஊக்கத்தையும் தருவதை நீ ஏன் மறந்து போகிறாய்?

எனவே நிகழ்கால வாழ்விலிருந்து உன்னை அப்புறப்படுத்தும் பகல் கனவுகளைத் தவிர்த்துவிடு. பெரும் பேராசைகளால் தங்கள் வாழ்வை இழந்தவர்கள் பலர் உண்டு. அவர்களது இலட்சியமும், நோக்கமும் செயல்முறைக்கு அப்பாற்பட்டது. எனவே உண்மையற்ற, அடைய முடியாத இலட்சியங்களை உண்மையென நினைத்து தங்கள் வாழ்வையே வீணடித்துக் கொள்கிறார்கள்.

**அன்றாட வாழ்வு முறை:**

நட்புடன் கூடிய புன்னகை, ஆறுதலான வார்த்தை, அன்புச் செயல்கள், நல்ல வரவேற்பு, பிறர்மீது கொண்டிருக்கின்ற அக்கறை ஆகிய நல்ல செயல்களை நாம் செய்தால், ஒவ்வொரு மணித்துளியிலும் மகிழ்ச்சியையும், வளமாக எதிர் காலத்தையும் காண முடியும். ஒவ்வொரு மணித்துளியிலும் இவ்வாறு செய்தால் ஒவ்வொரு மணி நேரமும் மகிழ்வாக இருக்கும். ஒவ்வொரு மணியும் மகிழ்வாக இருந்தால், ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியும், நம்பிக்கையும், சுதந்திரமுள்ளதாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

ஒவ்வொரு மணித்துளியையும் சரிவரப் பயன்படுத்த ஆரம்பித்தால் ஒவ்வொரு நாளும் பயனுள்ள நாளாக அமையும். பயனுள்ள நாளாகவும், மகிழ்ச்சி நிறைந்த நாளாகவும் மாற்ற விரும்பினால், கடவுளைப் பற்றி நினை. பிறருடைய நலனில் அக்கறை கொள். மகத்தான பணிகளைச் செய்ய முன் வா. உன் குணநலன்களைப் பண்படுத்து, திறமைகளையும், இயற்கையான கொடைகளையும் பயன்படுத்து, பிறருடைய வாழ்வில் ஏற்றத்தையும், மகிழ்ச்சியையும் தருகின்ற உளமார்ந்த பாராட்டுக்களை பிறருக்குத் தெரிவிக்க வேண்டும்.

கடவுளின் திட்டத்தில், அவரது திருவுளத்தை நிறைவேற்றும் ஒரு கருவி. கடவுளின் திருவுளத்தைப் படித்து உணர்ந்து, ஏற்று நிறைவேற்றும் நபர் மட்டுமல்ல நீ. மாறாக உன்னுடைய சிறப்பான அழைப்பு வரத்தால் கடவுளுடைய எண்ணங்களையும், விருப்பங்களையும் பிறருக்கு வெளிப்படுத்த உன்னைத் தேர்ந்துக் கொண்டுள்ளார். உன் செயல்பாட்டுப் பணியில் நீ பணியாகவே மாறி விடுகிறாய். கடவுள் உன்னில் வாழ்கிறார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை உன்னுள் இத்தகைய உறுதியை ஏற்படுத்துகின்றது. ஏனென்றால் திருமுழுக்கில் நீ பெற்றுக் கொண்ட தூய ஆவியாரின் வல்லமையால் நீ கடவுள் வாழும் ஆலயமாக மாறியிருக்கிறாய். இயேசுவைப் பற்றி தூய யோவான் எழுதியுள்ளதை உணர்ந்தாய் என்றால், இயேசு தன் தந்தையோடு கொண்ட உறவின் வழியாக இயேசுவும் நம்மை தந்தையின் உறவோடு இணைக்கின்றார். இவ்வாறு தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூவொரு கடவுளுடைய உறவிலே நாம் இணைக்கப்படுகின்றோம்.

எனவே கலங்காதே! இந்த மணித்துளி என்ற குறுகிய வாயில் வழியாகக் கடவுளோடு மிக நெருங்கிய உறவில் ஒன்றிணைக்கப்படுகின்றோம். ஒரு மனிதனிடம்

தீர்க்கமான முடிவு எடுக்கின்ற இடம் அவனது உள்ளமாகும். மனிதனின் மையமாக இருக்கின்ற இதயம் தான் முக்கியத்தும் பெறுகின்றது. ஏனென்றால் இங்குதான் ஒவ்வொரு கிறிஸ்தவனின் ஒளியாக இருக்கின்ற கடவுளின் வார்த்தை தெளிவு பெறுகிறது.

ஆன்றாட வாழ்வு பணிவுள்ளவனாகவும், மனதிதத்தன்மை உடையவனாகவும், புரிந்து கொள்ளும் திறன் படைத்தவனாகவும், நம்பிக்கை உடையவனாகவும், சுதந்திரமாகச் செயல்படக் கூடியவனாகவும், உன்னிலும், பிறரிலும் நம்பிக்கைக் கொண்டு வாழக் கூடியவனாகவும் மாற்றுகிறது.

ஓவ்வொரு மணித்துளியிலும் நீ கடவுளின் அருள் துணையைப் பெற்று, உன் உறுதிப்பாட்டை பகுத்துணர்ந்து இயேசு தன் தந்தையின் திருவுளத்தை முழுமனதுடன் நிறைவேற்றியதைப் போல நீயும் உன் முழுக்கவனத்தைச் செலுத்துவாய்.

ஒரு நாளில் 24 மணி நேரங்களில் நீ சந்திக்கினற அனைவரையும் முழுமனதோடு அன்பு செய்வாய். ஆவ்வேளையில் நீ நன்கு சிந்தித்துப் பார்த்தால், இயேசு தன் சீடனான தூய பவுலடியார் தனது குறைபாடுகளை நினைத்துப் புலம்பிய போது அவரிடம் கூறியது போல ''என் அருள் உனக்குப் போதும், வலுவின்மையில்தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்'' (2கொரி 12:9) உன்னிடமும் கூறுவார். உனது பலவீனத்தில் மனதைச் செலுத்துவதைவிட கடவுளிடம் உன் மனதைச் செலுத்து. அவரது வல்லமையை வேண்டி மன்றாடு. உன் குறைபாடுகளை அவரிடம் ஒப்படைத்து விடு.

ஓவ்வொரு நாளும் கடவுள் உன்னோடு வாழ்கிறார் என்பதை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவில் வாழும் கடவுள் உன்னைக் கவர்ந்து இழுத்து உனக்கு தன் தூய ஆவியை முழுமையாகத் தருகின்றார்.

**24 மணி நேரமும் (24/7)**

இனறைய சூழல்களில் கடவுளை நாம் எப்போதும் கண்டடையலாம். கடவுள் உனக்குள் இருக்கிறார். உன் செயல்பாடுகளுக்குள் இருக்கிறார். கடவுள், உன்னில், உன் செயல்பாடுகளில், உனது மனநிலைகளில் எப்போதும் பிரசன்னமாக இருக்கிறார்.

இன்றைய சூழல் நீ கடவுளின் பிரசன்னத்தில் அல்லது அவர் வழிகாட்டுதலில் வாழ்வதையும், உன் அருகில் இருப்பவர்களோடு, நீ இணைந்து வாழ வேண்டும் என்பதையும் உன் மனதில் பதிய வைத்துக் கொள். இன்றைய சூழலில் உன் வாழ்வைப் பயனுள்ள விதத்தில் வாழ நீ விருப்பம் கொண்டால்,ஒரு நாளில் உள்ள 24 மணி நேரமும் ஆக்கப்பூர்வமான செயல்பாட்டின்மூலம் முதிர்ச்சியடைய விரும்பினால், நீ உன் ஆளுமைத் தன்மையின் ஆழத்தையும், கண்டு பராமரிக்கப்பட்ட பழத் தோட்டத்திலுள்ள பழ மரங்களில் உள்ள பழங்கள் கனிந்து, சுவையும், மணமும் தருவதுபோல, கடவுளின் அருள் ஒளியில் உனது பண்பு நலன்களும் வளர்ந்து பலருக்கும் பலன் தரக்கூடியதாக மாற்றம் பெறும்.

உனது சுய முன்னேற்றத்திற்கு இன்றைய சூழல் உனக்கு பலன் அளிப்பதாக இருக்கிறது. நேற்று என்பது உடைந்த பானை. நாளை என்பது மதில்மேல் பூனை. இன்று என்பதுதான் மரகத வீணை. இந்த மரகத வீணையைப் பயன்படுத்தி நல்லதொரு இசையை உருவாக்கக் கூடிய ஆற்றல் நம் ஒவ்வொருவர் கையிலும் உள்ளது என்பதை மறந்து விடாதே! உன் வழியாகப் பிறருக்குச் செய்யக்கூடிய செயல்களை நினைத்துப் பார்த்திருக்கிறாயா? உன்னருகில் வருபவரிடம் நீ காட்டும் புன்முறுவல், கை குலுக்குதல், தோளில் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துதல் போன்றவற்றைச் சிந்தித்துப் பார்த்திருக்கிறாயா? இந்தச் சிறு செயல்கள் பிறரில் ஏற்படுத்திய மகத்தான மாற்றத்ததைக் கண்டுணர்ந்திருக்கிறாயா? இதைக்கூட செய்ய வேண்டாம் என்று உன்னைத் தடுப்பது யார்? எனவே, நீ அன்றாடம் செய்கின்ற சிறு சிறு செயலகளில் கவனம் எடுத்துக் கொள்.

உனக்குள் இருக்கும் மகிழ்ச்சியை நீ கண்டுணரும்போது அதுவே உனது ஆற்றல் சக்தியாக மாறுகிறது. இதன்மூலம் அன்பு, அமைதி, பரிவு, நன்மைத் தனம், பொறுமை, நம்பகத் தன்மை, சுய கட்டுப்பாடு போன்ற கனிகளை உன்னால் தரமுடியும். இதைத்தான் திருத்தூதர் பவுலடியார் கலாத்தியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகின்றார். ‘‘தூய ஆவயின் கனியோ, அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை’’ (கலாத்.5:22) எனவே மகிழ்ச்சி இயேசுவின் முகமாக மாறி, நொறுங்குண்ட நெஞ்சங்களையும், சோர்ந்து போன நம் உடல்களையும் தளர்வுகளில் இருந்து விடுவித்து, எவருமே தர முடியாத ஆற்றல் மிக்க சக்தியை நமக்குத் தருகின்றது. எனவே, இத்தகைய ஆற்றல் மிக்க மகிழ்ச்சியை, பெட்டிக்குள் பூட்டி அடைத்து வைக்க முடியாது. நான்கு சுவர்களுக்குள்ளும் நிறுத்தி வைக்க முடியாது. மாறாக தென்றல் காற்றைப் போல பிறரின் சுவாசப் பைகளுக்குள்ளும் சென்று பிறருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

எப்போதும் மகிழ்ச்சியாய் இரு. இதுதான் இயேசுவின் அரசாட்சிக்கு தரும் விளம்பரம். இது இந்த உலகப் போக்கிற்கு மாறானது.

தற்போதைய நிலை, கடவுளின் பிரசன்னத்தை நமக்குக் கொண்டுவரும் தருணம் என்பதை மனதில் இறுத்திக் கொள். இதன் விளைவு என்னவென்றால் உனக்கு அமைதியையும், ஆறுதலையும் தந்து உன்னையே வெல்வதற்கு உனக்கு உறுதுணையாக இருக்கிறது.

**ஓவ்வொரு பிரச்சனைக்கும்:**

எல்லா இடங்களிலும் நீ ஒரே நேரத்தில் இருக்க வேண்டுமென்று கடவுள் உன்னிடம் எதிர்பார்ப்பதில்லை. மாறாக, அனைவரையும் நீ உன் நினைவில் கொண்டிருக்க வேண்டும் என்றே விரும்புகின்றார். நம்மைத் தக்க காரணமின்றி எதிர்ப்பவரை அன்பு செய்யவும், உன்னைச் சுற்றி நடக்கின்ற செயல்பாடுகளை அறிந்து கொள்ள வேண்டுமென்றே விரும்புகின்றார். ஒவ்வொருவருக்கும் இது தேவை என்பதைக் கடவுள் விரும்புகிறார். வானில் விமானத்தை இயக்குகின்ற விமானி,

குகையில் தியானத்தில் மூழ்கியிருக்கும் துறவி, பரபரப்பாகச் செயல்படும் அரசியல்வாதி, சுறுசுறுப்பாகப் பணியாற்றும் தொழில் நிறுவனத்தார், கடவுளுக்குத் தன்னை அர்ப்பணித்தவர், செபத்தில் ஈடுபட்டுள்ள துறவி, குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும் பெற்றோர் ஆகிய அனைவரும் தங்களுக்குத் தரப்பட்டுள்ள ஒவ்வொரு மணித்துளியையும் பயனுள்ள விதத்தில் செலவிட அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவவொருவரும் தங்களுக்குத் தரப்பட்டிருக்கின்ற 24 மணி நேரத்திற்கு அவரே உரிமையாளர். எனவே குறிப்பிட்ட நோக்கத்தோடு நேரத்தைப் பயன்படுத்த அழைக்கப்படுகிறார்கள். ஆழ்ந்து சிந்தித்தால், கடவுள் இரண்டு காரியங்களை நம்மிடம் எதிர் பார்ப்பதைக் கண்டுணரலாம். ஒன்று நாம் நமது கையில் உள்ள கடிகாரத்தின் நேரத்தைக் கவனிப்பது. மற்றொன்று தேவைப்படுவோருக்கு நம்மால் ஆன உதவியை உடனடியாகச் செய்ய கடவுள் நமக்கு விடுக்கும் அழைப்பைக் கண்டுணர்வது. எனவே, கால நேரமும், தயார் நிலையும் நிகழ்காலச் சூழல்களுக்கு மிக முக்கியவானது. கைக்கடிகாரம் உன் வாழ்வின் இப்போதைய நேரத்தைக் காட்டுகிறது. தயார் நிலை, கடவுள் உனக்குக் கொடுத்த பணியை உடனடியாகச் செயல்படுத்த வேண்டிய கடமையுணர்வு.

நிகழ்காலச் சூழலில் வாழ்ந்தால், நமது பிரச்சனைகளைப் போக்கும் அல்லது நம்மால் நிர்வகிக்கக்கூடிய அளவில் குறைந்துவிடும். துன்ப, துயரங்கள், வேதனைகளைக் குறைத்து விடும். அதற்காகக் கடந்த கால வாழ்வைச் சந்திக்கக் கூடாது என்று பொருளல்ல. ஏனென்றால் கடந்த கால வாழ்வையும், பணிகளையும் சிந்திக்கும்போது கடவுளின் பராமரிப்பையும், இக்கட்டான சூழல்களில் அவரது வழிகாட்டுதல்களையும் கண்டு கொள்கிறோம். எனவே கடந்த கால சிந்தனைகளில் நின்று விடாமல் அவற்றின் துணையோடு நிகழ்கால நேரத்தைச் செலவிட வேண்டும். ஆப்போது தான் எதிர்காலத்தில் நாம் சந்திக்கவிருக்கும் தேவையற்ற கவலைகளையும், ஆதங்கங்களையும் மேற்கொண்டு பயனுள்ள வாழ்வு வாழத் துணை புரியும்.

தன்னனையே இறைவனுக்கு முழுமையாக ஒப்புக்கொடுப்பது ஒரு மாபெரும் மகத்தான கொடையாகும். நம் சபை நிறுவுநரின் கனவோடு இந்த இயலை நிறைவு செய்வோம். தங்களுடைய கவலைகளையெல்லாம் கடவுளிடம் ஒப்புக் கொடுக்கும்போது, அனைத்தும் மறைந்து மகிழ்ச்சியான மனநிலையும், இனம் புரியாத அமைதியும் நம் சபையின் நிறுவுநரின் அனுபவத்தை தெளிவாக விளக்கிக் கூறுவதைக் கண்டுகொள்ளலாம்.

நியூயார்க் மாகாணத்தில் 102 மாடிக்கட்டிடத்தின்மேல் நான் நின்று கொண்டிருக்கின்றேன். கடவுள் மனுவுருவான இயேசுவின் வடிவில் கீழே வீதியில் நின்று கொண்டிருக்கிறார். அவர் என்னைப்பார்த்து கீழே குதியும். உனக்கு ஒன்றும் ஆகாது, உன்னைப் பார்த்துக்கொள்கிறேன் என என்னிடம் கூறுகிறார். பல்வேறு எண்ணங்கள் என்மனதில் அலைபாய்கின்றன. எவ்வாறு மேலே இருந்து குதிப்பது, நான்

என் உயிரை இழந்து விடுவேனே, கீழே இருப்பது ஆண்டவர்தான் என்று எப்படி நம்புவது? வேறு யாராவதாக இருந்தால் என்ன செய்வது? போன்ற எண்ணங்கள் எழுந்தன. ஆனால் கீழே இருப்பவர், நான்மேலே இருந்து பார்ப்பதால் சறிய உருவம் உடையவராக இருக்கிறார் உண்மையிலேயே அவர்தான் கடவுள் என்பதை நான் கண்டுணர்ந்தால் உடனே என்தயக்கம் மறையும், பயமும் என்னைவிட்டுப் பறந்து போகும். உடனே நான் சிந்திக்க ஆரம்பிக்கிறேன். கீழே இருப்பவர் கடவுள் சிந்திக்க ஆரம்பிக்கிறேன். கீழே இருப்பவர் கடவுள் தான் என உணர ஆரம்பித்தால் நான் குதிக்கும் போது கடவுள் என்னைப் பறவையின் இறகைப்போல அல்லது காற்றடைத்தப் பலூன் பறப்பதுபோல மெதுவாக என்னைத் தாங்கிக் கொள்வார் என உணர ஆரம்பிக்கிறேன்.

கடவுள் துணையின்றி நானாக விழுந்தால் பாறையைப் போல கீழே விழுந்து கீழிருக்கும் கட்டிடங்களை உடைத்து விடுவேன்; மேலும் கீழே விழுவதற்குமுன்பே முச்சடைத்து இறந்தாலும் இறந்து விடுவேன். நான் ஒருவேளை பாறையைப் போல கீழே விழுந்தாலும் கீழே இருப்பவர் கடவுள் என்றால் நான் எதற்கும் பயப்பட வேண்டியதில்லலை. ஏனென்றால் கடவுள் என்னத்தாங்கிக் கொள்வார். என்னைனக் காப்பாற்ற அவருக்குப் பலவழிகள் உண்டு. இந்தப்பூமியின் தன்மைகளுக்கெல்லாம் அதியதியல்லவா நம் கடவுள். புவியீர்ப்பு விசையின்றி காற்றில் மிதக்கும் ஆற்றலையும் படைத்தவரல்லவா நம் கடவுள். எனவே அவரது விருப்பத்திற்கேற்ப நான் கீழே விழுவதை மாற்றக்கூடிய ஆற்றல் படைத்தவர் நம் கடவுள். அவர் விரும்பினால் எனக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல் என்னைப் பார்த்துக் கொள்வார். எனக்குத் தெரிந்ததெல்லாம் கடவுள் எனக்கு விடுதலை தருவார். நான் குதிக்கவேண்டும். நான் குதித்தேன், கீழே இருந்தது உண்மையிலேயே என்கடவுள்.

ஒவ்வொரு இறைத் திருவுளச்சபை உறுப்பினரும் கடவுளின் திட்டத்தில் கரை கண்டவர்களாக இருக்க வேண்டும். கடவுளின் திட்டத்தை வெளிக்கொணரும் வாய்க்கால்களாக இருக்க வேண்டும். ஒரு மறுகிறிஸ்துவாக வாழ சிறப்பான அழைப்பு பெற்றவர்கள். எனவே பிறருடைய முன்னேற்றத்திற்காக உழைக்க முன்வரும்போது கடவுளே நம்மை அழைக்கிறார் என்பதை உணர்ந்து துணிவுடன் அப்பணியில் குதிக்க வேண்டும். ஏனென்றால் நம்மை உந்தித் தள்ளுபவரும்,இறுதியில் நம்மை ஏற்றுக் கொள்பவரும் அவரேதான்.

கடவுளின் திட்டத்தில் உனது நம்பிக்கை எத்தகைய ஆழம் கொண்டது என்பதைச் சிறிது நேரம் ஆன்மசோதனை செய்துபார். உனது அன்றாட வாழ்க்கைப்பயண நிகழ்வுளில் கடவுளின் வழிகாட்டுதலை உணர்ந்திருக்கிறாயா? கடந்தகால கவலைகளையும், எதிர்கால பயத்தையும், எதிர்பார்ப்புக்களையும் உதறித்தள்ளிவிட்டு கடவுளின்மீது நம்பிக்கைகொண்டு உன் நிகழ்கால வாழ்வை பற்றுறுதியுடன் வாழ முடியுமா?

**4.5: ஜந்தாவது அடிப்படை மதிப்பீடு:**

## கிறித்துவத் தொடர்பு:

நாம் கிறித்தவர்களோடும், மற்றவர்களோடும் தொடர்பை வளர்த்துக்கொள்ள முன்வரவேண்டும். இத்தகைய தொடர்புகளை வளர்த்துக்கொள்ள என்னென்ன வழிமுறைகளைக் கையான்டால் பலன் தருமோ அவற்றைக் கற்றுக் கொள்ள முன்வர வேண்டும். இவற்றுள் நான்கு வகையான வழிமுறைகள் அல்லது பண்புகள் இவற்றை அறிந்து அவற்றைத் தங்கள் வாழ்வில் கடைப்பிடிக்க முன்வரவேண்டும்.

**தன்னம்பிக்கை:** பிறரோடு நட்புறவை வளர்த்துக் கொள்ள அடிப்படையாக இருப்பது தன்னம்பிக்கை தங்களையே ஏற்றுக்கொள்ளாமல், கடின இதயத்துடன், மனம் போன போக்கில் வாழ்கிறவர்களை ஏற்றுக் கொள்ளுதல் அல்லது அவர்களோடு நட்புடன் உறவாடுதல் அவ்வளவு எளிதான காரியமல்ல. தாங்கள் நினைப்பதும் செய்வதும் தான் சரி என அடம் பிடிப்பவர்களை மக்கள் இயல்பாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இப்படிப்பட்டவர்களிடம் இரக்கத்தையோ, பரிதாபத்தையோ ஏற்படுத்தலாம். ஆனால்நட்புறவை ஒருபோதும் ஏற்படுத்தமுடியாது. இப்படிப்பட்ட தருணங்களில் நாம்தான் பரிதாபத்துக்குரியவர்களாகக் கருதப்படுகிறோம்.

**திறந்தமனம்:**

பிறருடைய மனஉணர்வுகளைப்புரிந்து கொண்டவர்களால் மட்டுமே, பிறருடைய தேவைகளையும், விருப்பங்களையும் அறிந்துகொள்ளமுடியும். பிறருக்கு அறிவுரைகள் கூறுவதையும், நீண்ட சொற்பொழிவு ஆற்றுவதையும் நிறுத்த முடியும். உங்களுடைய தலையாய நோக்கம் நட்புறவை ஏற்படுத்துவது மட்டுமாகத்தான் இருக்கவேண்டும் சாதகமில்லாத எதிர்மறை எண்ணங்களையும், எதிர்மறை திர்ப்புகளையும் தவிர்க்க வேண்டும். உங்கள் மனதில் தோன்றுகின்ற அனைத்து விதமான எதிர்மறைகளையும் புறம் தள்ளவேண்டும்.

சிற்பி எவ்வாறு ஒரு மரக்கட்டையிலிருந்து இயேசுவின் உருவத்தைச் செதுக்கி எடுக்கிறாரோ அதுபோல நீங்களும் பிறரிடம் கடவுளின் சாயலையும், கடவுளின் பிள்ளைகளுக்குரிய பண்புகளையும் காணவேண்டும். அழகு, நன்மைத்தனம், உண்மை ஆகிய இவைகள் சாதாரண பண்புகள் அல்ல. எனவே இத்தகைய பண்புகளை பிறரிடம் தோண்டிக் கண்டுபிடிக்க வேண்டும். இதற்கு இயேசுவின் கண்களோடு பிறரை உற்றுநோக்கினால் தான் இது சாத்தியமாகும். உன் வாழ்வின் பாதையில் உன்னைக் கடந்து செல்கின்ற ஒவ்வொருவரிடமும் நீ விழிப்பாயிருக்க வேண்டும். இதுதான் உலகியல் முறையில் கடவுளைக் காணும் முறையாகும். ஒவ்வொரு மனிதனின் உள்ளத்தை ஆழ்ந்து ஆய்ந்து அறிந்து கொள்வது அழைக்கப்பட்டநம் ஒவ்வொருவரின் பணியாகும்.

**பிறர் மீது தனிக்கவனம்:**

பிறரைக் கூர்ந்து கவனித்துக் கற்றுக் கொள்ள வேண்டும். மேலோட்டமாக பிறரை மதிப்பிடுவதைவிட, ஆயந்து அறிந்துகொள்ளவேண்டும். இதை அடைய வேண்டுமென்றால் நீ பிறரைக் கவனமாகக் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பிறரோடு பழகும்போது முதல் தொடர்பிலே உன் மனதைச் சிதறவிடாதே, தவறான எண்ணங்களுக்கும் தீர்புக்களுக்கும் அடிமையாகிவிடாமல் திறந்த உள்ளத்தோடு பழக வேண்டும். பிறர் உன்னோடு பேசும்போது செவிகள்தான் கேட்கின்றன. எனவே பிற வேலைகளைச் செய்யலாம் என எண்ணாதே! மாறாக பேசுபவரின் கண்களை உற்றுநோக்கு, அவர் சொல்லவரும் கருத்துக்களுக்குச் செவிமடு,தேவையானபொழுது மட்டும் நேர்மறைகருத்துக்களை குறிப்பிடு. அப்பொழுதுதான் உன்னோடு பேசுபவர் உன்மீது நம்பிக்கை கொண்டு தன்னையே முழுவதுமாகப் பகிர்ந்து கொள்வார். ஒருவர் தான் பகிர்ந்து கொள்வதைக் கவனமுடன் கேட்கும் நபரிடம் எதிர்ப்பு மனநிலை கொண்டவராக இருக்க மாட்டார். நீ உன் கதையைப் பிறருக்குச் சொல்வதைவிட, பிறர் சொல்வதைக் கவனமுடன் கேட்டால், உனக்கு அதிகமான நண்பர்கள் உனக்கு கிடைப்பர்கள்.

**பிறர் மீது உன் கவனத்தைச் செலுத்து:**

நீ தன்னம்பிக்கையோடு இருந்தால், பிறரை உண்பால் ஈர்த்துக் கொள்ளலாம். அவர்கள் மீது தனிகவனம் செலுத்தி அவர்களது மன உணர்வுகளைப் புரிந்து கொண்டால் உடனே அவர்கள் உன்மீது ஈர்ப்பு கொண்டு, தன் உள்ளத்தில் உள்ள அனைத்தையும், நம்பிக்கையோடு உன்னிடம் பகிர்ந்து கொள்வார்கள். நீ இவ்வாறு செய்யும் போது ஒரு கண்ணாடி எவ்வாறு தனக்கு முன் உள்ள பொருட்களைத் தெளிவாக வெளிப்படுத்துகிறதோ அதே போல, உனது கூர்ந்து கவனிக்கும் தன்மையால் பிறர் மனதில் உள்ள அனைத்தையும் உன்னால் அறிந்து கொள்ள முடியும். நீ பிறரைப்பார்த்து புன்முறுவல் பூத்தால் அடுத்தவர் உன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார். நாம் ஒருவரைப்பார்த்துப் பழகுவதற்குமுன், முதல் முதலாகச் செய்யவேண்டிய வேலையாகும்.

ஒருசில எதிர்மறை எண்ணம் கொண்டவர்கள், பிறரை இழிவாக நோக்குவதுண்டு. உன்னிலே நிறைவு இல்லையென்றால் பிறரைவிட்டுச் சற்று ஒதுங்கி இருப்பது நல்லது. இதைத்தான் இயேசு தன் சீடர்களைப் பணிவாழ்வுக்கு இரண்டு, இரண்டுபேராக அனுப்பும்போது அறிவுரையாகக் கூறியது ‘‘நீங்கள் சமாரியாவின் நகர் எதிலும் நுழையவேண்டாம். மாறாக, வழி தவறிப்போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள்.’’ வேறுமுறையில் சொல்ல வேண்டுமென்றால், சீடர்கள் சமாரியர் வாழும் பகுதிகளுக்குள் சென்றால் தேவையற்ற அரசியல் வாதங்களுக்குள் நீங்கள் முடங்கிப்போய் விடுவீர்கள். மாறாகப் பரிசேயர்களிடம் சென்றால் அவர்கள் உங்களை தன்வயப்படுத்திவிடுவார்கள். ஏனென்றால் அவர்கள் சட்டங்களை வைத்து வாதிடுவதில் வல்லவர்கள். எனவே நீங்கள் வலுவுள்ளவர்களாக இருந்தால்தான் உங்களால் பிறரைக்கவர்ந்து இழுக்க முடியும் எனக் குறிப்பிடுகிறார்.

பிறருடைய மனஉணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் உன்னைப் போலவே அவர்களுக்கும் பயங்களும், பாதுகாப்புத் தேவைகளும் இருக்கும்.பிறரை எப்படியாவது மேற்கொள்ளவேண்டும் என நினைத்துக் செயல்படுவது

தவறு. ஏனென்றால் அது நட்புக்குப் பதிலாக வெறுப்பைத்தான் கொடுக்கும். எனவே பிறரோடு ஜனரஞ்சகமாகப் பழகக் கற்றுக் கொள்ளவேண்டும். இதுதான் மன அமுத்தங்களிலிருந்து நமக்கு விமுதலை தரும். மகிழ்வோடு பழகுவதுதான் அனைவருக்கும் பிடிக்கும்.

நமது ஐந்து வகை ஆன்மீகத்தில் மூன்றாவது ஆன்மீகம் இதைக் குறிப்பிடுகின்றது. ஆதாவது இந்தத் தொடர்பனது உன் உள்ளத்தில் இருக்கும் அன்பை பிறருக்கும் பகிர்ந்து கொடுக்க அழைக்கின்றது. இசையோடுகூடிய பாடல் எவ்வாறு நம் இதயத்தை ஈர்க்கிறதோ, அதுபோல நம் உள்ளத்து அன்பு பிறரை ஈர்க்கச் செய்யும்.

‘‘என்னிடம் அன்பு இல்லையேல் நான் ஒன்றுமில்லை’’(1 கொரி:13:2)

அன்பான சொற்கள் நம்பகத் தன்மையை வளர்க்கிறது, மனம்திறந்து பகிர்ந்து கொள்ளத் தூண்டுகிறது, அன்பு செய்யத்தடையாக இருக்கும் பயத்தைப் போக்குகிறது, மாறாக அன்பு செய்ய ஒருவரைத் தூண்டுகிறது. உனக்குள் இருக்கும் கிறிஸ்துவை பிறரோடு கொண்டிருக்கும் அன்பு வழியாக வெளிப்படுத்துகின்றது. இந்தக்கிறிஸ்துவின் அன்பை உனக்குள் புதைத்து வைத்துக் கொள்ளமுடியாது. மாறாக நன்மை அறியாமலே பிறருக்கு வெளிப்படுத்தும் தன்மை கொண்டது. நீயாகக் கொடுக்க முன்வரவில்லையென்றால் பிறர் உன்னிடம் வந்து இதைஎடுத்துக் கொள்வார்கள்.

கிறித்தவத் தொடர்பு இயேசுவை அல்லது அவரது மனநிலையை வெளிப்படுததுகின்றது. எனவே மற்றவர்களைத் தந்தையிடம் இட்டுச்செல்ல இத்தகைய செயல்களை நம்மில் அதிகமாக வளர்த்துக்கொள்ள வேண்டும். இது கடவுளோடு நீங்கள் கொண்டுள்ள உறவின் ஆழத்தை வெளிப்படுத்தும் ஓர் அறிகுறியாகும். இயேசு உனக்குள் இருப்பதை, உன்னில் வாழ்வதை, உன்னில் செயல்படுவதை வெளிப்படுத்தும் அடையாளம் என்பதை உணரவேண்டும். கடவுள் உன் அன்றாடச்செயல்களில் செயல்பட விரும்புகிறார் என்பதைக் கண்டுகொள்ளவேண்டும்.

கிறித்துவத் தொடர்பு என்பது ஒரு கருவியாகும் இதன் வழியாக இயேசு யாரைக் காப்பாற்ற அல்லது மீட்க விரும்புகிறார் என்பதை வெளிப்படுத்துவதாகும். இதை மறக்கும் போது பல்வேறு வகைகளில் பிறரோடு உறவை வளர்த்துக் கொள்ளவிரும்பும் தூய ஆவியானவரை நாம் மனநோகச் செய்கிறோம் என்பதை உணரவேண்டும்.

‘‘மனக்கசப்பு, சீற்றம், சினம், கூச்சல், பழிச்சொல் எல்லாவற்றையும், தீமை அனைத்தையும் உங்களை விட்டு நீக்குங்கள். ஒருவருக்கொருவர் நன்மை செய்து பரிவு காட்டுங்கள்: கடவுள் உங்களைக் கிறிஸ்து வழியாக மன்னித்தது போல நீங்களும் ஒருவரையொருவர் மன்னியுங்கள்’’(எபேசி:4:29-32) எனத் தூய பவுல் அடியார் வழியாகத் தெளிவாகவோ, மறைமுகமாகவோ செயல்படுத்தவேண்டுமென தூய ஆவியார் நமக்கு வெளிப்படுத்துகின்றார். கிறித்தவத் தொடர்பு என்பது ஒரு தொடர் பயிற்சியாகும். இதில் வளர்ச்சிக்கான ஒருவர் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.

தூய பவுலடியார் பின்வருமாறு நம்மை எச்சரிக்கிறார். “நீங்கள் ஒரே எண்ணமும், ஒரே அன்பும், ஒரே உள்ளமும் கொண்டவராய்த் திகழ்ந்து, ஒரு மனத்தவராய் இருந்து என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள். கட்சி மனப்பான்மைக்கும், வீண் பெருமைக்கும் இடம் தர வேண்டாம். மனத்தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவராகக் கருதுங்கள். நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும். (பிலப்பியர் 2:2–4)

‘‘….. எனவே அதற்கிடைய பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள். ஒருவரையொருவர் பொறுத்துக் கொள்ளுங்கள். ஒருவரைப்பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னியுங்கள். ஆண்டவர் உங்களை மன்னித்ததுபோல நீங்களும் மன்னிக்க வேண்டும் (கொலோ. 3:12–13)

உன்னுடைய சுயநலம் எளிதில் உணர்ச்சிவசப்படுதல், எதிர்பார்ப்புக்கள், அற்ப ஆசை போன்ற குறுகிய மனிநிலையிலிருந்து உன்னை விடுவிப்பதற்காகவே, கிறித்தவ தொடர்பு உனக்கு தரப்படுகின்றன. பிறருக்காக வாழ உன்னை முழுமையாக அர்ப்பணிக்கவும், பிறருடைய உணர்வுகளுக்கு முக்கியத்தும் தரவும், பிறர் மதிப்பும், மாண்பும் உள்ளவர்கள் என்று உணர்ந்து அவர்களைத் திறந்த உள்ளத்தோடும், வியப்போடும் ஏற்றுக்கொள்வதற்காகவே உனக்குத் தரப்பட்டிருக்கின்றன.

பிறரோடுக் கொண்டுள்ள நட்புறவு உன்னை வளர்ப்பதோடு மட்டுமல்ல மாறாக பிறரில் நேர் மறை எண்ணங்களை வளர்க்கவும், அதன் வழியாக அவர்கள் வாழ்வில் மாற்றம் காணவும் செய்கிறது. எனவே கிறித்தவத் தொடர்பு இருபுறமும் கூர்மையான வாளைப் போல இருவரையும் வளரச் செய்கிறது. நீ நட்புறவுமூலம் உனது நன்மைத் தனமும், உனது அக்கறையும்,ஈடுபாடும் தொடர்பு கொள்பவர்மேல் நேர்மறையான பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதன்மூலம் அவர் தனது குணநலன்களை, உணர்வுகளை உங்களுக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ளச் செய்கிறது. இந்தத் தொடர்பு அவரது உள்ளத்தில் புதைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக் கொணர உதவி செய்கிறது. இவ்வாறு இருவருக்கிடையேயுள்ள உறவு ஒரு புதிய நட்புறவை உருவாக்குகிறது. நீ பிறருக்குக் கொடுப்பதை அவர் வரவேற்றால் அது உனக்குள் பெரிய பொக்கிஷத்தைக் கொடுக்கிறது.

**கிறிஸ்துவின் உதாரணம்:**

இயேசு ஒருபோதும் மேலெழுந்து மதிப்பீட்டைச் செய்யமாட்டார். மாறாக உனக்குள் மறைந்து கிடக்கும் அடிப்படைக் கொடைகளை வழங்குகிறார். இதுதான் திருமுழுக்கின் கொடை அல்லது படைப்பின் கனி. நம்மோடு தொடர்பு கொள்ள இயேசு பல வழிகளைக் காண்கிறார். உனக்குத் துணைபுரிய பின்வரும் சில உதாரணங்கள் தரப்படுகின்றன.

**நல்ல திருடன்:**

‘‘சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன் ‘‘நீ மெசியா தானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று’’ என்று அவரைப் பழித்துரைத்தான். ஆனால் மற்றவன் அவனைக் கடிந்து கொண்டு, கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாகி இருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே!’’ என்று பதிலுரைத்தான். பின்பு அவன்,‘‘இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற் கொள்ளும் என்றான். அதற்கு இயேசு ‘‘நீர், இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்’’ என்றார். (லூக்கா 23:39–43)

நல்ல் திருடன் இயேசுவுக்குச் சார்பாகப் பேசத் தொடங்கிய வேளையில் இயேசு அவன் மட்டில் ஒரு மாறுபட்ட கருத்தை வெளிப்படுத்துகிறார். நல்ல திருடன் தன் தவறுகளை ஏற்றுக்கொண்டு அதற்காக அவன் பெற்ற தண்டனையையும் ஏற்றுக் கொள்கிறான். அவன் உள்ளத்தில் இருந்த ஆழமான மன உணர்வுகளை அதாவது இரக்க குணம், அன்பு மனம் ஆகியவற்றை இயேசு கண்டு கொள்கிறார். இயேசுவின் கண்ணோட்டத்தின்படி அவனுடைய புறத்தோற்றத்தைக் கடந்து, அநீதமான சமூகத்தால் தண்டிக்கப்பட்டவன்என்ற நிலையைக் கடந்து அவனைக் கண்ணோக்குகிறார். ஒரு சிறு அன்புச் செயலால், நித்திய வாழ்வைச் சுதந்தரித்துக் கொள்கிறான். இதுதான் இயேசுவின் வழி அதாவது ஒருவருடைய புறத்தோற்றத்தைக் கடந்து, அவனுடைய தீய செயல்களைக் கடந்து, ஒருவன் அல்லது ஒருத்தியினுடைய உள்ளத்தின் ஆழத்தில் கடவுளின் வல்லமையை ஊட்டுவது.

**சமாரியப் பெண்:**

இயேசு முதல் அடியை எடுத்து வைக்கிறார். யாக்கோபின் கிணற்றருகே சென்று சமாரியப் பெண்ணின் வருகைக்காக காத்திருக்கின்றார். இயேசுதான் உரையாடலை முதலில் தொடங்குகின்றார். அதன்பின் தான் சமாரியப் பெண்ணும் தன் கருத்துக்களை எடுத்துரைத்து உரையாடலை வளர்க்கிறார்.

‘‘அப்பெண் இயேசுவிம் ‘நீர் யூதர்; நானோ சமாரியப் பெண், நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி? ஏன்று கேட்டார். ஏனெனில் யூதர்கள் சமாரியரோடு பழகுவதில்லை.’’ இயேசு சமாரியப் பெண்ணின் உள்ளத்தின் ஆழத்திற்குச் சென்று அவளின் மனவேதனைகளயும், அவள் மனதுக்குள் புதைந்து கிடக்கும் நல்ல எண்ணங்களையும் வெளிக் கொண்டு வருகிறார். அவளுடைய வாழ்க்கையில் மாற்றம் தேவைப்படுகின்றது. வேறு எதிலும் இயேசுவுக்கு அக்கறையில்லை. அவளுடைய தாறுமாறான வாழ்க்கை, அவளுடைய பழைய கணவன்கள் யார்? இப்போது இருக்கும் ஐந்தாவது நபர் யார்? போன்றவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வதில் இயேசுவுக்கு விருப்பமில்லை. இயேசு அவளைப் பார்த்து

‘‘கடவுளடைய கொடை எது என்பதையும், குடிக்கத் தண்ணீர் கொடும் எனக் கேட்பவர் யார் என்பதையும் நீர் அறிந்திருந்தால்…..’’ (யோவான் 4:5–25)

இயேசு ஒரு திறமைசாலி. ஏனென்றால் அப்பெண் தாராள மனதுடையவள். அனைவரையும் திருப்திப்படுத்த வேண்டும் என்ற மனநிலையை எளிதில் புரிநது கெண்டார். முதலில் தண்ணீர் வேண்டும் என கேட்கிறார். தேவையற்ற விவாதங்களைத் தவிர்த்து விடுகிறார். ஏனென்னறால் அது ஒருவேளை தனது நோக்கத்தை அடைய விடாமல் தடுத்து விடலாம் என்பதை நன்கு உணர்ந்திருந்தார். இந்நிகழ்வின் இறுதியில் இயேசு ஒரு நண்பரை ஏன் பல நண்பர்களைச் சம்பாதித்துக் கொண்டார். அதே வேளையில் சமாரியர்களும் யூதர்களும் வெகு காலமாகக் கொண்டிருந்த முன் சார்பு எண்ணங்களையும் உடைத்தெறிந்து விட்டார்.

தொடர்புகள் மகத்தானவை. ஏனென்னறால் உரையாடல்கள் அவற்றை இயல்பாகவே தொடரும். இதைப்பற்றி இயேசு நன்கு உணர்ந்திருந்தார். அவருடைய அன்பு உள்ளம் அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிகிறது. ஒருவருடைய புறத்தோற்றத்தை மட்டும் வைத்து மதிப்பிடாமல், அவருடைய உள்ளத்தின் ஆழத்திற்குச் சென்று ஒருவரைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த உலகப் பண்புகளோடோ அல்லது தவறான செயல்களோடோ சிக்கிக் கொண்டு, தன் நோக்கத்தைச் செயல்படுத்த முடியாமல் தவித்தவர் அல்ல நம் இயேசு. மாறாக ஒருவரின் அடிமனதிற்கேச் சென்று ஒருவரின் நிறைகுறைகளோடு ஏற்றுக் கொண்டவர். வீணான வாதங்களில் சிக்கிக் கொண்டு தன் நோக்கத்தை நிறைவேற்றத் தவிப்பவரும் அல்ல நம் ஆண்டவர் இயேசு. மறைப்பணி ஆற்றுவது அதாவது கடவுளின் நற்செய்தியை அறிவிப்பது இதுதான் இயேசுவின் தலையாய நோக்கமாயிருந்தது. பிறருடைய நல்ல குணங்களை வெளிக் கொண்டு வருவது, முக்கிய நோக்கமாக இருந்தது. ஒவ்வொரு மனிதனையும் கடவுள் நம்புகிறார். நம் ஆற்றலையும் உணருகிறார். கடவுள் ஓர் உந்து சக்தியாளர்.

**சக்கேயு:**

யூதேயா, கலிலேயா, சமாரியாப் பகுதிகளில் இயேசு நடந்து செல்கின்றார். அவர் மக்களைத் தேடிப் போனார். மக்களும் அவரைத் தேடி வந்தார்கள். மக்கள் மத்தியில் பெரும் மதிப்பிற்குரியவராக இருந்தார். ஒரு சிலர் அவரை இறைவாக்கினராகவும், ஒரு சிலர் அற்புதங்கள் ஆற்றக் கூடிய வல்லமை படைத்தவர் என்றும், ஒரு சிலர் இயேசுவைக் கடவுளின் மகன் என்றும் ஏற்றுக் கொண்டார்கள். ஆதிசயங்கள் ஆற்றக்கூடிய இயேசுவின்பால் சக்கேயு ஈர்க்கப்பட்டார். அவரைக் காண வேண்டுமென்று ஆவலோடு ஓடினார். அதற்குள் மக்கள் கூட்டமும், நோயாளர்களும் இயேசுவைச் சூழ்ந்து கொண்டதால் இயேசுவைக் காணமுடியவில்லை. ஆனால், இயேசுவைப் பார்த்தே ஆக வேண்டும் என்ற ஆவல் சக்கேயுவுக்கு. எனவே விரைவாக ஓடி காட்டு அத்திமரத்தின் மேல் ஏறி அப்படியாவது இயேசுவைக் காணலாம் என்ற ஆவலோடு மரத்தில் ஏறி அமர்ந்தான். சக்கேயு குள்ளமானவன்.

நேர்மையாளனும் அல்ல, வரி வசூலிப்பவனாக இருந்ததால் பண ஆசை கொண்டவனாகவும், இரக்கமற்றவனாகவும் இருந்தான் என நாம் படிக்கக் கேட்டிருக்கிறோம். இருந்தாலும் அவன் உள்மனதுக்குள் ஒரு நல்ல எண்ணமும் இருந்தது.

இயேசு அவ்வழியே வருகிறார். மரத்தின்மீது ஏறி அமர்ந்திருந்த சக்கேயுவை உற்று நோக்குகிறார். புன்னகை தவழ அவனைப் பெயர் சொல்லி அழைக்கிறார். இதுவரை அவனைச் சந்தித்ததே இல்லை. ஆனால், அவன் பெயர் சொல்லி அழைத்தார். ‘‘சக்கேயுவே கீழே இறங்கி வா! இன்று நான் உன் வீட்டில் தங்க வேண்டும்’’ என்றார் (லூக்கா 19:5) சக்கேயுவின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. இயேசுவின் அன்புள்ளமும்,முன்பின் பார்க்காத அவனைப் பெயர் சொல்லி அழைத்தவிதமும், அன்பு கலந்த அழைப்பும் சக்கேயுவைச் சிந்திக்க வைத்தது. இந்த இயேசுவின் சொற்களும், செயல்களும் சக்கேயுவின் உள்ளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது. எந்த அளவுக்கு மாற்றத்தை ஏற்படுத்தியது என்றால் உடைமையில் பாதியை திருப்பித் தருவதாகவும், யாருக்காவது அநீதி இழைத்திருந்தால் நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன் என்று சொல்லுமளவுக்கு சக்கேயுவின் இதயத்தில் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய வல்லமை படைத்தது தான் இயேசுவின் தொடர்பு. பிறரைப் பற்றிய தெளிவான கண்ணோட்டம், அதே வேளையில் தனது ஆற்றலினால் மன்னிப்பையும், இரக்கத்தையும் வழங்கக்கூடிய ஆற்றல் இயேசுவிடம் இருந்தே, கிறிஸ்தவத் தொடர்பாசை, நாம் நன்றாக வாழ்வதன் மூலம் பிறரிடம் உள்ள நல்ல ஆற்றல்களை வெளிக் கொண்டு வர துணை புரிய வேண்டும். இயேசு கல்வாரி மலையில் நல்ல கள்வனின் இதயத்தைத் தொட்டார். சமாரியப் பெண்ணின் வாழ்வைத் தொட்டார். சக்கேயுவின் மனதைத் தொட்டார். தன்னைப் பின்பற்ற விரும்புகிறவர்களுக்குத் தன்னையே கொடுத்தார். யாரையும் அவர் அவமதிக்கவோ, புண்படுத்தவோ இல்லை. எனவேதான் அவரை தேடி வந்தவர்கள் வாழ்க்கை நேர்மையானதாக இல்லையென்றாலும் தங்களுக்குள் இருந்த நல்ல பண்புகளைக் கண்டு கொண்டார்கள்.

மரிய மகதலேனாள், தொழு நோய்ச் சீமோன், விவக்காரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டவளை கல்லால் எறிய வேண்டும் என்று இயேசுவிடம் யூதகுருக்கள் கொண்டு வந்த பெண் ஆகிய நபர்களிடம் இயேசு காட்டிய கனிவும், இரக்கமும் அவருடைய செயல்பாடுகளில் எதிரொலித்ததை எவரும் எளிதாகக் கண்டு கொள்வர். முரிய மகதலேனாளின் அன்புச் செயல், சீமோனின் உள்ளத்தின் பயத்தை ஏற்படுத்தி தன் விருந்தோம்பல் பண்பிலிருந்து தடுக்கி விழச் செய்தது. சீமோனின் கண்களும், மனமும், ஏழு தீய ஆவிகள் பிடிக்கப்பட்ட பெண்காகவே மரிய மகதலேனாளக் கண்டன ஆனால் இயேசுவின் மனமும், கண்களும் அவள் ஒரு புனிதையாக மாற முடியும் என்பதையே கண்டன. பாவ வாழ்வில் வாழும் இந்தப் பெண் சபிக்கப்பட்டவள், தண்டிக்கப்படத்தக்கவள் என்ற எண்ணமே சீமோனிடம்

இருந்தது. இதேபோல விபசாரத்தில் பிடிப்பட்ட பெண்ணும் சாகத்தான் வேண்டும் என்று அவளைக் கொண்டு வந்த யூதத் தலைவர்களிடமிருந்தது. ஆனால் இயேசுவின் மனநிலை வேறாக இருந்தது. இந்த இரண்டு பெண்களும் தவறுகள் செய்யவே இல்லை என்று கூறவில்லை. மாறாக அவர்களுடைய தவறான வழிகளில் இருந்து அவர்களை மீட்டு புதிய வாழ்வுக்கு இட்டுச் செல்கிறார். ‘‘நீர் போகாலாம். இனிப் பாவம் செய்யாதீர்கள்’’ (யோவான் 8:11)

**தொகுப்புரை:**

நமது ஐந்து வகை ஆன்மீகத்தில் மூன்றாவதான கிறித்தவத் தொடர்பு, இன்றைய உலகில் கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருக்கவும், அந்த அன்பை பிறருக்குப் பகிர்ந்து கொடுக்கும் இயேசுவின் கருவியாகவும் நீ இருக்க வேண்டும் என நம்மை வலியுறுத்துகிறது.

தெய்வத்திருமகன் இயேசுவின் தொடர்பை இன்றைய உலகில் செயல்படுத்துவதற்குத் தேவையான அருளையும் ஆற்றலையும் அன்னை மரியாள் நமக்குத் தர வேண்டும் என்று அவளை நோக்கி மன்றாடு. இது உன் வாழ்க்கையில் முழு ஈடுபாட்டையும், அர்ப்பண உணர்வையும் தரும். எவரும் நிறைவானவர்கள் அல்ல. ஆனால் அனைவராலும் நிறைவுள்ளவர்களாக வாழ முடியும்.

இறைத்திருவுளச் சபை உறுப்பினர்களின் வாழ்வு இங்கிருந்து தான் தொடங்குகிறது. நேற்றைய தினம் இன்று உனக்கு உரிமையானதல்ல. நாளை என்பது எட்டாத தூரத்தில் இருக்கிறது. இன்றைய நாளைத் தான் கடவுள் உனக்குக் கொடையாகக் கொடுத்துள்ளார். இன்றைய நாளை உனக்குக் கொடுத்தது மட்டுமல்ல அவர் உன்னைச் சந்திக்கிறார். உன்னிடமிருந்து ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை அவர் எதிர் பார்க்கிறார். நீ செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அதாவது கடவுளின் திருவுளத்திற்கு உன்னை முழுவதும் அர்ப்பணிப்பதுதான்.

இயேசுவின் வாழ்விலோ அல்லது அவரது உவமைகளிலோ இயேசுவின் இறை உறவுத் தொடர்பைக் கண்டு பிடி. இயேசுவின் காலத்தில் அது எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியது என்பதைக் கவனி. நீ பிறரோடு கொண்டிருக்கும் இறை உறவுகளில் அவை எப்படிப்பட்ட மன உணர்வுகளை உன்னிடம் ஏற்படுத்துகின்றது.

## 5. பொதுத் தொகுப்புரை

இறைத்திருவுளச் சபை உறுப்பினர்கள் உலகியல் சார்ந்த துறவு அமைப்பைச் சார்ந்தவர்கள். எனவே அவர்களுக்கென்று தனிப்பட்ட குணம் உண்டு, தனிவரம் உண்டு. சில குறிப்பிட்ட செயல்பாடுகள், இவர்கள் இறைத்திருவுளச் சபையைச் சார்ந்தவர்கள் என்பதை வெளிக்காட்டுகின்றது.

ஐந்து அடிப்படை ஆன்மீகப்பயிற்சிகளதைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன் மூலம், ஒருவரை இயேசுவின் மருஉறுவாக மாற்றுகின்றது. மேலும் இயேசுவைப் பிறருக்கு வழங்கு, தகுதியுள்ள கருவியாக தூய ஆவி அவரைப் பயன்படுத்துகின்றார். இந்த ஐந்து ஆன்மீகப் பயன்படுத்துகின்றார். இந்த தூய ஆவி அவரைப் பயன்படுத்துகின்றார். இந்த ஐந்து ஆன்மிகப் பயிற்சிகளை உறுப்பினர்கள் தங்கள் வாழ்வின் தலையான நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தார். அவர்களுடைய தொடர் இலக்கும் மற்றும் அவர்களுடைய வாழ்வு முழுவதும் மாற்றம் அடைகின்றது. சாட்சிய வாழ்வு என்பது உண்மையானது, தவிர்க்க முடியாதது. இத்தகையவர்களுக்கு வாழ்வு மலர்ச்சியடைகிறது, பணிவாழ்வில் அடைகின்ற மனநிறைவு பிறரோடு நல்லுறவு கொள்ள தூண்டுகோளாக இருக்கிறது.

விருப்ப நிலையினரின் வழிகாட்டுதல் முறைகளை தெளிவுபடுத்துவதில் இறுதி நிலையை அடைந்துள்ளோம். இந்த வழிகாட்டு நெறிமுறைகள் உங்களுடைய தொடக்க நிலை ஆர்வத்தை வளர்க்கவும், தூண்டியெழுப்பவும், நமது சபையின் நோக்கத்திற்கேற்ப வாழவும் வேண்டும் என்கின்ற ஆர்வத்தை உங்களில் தூண்டி எழுப்பியிருக்கும் என எண்ணுகிறேன்.

இறைத்திருவுளச் சபையில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது உனது விருப்பமா?

இந்த கேள்விக்கு உன்பதில் ஆம் என்றால் உன் ஆர்வத்தை மாநில இயக்குநரிடம் தெரிவித்து தகுதிகாண் காலப் பயிற்சியில் சேர உன்னைத்தயார் படுத்து.

இறைத் திருவுளச்சபையின் ஆன்மீகம் சபையின் மறைத்தூதுக் குறிக்கோள். இயேசுவில் அமைதியையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துவது.

**சபையன் தனிவரம்:**

மங்களவார்த்தையின் போது தன்னையே முழுவதும் அர்ப்பணித்த அன்னை கன்னிமரியாளைப் போல வாழ்வது, இன்றைய காலச் சூழலில், இன்றைய உலகின் மத்தியில் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றிய இயேசுவின் கருவியாக, எங்கெங்கு இயேசுவைப் பறைசாற்ற முடியுமோ அங்கெல்லாம் செயல்படுவது.

**சபையின் குறிக்கோள்**

அமல அன்னையின் வழியில் இறைத்திருவுளம் சபையின் ஆன்மீகம்.

**முதல் ஐந்து நிலை:**

- மனச் செபம் அல்லது தியானம்
- இறை வார்த்தையையும், ஆன்மீகப்புத்தகங்களை வாசிப்பது
- திவ்ய நற்கருனை மீது பக்தி
- நற்கருணைச் சந்திப்பு
- அன்னைமரியாவின் மீது தனிப்பட்ட பக்தி முயற்சி.அதாவது ஜெபமாலையின் மறைஉண்மைகளைத் தியானிப்பது, ஜெபமாலை ஜெபிப்பது.

**ஐந்தில் இரண்டாவது:**

- கடவுளின் பிரசன்னம்.
- எதிர்மறைகருத்துகளைத் தவிர்த்தல்.
- சோம்பல் முறையீட்டைத் தவிர்த்தல்
- பணி செய்வது
- அமைதியை ஏற்படுத்துவது.

**ஐந்தில் மூன்றாவது:**

- ஒவ்வெருநாளும் ஐந்து பிறரன்புப்பணிகள்

**ஐந்து அடிப்படை மதிப்பீடுகள்:**

- ஆன்மீகம்
- குழுவாக வாழ்தல்
- நேர் மறைக் குணம்
- நிகழ் காலத்தில் வாழ்தல் (அல்லது) நிகழ் காலத்தைப் பயன்படுத்துதல்
- இறை உறவுத் தொடர்பு

# செபம்:

(இறைத் திருவுளச்சபை ஆன்மீகத்தை அடிப்படையாக கொண்டது)

அனைத்தையும் தந்தையின் திருவுளத்திற்குகேற்ப ஆண்டவர் இயேசுவைப் போலவும், அன்னை மரியாளைப் போலவும் செய்வது. ஆண்டவரே நற்கருனை என்னும் அருட்சாதனத்தில் வீற்றிருக்கும் உமது பிரசன்னத்திற்காக நன்றி கூறுகிறேன். நான் உமது திரு உடலையும் திரு இரத்தத்தையும் உணவாகப் பெறும்போது, தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றவும், எம் சகோதர சகோதரிகளுக்கு ஆன்மீகப் பணி ஆற்றத் தேவையான வரங்களயைும் தருகின்றீர். இந்த இறை உறவுக்கு எனது தியானசெபங்கள் மூலம் என் இதயத்தைத் திறந்து வைத்துள்ளேன். நான் அமைதியில் நிலைத்திருந்து என் இதயம்முழுவதையும் தெய்வீகப் படைப்பாளரான ஆண்டவருக்கு திறந்து வைத்துள்ளேன்.

அருட்சாதன வடிவில் எழுந்தருளி இருக்கும் ஆண்டவர் இயேசுவை வணங்கவும், என்னை முழுவதும் உமக்கு சரணாகதியாக்கவும், என்னுடையதும் மற்றும் என்சகோதர சகோதரிகளுடைய தேவைகளை உம்மிடம் எடுத்துரைக்கவும், உம்முடைய பிரசன்னத்திற்கு நன்றி கூறவும் என்னை அழைத்திருக்கிறீர்.

ஆம் இறைவா, நான் உம் வார்த்தைகளைக் கேட்கத் தாகமாயிருக்கிறேன். நான் என்னை முழுவதும் அர்ப்பணிக்கவும், அவருடைய குரலைக்கேட்கவும், அவருடைய திருவுளத்தை நிறைவேற்றவும் தேவையான ஆவியின் அருட் கொடைகளை என்மேல் பொழிந்தருளும். இவ்வாறாக உமது வார்த்தை ஆற்றல் உள்ளதாகவும், எம் சகோதரிகளுக்கு வழிகாட்டும் ஆற்றல் மிக்க ஒளியாகவும் இருப்பதாக.

ஆண்டவரே, மரியா என்னும் மாபெரும் சக்தியைத் (பொக்கிஷத்தை) தந்துள்ளீர், உடைந்த உள்ளத்தோடு இருக்கும் எனக்கு, அன்னைமரியே, நம்பிக்கையின் அரிச்சுவட்டை எனக்குக் கற்றுத்தாரும். அருள்நிறைந்த மரியே என்னும் செபத்தைச் சொல்லும்போது என் இதயத்தைக் குணப்படுத்தும். பிறருக்கு உதவி செய்யும் தாரள உள்ளத்தையும், இறைத் திருவுளத்திற்கு என்னை முழுவதும் அர்ப்பணிக்கவும், அன்றாட என்வாழ்க்கைச் சிலுவைகளை என் ஆண்டவர் இயேசுவைப் போல சுமந்து செல்ல எனக்கு உதவியருளும். எனது ஒவ்வொரு சொல்லும், செயலும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும்படியாக இருப்பதாக. இதயத்தில் ஜெபமாலையின் மறை உண்மைகளைத் தியானிக்கும் போது நான் தாழ்ச்சியும், சாந்தமும் கொண்டு, உமது மகத்துவத்திற்குச் சாட்சியாக வாழ்வேனாக. என்றும் மாறாத தாழ்ச்சியோடு வாழ எனக்குத் துணைபுரிவாயாக.

ஆண்டவரே உமது பிரசன்னத்தில் என்றும் வாழவும், ஆன்ம உடல் தூய்மையோடு வாழத் துணைபுரிவாயாக. ஒரு விதையானது வளர்ந்து, பலுகிப் பெருகி பலநலன்களைத் தருவதுபோல உமது அருளும் என்னுள் பல்வேறு ஆற்றல்களைப்

பொழிந்து அதன் வழியாக நான் உமது நன்மைத்தனத்தை அடைய எனக்கு அருள்தரும்.

மங்களவார்த்தை மரியாவைப்போல நானும் வாழ விரும்புபிறேன். இன்றைய உலகில், இப்பொழுது, எங்கெல்லாம் கிறிஸ்துவை அறிவிக்கமுடியுமோ, அங்கெல்லாம் இறைத்திருவுளத்தை நிறைவேற்றும் இயேசுவின் கருவியாக இருக்கும் வரத்தை தாரும்.

உயிருள்ள கடவுளின் ஆலயமாக வாழவும், அமைதியை நிலைநாட்டுபவராகவும், கிறிஸ்தவ சகோதர சகோதிகளின் கிறிஸ்துவின் பிறரன்புப் பணிகளை ஆற்றவும், நேர்மறை எண்ணங்களையும், செயல்களையும் நிறைவேற்றவும், பொறப்பற்ற முறையீடுகள் மற்றும் எதிர்மறை எண்ணங்கள் இவற்றிலிருந்து என்னை விடுவித்துப் பாதுகாத்தருளும்.

என் குழு உறுப்பினர்களை உம்மிடம் தருகிறேன். எங்களுக்குள் வெவ்வேறு வேறுபாடுகள் இருந்தாலும் பொதுநோக்கத்தில் நாங்கள் அனைவரும் பொறுமையாக இருக்கிறோம். நாங்கள் அனைவரும் தூய ஆவியின் அருளால் வழிநடத்தப்பட்டு, எங்கெல்லாம் அமைதியையும், நட்புறவையும் ஏற்படுத்த முடியுமோ அங்கெல்லாம் நிலைநாட்ட எங்களை வழிநடத்தியருளும்.

-ஆமென்

ஈவ்ஸ் தியோனே IVD

கனடா மாவட்டம்

## பின்னிணைப்பு A:
## தொடக்கநிலைப் பயிற்சி:தொகுப்பு
## விருப்பநிலை

**இயல் I: விளக்கம்:**

விருப்ப நிலைப்பயிற்சியானது பயிற்சிகளுக்கெல்லாம் அடிப்படையானது. இதிலிருந்து தான் ஒவ்வொரு நிலையாகச் சென்று இறுதியில் நிரந்தர உறுப்பினராகிறோம்.பயிற்சியின் நோக்கங்கள்பின் வருமாறு:

- ஏதாவதொரு தேவையான அறிவில் புலமை பெறுவது
- பிறருக்குத் துணைபுறியும் ஆற்றலை வளர்த்துக்கொள்தல்
- இறைத்திருவுளச்சபை உறுப்பினருக்குத்தேவையான பண்பு நலன்களை வெளிப்படுத்துதல் மற்றும் இத்தகைய பண்பு நலன்களில் வளர்ந்து நல்லதொரு முன்னேற்றம் காணுதல்.

சபையில் சேர விருப்பம் தெரிவித்தவருக்கு தொடக்க நிலைப் பயிற்சி, சபையைப்பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள துனைபுரிகிறது. மேலும் சபையின் ஆன்மீகத்தில் தங்களை இனைத்துக் கொள்ளவும் அதன் மறைத்தூதுப் பணியில் தங்களின் பங்களிப்பைத் தரவும் தயார்படுத்துகின்றது. சபையில் சேரவரும் ஒவ்வொருவரும் இந்த அடிப்படைப் பயிற்சியில் தவறாமல் பங்கொள்ளவேண்டும். அதன்பின்பு படிப்படியாகப் பயிற்விகளில் பங்குபெற்று உறுதிப்பாட்டு நிலையை அடைகிறார்கள். உறுதிப்பாட்டு நிலையை அடைந்தவர்கள் மீண்டுமாரு பயிற்சிக்குப்பின் நிரந்தர உறுப்பினர்களாக அங்கீகரிக்கப்படுகிறார்கள்.

**தொடக்கநிலைப்பயிற்சியும் அதன் கால அட்டவனைகளும் பின்வரும் செயல்பாடுகளைச் சார்ந்துள்ளன.**

- தொடக்கநிலைப்பயிற்சியின் பொறுப்பாளா் மற்றும் மாவட்ட இயக்குநர் மற்றும் அவரது ஆலோசகர்கள் மறைமாநிலம் அனைத்திற்கும்.
- பகுதி ஒருங்கிணைப்பாளா் மற்றும் அவருடைய குழு வழிகாட்டிகள் அனைவரும் மாவட்ட ஆலோசகர்களின் நெறிமுறைகள், வழிகாட்டுதல்கள் இவற்றின் அடிப்படையில், மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பகுதியிலும் செயல்பட வேண்டும்.

**இயல் 2: நோக்கங்கள்:**

தொடக்க நிலைப்பயிற்சியானது விருப்பநிலையில் உள்ள உறுப்பினர்கள் பெறவேண்டிய அடிப்படை நோக்கங்கள்.

- இறைத் திருவுளச்சபையைப்பற்றிய ஆழமான, தெளிவான விளக்கத்தையும் மற்றும் சபியன் செயல்பாடுகளையும் மிகத் தெளிவாகக் கண்டுணர்ந்து, சபையானது உறுப்பினர்களிடம் முன்வைக்கும் வாழ்க்கைமுறைகளைத் தெளிவாக அறிந்து ஏற்றுக்கொள்தல்.

- சுபையின் செயல்பாடுகளுக்குத் தேவையான வாழ்க்கை முறைகளை ஏற்றுவாழ்வதற்குத் தேவையான நம் மனதின் ஆழ்மன உணர்வுகளை அல்லது மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்தல்.
- உலகியல் அர்ப்பண வாழ்வுக்குத் தேவையான அர்ப்பண உணர்வும், பொறுப்புணர்வும் உறுப்பினருக்கு உள்ளதாஎன்பதை தெளியவேண்டும்.
- கூட்டுறவு வாழ்வைப் பற்றிய தெளிவான நோக்கு ஒருவர் அல்லது ஒருத்திக்கு உள்ளதா என்பதையும், சபையில் உள்ள உறுப்பினர்களோடு இணைந்து வாழ்வும், பணி செய்யவும் விருப்பம் உள்ளவர்களாக இருக்கிறார்களா, இல்லையா? என்பதையும் கண்டு கொள்ளவேண்டும்.
- விருப்பநிலைப் பயிற்சியில் இருப்பவர்களைப்பற்றி ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களைப் பற்றிய மதிப்பீடுகளை உாயி மேல் பொறுப்பாளர்களிடம் தெரிவித்து அவர்களின் ஒப்புதலின்படி பயிற்சியாளர் அடுத்த நிலைக்குச் செல்லலாமா, வேண்டாமா? என்ற முடிவை எடுக்க வேண்டும்.

**இயல் 3: தொடக்கநிலைப் பயிற்சிக்குப் பொறுப்பானவர்கள்:**

**1. விருப்ப நிலைப்பயிற்சியாளர்:**

இறைத்திருவுளச் சபையில் உறுப்பினர் ஒவ்வொருவரும் தங்களுடைய பயிற்சிக்கு முழுப்பொறுப்பேற்க வேண்டும். சகோதரனோ, சகோதரியோ குழுவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பொறுப்பாளர்களின் வழி காட்டுதல்படி பயிற்சிக்குத்தேவையான நெறிமுறைகள் கற்றுக்கொடுக்கப்பட்டு, படிப்படியாக ஒவ்வொரு நிலையைக் கடந்து செல்லவேண்டும். எனவே ஒவ்வொரு நிலையிலும் உறுப்பினரின் பொறுப்புணர்வும்,ஈடுபாடும் முக்கியமானது என்பதை உறுப்பினர்கள் மறந்துவிடக்கூடாது.

எனவே விருப்ப நிலைப்பயிற்சியில் இருப்போர் எந்தவித ஒளிவுமறைவு இன்றி திறந்த மனத்தோடு தங்கள் பயிற்சியாளருடன் பகிர்ந்து கொள்ளவேண்டும். குழு செயல்பாடுகளில் முழுமனதோடு பங்கெடுக்க வேண்டும். மாநில ஒழுங்கு நெறிமுறைகளின்படி கொடுக்கப்படுகின்ற பரிந்துரைகளை நேர்மையோடும், பொறுப்புணர்வோடும் செயல்படுத்த வேண்டும்.

**2. பயிற்சியாளர் மற்றும் அவரதுகுழு:**

தொடக்கநிலை பயிற்சியைக் குழுவானது அலட்சியமாக எடுத்துக் கொள்ளக்கூடாது.மாறாக இதில் முழுக்கவனம் செலுத்தவேண்டும். சான்றாகத் தங்களுடைய சாட்சி வாழ்வு, பிறரன்புப் பணிகளில் உள்ள ஆர்வம், பொதுச் செப நேரங்களில் தவறாமல் பங்கெடுத்தல், பகிர்வுகள் போன்ற செயல்பாடுகள் வழியாக விருப்பநிலைப்பயிற்சியில் உள்ளவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டான வாழ்வு வாழ வேண்டும்.

குழுத்தலைவர், தம் குழு உறுப்பினர்கள் தங்கள் பணிகளைச் சரிவரச் செய்கிறார்களா என்பதைக் கவனிப்பதோடு மட்டுமல்லாமல்,

விருப்பநிலைப்பயிற்சியாளர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதன் அடிப்படையில் அவர்களைச் சரியான வழியில் வழிநடத்தவேண்டும் என்பதிலும் முழுக்கவனம் செலுத்த வேண்டும்.

**பகுதி வழிகாட்டி:**

விருப்பநிலைப் பயிற்சியாளர்களை வழிநடத்தத் தேர்ந்துகொண்ட பகுதி வழிகாட்டிகளின் பணிகளையும், பொறுப்புக்களையும் மாநில நெறிமுறைகள் மிகத் தெளிவாக விளக்குகின்றன.

அவர்களுடைய பொறுப்புக்களைப் பற்றிய தொகுப்புக்கள் பின்வருமாறு.

- ஒவ்வொரு பயிற்சியாளரையும் தன் குழுவில் உள்ள உறுப்பினரின் பொறுப்பில் ஒப்படைப்பது.
- பகுதி வழிகாட்டி தனிப்பட்டவிதத்தில் ஒவ்வொரு பயிற்சியாளரையும், ஒவ்வொரு பயிற்சிக்கட்டத்தில் சந்திப்பது. ஒவ்வொரு பயிற்வியாளருக்குத் தேவையான வழிகாட்டுதல்களையும், அறிவுரைகளையும், நெறிமுறைகளையும் தந்து பயிற்சியைப் பயனுள்ள விதத்தில் மாற்றுவது
- ஒவ்வொரு பயிற்சிக்கட்டத்திலும் உள்ள நடைமுறைகளை உணர்ந்து புரிந்து கொண்டிருக்கிறாரா? என்கபதைக் கண்டு உணர்ந்து பயிற்சியாளரைச் சரியான வழியில் வழிநடத்துவது. (தேவைப்படின் பகுதிஒருங்கினைப்பாளர் தனது பிரதிநிதியாக ஒருவரை நியமித்து பயிற்சியாளர் வழிநடத்தலாம்)
- ஒவ்வொரு பயிற்சியாளரும், தனது பயிற்சிக் கட்டத்தில் அவருடைய நிலை என்ன? எத்தகைய முன்னேற்றம் கண்டுள்ளார் போன்ற குறிப்புகளை தகுந்த முறையில் அவணப்படுத்த வேண்டும் இதனடிப்படையில் அவரது முன்னேற்றத்தைக் கணிக்கலாம்.
- தேவைப்பட்டால் உறுப்பினரை பகுதிக்குழுக் கூட்டத்தில் பங்குபெறச்சொல்லி, பயிற்சியின் முக்கியத்துவத்தை பற்றித் தெரிந்து கொள்ளவாய்ப்புத் தரலாம்.
- தனது பகுதியிலுள்ள குழுக்களைக் சந்தித்து தரமானவாழ்வும் பயிற்சியும் ஒருங்கிணைந்து செல்கிறதா என்பதைத் கவனிக்கவேண்டும். தேவைப்படின் போதுமான ஆலோசனைகளை வழங்கவேண்டும்.
- உறுப்பினர் ஒருநிலையிலிருந்து மறுநிலைக்குச் செல்வதற்குமுன் அந்த உறுப்பினரைப்பற்றிய தரவுகளை ஆலோசனைக் குழுவிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். இதற்குமுன் குழு வழிகாட்டி அல்லது அவரது பிரதிநிதி ஆகிய இவர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

1. **தொடக்கநிலைப் பயிற்சிப் பொறுப்பாளர்:**

ஆலோசனைக் குழுவினால் நிபமிக்கப்பட்ட தொடக்கநலைப் பயிற்சியாளர்:

- சபையின் சட்டதிட்டங்களுககும், நெறிமுறைகளும், மாநில ஒழுங்குகளும் ஏற்றவாறு பயிற்சி நிலை இருக்கிறதா? என்பதை உறுதிப் படுத்த வேண்டும்.
- மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பகுதிகளிலும் இத்தகைய நடைமுறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்யவேண்டும்.
- குழு வழிகாட்டிகளை தேர்வு செய்வதிலும், அவர்களுக்குப் பொறுப்பணர்வுகளைக் கொடுப்பதிலும் பயிற்சி நெறிமுறைகளையும் தெளிவாக அறிவிக்கவேண்டும்.
- மாநில இயக்குநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளைக் கேட்பதிலும், பயிற்சியில் சந்திக்கும் சவால்களை திறந்த மனத்துடன் பகிர்ந்து கொள்வதிலும் மற்றும் காலச் செயல்முறைகளை எழுத்து வடிவில் எழுதி அவற்றை தனக்கு மேலுள்ள மாநில இயக்குநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
- மாநிலத்திலுள்ள பல்வேறு பயிற்சி நிலையியல் உள்ள பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடி அவர்களிடமுள்ள நல்ல வாழ்க்கை நடைமுறைகள், மறைப்பணிகள் இவற்றைத் தெரிந்து தனது பயிற்சியின் தரத்தை உயர்த்த முயல வேண்டும்.
- பயிற்சி முறைக்குத் தேவையான தரவுகளையும், நடைமுறைகளையும் புதிது புதிதாகச் சேமித்தல்
- இறைத் திருவுளச்சபையின் பயிற்சி இயக்குநர் அவர்களின் அறிவுரைகளையும், பரிந்துரைகளையும் மாநில அளவில் உள்ள பயிற்சித்தளங்களில் செயல்படுத்துவது.
- பயிற்சித்தளத்தில் தனது அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளையும், நடைமுறைகளையும், ஒழுங்குகளையும் மாநில ஆலோசனைக் குழு வழியாக இறைத் திருவுளச்சபையின் பயிற்சி இயக்குநரிடம் சமர்ப்பித்து அவருடைய அறிவுரைகளையும், வழிகாட்டுதல்களையும் பெறுவது

**5. மாநில இயக்குநர் மற்றும் ஆலோசனைக்குழு:**

ஒரு சபைக்கும், திருச்சபைக்கும் பயிற்சித்தளமானது மிக முக்கியமானது என்பதை மனதில் கொண்டு, மாநில இயக்குநரும் அவருடைய ஆலோசனைக்குழுவும் இதில் முக்கியக் கவனம் செலுத்தி, பயிற்சித்தளத்தின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். இவர்கள் முழு அர்ப்பண உணர்வோடு இறைத்திருவுளச் சபையின் ஒழுங்குகள் மற்றும் நெறிமுறைகளுக்கு ஏற்ப, பயிற்சியாளர்களை உருவாக்கும் ஆற்றல்மிக்க நபர்களைத் தெரிவுசெய்து, அவர்கள் சந்திக்கும் சவால்களைச் சரி செய்வதில் உடன் இருந்து, பயிற்சியை நிறைவாகக் கொடுப்பதில் முக்கியப் பங்கு ஆற்றவேண்டும். எனவே சபையின் பயிற்சி இயக்குநருக்கு இதில் மிகுந்த பொறுப்பு உண்டு. எனவே பயிற்சித்தளங்களில் நடக்கும் அனைத்து

வாழ்க்கைமுறைகள், நெறிமுறைகள் இவற்றைத் தவறாமல் சபையின் பயிற்சி இயக்குநரின் கவனத்திற்குக் கொண்டு செல்லவேண்டும் என்பதை உணரவேண்டும்.

மற்றும் மற்ற மாநில பயிற்சித்தளங்களில் உள்ள செயல்முறைகள், வாழ்க்கைமுறைகள் இவற்றைப்பற்றிய ஆவனங்களைப் படித்துத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்ட வேண்டும்.

**இயல் 4: பயிற்சியின் பல்வேறு நிலைகளின் அமைப்பு முறை:**

பின் வரும் பக்கங்களில் சபையில் உள்ள பல்வேறு பயிற்சி நிலைகளின் அடிப்படைக் கூறுகள், அவை எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புடையன என்பன பற்றிய விளக்கங்களை ஆறு சிறப்புத் தலைப்புகளில் காண்போம்.

- அடைய வேண்டிய நோக்கம் அல்லது பெறவேண்டியதிறன்கள்
- நோக்கத்தை அடைவதற்கு ஒருவருக்குமுன்வைக்கப்பட்டுள்ள வழிமுறைகள்.
- நோக்கத்தை அடைய, செய்யவேண்டிய வழிமுறைகள் மற்றும் செயல் முறைகள்.
- இந்த வழிமுறைகள் மற்றும் செயல் முறைகளைச் செயல்படுத்த வேண்டிய நபர்கள்.
- இந்த நடைமுறைக்குத் தேவையான வளங்கள் மற்றும் செயல்பாட்டுக்கருவிகள்
- கால அட்டவனை அதாவது குறிப்பிட்ட காலத்துக்குள் முடிக்கவேண்டும் என்பதை மதித்தல். பயிற்சிக்குரிய பல வருடங்களில் படிப்படியாக முன்னேற்றம் காண பல செயல்பாட்டு அட்டவணை தரப்பட்டுள்ளது. மேலும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் அவர்கள் நிறைவேற்றவேண்டிய பணிகள் அவை மிகத் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.
- ஒரு குறிப்பிட்ட பயிற்சி காலத்திற்குப் பொறுப்பானவர்கள் எவ்வாறு செயல்படவேண்டும், அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பொறுப்புணர்வு மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பயிற்சிக்குப் பொறுப்பானவர்கள் கையாளவேண்டிய தெளிவான நெறிமுறைகள், அவர்களிடம் உள்ள வரங்களைக் கொண்டு எவ்வாறு பலனுள்ள விதத்தில் பயிற்சியை அமைத்துக் கொள்வது என்பன பற்றிய விளக்கங்கள் அட்டவனையில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இறுதியாக பயிற்சியாளர்களின் இனை உழைப்பாளர்கள், குழு உறுப்பினர்கள் ஆகிய இவர்களுடைய கடமைகள் என்ன என்பது பற்றியும், சகோதர உணர்வோடு செய்யவேண்டிய உதவியும் உற்சாகமும் விளக்கப்பட்டுள்ளன.
- கனடா மாநில தொடக்கநிலைப் பயிற்சித் தளத்தின் அமைப்பு முறையைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. இவர்களுடைய அமைப்பு முறைகளைப் பயன்படுத்த

அனுமதி அளித்த கனடா மாநிலத்திற்குச்சபையின் பொதுக்குழு நன்றி தெரிவிக்கிறது. இதனால் சபையின் உறுப்பினர்கள் மிகுந்த பலன் அடைவர்.

| குறிக்கோள்<br>A | வழிமுறைகள்<br>B | செயல்பாடுகள்<br>C | கடமைகள்<br>D | பொறுப்பாளர்<br>E |
|---|---|---|---|---|
| **1A**<br>விருப்ப நிலைப் பயிற்சி வழிகாட்டியின் கருத்துக்களையும் செயல்முறைகளையும் ஒருவர் உள்வாகுதல் | **1B**<br>விருப்பநிலைப்பயிற்சியைப் பற்றிய விளக்கங்களைப் படித்தல் | **1C**<br>விருப்ப நிலைப் பயிற்சியில் இருப்பவர்களை அதற்கென்று உள்ள பதிவேட்டில் பதிவு செய்தல். | **1D**<br>குழுவழிகாட்டி அவரது பிரதிநிதி | **1E**<br>விருப்பநிலைப் பயிற்சிக் கையேடு |
| | | அவர் அல்லது அவளுடைய வழிகாட்டியைச் சந்தித்தல் | உறுப்பினர் | |
| | | தனிப்பட்ட வாசிப்புப் பழக்கம் | உறுப்பினர் | |
| | | தனது வழிகாடி அல்லது குழுவிடம் பகிர்ந்து கொள்தல் | குழு வழிகாட்டி பகுதி வழிகாட்டி | |
| | | பகுதி அமர்களில் பங்கெடுத்தல் | உறுப்பினர் | |
| | | கருத்தரங்கள், கூட்டம், குழுவாய் கூடுதல் போன்ற அமர்வுகளின் நாள், நேரம் தெரிவித்தல் மற்றும் நினைவுபடுத்தல் | குழு வழிகாட்டி | |
| | | அமைப்பு ரீதியான இடர்ப்பாடுகளைக் களைந்து விருப்பநிலைப் பயிற்சியாளர் ஆவர்வமுடன் பங்கெடுக்கத் | குழு வழிகாட்டி | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | துணைபுரிதல் | | |
| **2A**<br>உறுப்பினர் சபையின்மீது கொண்டிருக்கும் ஆர்வத்தில் வளர துணை புரிதல் | **2B**<br>உறுப்பினர் குழுவின் தன்னையே இணைத்தக் கொண்டு, ஒருவருடைய கடமைகளை உணர்தல் | **2C**<br>உறுப்பினர் குழுவின் வரவேற்பு | **2D**<br>குழுவழிகாட்டி மற்றும் குழு உறுப்பினர்கள் | **2E**<br>விருப்பநிலைப் பயிற்சிக்கையோடு அதிகாரம் 1(இயல்) |
| | விருகப்பநிலைப் பயிற்சியாளர், அமர்விலோ, பகுதிக் கூட்டங்களிலோ பங்கு பெற உற்சாகப் படுத்துதல் | நேர்மையோடு கூட்டங்களில் பங்கெடுத்தல் | உறுப்பினர் குழு வழிகாட்டி | |
| | | ஊக்குவித்தல் கூட்டங்களில் ஆர்வத்தோடு பங்கெடுக்கத் தூண்டுதல் | குழு வழிகாட்டி | |
| | | விருப்பநிலைபயிற்சி உறுப்பினரின் பரிந்துரையை ஏற்றுக்கொள்தல் மற்றும் அவற்றின் செயல்பாட்டைக் கவனித்தல் | குழு வழிகாட்டி | |
| **3A**<br>சபையின் மறைந்தூதுப் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ள வழிகாட்டுதல் | **3B**<br>சபையின் மறைத்தூதுப் பணியின் இலக்கை அறிந்து கொள்தல் | **3C**<br>விருப்பநிலைப் பயிற்சிக் கையோடு இயல் 3 இவற்றைத் தனிப்பட்டமுறையில் வாசித்தல் | **3D**<br>உறுப்பினர் | **3E**<br>விருப்பநிலைப் பயிற்சிக்கையேடு இயல் 3 |
| | | வுழிகாட்டி மற்றும் குழு உறுப்பினர்களோடு பகிர்ந்து கொள்தல் | உறுப்பினர் குழு உறுப்பினர்கள் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பகுதிவழிகாட்டி அல்லது அவரது பிரதிநிதி | |
| | சுபையின் மறைப்பணியோடு உறுப்பினரின் பணியோடு இணைத்தல் | பணிசெய்தல் மற்றும் திருமுழுக்குப்பணியை ஒருங்கிணைத்தல் பற்றிய எழுத்துப்பகுதிகளைப்படித்துத் தியானித்தல் | உறுப்பினர் | வழிகாட்டிச் செயல் திட்டம் (பின்னிணைப்பு - **B**) திருமுழுக்கு அழைத்தல் வழிகாட்டி இயல் 2 |
| **4A**<br>திருமுழுக்கு அர்ப்பணிப்பு என்பது கடவுள் கொடுக்கும் கொடை. எனவே ஒவ்வொருவருக்கும் அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை உணரச் செய்தல் | **4B**<br>ஒவ்வொருவரின் திருமுழுக்கின் பொருளை ஆழமாக உணர்தல் | **4C**<br>இதனோடு தொடத்புடைய ஆவணங்களைப் பயன்படுத்தி சிந்தித்தல் | **4D**<br>பகுதி வழிகாட்டி உறுப்பினர் | **4E**<br>வழிகாட்டிச் செயல் திட்டக்கையேடு (பின்னிணைப்பு - **B**) |
| | | தனது வழிகாட்டியுடன் பகிர்ந்து கொள்தல் | பகுதி வழிகாட்டி அல்லது அவரது பதில் ஆள்(பிரதிநிதி) | திருமுழுக்கு அழைத்தல் |
| **5A**<br>உறுப்பினர் சபையின் ஆன்மீக வாழ்வோடு | **5B**<br>குழு அமர்வுகள் | **5C**<br>குழுச்செபம், குழுஅமர்வு பகிர்வு, போன்ற செயல் பாடுகளில் | **5D**<br>உறுப்பினர் குழு வழிகாட்டி | **5E**<br>கொண்டாட்டங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| தன்னை இனைத்துக் கொள்ள உதவி புரிதல். (555) | | பங்கெடுத்தல் | | |
| | குழு வழிகாட்டியைச் சந்தித்தல் | கூட்டங்கள் மற்றும் குழு வழிகாட்டியைச் சந்தித்தல் போன்ற வற்றைத் திட்டமிட்டுத் தவறாமல் செயல்படுத்துதல் | குழு வழிகாட்டி அல்லது அவரதுபதில் ஆள் (பிரதிநிதி) | இயேசுவின் அடிச்சுவட்டில் லூயிமரிய பாரண்ட்குளம் |
| **6A** இறைத்திருவுளச் சபையின் ஐந்து ஆன்மீக வழிகளைத் தகுந்த விதத்தில் உறுப்பினர் தெரிந்து, அவற்றில் பயிற்சி கண்டு முழுப்பயனையும் அடைய துணைபுரிதல் | **6B** உள் ஆன்மீக உணர்வுகளை ஆழ்ந்து அறிந்து அவற்றைப் பயன்படுத்த போதுமான பயிற்சிகளைச் செய்தல் | **6C** விருப்பநிலைப் பயிற்சிக் கையேட்டை வாசித்தல் | **6D** உறுப்பினர் பகுதி வழிகாட்டி அல்லது அவரது பதில் ஆள் | **6E** விருப்பநிலைப் பயிற்சிக் கையேடு இயல்-4 |
| | குழுவோடு ஒன்றினைந்து செயல்படுவது | தன்னுடைய பொறுப்பாளர்களுடன் பகிர்ந்து கொள்தல் | குழு வழிகாட்டி | |
| | பயிற்சி மற்றும் புதுப்பித்தல் அமர்வுகளில் பங்கெடுத்தல் | கூட்டங்களில் முழுமனதோடு மற்றும் ஆர்வத்தோடு பங்கெடுத்தல் | உறுப்பினா குழு வழிகாட்டி | |
| | தனது நடைமுறை,செயல்பாடு இவற்றைப் பற்றிய பரிந்துரைகளை நல்மனதோடு ஏற்றுச்செயல்படுதல் | பரிந்துரைகளையும், கருத்துக்களையும் திறந்த உள்ளத்தோடு ஏற்றுக் கொள்தல் | உறுப்பினர் மற்றும் மாநில பயிற்சி இயக்குநர் | |
| | | | உறுப்பினர் மற்றும் பகுதி | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழிகாட்டி | |
| **7A**<br>உறுப்பினரின் தனிப்பங்களிப்பையும், குழுவாழ்க்கையின் அனுபவங்களையும் உறுப்பினர் தனது வாழ்க்கை அனுபவங்கள் வழியாக அதன் மகத்துவத்தைக் கண்டு உணரத் துணைபுரிதல் | **7B**<br>குழுவாழ்க்கையில் ஆர்வத்தோடு பங்கெடுத்தல் | **7C**<br>குழு உறுப்பினர்களின் பண்பு நலன்களில் கவனம் செலுத்துதல். உறுப்பினர்களிடம் நட்புணர்வையும்,புரிந்துணர்வையும் வளர்த்தல். | **7D**<br>உறுப்பினர் குழு உறுப்பினர்கள் | **m** |
| | | குழு வாழ்வில் ஈடுபாட்டோடு செயல்படுதல். | உறுப்பினர் மற்றும் குழு வழிகாட்டி | |
| | | மோதல்கள் ஏற்படும் போது நம்பிக்கையோடும், பிறரன்புப் பண்போடும் எதிர் கொள்தல். | உறுப்பினர் | |
| கூட்டு வாழ்க்கையில் உண்மையான அன்போடு வாழ்தல். குழு வாழ்க்கையில் தான் நமது மறைப்பணிக்குத் தேவையான | கூட்டுப் பொறுப்புணர்வை ஏற்றுக் கொள்தல். | வழி காட்டுதல் அமர்வுகளில் பங்கு கொண்டு பகிர்ந்து கொள்தல். ஒவ்வொருவரின் மனநிலையைப் புரிந்து கொள்ளுதல். | உறுப்பினர் | |
| | குழுவைத் திரு அவையின் அங்கமாகக் கருதுதல். | மற்ற உறுப்பினர்களின் உள் மனதைப் புரிந்து கொள்தல். | உறுப்பினர் | |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆற்றலைப் பெற்றுக் கொள்கிறோம் என்பதை உணர்ந்து வாழ்தல் விருப்பநிலைப் பயிற்சிக் கையேட்டின் பொருளை முழுமையாக அறிந்து கொள்தல். | | பொறுமை, மன்னிப்பு, விருந்தோம்பல் போன்ற பண்புகளை வளர்த்துக் கொள்தல். கிறிஸ்துவின் பிரசன்னம் குழு வாழ்வில் பிரதிப் பலிப்பதை உணர்ந்து கொள்தல். | உறுப்பினர் | |
| **8A** கடவுளின் அழைப்பைத் தேர்ந்து தெளியவும், அவருடையப் பயிற்சிக் காலத்தை நீட்டிக்கவோ, முடிக்கவோ வேண்டும் என்கின்ற பயிற்சியாளருக்கு அனுமதியளித்தல். | **8B** ஜெபம்<br><br>பகுதி வழிகாட்டியைச் சந்தித்தல் | **8C** செபத்தின் வழியாகத் தேர்ந்து தெளிதல். பயிற்சியாளர், பயிற்சி ஒருங்கிணைப்பாளர்களைச் சந்தித்து அவர்கள் வழியாகச் செயல்படும் ஆவியாரின் வழி காட்டுதல்களுக்குச் செவி மடுத்தல். அவன்/அவள் தனது முடிவை மாநில இயக்குநரிடம் எழுத்துப் பூர்வமாகத் தெரிவித்தல். | **8D** பயிற்சியாளர்<br><br>பயிற்சியாளர் குழு வழிகாட்டி அல்லது அவரது பதில் ஆள் பயிற்சியாளர் | **8E** விருப்பநிலையில் பயிற்சியாளர் வழிகாட்டி இயல் - 2. |

கால அளவு: ஆறு மாதத்திலிருந்து இரண்டு ஆண்டுகள் வரை.

## பின்னிணைப்பு – B

## திருமுழுக்கு அழைத்தல்

(குறிப்பு: திருமுழுக்கு அழைத்தலைப் பற்றிய கருத்துக்களுக்குத் தாராளமாகத் துணைபுரிந்த கோலட் மாசே ommi அவர்களுக்கு நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்)

ஒருவருடைய மனித அழைப்புக்கு, திருமுழுக்கு அழைத்தல் எவ்வாறு உதவி புரிகின்றது?

இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழமுடிவெடுத்திருக்கின்ற நம்பிக்கையாளரின் நிலையை அவர் பிறருக்குப் பணிபுரிகின்ற செயல்பாடுகளின் அடிப்படையில் தான் கணிக்கமுடியும். கண்ணால் காணக் கூடிய திரு அவையில் இணைந்து பணியாற்றுவதின் வழியாகத்தான் நம்பிக்கையாளர் தன் அழைத்தலை உணரமுடியும். அதாவது கிறித்துவன் சீடன் என்பவன் தனக்காக மட்டும் வாழ்பவர் அல்ல. மாறாகப் பொறுப்புணர்வோடு, பிறருடன் இணைந்து செயல்படுவதின் வழியாகத்தான். (Gaetane Guillemette et.al.eds une sentunielle de vigilance. A.D.D.P.V. August 1998 P 38)

இறையியலார் சைமன் துபோர் அவர்களின் கருத்துப்படி திருமுழுக்கு அழைத்தல் என்பது ஆண்டவராகிய இயேசுவோடு இணைந்து வாழ்வது. அதாவது மனித வாழ்வு இயேவின் ஆவியின் வல்லமையால் உருமாற்றம் பெறுவது.

ஒவ்வொரு கிறித்தவனும் கடவுளின் குழந்தை. கடவுளின் வல்லமையால் மீட்கப்பட்டு, தன்னிறைவு பெற்றவர். இயற்கையோடும், கடவுளோடும், பிறரோடும் நெருங்கிய உறவுடன் வாழ அழைக்கப்பட்டவர். கடவுளின் இந்த நேரடி தலையீட்டிற்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்.

உயிர்த்த இயேசுவின் வாழ்வோடு தன்னை முழுமையாக இணைத்து வாழுகின்ற ஒவ்வொரு கிறித்தவனும் மறு கிறித்துவாக வாழ்கிறான். ‘‘இனி வாழ்பவன் நானல்ல கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்’’. (கலா: 2:20) (Dictionnaire de la vie spirituella pain: cerf,1983, P 1173)

நம்பிக்கை என்பது அழைத்தல் வாழ்வில் ஒரு பெரிய மறைஉண்மை. திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்ட பல்வேறு நபர்களின் அழைத்தல் வாழ்வில் பின்வரும் அம்சங்கள் அடங்கியிருப்பதைக் காணலாம்.

- கடவுளைப் பொறுத்த அளவில், அவரே நபர்களைத் தேர்வு செய்கிறார்.அவர்களுடைய பணியையும் தருகிறார்.

- அழைத்தலைப் பெறுபவர்களைப் பொறுத்த அளவில், சில சமயங்களில் பயம், சில சமயங்களில் குழப்பம் அதன்பின் தாராள உள்ளத்தோடும், அன்போடும், சுதந்திரத்தோடும் அழைத்தலுக்குப் பதிலிறுத்தல்.

அழைத்தல் என்பது, கடவுள்யாரை அழைக்கிறாரோ அவர்கள் மீது அவர்காட்டுகின்ற அன்பின் வெளிப்பாடு ஆகும். மறைப்பணிக்காக அழைக்கப்பட்டவர் விரும்பி ஏற்றுக்கொள்வது மேலான காரியமாகும்.

இறைவனின் அழைப்புக்குச் சுதந்திரமாகத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்த அன்னைமரியாள் நமக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்கள். கடவுள் தன்பணியைச் செய்ய அழைக்கப்பட்டவர்கள் முழுமனதோடு, மகிழ்ச்சியாக இப்பணிக்குத் தங்களை அர்ப்பணிக்க முன்வருபவர்களுக்கு அன்னைமரியாள் ஒரு நல்ல முன்மாதிரியாகத் திகழ்கின்றார்.

திரு அவைக்குத் தாயாகவும், மீட்பருக்கு அன்னையாகவும் இருக்க, அன்னைமரியாள் விருப்பத்தோடு ஆம் என்று சொன்ன பொழுதே தனது நம்பிக்கைத் திருப்பயணத்தைத் தொடங்க ஆரம்பித்தாள். இதுதான் அவளது அழைத்தல் பயணத்தின் ஆரம்பமாகும். இப்படித் தொடங்கப்பட்ட அவரது பயணம் நீண்ட நெடிய பயணமாகக் கல்வாரி மலைவரைத் தொடர்ந்தது. கல்வாரி மலையில் வேதனையான வேளையிலும் ஆம் என அன்னை மரியாள் தன்னைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்த நிகழ்வுதான் கடவுளின் தாய் என்ற உயர்நிலைக்கு அன்னைமரியாளை இட்டுச் சென்றது. மேலும் இயேசுவின் உயிர்ப்புக்குப்பின் மேல் மாடியில் அப்போஸ்தலர்களோடு கூடிச் செபித்து ஆவியின் வல்லமையைப் பெற்று திரு அவையையும் அழைத்தலையும் தோற்றுவித்தார்கள்.(Des novella vocation pour une nouvelle Europe, P.51)

**திரு அவை: அழைக்கப்பட்டவர்களின் திருக்கூட்டம்**

தொடக்கத் திரு அவையில் கடவுளின் அழைப்புக்குத் தங்களை முழுவதும் அர்ப்பணிப்பதுதான் கிறித்தவ வாழ்வின் நோக்கம் என்பதை உணர்ந்திருந்தார்கள். இந்த அழைப்பை ஏற்று போதித்தவர்களைத் தான் நற்செய்தி நூல்கள் எடுத்துரைக்கின்றன. இவர்களின் போதனைகளைக் கேட்டமக்கள், தாங்களும் கடவுளால் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று உணர்ந்து கிறித்தவர்கள் என்ற பெயரில் ஒன்று கூடினார்கள்(உரோமை:1:1-7; 1கொரி; எசாயா. 26:7,24, (Une sentinelle de vigilance, P.34)

‘‘கடவுளின் அன்பைப் பெற்று, இறைமக்களாக அழைக்கப்பட்டுள்ள உரோமை நகரமக்கள் அனைவருக்கும், இயேசுக் கிறிஸ்துவின் பணியாளனும், திருத்தூதனாக அழைப்புப் பெற்றவனும் கடவுளின் நற்செய்திப்பணிக்கெனஒதுக்கி வைக்கப்பட்டவனுமாகிய பவுல் எழுதுவது. நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம்

இயேசுக்கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் அமைதியும் உரித்தாகுக!"(உரோமை:1:1,7)

"தந்தை என்னை அனுப்பியது போல, நானும் உங்களை அனுப்புகிறேன்" (யோவான் 20:21)

**மறைப்பணிக்காக:**

அழைப்பும் பணிவாழ்வும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றது. கடவுளின் அழைப்பை விளக்குவதும் இந்த அழைப்புக்கு இயேசுவைப் போல முழுமையுடன் செயல்படுத்துவதும் ஆகும்.(Des Novelles vocations pour une nouvelle Europe, P.45)

கடவுளின் அழைப்பை உண்மையிலே கண்டுகொள்ள வேண்டுமென்றால். அது பிறர்மீது சிறப்பாக ஏழை எளிய மக்கள் மற்றும் நம்மை ஏற்றுக்கொள்ளாத மக்கள் மீது நாம் காட்டும் அக்கறையில் வெளிப்பட வேண்டும். இயேசுக்கிறிஸ்து திருஅவைக்குக் கொடுத்த மறைப்பணியை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து ஏற்றுக் கொள்ளவேண்டும். மறைப்பணியானது நம் எல்லாரையும் கடந்தது. இயேசு பணித்தவாறு பிறரை நாம் அன்பு செய்ய நமது சொந்த பலம்மட்டும் போதாது. பிறருக்கு பணிபுரிதலில் உண்டாகும் மகிழ்ச்சி, அதேவேளையில் அனைத்தையும் நம்மால் செய்ய முடியவில்லையே என்ற ஆதங்கம். இயேசுவின் சீடனாக இவ்வுலகை மாற்ற விரும்பும் அனைவரின் உள்ளத்தில் எழுகின்ற இயல்பான உணர்வுகளாகும் (Alain Matheeums, S.J., "Accompasner sur son chemin celin que Dien appellee" In vie consacvee, 70 annee, n6, nov-dec 1998, P.392)

**மேலும் படித்துப் பயன் பெற**

1)பின்வரும் திருவிவிலிய குறிப்புகளில், அழைத்தலைப்பற்றிய பண்புகளைச்சுட்டிகாட்டு. அதாவது:

அபிரகாம் (தொடக்கநூல் 2:12) மோயிசன் (வி.ப.நூல் 3:1..), ஆமோஸ் (ஆமோஸ் 7:5..) எசாயா (எசாயா:6:8..) எரேமியா(எரே:1:5..) எசக்கியேல் (எசக்:3:1,4..) அப்போஸ்தலர்கள் (லூக்:5:1..,மத்:10:1..)

- கடவுளின் தெரிவும் அழைப்பும்.
- பணி கொடுக்கப்படுதல்.
- அழைக்கப்பட்டவரின் தயக்கமும் மறுப்பும்.
- அழைப்புக்கு அடிபணிந்து ஏற்றுக்கொள்தல்.

2)பின்வரும் விளக்கங்கள் உனக்கு என்ன புரிதலைத் தந்துள்ளது என்பதைப் பகிர்ந்து கொள். ஒருகிறித்தவன் கிறிஸ்துவின் சாயலை தனக்குள் உருவாக்கிக் கொள்ள முடியும்.

இது எப்படிச் சாத்தியமென்றால், உயிர்த்த கிறிஸ்துவின் வாழ்வில் படிப்படியாகப் பங்குபெறுவதன் மூலம் அடையலாம்.(Diction nnaire de la vie spirituella, P.1173)

3)கிறித்தவனின் வாழ்வில் ஒவ்வொரு நொடிப் பொழுதும் கிறிஸ்துவின் அழைப்புக்குச் செவிமடுத்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதைச் செயல்படுத்த வேண்டும். எனவே அழைத்தல் என்பது முடிவான ஒன்றாக நமக்குத் தெரிவிக்கப்படுவதில்லை.மாறாக நாம்தான் படிப்படியாக அதன் பொருளை நாம் கண்டுகொள்கிறோம். எனவே ஒரே நேரத்தில் நாம் கண்டுகொள்ளவதல்ல. மாறாகப்படிப்படியாக கடவுளின் வாழ்வில் கண்டு கொள்கிறோம். இது ஒரு தொடர் பயணம். உன்னுடைய வாழ்க்கையில் திருமுழுக்கு அழைத்தலைப் பற்றிய தெளிவு அல்லது அழைப்பு பற்றித் தெரிந்து கொண்ட, அல்லது புதிய விளக்கத்தைப் பெற்ற வாழ்க்கை அனுபவம் ஏதாவது உண்டா?

4) என்னோடு வாழ்கின்ற அல்லது பணிபுரிகின்ற இடத்தில் உள்ளவர்களோடு நான் எனது பங்களிப்பை எவ்வாறு செய்கிறேன். என்னுடைய மறைப்பணியின் நோக்கமான பிறருக்குப்பணிசெய்யும் பண்பில் எவ்வாறு வளர்ந்திருக்கிறேன் என்பதைச் சிந்தித்துப்பார். கிறித்துவை ஏற்றுக்கொண்டவர்களோ, அல்லது ஏற்றுக் கொள்ளாதவர்களோ, மற்றும் குழந்தைகள், இளைஞர்கள், இளம்பெண்கள், வயதுவந்தோர், முதியோர் வாழ்க்கை அழைத்தலையோ, கிறித்தவ அழைத்தலையோ கண்டுகொள்ள அவர்களுக்குநான் என்ன உதவி செய்வேன். திருமுழுக்குப் பெற்றவர்கள் என்றால் அவர்களுக்கு என்பணி என்ன?

5) அன்னை கன்னி மரியாள் தன் அழைத்தலிலும், பணிவாழ்விலும் தான் கொண்ட ஈடுபாடு அவரது வாழ்க்கையின் செயல்பாடுகளில் அனைத்திலும் சிறப்பாக ஒரு சில வாழ்வின் நிகழ்வுகளிலும் வெளிப்படுத்தப்பட்டது. அப்படிப்பட்ட தருணங்களைக் குறிப்பிட்டு அதற்கு அன்னை மரியாளின் பதிலிறுப்பைக் கண்டுகொள்

## பின்னிணைப்பு – C
## மறைத்தூதுப் பணியின் நோக்கம்
## ஓர் இறையியல் கண்ணோட்டம்

கிறிஸ்துவினுடைய அன்பின் அகலம், ஆழம், நீளம், உயரம் என்னவென்று உணர்ந்து அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெறவேண்டும் (எபேசி:3:18-19) இதன் மூலம் கடவுளின் முழுநிறைவையும் பெற்றுக் கொள்வோம். இதன் பொருளை நாம் உள்வாங்கிச் சிந்திக்கும் போது நமது மறைப்பணி வாழ்வின் நிறைவை அடைகின்றோம். எனவே இறைவார்த்தையின் ஒளியில், இறையியல் சார்ந்த கருத்துக்களை சிந்திப்போம்.

**1. அமைதி:**

**பழைய ஏற்பாடு:**

எபிரேய மொழியில் அமைதி என்ற சொல் ‘ஷலோம்’ என்ற அழைக்கப்படுகிறது. இந்த சொல் பொருந்தியிருக்கிறது, நிறைவானது, முழுமையானது ஆகிய பொருள்களைத் தருகிறது. இதனடிப்படையில் பார்த்தால் கடவுளின் திட்டம் இயேசுக்கிறிஸ்துவில் முழுமையாக நிறைவேறுகிறது. இதுவே நமது மீட்புத் திட்டத்தின் நிறைவான முடிவாகும்.

எனவே அமைதி என்பது ஒரு செயலின் முடிவு. அதாவது இறையரசைக்கட்டியெழுப்ப நாம் உழைக்கும்போதும், கிறிஸ்துவின் மதிப்பீடுகளை நாம்வாழும் போதும், பிறருக்குப் பறைசாற்றும் போதும் இறுதியில் நாம் அடையும் மனநிலைதான் அனுமதி. இந்த கடவுளின் அனுமதி நம் ஒவ்வொருவரின் இதயத்திலும், மனித சமுகத்திலும், ஒன்றுப்பட்ட சமூகத்தை உருவாக்குவதிலும் வெளிப்படும்.

இதனடிப்படையில் அனுமதி என்பது ஆண்களோ, பெண்களோ, இயற்கையோடு இணைந்து வாழ்வதும், தங்களுக்குள் நட்புறவுடன் வாழ்வதும், கடவுளோடு இணைந்து வாழ்வதும் ஆகும் எனவிளக்கம் கூறலாம் அனுமதி நம் உள்ளத்தின் ஆழத்தில் ஆழ்ந்த நிறைவைக் கொண்டு வருகிறது. கடவுள் தன் மக்களுக்கு வாக்களித்த ஆசிர்வாதங்களுள் ஒன்றாகும். (சங்:132:7-14,எபிரே:4:1-11)

கடவுளின் அனுமதி ஒரு நீதிப் பணியாகும். பிறருடைய உரிமைகளை மதிப்பது, ஒற்றுமை உணர்வுடன் வாழ்வது போன்ற பண்புகள் உடன்படிக்கை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியவை என திருவிவிலியம் கூறுகின்றது.

ஆனால் பாவத்தின் காரணமாக, அமைதியானது இன்னும் அடையவேண்டிய ஒன்றாக, பாதுகாக்கப்பட வேண்டியதொன்றாக, பகைவனான சாத்தானிடமிருந்து உள்ளும், புறமும் போராடி வெற்றி பெறக்கூடிய ஒன்றாக இருக்கிறது.

சுயநலம், பய உணர்வு, பாதுகாப்பின்மை போன்ற தீய சக்திகளின் ஆயுதங்களால் காயப்பட்ட நம் இதயங்களை குணப்படுத்தவேண்டும். எனவேதான் இந்த குணமாக்கும் அருளை நமது செபங்களிலும், நற்கருணைக் கொண்டாட்டங்களிலும் விரும்பிவேண்டிப் பெற்று, கடவுளுக்கும், மனித சமூகத்திற்கும் இடையே உள்ள உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இத்தகைய பாவ மனநிலைக்கு மத்தியில்தான், இறைவாக்கினர்கள், நீடித்த நிலைத்த அமைதியை இறைச் சமூகத்திற்குப் பறைச்சாற்றினார்கள். இந்த அனுமதி என்னும் கொடை மனமாற்றத்தைத் தருகிறது, பாவத்தை விட்டு விலகி கடவுளுக்காகவும் அவரது அன்புக்காகவும் வாழ நம்மைப்பணிக்கின்றது. இந்த அமைதியானது நம்மை எப்போதும் தூய்மையாக்கிப் புதுப்பிப்பதற்கு மீட்பின் அருட்சாதனைங்கள் துணைபுரிகின்றன. அதாவது திருமுழுக்கு, ஒப்புரவு அருட்சாதனங்கள் இதில் முக்கியத்துவம் பெறுகிறது. இத்தகைய மீட்பின் அருட்சாதனங்கள் வழியாக, புதுப்பிக்கும் ஆவியானவர் நம்முள் இறங்கி ஆற்றலை வழங்குகிறார். எனவே நாம் அமைதியாக, இந்த ஆற்றல் மிக்க ஆவியார் நம்மில் செயல்பட அனுமதித்து உயிருள்ள அன்பின் சுடர்களாக வாழ்ந்து நிறைவு பெறுவேண்டும்.

எனவேதான் இறைவாக்கினர்கள் கடவுளே நமக்கு அமைதியை அருள்வார் எனப்பறைசாற்றினார்கள் (மிக்கா:5:5). கடவுளே நமக்கு அமைதியின் அரசரை அருள்வார். அவர் இயற்கையை மனுக்குலத்திற்குப் பணியவைத்து, நம்மை மீண்டும் கடவுளின் பிள்ளைகளாக மாற்றுவார். பிளவுண்டு கிடக்கும் அரசாட்சிகளும் தங்களுக்குள் ஒன்றுபட்டு நீடித்த, நிலைத்த அமைதியில் வாழ்வார்கள்.இருந்த போதிலும் இந்த அமைதியின் அரசர், துன்புறும் ஊழியனாக, சகோதரசகோதரிகளின் பாவங்களுக்குப் பரிகாரமாக தம் உயிரையே அவர்களுக்காகக் கையளிப்பார். அவரது கல்வாரிப்பலி நமது பாவங்களுக்குப் பரிகாரமாகக் கொடுக்கப்பட்ட உயர்ந்த விலையாகும்.

‘‘ஆறுபோல் நிறைவாழ்வு பாய்ந்தோடச் செய்வேன்; பெருக்கெடுத்த நீரோடைபோல் வேற்றினத்தாரின் செல்வம் விரைந்துவரச் செய்வேன்’’ (எசாயா:66:12) என யாவே கடவுள் கூறுகிறார். அவர் வழியாக நாடுகளின் காயங்கள் குணமாக்கப்படும்.(எசாயா:53:5, 57:18-21)

**புதிய ஏற்பாடு:**

**நற்செய்தி நூல்கள்:**

இயேசு தனது பிறப்பின் நிகழ்விலேயே அமைதியைக் கொண்டுவந்தார்.‘‘பூவுலகில் நன்மனத்தோர்க்கு அமைதியும் ஆகுக’’ என வானதூதர் வயல் வெளிகளில் தங்கள் கிடைக்குக் காவல் காத்துக் கொண்டிருந்த இடையர்களுக்குக் கூறினர். முதலில் கடவுளோடு அமைதி ஏற்படுத்தப்பட்டது என்பதை வெளிப்படுத்த வானதூதர்கள் முதலில்

''உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உண்டாகுக'' எனப்பாடினார். இயேசு இவ்வுலகை விட்டுச்செல்லுமுன் சீடர்களுக்குத்தன் உடன்படிக்கையின் நினைவாக விட்டுச்சென்றது அமைதி. ''அமைதியை உங்களுக்கு விட்டுச்செல்கிறேன்; என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம், மருள வேண்டாம்''.(யோவான்:14:27) இயேசு அமைதியை அறிவிப்பதோடு மட்டும் நின்று விடவில்லை. மாறாக அமைதியைக் கொடுத்தார். இயேசுவின் வார்த்தைகள் சக்திவாய்ந்தவை.அவை அமைதியை உருவாக்கின.

இயேசு நோயுற்றவர்களை நோக்கி ''அமைதியோடு செல்லுங்கள்'' என்றார். இந்த அமைதி அவர்களை ஒளிவடிவான ஆடையைப் போல போர்த்தி, புத்துணர்வும் புத்தெழுச்சியும் கொடுத்தது. அவரை நம்பியவர்களுக்கு மன்னிப்பையும், நல்ல உடல் நலத்தையும் வழங்கியது. இயேசு தரும் இந்த அமைதி, நித்தியத்திற்கும் பல பரிமாணங்களைக் கொண்ட முழுவதும் புதுமையானது. இத்தகைய மனமாற்றத்திற்குத் தேவையான புரட்சிகரமான செயல்பாடுகளைப்பார்த்து பாவம் நிறைந்த உலகம் அதிர்ச்சியோடு, ஆச்சரியத்தோடு பார்த்தது.

எனவேதான் ''மண்ணுலகில் அமைதியை ஏற்படுத்த வந்தேன் என்று நினைக்கிறீர்கள்? இல்லை, பிளவு உண்டாக்கவே வந்தேன் என உங்களுக்குச் சொல்கிறேன்''. (லூக்:12:51) என்ற இயேசுவின் வார்த்தைகளைக் கேட்ட அப்போஸ்தலர்கள் அதிர்ச்சியடைந்தார்கள். ஏனென்றால் இறையாட்சியின் மகத்துவம் என்னவென்றால் அமைதியை நிலைநாட்டுவோர் தங்களை அன்பு செய்பவர்களுக்கும், தங்களுடைய நண்பர்களுக்கும் வித்தியாசமாகக் காணப்படுவார்கள். இவ்வாறு இல்லாமல், தங்களது மறைத்தூதுப்பணியில் நம்பிக்கைக்குரியவர்களாக நிலைத்து நிற்க முடியாது. இயேசுதரும் அமைதி பாவத்திலிருந்தும், நோயிலிருந்தும், சாவிலிருந்தும் விடுதலை தருவது. இயேசுவின் உயிர்ப்பின் வெற்றிதான் முழுமையான, நிலைத்த அமைதியாகும் ''உங்களுக்கு அமைதி உரித்தாகுக'' என்ற கொடைதான் இயேசுவின் உயிர்ப்புக்குப்பின் கலங்கித் தவித்து, பயந்து நின்ற தன் அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த மாபெரும் கொடையாகும். இந்த அமைதி அகில உலகிற்கும் தரப்படவேண்டும். அனைத்து மனித சமூகத்திற்கும் சென்றடைய வேண்டும் பின்வரும் வாழ்வு தரும் வாதுத்தைகளை இயேசு கூறுகிறார்.

''தந்தை என்னை அனுப்பியதுபோல. நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார். பின் அவர் அவர்கள் மேல் ஊதி தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை

மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா'' என்றார். மீட்பரும் ஆண்டவருமான இயேசுவை யார் தங்களுடைய இதயங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

**புனித பவுலடியார்:**

பழைய ஏற்பாட்டில் எழுதியுள்ள படியே, இயேசுக்கிறிஸ்துவே நமது அமைதி என அப்போஸ்தலர் பவுலடியார் மிகத்தெளிவாகப் பறைசாற்றுகிறார். இவ்வாறாக யாவே கடவுள் ஒருவருக்கு மட்டுமே சொல்லப்பட்ட இந்த கருத்தை கடவுளின் திருமகனான இயேசுவுக்கும் பொருந்தும் என விளக்கிக் கூறுகிறார். இயேசுவே நமது புதிய உடன்படிக்கை, அவரே நம் தலைமைக்குரு. இவேரே, கடவுளுக்கும், மனுக்குலத்திற்கும் இடையே ஏற்பட்ட முறிவைச் சரிசெய்பவர். (எபிரே:5:1-10)

புனித பவுலடியாரின் கருத்துப்படி இயேசுவே யூத இனத்தாரையும்,புற இனத்தாரையும் ஒன்றிணைப்பவர்.இருவரையும் இணைத்து ஒரே உடலாக அதாவது திரு அவையாக உருவாக்கினார். (எபேசி:2:14-22) ''அவரே நமக்கு அமைதி அருள்பவர். அவரே இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய்த்தகர்தெறிந்து அவர்களை ஒன்றுபடுத்தினார். இரு இனத்தவரையும் தம்மோடு இணைந்திருக்கும் புதியதொரு மனித இனமாகப் படைத்து அமைதி ஏற்படுத்தவே இவ்வாறு செய்தார். தாமே துன்புற்றுப் பகைமையை அழித்தார் சிலுவை வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்க இப்படிச்செய்தார். (எபேசி:2:14-16)

''சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலை நாட்டவும், விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை அனைத்தையும் அவர் வழி தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டார்''.(கொலோ:1:20)

''சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலைநாட்டவும், விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் அவர்வழி தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டார். எல்லாவற்றுள்ளும் முதன்மை பெறுமாறு இறந்து உயிர்த்தெழுவோருள் அவர் தலைப்பேறு ஆனார். (கொலோ:1:15)

''அவரே ஆல்பாவும், ஒமேகாவும், தொடக்கமும் முடிவும், அனைத்துமாக இருக்கிறார்.'' (தி.வெ.1:18, 1கொரி. 15:28)

''அவர் வந்து, தொலைவில் இருந்த உங்களுக்கும், அருகிலிருந்த அவர்களுக்கும் அமைதியை நற்செய்தியாக அறிவித்தார். அவர் வழியாகவே, இரு இனத்தவராகிய நாம் ஒரே தூய ஆவி மூலம் நம் தந்தையை அணுகும் பேறு பெற்றிருக்கிறோம்''.(எபேசி:2:18)

இந்த அருள்தான் கடவுளின் குழந்தைகள் என்னும் மகிழ்ச்சியை நமக்குத் தருகிறது. கண் காணாத நம்பிக்கையில் பங்கெடுக்கத் துணை புரிகிறது. ஏனென்றால், இயேசுவின் சிலுவை மரணத்தால் கடவுளின் பிள்ளைகளாகும் பாக்கியம் பெற்றோம். எனவே கடவுளின் திட்டத்தில் நம்மைப்பற்றி புனித பவுலடியார் துணிந்து கூறுவதாவது:

‘‘எனவே இனி நீங்கள் அந்நியர் அல்ல: வேற்று நாட்டினரும் அல்ல. இறைமக்கள் சமுதாயத்தின் உடன் குடிமக்கள்: கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்’’ (எபேசி 2:19).

**தொகுப்புரை:**

**மூன்று கோட்பாடுகள் (or) கொள்கைகள்:**

அமைதி, ஒற்றுமை ஆகிய இறையரசு மதிப்பீடுகளை இவ்வுலகில் நிலைநாட்ட ஒவ்வொரு கிறித்தவனும் முயல வேண்டும். இயேசுக் கிறஸ்து வழியாக கடவுள் நமக்குக் கொடுத்த இப்பணியை செவ்வனே செய்ய நமக்கு வழிகாட்டியாக மூன்று கோட்பாடுகள் தரப்பட்டுள்ளன.

**முதல் கோட்பாடு:**

‘‘இயேசுக் கிறிஸ்துவை அகில உலகின் தலைவராக ஏற்றுக் கொள்வதின் விளைவாக அகில உலக அமைதியை நிலை நாட்டுவோம்.’’

**இரண்டாம் கோட்பாடு:**

‘‘திரு அவையானது எப்போது ஜாதி, இனம்,ஆண், பெண் என்ற பாகுபாடுகளைக் களைகிறதோ அப்போதுதான் உலகில் அமைதி உருவாகும். ஏனென்றால் திரு அவையானது இயேசுவின் மறை உடல் மற்றும் ஆவியின் வல்லமைகளைப் பகிர்ந்தளிக்கும் இடமாகும்.’’

**மூன்றாவது கோட்பாடு:**

‘‘இறுதியாக நீதி என்றுதான் கடவுள் முன்னும் மனிதர் முன்னும் அமைதி ஏற்பட அடித்தளமாக இருக்கிறது. ஏனென்னறால் நீதி மட்டும்தான் பிரிவினைகளுக்கெல்லாம் காரணமாக பாவத்தை விலக்குகிறது.’’

**2. சகோதரத்துவம்:**

‘‘சகோதரர்கள் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று, எத்துணை இனியது. அது ஆரோனின் தலையினில் ஊற்றப்பெற்ற நறுமணத் தைலம் ……

அது எர்மோனின் மலைப்பனி சீயோனின் மலைகள் மேல் இறங்குவதற்கு ஒப்பாகும்’’ (சங். 133:1-3)

பிறரன்பின் ஒருவகை வெளிப்பாடுதான் சகோதரத்துவம். பிறரன்புதான் நம் அனைவரையும் ஒரே குடும்பஉறுப்பினர்கள் போல ஒன்றிணைத்து, நமது குழுக்களிலும் இத்தகைய மனநிலையை உருவாக்குகிறது. எனவே, சகோதரத்துவம் என இங்கே குறிப்பிடுவது ஒரு உயர்ந்த பிறரன்பைச் சுட்டிக் காட்டுகிறது. அதன் மாண்பையும், மகத்துவத்தையும், ஆற்றலையும் வெளிப்படுத்துகிறது. நம் சபையின் நோக்கத்தை (இலட்சியத்தை) இவ்வாறு குறிப்பிடலாம். ‘‘இயேசுக் கிறிஸ்துவில் சமத்துவ சகோதரத்தைக் கட்டி எழுப்புவது.’’

இந்தச் சகோதரத்துவம் பல்வேறு கூறுகளை அடித்தளமாகக் கொண்டது. இவற்றுள் பல இயல்பானது மற்றவை இறைவனின் அருளால் செய்யக் கூடியது. ஒவ்வொருவரின் மனதின் உள் ஆழத்தில் சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும் என்கின்ற உள்ளுணர்வு இயல்பாகவே உள்ளது. ஆனால் மனுக்குலத்தின் இன்றைய நிலையைப் பார்க்கும்போது, இத்தகைய உள்ளுணர்வு ஒருவரின் பிறப்பிலிருந்து பாழ்பட்டதாகக் காணப்படுகின்றது. இது ஏன் என்பது நமக்குப் புரியாத புதிராக இருக்கிறது.

**பழைய ஏற்பாடு:**

தொன்மையான நாகரீகங்களில் கவனித்தால் அவர்கள் ஒரே தாயின் பிள்ளைகளைத்தான்என்று அழைத்தார்கள். அதன்பின் தங்கள் குடும்பத்தின் உறவினர்களை உடன்பிறப்புகளாக அழைக்க முற்பட்டார்கள்.அதன்பின் தாங்கள் இனம், குழு, நாடு இவைகளைச் சார்ந்தவர்களையும் சகோதரர்கள் என அழைக்கும் பழக்கம் விரிவுபடுத்தப்பட்டது. சகோதரர்கள் என அழைக்கப்பட்டாலும், அவர்களுக்கிடையே அமைத்த உறவு வேறுபட்டது. சான்றாக அபிரகாமின் நம்பிக்கையில் பங்கெடுத்த மக்கள் அனைவரும் தங்களைச் சகோதர சகோதரிகள் என்று அழைப்பதுப் பெருமை கொண்டார்கள். ஆரோன் குலத்தைச் சார்ந்தவர்களும் இத்தகைய உறவை வளர்த்தார்கள். தெய்வீக வெளிப்பாட்டின் படி உலகிலுள்ள அனைவரும் சகோதர சகோதரிகளாக வாழவேண்டும் என உணர்த்தப்பட்டது. இருந்தபோதிலும், ஒரே குடும்பத்தில் பிறந்த ஆண், பெண், சகோதர சகோதரிகளாக வாழமுற்பட்டார்கள், இதுதான் கடவுளின் திருவுளமும் ஆகும். ஆனால் இன்றைய நிலையைப்பார்க்கும்போது பிளவுபட்ட சமுதாயமாக பிரிவினையோடு, வாழ்வதைத்தான் காண்கின்றோம். நம்மைக் காக்கும் கடவுள் முன்னெடுக்கவில்லையென்றால் கடவுளின் இலட்சியமான ஒரு குடும்பமாக சகோதரஉணர்வோடு வாழமுடியாது. தொடக்க காலத்தில் காயின், லாமெக் போன்றோரிடம் காணப்பட்ட பகையுணர்வின்தாக்கம் அவ்வப்போது பாதிக்கப்பட்ட, காயப்பட்ட, பழுதான இதயத்தில் வெளிப்படுவதைக் காண்கிறோம். அவ்வபோது பாவம் மிருகத்தைப்போல நம் இதயத்தைத்தாக்கி பாழ்படுத்துகின்ற நிலையை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும்.(தொ.நூ:4:7;எரே:17:9)

உடன்படிக்கை அனுபவத்தின்படி இஸ்ராயேல்மக்களின் சகோதர உணர்வு அகில உலகை உள்ளடக்கியது அல்ல. மாறாக கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களை மட்டும் உள்ளடக்கியது. ஒரே நம்பிக்கை, ஒரே கடவுள் இவற்றை மையமாகக் கொண்ட அவர்களுக்குள்ளும் அடிக்கடி பிறழ்வு ஏற்பட்டபோது அதை மீண்டும் சரிப்படுத்த உடன்படிக்கையை மீண்டும் மீண்டும் புதுப்பித்து தங்கள் வாழ்வைப் புதுப்பித்துக் கொண்டார்கள். ஏனென்றால் உடன்படிக்கை உறவின் படி முழுமையாக வாழாமல் மறந்த காரணத்தில்தான்.

உடன்படிக்கைக் கடவுளின் அருளினாலும், வாக்களிக்கப்பட்ட மீட்பர்இயேசுவின் வருகையை மனதில் கொண்டும் சகோதர உணர்வு தொடர்ந்து வளர்க்கப்பட்டது. யாக்கோபு எசாயுவை மன்னிப்பதும்,பழைய ஏற்பாடு யோசேப்பு தன் சகோதரர்களை மன்னிப்பதும், தன்னை எதிர்த்து கிளர்ச்சி செய்த மக்களை மன்னிக்குமாறு மோயிசன் கடவுளை நோக்கி மன்றாடியதும், தன்னை எதிர்த்த தன் சகோதரியான மரியத்தை ஆரோன் மன்னித்ததும் இதனடிப்படையில்தான். அங்கொன்றும், இங்கொன்றுமாகக் காணப்பட்ட இத்தகைய சகோதர உணர்விலே எடுத்துக்காட்டான வாழ்வு வாழ நாமும் அழைக்கப்படுகிறோம்.

ஆவியின் தூண்டுதலாலும், இறைவாக்கினர்களின் இறைவாக்குகளாலும்,''மந்த செவியும், விருத்த சேதனம் இல்லாத இதயங்களை'' உடைய இம்மக்கள் படிப்படியாகத் தங்கள் தவறை உணர்ந்து, முழுமையாக இல்லையென்றாலும், ஒரளவுக்காவது புரிந்து கொண்டார்கள். அதாவது சகோதர உணர்வுடன் வாழ்வதுதான் கடவுளின் கட்டளை என்றும், இதைத்தான் கடவுள் மோயிசனுக்கு பத்துக் கட்டளைகள் பலகைகள் வழியாக சீனாய் மலையில் தந்தார் என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

உண்மையிலேயேஇறைவாக்கினர்கள் ஆவியானவரின் ொகடைகளால் தூண்டப்பெற்று, சகோதரனை நம்பாமல் இருப்பதும், பிளவையும், பிரிவினையை வளர்ப்பதும், ஏழை எளிய மக்களின் வாழ்க்கை உரிமையைப் பறிப்பதும், அவன் உணவையும், வாழ்வையும் பறிப்பது தவறானது என்று பறைசாற்றினார்கள். ஏனென்றால், உடன்படிக்கை மக்கள் என்றால், எல்லாருக்கும் கடவுள் ஒருவரே, தந்தையும் ஒருவரே. எனவே இந்தச் சூழலில் நாம் ஒவ்வொருவரையும், குடும்ப உறுப்பினர்களைவிட மேலானவிதத்தில் அன்பும், நட்பும் கொண்டு வாழக் கடமைப்பட்டுள்ளோம்.

தொடர்ந்து இந்த இறைவாக்கினர்கள் மக்களின் உள்ளத்தில் இந்தக் கருத்தை வலியுறுத்தி வந்தார்கள். அதாவது ஆண்டவராகிய மெசியா வரும்போது தான் இந்த அகில உலக நட்புறவு சாத்தியமாகும். பாவத்தாலும் மற்றும் இஸ்ராயேல் மக்கள், மனுக்குலத்தோர் இவர்களின் நேர்மையற்றதனத்தாலும் பாதிக்கப்பட்ட இந்த சகோதர

உறவை மீட்பர் இயேசுக் கிறிஸ்துவால் மட்டுமே மீட்டெடுக்க முடியும், குணப்படுத்த முடியும்.

மீட்பர் இயேசு ஒருவரால் மட்டும்தான் பாதிக்கப்பட்ட சகோர உறவை மீண்டும் சரிப்படுத்தி இம்மண்ணில் வாழும் மனுக்குலத்தைக் குடும்ப உணர்வுடன் வாழ வைக்க முடியும்.

“தம் இனத்திற்காக மட்டுமன்றி, சிதறி வாழ்ந்த கடவுளின் பிள்ளைகளை ஒன்றாய்ச் சேர்க்கும் நோக்குடன் அவர்களுக்காகவும் இறக்கப் போகிறார்” (யோவான் 11:52)

**புதிய ஏற்பாடு:**

இயேசு பிறந்திருக்கிறார். இவரே இறைவாக்கினர்களால் முன்னறிவிக்கப்பட்ட மெசியா. கல்வாரி மலையில் அவர் சிந்திய இரத்தத்தால் மனுக்குலத்தையே தம்மோடு ஒப்புரவாக்கினார். விண்ணக விருந்துக் கூடத்துக்குரிய அனைத்து வாயில்களையும் அவர் திறந்து விட்டார். நம்பிக்கையோடு அவரை ஏற்றுக் கொள்பவர்களுக்கு மீட்பை இலவசமாகத் தந்து விட்டார். இறைத்தந்தைக்கும் மனுக்குலத்திற்கும் இடையே ஏற்பட்ட உறவின் முறிவை இயேசு மீண்டும் சரி செய்து ஒன்றிணைத்து விட்டார். புதிய உறவுக்கான அடித்தளத்தை இயேசு ஏற்படுத்தி விட்டார். இந்த நட்புறவினால்தான் மனிதர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட தடுப்புச் சுவரை உடைத்து விட்டார். மனித இதயங்களில் ஏற்பட்ட காயத்தை அவர் குணப்படுத்தி விட்டார். கிறிஸ்தவர்களின் முதன்மையான கட்டளை என்னவென்றால், பிறரை அன்பு செய்வது. கடவுளின் இதய இரகசியங்களை வெளிப்படுத்துவது மட்டுமல்ல, ஆண்/பெண் இவர்கள் தங்கள் இதயங்கள் வழியாக பிறருக்கு அன்பை வெளிப்படுத்துவது.

“நான் உங்களை அன்பு செய்தது போல, நீங்களும் ஒருவரையொருவர் அன்பு செய்ய வேண்டும்” இதுதான் எனது கட்டளை. தம் நண்பர்களுக்காக, உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை.... நான் கட்டளை இடுவதையெல்லாம் நீங்கள் செய்தால், நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள்..... உங்களை நான் நண்பர்கள் என்றேன். ஏனெனில் என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன்.” (யோவான் 15:12-15)

இயேசு உயிர்த்த அந்த காலை வேளையில் தன் அப்போஸ்தலர்களைச் “சகோதரர்களே” என அழைத்தார் (மத்.28:10, யோவான் 20:17) உண்மையும், ஆழமுமான சகோதர உறவை இயேசு தம் மரணத்தால் புதுப்பித்தார். எல்லாவற்றிலும் தம் சகோதர சகோதரிகளைப் போல் ஆக வேண்டியதாயிற்று”. (எபி. 2:17)

தந்தையாகிய கடவுளுக்கு, இயேசுவின் ‘‘ஆம்’’ என்ற பதிலிறுப்புத்தான், சகோதர சகோதரிகள் தங்களையே முழுவதும் கடவுளுக்கும் பிறருக்கும் வழங்கி, உண்மையான சகோதர உறவை பகிர்ந்து கொள்ள முடிந்தது.

அகில உலக சகோதர உறவு அனுபவம்,தூய ஆவியானவரின் கொடையின் வல்லமையால்தான் சாத்யமானது. உயிர்த்த ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து ஒருவரால் மட்டுமே கடினமான, உணர்ச்சியற்ற இதயங்களை உணர்வுள்ள, இளகிய இதயங்களாக மாற்ற முடியும். இத்தகைய சகோதர அனுபவத்திற்கு, தொடக்கக் கிறிஸ்தவர்கள் வாழ்வு நமக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறது.

‘‘நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தங்கள் உடமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது.’’ (அப். பணி 4:32)

‘‘ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடி வந்தார்கள். பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தைப் பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள். அவர்கள் கடவுளைப் போற்றி வந்தார்கள். எல்லா மக்களுடைய நல்லெண்ணத்தையும் பெற்றிருந்தார்கள்.’’ (அப்.பணி 2:46-47)

இந்தப் புதிய நட்புறவுக்குத் தேவையான அன்பு, உறவு வெளிப்பாடுகளில் தெரிந்தது. பழைய மனித இயல்புக்கு இறந்து புதிய உறவு வளர்ந்தது. இந்த புதிய உறவில் தீய சக்திகளையும், தீய சக்திகளின் பகட்டான, ஏமாற்று வேலைகளையும், திருமுழுக்கில் எடுத்த வாக்குறுதிகளின்படி புறந்தள்ளி இயேசுவின் அடிப்படைப் பண்பான அன்புறவைப் பேணி வளர்ப்பது.

இத்தகைய உறவுகளை நற்செய்தி நூல்களும், அப்போஸ்தலர்களின் திருமடல்களும் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதைக் காண்கின்றோம்.

**மத்தேயு நற்செய்தி** அதிகாரம் 18இல் புதிய சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நடைமுறைகளைப் பட்டியலிடுகிறார். அவை பின்வருமாறு:

- குற்றங்களை மன்னிப்பது.
- கூட்டுச் செப வழிபாடு.
- ஒப்புரவுப் பணியின் கடமை.
- உதவும் நோக்கில் குற்றங்களைச் சுட்டிக் காட்டுதல்.
- சிதறுண்டவர்களைத் தேடிக் கண்டு கொள்வதில் ஆர்வம்.
- ஏழை மற்றும் நலிவுற்றவர்களை மதித்தல்.

- தாழ்ச்சி சிறப்பாகக் குழுக்களில் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் அதிகமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

புனித பவுலடியாரின் திருமடல்களை எடுத்துக் கொண்டால் குழுக்களின் கடமைகளைப் பற்றிக் குறிப்பிடுவதற்கென்று தனிப் பகுதியை ஒவ்வொரு திருமடலிலும் காணலாம். அவற்றுள் சில பின்வருமாறு:

''நீங்கள் ஒரே எண்ணமும், ஒரே அன்பும், ஒரே உள்ளமும் கொண்டவராய்த் திகழ்ந்து, ஒரு மனத்தவராய் இருந்து என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள். கட்சி மனப்பான்மைக்கம் வீண் பெருமைக்கும் இடம் தர வேண்டாம். மனத் தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவராகக் கருதுங்கள். நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்களை கொள்ள வேண்டும்.'' (பிலப். 2:1-4)

''முணுமுணுக்காமலும், வாதாடாமலும் யாவற்றையும் செய்யுங்கள். அப்பொழுதான் நீங்கள் நெறிகெட்ட, சீரழந்த தலைமுறையினரிடையே குற்றமும் கபடு மற்றவர்களாய்க் கடவுளின் மாசற்ற குழந்தைகளெனத் திகழ்வீர்கள்; உலகில் ஒளிரும் சுடர்களாகத் துலங்குவீர்கள்.'' (பிலப். 2:14-15)

**3. இயேசுக் கிறிஸ்துவில்:**

''நானே திராட்சைச் செடி; நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால், அவர் மிகுந்த கனிதருவார். என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது.'' (யோவான் 15:5)

''திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோர்களை அடித்தளமாகவும், கிறிஸ்து இயேசுவையே மூலைக் கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள். கிறிஸதுவின் உறவில் கட்டடம் முழுவதும் இசைவாகப் பொருந்தி, ஆண்டவருக்கென்று தூய கோவிலாகவளர்ச்சி பெறுகிறது. நீங்களும் அவரோடு இணைந்து தூய ஆவி வழியாகக் கடவுளின் உறைவிடமாகக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.'' (எபேசி. 2:20-22)

இயேசுக்கிறிஸ்துவில் மட்டும்தான் அமைதியையும், சகோதரத்துவ பிறரன்பையும் கொண்டு வர முடியும். இரண்டு முக்கியமான கூறுகளை நம் மனதில் இருத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

- இந்தப் பணிகளுக்கான ஊற்றும், செயல்பாடுகளும் இயேசுக்கிறிஸ்துவையே காரணமாகக் கொண்டுள்ளது.

- குடும்பங்களில் ஒற்றுமையும் அவரால் மட்டுமே முடியும்.

இந்த மீட்புப் பணிகளுக்கானத் தொடக்கமும் செயல்பாடும் இயேசுக்கிறிஸ்துவில் அமைதியையும், சகோதரத்துவத்தையும் நிலை நாட்டுவதில் தான் அடங்கியிருக்கிறது. இந்தக் கருத்தை முன்வரும் பகுதிகளில் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளோம். இயேசுக்கிறிஸ்து ஒருவர்தான் பாவத்தால் முறியபட்டதைச் சீர்படுத்தினார். இறைத்தந்தையின் மாபெரும் இறைத்திட்டத்தை இயேசுக்கிறிஸ்து சிலுவையில் மரித்து, தன்பாடுகளின் வழியாக நிறைவேற்றினார்.

இந்த இறைத்திட்டம் என்னவென்றால் ''சிதறி வாழ்ந்த கடவுளின் பிள்ளைகளை ஒன்றாய்ச் சேர்ப்பதே'' (யோவான் 11:52) ''விண்ணிலுள்ளவை, மண்ணிலள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் ஒன்று சோக்க வேண்டும் என்பதே அத்திட்டம்.'' (எபேசி 1:10, ரோமன் 8:29, எபேசி. 1:5). எனவே. இயேசுக்கிறிஸ்துவில் அமைதியையும், சகோதரத்துவத்தையும் கட்டி எழுப்புகிறோமென்றால், கடவுளோடு இறைச்சமூகத்தை ஒன்றிணைப்பு, ஒருவர் ஒருவருக்கிடையே அன்பு நட்புவறவை உருவாக்குகிறோம் எனப் பொருள்படும். கடவுளின் திட்டம் எப்போதுமே, ஒவ்வொரு கட்டத்திலும், ஒற்றுமையையும், கூட்டுறவையும் உள்ளடக்கியதாக இருக்கிறது.

**இறை மனித உறவு:**

இதுதான் உறவுகளுக்கெல்லாம் அடிப்படையானது மற்ற அனைத்து வகை உறவுகளுக்கு ஊற்றும், வளர்ச்சி தருவதும் இதுதான்.

- ஆண் பெண் உறவு பலன் தர வேண்டுமென்றால் மூவொரு கடவுளிடமிருந்த அன்பையும், உறவையும் பின்பற்ற வேண்டும்.
- பரந்து விரிந்த இவ்வுலகில் ஆண்கள், பெண்கள் அனைவரும் தாங்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்த பிள்ளைகள் என்ற உணர்வில், உள்ளன்போடும், நம்பிக்கையோடும் ஒருவரையொருவர் ஏற்று வாழந்து, ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வாழ்ந்தால் தான் நம் வாழ்வில் நிறைவையும், மகிழ்ச்சியையும் அடைய முடியும்.

இத்தகைய நட்புறவை மறுத்து வாழ்வதுதான் மனுக்குலத்தின் அடிப்படைப் பாவமாகும். முதலாவதாக கடவுளை ஆராதித்து அவருக்குக் கீழ்ப்படிய மறுப்பது, இதனால் தன்னலத்தை வளர்த்து, ஒருவிதமான தனி சிலை வழிபாட்டில் வாழ்ந்து அதன் விளைவாக வரும் அழிவில் இன்னும் வாழந்து கொண்டிருக்கின்றோம். இதன் விளைவைத்தான் ஒவ்வொருவரின் இதயத்தில் வெறுப்பும், பிளவும், மக்களுக்கிடையே, குடும்பங்களுக்கிடையே, நாடுகளுக்கிடையே பகையும், வெறுப்பும் உருவாகுகின்றன.

நல் உறவை மீண்டும் கட்டியெழுப்பி உருவாக்குவதே மீட்பின் முழு நோக்கமாக இருக்கிறது. இதைக் கடவுள் வரலாற்றில் பல்வேறு உடன்பக்கைகள் வழியாக தொடர்ந்து படிப்படியாக உருவாக்கி வருகிறார்.

- நோவாவோடு உடன்படிக்கை முதன்முதலான ஆதிப் பாவத்தால் ஏற்பட்ட சீர்கேட்டை நீக்க நோவாவோடு செய்த உடன்படிக்கை வழியான மனுக்குலத்தோடு உறவை வளர்த்தார். இந்த உடன்படிக்கையின் காணக்கூடிய அடையாளம் தான் வானவில்.
- அபிரகாமோடு செய்த உடன்படிக்கை வழியாக கணக்கிலடங்கா, அவரது தலைமுறையினருக்கும், அதன்பின் மக்கள் அனைவருக்கும் தொடர்ந்தது. யூதர்கள் பல நாடுகளுக்குச் சிதறி ஓடியது இறைத்திட்டமாகச் செயல்பட்டது. இந்த உடன்படிக்கையின் வெளி அடையாளம்தான் விருத்த சேதனம். இது மக்கள் அனைவரையும் ஒரே குடும்பமாக ஒன்றிணைத்து, ஒரே நம்பிக்கையில் நிலைத்திருந்து, ஒரே நாட்டினராக வாழத் துணை புரிந்தது
- இஸ்ராயேல் மக்களின் இடைநிலையாளரான மோயிசனோடு செய்து கொண்ட உடன்படிக்கை மக்களைத் தூயவர்களாகவும், அர்ப்பணிக்கப்பட்டவர்களாகவும் மாற்றியது.

உடன்படிக்கைப் பேழை அதன்பின் எருசலேம் நகர் தேவாலயம் கடவுளின் பிரசன்னமாகவம், இஸ்ராயேல் மக்கள் ஒன்று கூடித் தங்கள் கூட்டுறவை உறுதிப்படுத்துகின்ற இடமாகவும், வழிபாடுகள் நிகழத்தும் இடமாகவும் மாறியது.

- ஆனால் கடவுளின் ஒரே மைந்தனான இயேசுக்கிறிஸ்துவில் தான் இறுதியாக நீடித்த, நிலைத்த ஒற்றுமையானது மக்கள் மத்தியிலும், உலக நாடுகளுக்கிடையேயும் நிலை நிறுத்தப்பட்டது. கடவுளின் மகனான இயேசுக்கிறிஸ்து அவரில் நம்பிக்கை கொண்டோருக்கும், அன்பு செய்வோருக்கும் தன் ஆவியையும், தன் அன்பு அன்னை கன்னி மரியாளையும் கொடையாகக் கொடுக்கின்றார்.
- இரண்டாம் வத்திக்கான் சங்கம் தெளிவுபடுத்தியதுபோல மாண்புமிக்க அன்னை கன்னி மரியாள் திரு அவையின் தாயாகவும், மனுக்குலத்தின் தாயாகவும் இருக்கின்றாள்.ஒரு குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் மத்தியில் ஒற்றுமையையும், நட்புறவையும், கனிந்த உள்ளத்தோடும், கனிவோடும் தொடர்ந்து, புதுப்பித்து வளர்த்து வருவது தாயல்லவா? அன்னை கன்னிமரியாள், கனிவுக்கும், இரக்கத்திற்கும் அடையாளமாகத் திகழ்கிறார் அல்லவா!இவ்வாறாகப் பல்வேறு வழிகளில், ஆண்கள் மற்றும் பெண்கள் இவர்களுக்கிடையே புதியதொரு

சமுதாயம் படைக்கப்படுகின்றது.கிறிஸ்துவின் பரந்த மறைப்பணியை நாம் புரிந்து கொள்ளும் விதமாக பல்வேறு அடையாளங்கள், உருவகங்கள் வழியாக விவிலியத்தில் விளக்கப்பட்டுள்ளது.

- மறை உடலின் தலைவர் இயேசுக்கிறிஸ்து, இவரில் நம்பிக்கைக் கொண்டு திருமுழுக்குப் பெற்றவர்கள், உறுப்பினர்கள் ஆவார். தந்தையின் மகிழ்ச்சியில் அனைத்து உறுப்பினர்களும் பங்கு பெற ஒன்றிணைக்கப்படுகிறார்கள்.
- கடவுளின் ஆலயத்தில் இயேசுக்கிறிஸ்துவே மூலைக்கல்லாகவம் மற்ற மானிடர்கள் அனைவரும் உயிருள்ள கற்களாகவும் பொருந்தி அடைக்கப்பட்டு தந்தைக்குரிய பொருத்தமான வழிபாடு செலுத்த ஒன்றிணைக்கப்பட்டுள்ளார்கள்.
- இயேசுவே உண்மையான திராட்சைச் செடி, அவரில் நம்பிக்கை கொள்வோர் அனைவரம் அதன் கொடிகள். தந்தையே அதை நட்டு வளர்ப்பவர். நாம் மிகந்த கனி தந்து சீடராய் இருப்பதே தந்தைக்கு மாட்சி அளிக்கிறது. இவ்வாறாகப் பல வழிகளில் ஒற்றுமையானது கிறிஸ்துவில் நிலை நாட்டப்படுகின்றது, முறிந்தவை சரி செய்யப்படுகின்றது, காயங்கள் குணப்படுத்தப்படுகின்றது. இறுதியாக நிறைவான ஒற்றுமை நிலை நிறுத்தப்படுகின்றது.
- மன ஒற்றுமை: பல்வேறு ஆசைகளால் அலைக்கழிக்கப்பட்ட மனங்களை சரிப்படுத்தி, இழச்த ஆற்றல்களையெல்லாம் மீண்டும் கொண்டு வந்து மனதில் நிம்மதியை நிலைநிறுத்தி, மனதின் ஆழத்தில் மீண்டும் மனச் சுதந்திரத்தை ஏற்படுத்துவது.
- கிறிஸ்துவுக்கும் திரு அவைக்கும் இடையேயுள்ள ஒற்றுமைதான். மணமக்களிடையே உள்ள ஒற்றுமைக்கு ஊற்றும், உதாரணமும் (எடுத்துக்காட்டும்) ஆகும்.
- நம்பிக்கையாளர்களின் ஒற்றுமை உணர்வுடன் ஒரே மனமும், ஒரே உள்ளமும் கொண்டு இணைந்து ஒரே குரலில் இறைத் தந்தையைப் புகழ்வது.
- ஆண்களையும் பெண்களையும் அன்பினால் இணைத்து அவர்களை ஒருங்கிணைப்பது, அவர்களை விரும்பி அழைத்து ஒரே கடவுளின் பிள்ளைகளாக ஒன்றிணைத்தது கடவுளின் ஆவியின் வல்லமையே ஆகும். இந்தக் கடவுளின் ஆவியின் வல்லமைதான் கடவுளை அப்பா, தந்தாய் என அழைக்கக் கூடிய உரிமையையும் தந்தது.கிறித்தவக் குடும்பங்களில் உள்ள நம்பிக்கையாளர்களின் திருக்கூட்டத்தில் வெளிப்படும் ஒற்றுமை, உலகிற்கு ஒரு வெளிப்படையான வெளி அடையாளமாகத் திகழ்கிறது. இறைத்தந்தையின் அன்பின் வெளிப்பாடாக இவ்வுலகிற்கு வந்த இயேசுக்கிறிஸ்துவின் தூய ஆவியார் இத்தகை ஒற்றுமையைக்

கட்டி எழுப்புகின்றார். இவ்வாறாக இயேசு தனது குருத்துவச் செபத்தில் வெளிப்படுத்தியவை அனைத்தும் நிறைவேறின. “எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்” (யோவான் 17:21)

நமது சபையில் பல்வேறு நிலைகளில் கூடி வாழும் நம் குழுக்களில் பலவிதங்களில் நம ஒற்றுமை வெளிப்படுத்தப்படுகிறது. (நமது சபையில் உள்ள குழுமங்களில் உள்ள ஒற்றுமையையும், நட்புறவையும், இன்றைய கால கட்டங்களில் கடவுளே விரும்புகிறார். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவரில் நம்பிக்கை கொள்பவாகளிடம் இத்தகைய பண்பு அவசியம் இருக்க வேண்டும் என்பது கடவுளின் விருப்பம்.

- தலக் குழுக்களில் உள்ள ஒற்றுமை தான் அனைத்துக் குழுக்களிலும் நாம் கொண்டிருக்க வேண்டிய ஒற்றுமைக்க அடித்தளம். சொல்லப்போனால் சபையிலும், திரு அவையிலும் நாம் கொண்டிருக்க வேண்டிய ஒற்றுமை அனுபவத்திற்க நம்மை இட்டுச் செல்கின்றது.
- தலக் குழுக்கள் வழியாகச் சபையின் அனைத்து உறுப்பினர்களில் இருக்க வேண்டிய ஒற்றுமைக்கு நம்மை இட்டுச் செல்கின்றது. இதன் விளைவாக நாம் ஆன்மீக மற்றும் சமூகப் பலன்களை நமக்கு வழங்குகிறது.
- தலக் குழுக்கள் வழியாக மாநிலக் குழுக்களிடம் குடும்ப ஒற்றுமையை வளர்க்கிறது. இதை நாம் ஒவ்வொரு வரும் நமது தனிப்பட்ட முயற்சியால் இதைக் கட்டிக் காக்க வேண்டும்.
- சபையின் குழுமங்களில் உள்ள ஒற்றுமை பரந்து விரிந்தது, நெகிழ்வும் அதே வேளையில் உறுதியும் கொண்டவை. இதன் வழியாக கிறிஸ்துவின் மறை உடலாக இருக்கின்ற மற்ற அமைப்புகளிடம் சென்றடையத் துணை புரிகிறது.

எனவேதான், சபையிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தாங்கள் இருக்கின்ற ஒவ்வொரு நிலையிலும் இத்தகைய ஒற்றுமை உணர்வுடன் வாழ வேண்டும். இயேசுவின் செபத்தில் உணர்வுடன் வாழ வேண்டும். இயேசுவின் செபத்தில் வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் ஒற்றுமைத் திட்டத்தை, இறைத் திருவுளச் சபையில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும், நிறைவேற்றுவதைத் தங்கள் வாழ்வாகக் கொள்ள வேண்டும். இதைச் செயல்படுத்த வேண்டுமென்றால், தவக்குழுவில், மாநிலக் குழுவில், சபையில் நாமனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடள் செயல்பட வேண்டும். இதைச் செய்ய விடாமல் நம்மைத் தருகின்ற வெளிப்புறச் சக்திகளை இனம் கண்டு, அழிக்க வேண்டும். இந்த ஒற்றுமையின் பலனை ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்திலும், மற்றும் சபையில் முழுவதும் நான்

ஒருவருக்கொருவர் காட்டும் அன்பிலும் ஒற்றுமையிலும் வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறாக நமது வாழ்வையும், செயல்களையும் காணும் இவ்வுலக மக்கள், இயேசுக்கிறஸ்து தான் நமது வாழ்வையும், செயல்பாடுகளையும் ஒன்றிணைத்து, வழி நடத்தி வருகிறார் என்பதைக் கண்டு கொள்ள வேண்டும்.

"நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என்கட்டளை."(யோவான் 15:12)

"தந்தையே! எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக! நீர் என்னுள்ளும், நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் உலகம் நம்பும்."(யோவான்: 17:21)

## பின்னிணைப்பு D

குழுவினர் –உருவாக்கப் பயிற்சிப்பள்ளி பேரருட்திரு லூயி மரிய பாரண்ட் OM அவர்கள் உரையிலிருந்து(in Le Pere nous parle, vol.lx,no.4)

**முன்னுரை:**

மறையுடலாம் திரு அவையில், உங்களது சபை முக்கியப் பங்கு வகிக்கிறது. அதில் நீங்கள் குழுவாக இணைந்து செயல்படுகிறீர்கள். உங்களது மாநிலத்திலுள்ள பகுதிக்குழுக்கள் வழியாகச்சபையானது உங்களைச் சென்றடைகின்றது. இருந்தபோதிலும், நீங்கள் வாழுகின்ற அல்லது பணியாற்றுகின்ற குழுக்கள் வழியாகத்தான் சபைக்கு உங்கள் தலக்குழுக்களில் சகோதர பிணைப்பையும், இந்த நட்புறவில் உங்கள் ஆன்மீக வாழ்வைப் புதுப்பிக்கவும் வேண்டும். எனவே உங்கள் தலக்குழுக்கள் தான், உங்களுடைய தொடர் உருவாக்கப்பயிற்சியின் பள்ளி என்பதை மனதில் ஆழமாக இருத்திக்கொள்ள வேண்டும். உங்கள் குழுவில் அர்ப்பணிப்புடன் வாழவேண்டும். குழுவில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய சகோதரசகோதரிகள். அனைவரும் இணைந்துதான் நம் சபையைக் கட்டி எழுப்ப வேண்டும். இவ்வாறாக அந்த நட்புறவு திரு அவையில் விரிவடைந்து இயேசுக்கிறிஸ்துவின் அமைதியையும், நட்புறவையும் உருவாக்கி,உலகில் இயேசுவின் சாட்சிகளாக வாழ வேண்டும். நமது சபையில் நாம் தனிப்பட்ட விதத்தில் கடவுளைச் சென்றடைவதில்லை.மாறாகநம் குழுவழியாக, குழுவினரோடுதான் கடவுளைக் கண்டடைய வேண்டும்.

**பகுதி ஒன்று:**

குழுவானது, உருவாக்கப் பயிற்சிப்பள்ளி குழுவின் முக்கியத்துவத்தைப்பற்றியும், குழுவில் நாம் கொள்ளவேண்டிய நட்பைப்பற்றியும் பலர் பேசுகிறார்கள். குழுவாழ்வு எல்லா இடத்திலும் தோன்றுகிறது, தனிப்பட்ட நபர்கள் கூட குழுவாழ்வின்

முக்கியத்துவத்தைப்பற்றி உணர ஆரம்பித்திருக்கிறார்கள். நிலை வாழ்வை நோக்கி, இணைந்து பயணம் செல்ல வேண்டும் என விரும்புகின்ற அனைத்துக் கிறிஸ்தவர்களையும் ஒன்றிணைக்கும் தூய ஆவியானவரின் வல்லமையைப் போல இருக்கிறது.

**I. விளக்கம்:**

குழுவானது, உறுப்பினர் அனைவரும் தங்களுடைய ஆளுமைத் திறன்கள், திறமைகள், இயலாமைகள், முயற்சிகள் என அனைத்தையும், ஒரு வழிகாட்டியின் தலைமையில் பகிர்ந்து வாழ்வதாகும். இந்தக் குழுதான் உருவாக்கப் பயிற்சிப் பள்ளியாகும். ஏனென்றால் இங்குதான் பிறரைப்பற்றிச் சிந்திக்க ஆரம்பிக்கிறீர்கள், பிறருடைய கருத்துக்களுக்கும், எண்ணங்களுக்கும் மதிப்பளிக்கிறீர்கள், பிறருடைய தனித்தன்மையை மதிக்கக் கற்றுக் கொள்கிறீர்கள். குழுவிலுள்ள உறுப்பினர்கள் தங்களிடையே உள்ளதைப் பிறரோடு பகிர்ந்து கொண்டு, உரையாடல் வழியாகத் தங்களையே முழுவதும் அர்ப்பணித்து, சபையின் குறிப்பிட்ட பொது நோக்கத்தை அடைய தங்களுடைய எண்ணங்களையும், செயல்களையும் வலுப்படுத்திக்கொள்கிறார்கள்.

**II.குழுக்கள் எதற்காக?**

a) கடவுளின் திருவுளத்தைத் தெளிந்து தேர்ந்து கொள்ளவும், வரவேற்கவும், தழுவிக்கொள்ளவும், பணி செய்யவும் துணை புரிகிறது.

குழுவின் வழியாகத்தான் சபையின் ஆன்மீக வாழ்வுக்கு (5-5-5) அடியெடுத்து வைக்கின்றீர்கள். நம்மை 5வகையான வாழ்க்கைமுறைகளுக்குப் பயிற்சி அளிக்கின்றது. கடவுளின் திருவுளத்தைக் கண்டு கொள்ளவும், அதன் பயன்களை உன் வாழ்வில் அனுபவிக்கவும் துணை புரிகிறது. இந்த இறையனுபவம் உன்வாழ்வில் கடவுளின் திருவுளத்தை இன்றைய சூழலில் நிறைவேற்ற பயிற்சியளிக்கிறது. மற்ற அனைத்துமே கடவுளின் திருவுளத்தை நீ அறிந்து கொள்ள உனக்குக் கருவிகளாக இருக்கின்றன. கடவுளின் திருவுளத்திற்குப் பணிந்து அவருக்காக உழைக்க வேண்டும் என்கின்ற உணர்வுதான், நீ கடவுளுக்குப் பணிபுரிய வேண்டும் என்பதின் வெளி அடையாளமாகும். கடவுளின் திருவுளத்திற்கு உன்னை முழுவதும் அர்ப்பணித்து வாழும் போது உனக்குள் ஒரு நிலையான மகிழ்ச்சியைக் கண்டு கொள்வாய்.

**b) கடவுள் அன்பிலும், பிறர் அன்பிலும் நிலைத்துநிற்க.**

நீ உண்மையிலேயே பிறருக்கு உதவிபுரிய வேண்டுமென்றால் உன் சுயநலக்கோட்டையிலிருந்து வெளிவந்து, எளிமையாக, இனிய வார்த்தைகளோடு பிறருக்கு உதவி புரிய முன்வரவேண்டும். சிறு சிறு நிகழ்வுகள் தான் மகத்தான வாழ்வுக்கு இட்டுச் செல்லும். சிறிய காரியங்களில் தான் கடவுள் அதிகக் கவனம் செலுத்துகிறார். சொல்லப்

போனால் கடவுள் அதிகக் கவனம் செலுத்துகிறார் சொல்லப் போனால் கடவுள் இதற்காகத் தான் தன் நேரத்தை அதிகம் செலவிடுகிறார்.

“உங்களை தலைமுடி எல்லாம் கூட எண்ணப்பட்டிருக்கின்றன. அஞ்சாதீர்கள், சிட்டுக்குருவிகள் பலவற்றைவிட நீங்கள் மேலானவர்கள்.”(லூக்:12:7)

“நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புக்கிளில் நம்பிக்கைக்குரியவராய் இருந்தீர்.எனவே பெரிய பொறுப்புக்களில் உம்மை அமர்த்துவேன்.”(மத்:25:23)

குழுவானது தனது உறுப்பினர்களுக்கு முதலில் சிறிய பண்புகளில் வளர்ச்சிக்கான பயிற்சியளிப்பது. சான்றாக தாழ்ச்சி, பொறுமை, தன்னடக்கம், நன்னயம், போன்ற பண்புகளாகும். எனவே இத்தகைய பண்புகளில் வளர்ச்சி காண்பதன் மூலம் பிறரை மகிழ்ச்சிப்படுத்த முடியும், அமைதியை நிலைநாட்டமுடியும், விடுதலை முன்னேற்றத்தில் பங்கு கொள்ள முடியும். எனவே இத்தகைய பண்புகளில் உறுப்பினர்கள் வளர குழுவானது முக்கியப் பங்கு வகிக்க வேண்டும். குழுவிலே உறுப்பினர்கள் தங்கள் தனித்துவத்தை இழந்து விடாமல் அதே வேளையில் பிறருடைய தேவைகளை உணர்ந்து பிறருக்கு உதவி புரிவார்கள். இவ்வாறு குழுவிலுள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களிடம் உள்ளதைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் போது, பெற்றுக் கொள்பவர்கள் மகிழ்வோடு தங்களிடம் உள்ளதைப் பிறரோடு பகிர்ந்து கொள்ள முன் வருவார்கள்.

## III. குழுவுக்குத் தேவையான பண்புநலன்கள்:

### a) தாழ்ச்சி:

நீடித்து நிலைத்து நிற்பதற்கு குழுவிலுள்ள உறுப்பினர்கள் தாழ்ச்சி என்கின்ற புண்ணியத்தை மேலோங்கி வளர மிகுந்த அக்கறை எடுக்க வேண்டும். மற்றவற்றை விட இப்புண்ணியத்தில் வளர முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இயல்பாகவே தாராள மனப்பான்மையை வெளிப்படுத்த மனிதர்களுக்கு பல வாய்ப்புக்கள் உண்டு. குழுவானது உறுப்பினர் ஒவ்வொருவரும் பிறரில் கடவுளைக் காண முயற்சி செய்ய வேண்டும். பிறரில் கடவுளைக் காண முயற்சி செய்ய வேண்டும். பிறரில் காணப்படும் நல்ல பண்புகளைக் கண்டு அவற்றை வெளிக்கொணரும் போதுதான், பிறரில் கடவுளைக் காணும் பண்பில் வளர்கிறோம் என்பதன் வெளிப்பாடாகும். பிறரை முழுமனதுடன் அன்பு செய்ய வேண்டுமென்றால் ஒருவர் தன்னைக் கடந்து செல்ல வேண்டும். பல கிறித்தவ அன்பர்களைச் சந்திப்பதைப் பெருக்கிக் கொண்டேபோகும்போது, அவர்களை முழுமனதுடன் அன்பு செய்யும்போது நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்வின் நிறைவை அடைகிறோம். இதுதான் நமது மறைத்தூதுப்பணி. எந்த அளவுக்கு குழுவின் உறுப்பினர்கள் தாழ்ச்சி என்ற புண்ணியத்தில் வளர்கிறோமோ, அந்த அளவுக்குத் தான்

குழுவானது வலுப்பெறுகிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட தாழ்ச்சி என்ற புண்ணியம்தான் நமது பழக்கவழக்கங்களைக் கட்டுப்படுத்துகின்றது. நம் இதயங்களை இறைவன்பால் எழுப்புவதற்கும், இறைவனோடு கொண்டிருக்கும் உறவில் தொடர்ந்து வளர்வதற்கும், தாழ்ச்சிதான் சக்தி வாய்ந்த கருவி என்பதை மறந்து விடக்கூடாது. இத்தகைய நிலைதான் குழுவிற்கு மிகத் தேவையான ஒன்றாகும். ஒருவர் தன்னைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்வதற்கு ஒரு அடையாளமாக இருக்கிறது மேலும் ஒருவரது பண்புநலன்களையும், இயலாமையையும், வரையறைகளையும் அறிந்து கொள்ளும் ஓர் அடையாளமாக இருக்கிறது. ஒருவரை அவருடைய நிறை குறைகளோடு கண்டு கொள்ளும் ஓர் அறிவு ஆயுதமாக இருக்கிறது. உன்னைப் படைத்த கடவுளை மனநோகச் செய்யாதே! உனது பண்புநலன்கள் தான் உன்னிடமுள்ள தெய்வீகப் பிரசன்னத்தின் வெளிப்பாடாகும். அவை கடவுளின் பண்புநலன்களில் பங்கு கொள்கிறது. பிறருடையதவறுகளும், குற்றங்குறைகளும்தான், உன் ஆழமான பண்புநலன்களை அளக்கும் அளவுகோல் என்பதை நினைவில் கொள். பிறருடைய தவறுகள், குறைகள் தவிர்க்க முடியாத தடையக்கற்கள் என்று என்ணாமல், எளிதில் கடந்துபோகக் கூடிய பிரச்சனைகள் என அவற்றை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும். எதுவாக இருந்தாலும், உன்னில் இருப்பதைவிட பிறரில் இருக்கின்ற பல தெளிவான கண்ணோட்டத்தை உன்னில் வளர்த்துக் கொள்ள வேண்டும். பிறருடன் திறந்த உள்ளத்துடன் உரையாடுவதையும், அதில் பிறர் அதிகம் பங்கெடுக்கவேண்டும் என்பதிலும் கவனம் கொள். தவறான தாழ்ச்சிக்கும், அல்லது நான் ஒன்றுக்கும் உதவாதவன்(ள்) என்ற தாழ்வு மனப்பான்மைக்கும் ஒருபோதும் இடம் தராதே! மாறாக நேர்மறை எண்ணங்களை வளர்க்கும் நல்ல ஆன்மசோதனை செய், இதன் வழியாக உன் பண்பு நலன்களைக் கண்டு கொள். அவைநிச்சயம் உன் வாழ்வுப்பாதையில் உனது உற்ற தோழனாக இருந்து உதவி புரியும்.

பிறரைப் பொறுத்த அளவில் உன் குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்களைப்பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம் கொள்ள வேண்டும். பிறரை எனது எண்ணம் அல்லது விருப்பம் போல் இருந்தால் தான் ஏற்றுக் கொள்வேன் என்ற தவறான கண்ணோட்டத்தை விடுத்துப் பிறரை அவர்களுடைய நிறைகுறைகளோடு ஏற்று அவர்களை அன்பு செய்ய முன்வரவேண்டும். உன்னிடம் உள்ள தாழ்ச்சி என்னும் பண்புதான் பிறருடைய ஆளுமைத் தன்மையை ஏற்று அவர்களை மதித்து அன்பு செய்யத் துணைபுரியும். பிறரை நிறை குறைகுளோடு ஏற்றுக் கொண்டால்தான் அவர்களோடு திறந்த மனதுடன் உரையாடமுடியும், அவர்களோடு இணைந்து பொதுப் பணிகளைச் செய்ய முடியும், அவர்களை அன்பு செய்ய முடியும், அவர்களுக்குப் பணி செய்யமுடியும், அவர்கள் தவறு செய்யும் போது அவர்களை முழுமனதோடு மன்னிக்க முடியும். மற்ற உறுப்பினரின்

ஆளுமைத்தன்மையை மதித்து ஏற்றுக் கொண்டால்தான் குழுவில் இணைந்து பயனுள்ள பணிகளைச் செய்ய முடியும்.

**b) அன்பு உறவு:**

குழுவானது ஒன்று கூடும்போது ஒருவர் ஒருவருக்குள் அன்புறவை வளர்த்துக் கொள்கிறார்கள். இந்த நட்புறவு இயேசுவை அடித்தளமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட அன்பு உறவாக மாறுகிறது. செபம், சிந்தனை, பிறரன்புப் பணிகள், பலரையும் சந்தித்து ஏற்படுத்தும் உறவு ஆகிய செயல்பாடுகள் மூலம் நாம் பிறரில் கடவுளைக் காண்கின்றோம், கடவுளில் பிறரைக் காண்கின்றோம். கடவுளுக்கு உன்னைப்போன்ற அப்போஸ்தலர்கள் தேவை, அவரில் நிலைத்து நின்று, உலகைக் காக்க வேண்டுமென்று நிலைத்துநின்று, உலகைக் காக்க வேண்டுமென்று கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.நாமனைவரும் சகோதர சகோதரிகள் என்ற உணர்வு இருக்கவேண்டும். அனைவரும் முதலில் நம்மைப் பற்றிய தெளிவான கருத்துக்கொண்டிருக்கவேண்டும்.அப்போதுதான் நாம் பிறரைப் புரிந்து கொள்ளமுடியும். நாம் ஒருவரையொருவர் புரிந்து, அன்பு செய்ய வேண்டும். நாம் ஒருவரையொருவர் அன்புசெய்ய வேண்டும். அதை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்ள வேண்டும், அனைவரும் ஒன்றித்த மனதோடு வாழ்ந்து உலகுக்கு ஒளி வீசுபவர்களாகத் திகழவேண்டும். நாம் ஒருவரையொருவர் முழுமனதோடு அன்பு செய்தால் தான் நாம் கூடிவரும்போது நமக்குள் தளர்உள்ளம் இருக்கும், ஒருவரையொருவர்முழுமனதோடு பாராட்டுவோம், அனைவரும் இணைந்து முன்னேற்றம் காண்போம். குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தனது தனிப்பட்ட செயல்பாட்டால், குழுவிற்குள் பெருமையைக் கொடுக்கிறோம், தனிப்பட்ட செயல்பாட்டால், அன்பால், மகிழ்ச்சி என்னும் ஒளியை பரவச் செய்கிறோம். குழுவிலுள்ள உறுப்பினர்களின் பண்பு நலன்கள் அனைத்தையும் ஒன்றிணைக்கும்போது அங்கு மாபெரும் ஆக்கச்சக்தி தோன்றுவதைக் காண்கின்றோம். ஒவ்வொருவரும் தங்களைப் பிறரோடு அன்பின் பிணைப்பால் இணைக்கும் செயல்பாடுகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து, பிரிவினையை ஏற்படுத்தும் செயல்பாடுகளை முற்றிலும் களைந்து அன்புறவைக் கட்டியெழுப்பவதில் முக்கியத்தும் தர வேண்டும். அன்பையும், நட்பையும் வளர்க்கும் வார்த்தைகளையே பயன்படுத்த வேண்டும். சான்றாக, உங்களோடு இணைந்து, ஏற்றுக் கொள்கிறேன், மன்னித்துக் கொள்ளுங்கள், தருகிறேன், என்னையே மறுக்கிறேன், பகிர்ந்து கொள்கிறேன் போன்ற வார்த்தைகள் அன்பை வளர்க்கின்றன, பிறரில் நிலைத்த அமைதியை உருவாக்குகின்றன.

இத்தகைய பண்புதான், பிறர் உன்னை ஏற்றுக் கொள்ளும் சூழலை உருவாக்கி அதன் வழியாக குழுவானது வளர்வதற்கு உறுதுணையாக இருக்கிறது.

பிறர் நம் குறைகளை எடுத்துச் சொல்லும் போது அதைப் பணிவோடு ஏற்றுக் கொள்தல் மற்றும் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருத்தல் ஆகியவை குழுவுக்கு இருக்க வேண்டிய நல்ல மனநிலையாகும்.விண்ணகத்தில் தான் நிறைவான குழுவை அமைக்க முடியும். இவ்வுலகில் நம் குழுக்களில் சில குறைகள் இருக்கலாம். ஆனால் நாமனைவரும் குறைகளைக் களைந்து நிறைவை நோக்கிப் பயணிக்க வேண்டும். ஏனென்றால், இப்பூவுலகில் வாழும் நம்மிடம் பலவிதமான, சில சமயங்களில் நாமே ஆச்சரியப்படத்தக்க விதத்தில் நம்மிடம் குறைபாடுகள் இருப்பதைக் காண்கின்றோம். எனவே, இத்தகைய குறைபாடுகள் நம் குழுவில் பாதகமான சூழ்நிலையை உருவாக்கி, நம் ஒற்றுமையைச் சிதைக்கவிடாமல், பிறரன்பை நமக்குள் வளர்த்து, ஒருவரையொருவர் நம்பி, முன்னேற்றப் பாதையில் செல்ல பிறருடைய ஆலோசனைகளை மகிழ்வோடு ஏற்று செயல்பட வேண்டும்.

நாம் எந்த நிலையில் இருந்தாலும், நம்மால் முடிந்ததைக் குழுவிற்குச் செய்ய முடியும். நாம் எப்போதும் செயல்பாட்டு உணர்வுடன் இருக்க வேண்டுமேயொழிய சோம்பலாக இருக்கக் கூடாது. குழுவிலிருந்து பெற்றுக் கொள்வதைவிட, குழுவின் வளர்ச்சிக்கு நமது பங்களிப்பைத் தொடர்ந்து கொடுக்க வேண்டும். நல் மனதுடன் செயலாற்றும் பிற உறுப்பினர்களைப் பார்த்து அவர்களிடம் உள்ள நல்ல பண்புகளை நாமும் பின்பற்றி நம்மால் முடிந்ததைப் பிறருக்குச் செய்ய முன் வரவேண்டும். நம்மைப் படைத்த கடவுள் நமக்கு வழங்கியுள்ள கொடைகளான, ஆக்கச்சக்தி, அன்பு, தாராள உள்ளம், புத்திக்கூர்மை ஆகியவற்றை பிறர் நலனுக்காகப் பயன்படுத்த முன் வர வேண்டும்.

அதே வேளையில் குழுவானது நீ ஆன்மிக வாழ்வில் உன்னை அர்ப்பணித்து அதில் முன்னேற்றம் காண உனக்குத் துணை புரியும். குழுவில் பிறரிடமிருந்து பல நல்ல குணநலன்களை எதிர் பார்ப்பதைவிட, நீ அந்த குணநலன்களில் சிறந்து விளங்க வேண்டும். எனவே, உன்னால் முடிந்த அளவு உனது குணநலன்கள் மூலம் நல்லதொரு சுமூகமான குழுவை உருவாக்க முன்வர வேண்டும். இறுதியாக உன் குழுவில் யார் உறுப்பினராக இருந்தாலும் அதைக் கவனத்தில் கொள்ளாமல், நீ முழுமனத்தோடு குழு உறுப்பினர்களை வரவேற்று அவர்களுக்குப் பணி செய்ய வேண்டும்.

நம் குழுவானது உயிர்த்துடிப்புடன் இருக்க வேண்டுமென்றால், செயல்பாடுகள் இருக்க வேண்டும். எனவே, ஒவ்வொரு உறுப்பினரும், அமைதியை ஏற்படுத்துபவராகவும், ஒற்றுமையை நிலைநாட்டுபவராகவும், குழுவின் கட்டுக் கோப்பைக் கட்டிக் காப்பவராகவும் இருக்க வேண்டும். குழுவில் பிறரோடு இணைந்து வாழ்வதில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். தங்களுடைய சுயநலங்களை விட்டுக் கொடுத்து பிறர் முன்னேறுவதற்கு

ஏதுவான சூழலை உருவாக்க வேண்டும். இதற்குத் தேவையான சுயகட்டுப்பாடு மற்றும் புரிந்துணர்வு ஆகியவைதான் நம் குழுவில் அன்பையும், நட்புறவையும் உருவாக்கும்.

**பிறரோடு பகிர்ந்த வாழ:**

குழுவில் எப்போதும் பிறரது இருத்தலையும், அவர்களோடு பகிர்ந்து வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை மனதில் இருத்த வேண்டும். ஒருவருக்கு எல்லாவற்றையும், அனைவரைப் பற்றியும் தெரியும் என்ற மமதையில் இருக்கக் கூடாது. நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்தில் மாறுபட்டவர்கள், பல்வேறு கொடைகளைக் கொண்டுள்ளவர்கள் என்பதைத் திறந்த மனதுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

குழுவில் நாம் பிறரைக் குழுவாக வரவேற்று, நாமனைவரும் இணைந்து படித்து, கலந்தாலோசித்து முடிவு எடுக்க வேண்டும். நாமனைவரும் இணைந்துதான் சிக்கலுக்கு முடிவு காண வேண்டும். புதிய திட்டங்களைத் தீட்ட வேண்டும். நம் தனிப்பட்ட ஆலோசனைகளை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்ள வேண்டும். இவற்றை எந்த விருப்ப வெறுப்புக்கும் இடம் தராமல், தாழ்ச்சியோடும், தடையெதுவும் இன்றிச் செயல்படுத்த வேண்டும்.

குழுவில் உனது தனிப்பட்ட கருத்தைப் பகிர்ந்து கொள்ள உனக்கு உரிமை உண்டு. அது உனது கடமையும் ஆகும். உன் கருத்தைச் சொல்லும்போது அதைப் பிறர் மீது திணிக்காமல், தான் சொல்லும் கருத்துத்தான் உயர்ந்தது, சிறப்பானது என எண்ணாமல் பகிர்ந்து கொள்ள வேண்டும். பிறர் உன் கருத்தைப் பற்றிய கருத்துக்களைக் கூறி, கலந்தாலோசித்து அவற்றை ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலம். நட்புச் சூழலில் நம் கருத்தை முன்வைக்கும் போது குழுவானது உன் கருத்தை ஏற்றுக் கொள்ள முன் வருகிறார்கள். பொது நன்மைக்காக உழைக்கின்ற போது உறுப்பினர்களிடையேயுள்ள புரிந்துணர்வு ஆக்கமான செயல்பாட்டிற்கு இட்டுச் செல்கின்றது.

எனவே கூட்ட அமர்வுகள், கருத்துப் பரிமாற்றம், தியாக உள்ளம், பொது நல நோக்கு, நட்புறவு ஆகிய பண்புகள் தாழ்ச்சியில் நிலைத்து, பிறரை மன்னித்துச் செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. தாழ்ச்சி மனப்பான்மையோடு, தளர்வுகள், பல்வேறு கருத்துக்கள், சிந்தித்துக் செயல்படும் முறைகள் ஆகிய இவையனைத்தும் குழுவின் வளர்ச்சிக்கு மிகத் தேவையானதாக இருக்கிறது.

**பணி வாழ்வில்:**

புனித பவுலடியார் குழுவை கிறிஸ்துவின் மறையுடலுக்கு ஒப்பிடுகிறார். நம் உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்பும் ஒரு உறுப்பினர். இதன் பணிகள் எதுவாக இருந்தாலும் இவையனைத்தும் தலையால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவருடைய

சிறப்பான விளக்கங்கள் வழியாக நம் குழு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை விளக்குகிறார்.

1 கொரி. 12:12-27. இப்பகுதியை வாசித்துச் சிந்தித்துப் பார்.

கிறித்தவக் கண்ணோட்டத்தில் நம் குழுவை மனித உடலுக்கு ஒப்பிடலாம். கிறிஸ்துவே நம் தலைவர். நாமனைவரும் உறுப்பினர்கள். நாம் தலைமையோடு ஒன்றிணைக்கப்பட்டுள்ளோம். எனவே, நமக்குள் கருத்து ஒற்றுமை இருக்க வேண்டும். குழுவின் செயல்பாட்டுக்கு பிரிவினைக் கருத்துக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. நமது ஆற்றல்கள் அனைத்தும் குழுவின் நன்மைக்காப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். நம் குழுவின் தலையாய நோக்கம் பணி செய்வதற்காக மட்டுமே. எனவே நமது திறமைகள், பண்புகள், இயலாமைகள் அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டு குழுவுக்காக அர்ப்பணிக்கப்பட வேண்டும்.

**C. தன்னம்பிக்கை:**

ஓவ்வொருவரும் தங்களுடைய திறமைகளை ஏற்றுக் கொள்வதோடு, தன்னம்பிக்கை வளர்ப்பதில் முக்கியக் கவனம் செலுத்த வேண்டும். அதே வேளையில் பிறரிடமும் இந்த தன்னம்பிக்கைக் குணம் வளர ஒத்துழைக்க வேண்டும். இதைப் பிறர் தங்களைப் பற்றிக் கொண்டுள்ள உயர்வான எண்ணம், மனச் சோர்விலிருந்து விடுவித்து, பிறரில் மகிழ்ச்சியை உருவாக்க அவர்களின் பங்கு என்ன என்பதை உணர்த்த வேண்டும்.

பிறர் உன்னிடம் நம்பிக்கை கொண்டு, உங்கள் பணிகளைச் செவ்வனே செய்யும் போது, பயனுள்ள பணிகளைச் செய்ய நீங்கள் எடுக்கின்ற ஒவ்வொரு முன்னேற்பாடும் உங்களைப் பண்படுத்துகின்றன.

உங்களை ஆற்றுப்படுத்துகின்ற பொறுப்பாளர்கள் மீது நம்பிக்கையும் மதிப்பும் கொள்ள வேண்டும். உறுப்பினர்களும் ஒவ்வொருவரிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.ஒருவருக்கு நம்பிக்கை தரப்படுகிறது. அதே வேளையில் பிறருடைய நம்பிக்கையைப் பெறுதிலும் வெற்றியடைய வேண்டும். உறுப்பினர்களை வழி நடத்துகின்ற பொறுப்பாளர்கள் தங்கள் மறைத்தூதுப் பணியில் நம்பிக்கைக் கொண்டு அதன் வெற்றிக்காக தங்கள் குழு ஆற்றலையும் செலவிட வேண்டும். அதே வேளையில், உறுப்பினர்களையும் நம்பி, அவர்களுக்கு உதவி செய்வதிலும், அவர்களின் உதவியைப் பெற்றுக் கொள்வதிலும் கவனம் செலுத்த வேண்டும். குழுவிலுள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், நம்பிக்கை உணர்வையும், ஒற்றுமையையும் உருவாக்குவதில் முயன்று உழைக்க வேண்டும்.

திரு அவை நமக்குக் கட்டளை பிறப்பித்துள்ளது. பிறரை விடுத்து தனியாக குறுகிய நோக்கத்தோடு, குறுகிய வழியில் செயல்பட நம்மை அழைக்கவில்லை.

மாறாகக் குழு நமக்குத் தேவைப்படுகிறது. கடவுள் உனக்கும் பிறருக்கும் கொடுத்த தன் அன்பின் முழுமையை அடைய பிறர் நமக்குத் தேவைப்படுகிறார்கள்.

கிறிஸ்துவைப் பின் பற்றி நாமனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும். நம்மிடையே உண்மையான அன்பு, நேர்மை, உண்மை, பொறுப்புணர்வு இருக்க வேண்டும். உன்னைப் பொறுத்த அளவில் குழந்தை உள்ளமும், திறந்த உள்ளமும் இருக்க வேண்டும். உனக்குத் தவறாத நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் தேவைப்படுகிறது. உன் குழுவிலுள்ள உறுப்பினர்களின் செயல்பாட்டையும், நட்பையும், எளிமையையும், நன்மைத் தனத்தையும் நம்பினால் உன்னை எதுவும் குழுவிலிருந்து பிரிக்க முடியாது. குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அன்பு செய்யப்பட்டு, தங்களின் குரலுக்குக் குழு செவிமடுக்க வேண்டுமென்றால், ஒவ்வொரு உறுப்பினரும் தாழ்ச்சி என்ற புண்ணியத்தைத் தங்களுக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நீ பிறரை அன்பு செய்வதைப் பெருமையாக என்ன வேண்டும். அவர்களை உன் செபத்தில் நினைவு கூர்ந்து செபிக்க வேண்டும். குழுவுக்கு உறுப்பினர்கள் விலை மதிப்பில்லா சொத்து என்பதையும் உணர வேண்டும். அப்படி இல்லை என்றால் உனது மறைத்தூதுப் பணியில் நீ எவ்வாறு இயேசுவைப் பின்பற்ற முடியும். அவரிடமிருந்து கற்றுக் கொள்ள முடியும். எவ்வாறு குழுவில் செவ்வனே பணியாற்ற முடியும். உன் மனதில் யாராவது நினைவில் இல்லையென்றால், நீ எவ்வாறு அன்பு செய்யவோ, பணி செய்யவோ, மன வருத்தப்படவோ, பாதுகாக்கவோ, மன்னிக்கவோ முடியும். உன் குழு உறுப்பினர்களிடம் உள்ள புதிய திறமைகள், கொடைகள் ஆகிய இவற்றைக் கண்டுகொள்ள முயற்சி எடுக்க வேண்டும். அப்போதுதான் பிற உறுப்பினர்களிடம் உள்ள ஆற்றல்கள், நேர்மறைச் சிந்தனைகள் ஆகியவற்றை இனம் கண்டு, அவர்களில் உற்சாகத்தையும், குழுவுக்கு அவர்களின் முக்கியத்துவத்தையும் உணர்த்த முடியும்.

**ஒற்றுமையில் (கூட்டுறவில்):**

குழுவில் ஒற்றுமையே அனைவரையும் இணைக்க வேண்டும். அதற்குத் தேவை ஒரே உள்ளமும், ஒரே மனமும் உடையவர்களாக இருக்க வேண்டும். குழுவின் உள்ளேயோ, வெளியேவோ பழித்துரைக்கக் கூடாது. பிறரைப் புரிந்துக் கொள்ளும் மனம் தான் நம்பிக்கையின் அடிப்படை. அதுதான் மக்களிடம் பரிவிரக்கத்தையும், நேர்மறை பிணைப்பையும் உருவாக்கும்.

குழுவில் ஒற்றுமையை நிலை நாட்ட வேண்டுமென்றால் உறுப்பினர்களிடையே பகிர்வும் மற்றும் கருத்துக்களை பகிர்வதிலும் பிறரை நிறை குறைகளோடு ஏற்றுக் கொள்வதிலும், பிறருக்காகத் தியாகம் செய்வதிலும் கருத்தாய் இருக்க வேண்டும். பிறரன்புதான் நம்மிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் களையவும், ஒற்றுமையின் பண்புகளையும் வளர்க்கிறது. குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும், கருத்து

ஒற்றுமையிலும், பணி புரிவதிலும் நிலைத்திருக்க வேண்டும். உறுப்பினர்களிடையே கலந்துரையாடல், ஒருவர்மீது ஒருவர் நம்பிக்கை கொள்தல், உண்மையான நட்புறவோடு கருத்து ஒற்றுமையை ஏற்படுத்துதல் ஆகிய பண்புகள் இருக்க வேண்டும்.

குழுவில் பகிர்வு எவ்வாறு குழு ஒற்றுமைக்குத் துணை புரிகிறது?

- ❖ நம் மறைத்தூதுப் பணியின் இலக்கு (நோக்கம்).
- ❖ ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருத்தல்.
- ❖ நற்செய்திச் சவால்களுக்கு நமது நம்பகத் தன்மை.

இத்தகைய மனநிலையில்தான் நாம் இயேசுவோடும் குழுவின் ஒருங்கிணைப்பாளருடனும் இணைந்திருக்க வேண்டும். இதை விளக்குவது எளிது: அன்புச் சக்தியில் நம்பிக்கை கொள்,பிறரை நம்பு, பிறருக்குப் பணி செய், எப்போதும் மன்னிக்கத் தயாராக இரு. இதுதான் இறைத் திருவுளச் சபையிலுள்ள குழுக்களின் வாழ்க்கை அட்டவனையாக இருக்க வேண்டும்.

**இயல் II: குழு வாழ்விற்குத் தேவையானவை:**

கூட்டுத் தோழமை வாழ்வுக்குத் தேவையானவற்றைச் சிந்தித்துப் பார். ஒரு வேளை அது சவால் நிறைந்ததாக இருந்தாலும் உன் வளர்ச்சிக்கு அது துணை புரிவதால் இருக்கும்.

**1. பொது நோக்கத்தைக் கொண்டிருத்தல்:**

கூட்டுத் தோழமை சிதையாமல் இருக்க வேண்டுமென்றால், இயேசுவை விட்டு ஒருபோதும் அகன்று போகாதே! அவர் தனது அன்பை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கட்டும். இயேசுவைப் பிரதிபலிப்பதே குழுவின் தலையாய நோக்கம் என்பதை ஒருபோதும் மறந்து விடாதே! குழுவில் இணைந்திருக்க வேண்டும் என்றால், குழுவின் பொது நோக்கத்தில் பங்கு பெற வேண்டும். கடவுளுக்குச் சொந்தமாக இருக்க வேண்டும். அவருக்காக வாழ வேண்டும். உன் கையில் இருக்கும் தற்போதைய சூழலில் நீ வாழ வேண்டும். அந்த வாழ்வு பிறருக்கு மகிழ்ச்சியைத் தருகின்ற வாழ்வாக இருக்க வேண்டும்.

குழுவின் நோக்கத்தை அனைத்து உறுப்பினர்களும் இணைந்து தேர்வு செய்ய வேண்டும். இளம் விளையாட்டு வீரர்களை நினைத்துப் பார். எதிலும், எல்லாவற்றிலும் விளையாட்டு மட்டும் தான் அவர்களது குறிக்கோளாக இருக்கும். இவர்களுக்கு வெற்றி பெற வேண்டும் என்பதுதான் இலக்கு. அந்த இலக்கை அடைய அவர்கள் எந்தத் தியாகத்தையும் செய்ய தயாராக இருப்பார்கள். அதேபோல குழுவில் இணைந்திருக்கும் உனக்கு ஏன் கடவுள் உனக்கு எல்லாமாக இருக்கக் கூடாது. இந்த இலக்கில் உனக்கு தளர்ச்சி ஏற்பட்டதுண்டா? அல்லது குறிக்கோளில் தவறிவிட்டாயா?

கிறிஸ்துவின் உடலில் நீ ஒரு உறுப்பினராக இருப்பதால், எந்த அளவுக்கு இயேசுவோடு இணைந்திருக்கிறாயோ, அந்த அளவுக்குத்தான் உன் பணி வாழ்வும் அமையும். உழைப்பது உனது கரம் என்றாலும், உழைக்கும் உன் கரத்திற்கு உறுதி கொடுப்பது இயேசு ஒருவர்தான். எந்த அளவுக்கு நீ தாராளமாக உன்னை அழைத்த இயேசுவுடன் இணைந்து இருக்கிறாயோ அந்த அளவுக்குத்தான் உன் பணி வாழ்வின் தன்மையும் இருக்கும். ஏனென்றால், இறைத் திருவுளச் சபையின் நோக்கமான இயேசுவுக்கு விருப்பமானதைச் செய்வதுதான் நமது செயலாக இருக்க வேண்டும். இயேசுவைப் பிரதிபலிக்கும் போது இறைத் திருவுளச் சபையார், இறையியல் மற்றும் ஒழுக்கப் பண்புகள் ஆகியவற்றை நற்செய்திப் பேறுகளின்படி இயேசுவின் வாழ்வைப் பின் பற்றி முழுமையாக தன் வாழ்வை அமைத்துக் கொள்பவர் ஆவார். ஏழைகளைக் கண்டபோது நம் ஆண்டவர் இயேசு தன் தந்தையின் விருப்பத்திற்கிணங்க அமைதியோடும், இரக்கத்தோடும் உற்று நோக்கினார். இதேபோல ஒவ்வொரு சபையாரும் தெய்வீக மதிப்போடு, இயேசுவைப் பின்பற்றி பிறரை அன்பு செய்யவும் மதிக்கவும் வேண்டும்.

‘‘இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன்’’ (மத். 18:20) குழுவின் இதயமாக இருப்பவர் இயேசு ஒருவர் தான். உனக்கு நண்பர்கள் உண்டு. ஏன் இயேசுவுக்கு நண்பர்கள் இருக்கக் கூடாதா? அந்த நண்பர்களில் நீ ஏன் ஒருவனாக இருக்கக் கூடாது. நமது சபையில் பொது நோக்கம் என்ன?

திருமணமானவர்களுக்கு, குழுவாழ்வ என் குடும்ப வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம் என்ன?

**II. குழுவில் தன்னை முழுமையாக ஒன்றிணைத்து அமைதியை ஏற்படுத்துவோராய் இருத்தல்:**

ஆயிரக்கணக்கான சிறிய இழைகளை ஒன்றிணைத்துதான் ஆயிரக்கணக்கான திரன்சுருள்(Cable) ஆகும். சில வேளைகளில் கடலில் உள்ள கப்பலைக் கட்டி இழுக்க வேண்டுமென்றால் சில சுருள்களை உடைய கம்பிச்சுருள் அறுந்து விடுகின்றது. ஆனால் அதேவேளையில் ஆயிரக்கணக்கான சுருள்களைக் கொண்ட கம்பிச்சுருள் பலம்மிக்கதாக அமைந்து கப்பலையே இழுத்து விடுகிறது. இதேபோலத் தான் நம் குழுத்தோழமை வாழ்வும், தனியொரு ஆளாகச் சாதிக்க முடியாததைக் குழுவில் சாதிக்க முடியும். எனவே கூட்டுத்தோழமை ஒவ்வொரு உறுப்பினராலும் உருவாக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு உறுப்பினரும் குழுத்தோழமைக்கு அவசியம் என்பதை உணரவேண்டும் இல்லையென்றால் செயலற்றவர்களாகி விடுவோம். நமது அனைத்துத் தோள்களும்

இணைந்து சுமையைத் தள்ள வேண்டும். நமது பொதுநோக்கத்தை அடைய அனைத்து ஆக்க சக்திகளையும் ஒருங்கிணைத்துத் தருவதுதான் குழுவின் பணியாகும். இந்த குழு உறுப்பினர்களின் உள்ளம், ஆற்றல், நோக்கு, கட்டப்பாடு ஆகிய அனைத்தையும் பிரதிபலிக்கவேண்டும்.குழுவில் நான் இல்லையென்றால், நாம் திட்டமிட்டபடி எதையும் செய்ய முடியாது அல்லது எந்தப் பணியுமே எதையும் செய்ய முடியாது என எண்ணுவதுதான் குழுவாழ்விற்கு மிக ஆபத்தான ஒன்றாகும். இதிலிருந்து விடுபடுவது எளிதல்ல. ஆனால், முயன்று வெற்றி காண வேண்டும். இதுதான் எதார்த்தமான நிலை என்பதை மறந்து விடக் கூடாது. ''அனைவரும் ஒருவருக்காக, ஒருவரே அனைவருக்காகவும்'' என்பது உனது குறிக்கோளாக இருக்கலாம். ஆனால் அனைவரும் ஒரே இலக்கை நோக்கி, ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தங்கள் ஆற்றல்களை ஒன்று திரட்டி பிறரது சேவையில் ஈடுபட வேண்டும்.

ஒருவருக்கொருவர் துணை புரிவது நம்மை ஒன்றிணைக்கின்றது. தனிப்பட்ட நபரையும் வளர்ச்சியடையச் செய்கிறது. ஒருவரையொருவர் அறிந்து கொள்ளச் செய்கிறது. நீடித்த நிலைத்த தோழமைக்கும், செயல்பாட்டிற்கும் இட்டுச் செல்கின்றது. ஒருவர் ஒருவரிடையேயுள்ள பிணைப்பை வளர்க்கிறது. குழுவை ஏற்றுக் கொள்கிறோம் என்றார். கூட்டுப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறோம் என்று பொருள்படும். மேலும் தன்னை முழுவதுமாக அர்ப்பணிப்பதும், பிறரை எப்போதும் மனதில் கொண்டு அவாகளின் இருத்தலை ஏற்றுக் கொள்தல். குழு உறுப்பினர் குழுவுக்காக வாழ வேண்டும். குழுவானது தன் உறுப்பினர்களுக்காக வாழ வேண்டும். குழுவில் ஒருவருக்கொருவர் துணைபுரிவதென்பது மறை உடலாம் குழுவில் இயேசுவைப் பின்பற்றவதாகும். நீ உன் சகோதர சகோதரியின் காவலாளியா? இதற்கு இயேசு தரும் பதில் மிகத் தெளிவானது.

''நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள், தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்…. (மத். 25:35) இயேசுவின் இந்த ஆறுதலான வார்த்தைகள் கடவுள் உன் மீது கொண்ட அன்பையும் அதற்கு ஈடாக உனக்குப் பணிபரிந்து, உன்னை மன்னித்து உன்னைப் பாதுகாக்கிறார் என்பதை நினைவுபடுத்துகின்றார்.

குழுவில் நீ உன் சகோதர சகோதரியின் காவலாளியாக மாறுகிறாய். உன் தனிப்பட்ட பண்பு நலன்களைக் கண்டு அதன்மூலம் குழுவுக்குத் துணைபுரிகின்றாய்.பிறரைப் பற்றி உயர்வாகப் பேசக் கற்றுக் கொள். ஆமைதியை ஏற்படுத்துவற்குத் தடையாக இருக்கும் உன் சுயநலத்தை விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தால், அவ்வேளையில் நீ உறுதியாக நம்ப வேண்டியது என்னவென்றால் பிறரும் உனக்காகத் தங்கள் சுயநலன்களை விட்டுக் கொடுக்கிறார்கள் என்பதுதான்.

பெறுதிலும் தருவதே இன்பம் என்பதை அப்போது கண்டு கொள்வாய். அப்படிக் கண்டுகொள்ளும் போது மகிழ்ச்சி, அமைதிச் சூழலும், சார்புத் தன்மையில் நிலைத்த நீடித்த மகிழ்ச்சியையும் கண்டு கொள்வாய்.

குழுவில் பிற உறுப்பினர்களுடைய மன ஓட்டத்திற்கேற்ப நாமும் செயல்படும்போது, பொதுப் பேருந்தில் பயணம் செய்யும் மனநிலை தோன்றும். அதாவது பொது கால அட்டவணை, வேகம், புறப்பாடு, கடும் வெப்பம், குளிர்ச்சி ஆகியனவாகும். குழுவில் நம்மை இணைத்துக் கொள்வதென்பது குழுவிலள்ள அனைவரின் வாழ்க்கை முறை, பணிச் சூழல் ஆகிய அனைத்தையம் ஏற்றுக் கொள்வதாகும்.

நமது சபையில் குழுவிலுள்ள உறுப்பினர்களின் பொறுப்புப் பகிர்வு என்ன?

**III. பொதுப் பயிற்சியை ஏற்றுக் கொள்தல்:**

தனிப்பட்ட முறையில் உனக்கு உருவாக்கப் பயிற்சி தரப்பட்டிருக்கும். ஆனால், இன்னும் உனக்கு அதிகம் தேவை. இதைத்தான் உன் குழு நிறைவு செய்கிறது. பயிற்சியை ஒருவர் ஏற்றுக் கொள்வதென்றால், குழு தருவதை ஏற்றுக் கொள்வது. உனக்குத் தேவையானவற்றை வரவேற்பது. மேலும் உனது திறமைக்கு ஏற்றவாறு குழுவுக்குத் தருவதைக் கற்றுக் கொள்வது. எனக்கு வேண்டியதெல்லாம் பெற்றுக் கொண்டு விட்டேன். நான் எனது இலட்சியத்தை அடைந்து விட்டேன். இனி எனக்கு எதுவும் தேவையில்லை எனக் கூறுவது தவறானது மற்றும் பிழையானது. எனது பயிற்சி முடிந்து விட்டது என்று நினைக்கின்றாயோ அன்றே குழுவிலுள்ள வாழ்வும் சரிவடையத் தொடங்கிவிட்டது என்று பொருள்.

குழு வாழ்க்கை என்பது பொழுதுபோக்குக் குழுவோ அல்லது உல்லாசக் குழுவோ அல்ல. மாறாக அது ‘‘உருவாக்கப் பயிற்சி பள்ளியாகும்’’ இங்குதான் உன்னை நீ மாற்றியமைத்துக் கொள்கிறாய். குழுவில் அனைவரும் இணைந்துதான் கலந்துரையாட வேண்டும், கற்றுக் கொள்ள வேண்டும், செபிக்க வேண்டும், கருத்து பரிமாற வேண்டும். குழு வாழ்க்கை என்பது ‘‘புனிதத்துவத்தின் பள்ளியாகும்’’ இங்குதான் உன் குறைகள் நீக்கப்பட்டு, நல்ல பண்புகள் வளர்க்கப்படுகின்றது. இதில் வெற்றியடைய வேண்டுமென்றால், நீ கடவளைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ள வேண்டும். இன்று நீ குழுவில் ஓர் உறுப்பினராக வாழ்கிறீர் என்றால், நீ பிறருக்குப் பொறுப்பாளராகவும் இருக்க வேண்டும். பணியில் எப்போதும் ஈடுபாடு கொண்ட அப்போஸ்தலனாக இருக்க வேண்டும். உலகம் உனது பங்களிப்பை எதிர் நோக்கியிருக்கிறது. நீயும் மக்களுக்கு அன்பைக் கொடுக்க, உதவி புரிய, பணி செய்ய, தவறை ஏற்றுக் கொள்ள பிறரை மன்னிக்க வேண்டிய தொடர்புகளை எப்போதும் ஏற்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

**'பகுதி மூன்று: கிறிஸ்துவிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது:**

இறைத் திருவுளச்சபை உறுப்பினர் ஒவ்வொருவரும் குழுவாழ்வின்மீது ஈர்ப்பு (பற்று) கொண்டிருக்க வேண்டும். பிற உறுப்பினர்களாகிய ஆண், பெண் அனைவரும் குழுவாழ்வில் ஈடுபாடு கொள்ளச் செய்ய வேண்டும். குழு வாழ்வு என்பது ஒரு வகையில் தூய ஆவியின் வல்லமையால் ஆட்கொள்ளப்பட்ட கிறித்தவத் திருக்கூட்டத்தைப் போன்றது.

குறைபாடுகள் நிறைந்த குழுவாக இருந்தாலும், தொடக்கக் கால திரு அவைப் பண்புகளால் வளர்க்கப்படுகிறது. திரு அவைத் தொடக்கத்தில் இருந்த கூட்டுத் தோழமைப் பண்புகளில் சில தளர்வுகள் நமது குழுவில் இருந்தாலும் அடிப்படையில் நாம் தொடக்க கால திரு அவையைப் போல வாழ வேண்டும்.

**1. இயேசுவின் முன் மாதிரி:**

கடவுளின் கட்டளைகளில் முதலாவது எல்லாவற்றிற்கும் மேலாகக் கடவுளை அன்பு செய்வது, இரண்டாவதாக உன் அயலானை அன்பு செய்வது. கடவுளின் சட்டங்களை ஏற்றுக் கொண்டு அவற்றை நிறைவேற்றி அவரை மகிமைப்படுத்துவதின் மூலம் நீ கடவுளை அன்பு செய்கிறாய். உன் அயலானை ஒரு பொருட்டாக எண்ணி, அவரை மதித்து அன்பு செய்வதன் மூலம் நாம் கடவுளை அன்பு செய்கிறோம். நீ ஒரு குழுவில் வாழும் போது, பிறருக்கு உன் தனிப்பட்ட மறை உண்மையில் பங்கு தரும்போது, அவர்களை உன் அன்புப் பந்தத்தில் இணைத்துக் கொண்டு அவர்களுக்கும் பல நிலைகளில் பங்கு தருகிறாய்.

இயேசு உனக்கு ஒரு மகத்தான எடுத்துக்காட்டை முன் வைக்கிறார். மனுக்குலத்தை மீட்பதற்காகவே இயேசு இம்மண்ணிற்கு வந்தார். கடவுளான அவருக்கு பரந்து விரிந்த இவ்வுலகம் இதற்கு ஒரு தடையாக இருக்கவில்லை. இருந்த போதிலும், மனிதன் என்ற முறையில் 12 அப்போஸ்தலர்களின் குழவை ஏற்படுத்தினார். சீடர்கள் என்ற குழுவையும் ஒன்றிணைத்தார். பின் அவர்களை இருவர் இருவராக உலகின் கடை எல்லை வரை நற்செய்தியை அறிவிக்க அனுப்பினார்.

இயேசு தன் அப்போஸ்தலர்களை உயிருக்குயிராய் அன்பு செய்தார். ஆனால் பேதுருவோ இயேசுவை மறுதலித்தார். தோமையார் அவநம்பிக்கை கொண்டார். யூதாசோ 30 வெள்ளிக்காசுகளுக்காக இயேசுவைக் காட்டிக் கொடுத்தார். ஆனால், இயேசு ஒருபோதும் தடுமாறவில்லை. இயேசு தன் குழுவைக் கண்காணிக்கிறார். தன்னிடம் உள்ளதை அவர்களோடு பகிர்ந்து கொள்கிறார். அவர்களால் தாங்கக் கூடிய அளவுக்குப் பொறுப்புக்களையும் பகிர்ந்தளித்தார்.

இயேசு தனியாகத் தான் மட்டும் உலகை மீட்க விரும்பவில்லை. மாறாக அவருடைய விருப்பம் என்னவென்றால், தன்னோடு ஒத்துழைப்பவர்களோடு இணைந்து உலகை மீட்க விரும்பினார். இயேசு தன் சீடர்களோடு, யூதேயா, சமேரியா, கலிலேயா மற்றும் இன்றைய லெபனான் பகுதி முழுவதும் இயேசுவின் பயணத்தைக் கவனித்தோமென்றால், இயேசு தன் சீடர்களொடு உல்லாசப் பயணம் செல்லவில்லை. மாறாகப் பல இடங்களுக்க இயேசு பணி செய்து கொண்டே சென்றார். அதனால், சீடர்கள் மிகுந்த களைப்பாக இருந்தார்கள். எந்த அளவுக்கு அவர்கள் களைப்பாக இருந்தார்கள் என்றால், அவர்களால் விழித்திருந்து செபிக்கக் கூட முடியவில்லை. அந்த அளவுக்குச் சோர்வாக இருந்தார்கள்.

அப்போஸ்தலர்களின் குழுவில் சிலர் கூட்டுத் தோழமை வாழ்வையும் மறந்து விட்டார்கள். அவர்களில் சிலர் பிறரை அடக்கி ஆள நினைத்தார்கள். சிலர் மற்றவரைவிட சிறப்பான விதத்தில் மதிக்கப்பட விரும்பினார்கள். தங்களுக்குள் விவாதித்துக் கொண்டார்கள். ஒருவரையொருவர் வெளிப்படையாகக் குறை கூறவும் செய்தார்கள். இயேசு அவர்களைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்த வேண்டியிருந்தது. ‘‘நீங்கள் மனந்திரும்பிச் சிறு பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.’’ (மத். 18:3) இத்தகைய வார்த்தைகள்மூலம் அவர்களைக் கண்டித்து ஒழுங்குப்படுத்தினார்.

நற்செய்தியாளர் யோவான் இவ்வாறு விவரிக்கிறார்.

கூட்டுத் தோழமை உணர்வு உன்னில் உற்சாகத்தை எழுப்ப வேண்டும்.

‘‘கடவுள் அன்பாயிருக்கிறார்…. அவரே முதலில் நம்மை அன்பு செய்தார்….. நாமும் ஒருவரையொருவர் அன்பு செய்ய வேண்டும்….. நாம் ஒருவரையொருவர் அன்ப செய்தால் கடவுள் நம்மில் வாழ்கிறார். அன்பு அச்சத்தை அகற்றுகிறது….. அச்சம் கொண்டுள்ளவரிடம் அன்பு முழு நிறைவு அடையாது. கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதர சகோதரிகளை வெறுப்போர் பொய்யர். தன் கண் முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்த முடியாது. கடவுளிடம் அன்பு செலுத்துவோர் தம் சகோதரர் சகோதரிகளிடமும் அன்பு செலுத்த வேண்டும்.’’ (1யோவான் 4:8-21)

**II. சகோதர சகோதரிகளுக்காக திரு அவையிடம் இருந்து பெறும் மறைத்தூதுப் பணி:**

அப்போஸ்தலன் என்பவன் மனுக்குல மீட்புக்காகக் கடவுளால் அனுப்பப்பட்டவன்(ள்). இந்த மீட்புப் பணி கடவுளிடமிருந்து இயேசு வழியாக நமக்கு இலவசமாகத் தரப்பட்டது. (உரோ.6:23, 10:15, 2கொரி.2:17)

- ❖ இயேசுவின் மீட்புத் திட்டப்பணி ஆகிய உலகிற்கானது. (உரோ.11:22)
- ❖ அப்போஸ்தலன் கடவுளின் பணியைச் செய்கிறான். (1கொரி 16:10)
- ❖ அப்போஸ்தலன் மற்றவர்களை கிறிஸ்துவிடம் இட்டுச் செல்ல வேண்டும். (உரோ.1:16)

திரு அவையில் அப்போஸ்தலனாக வாழ்வதென்பது திரு அவையின் மீது நெருங்கிய பிணைப்புப் பண்பைக் கொண்டவராக இருக்க வேண்டும். அப்போஸ்தலன் என்பவன் திரு அவையால் அனுப்பப்பட்டவன் என்பதை ஒருபோதும் மறக்கக் கூடாது. இவ்வாறு அனுப்பப்படும் போது நம் செப வாழ்வு ஆழப்படுத்த வேண்டும். அப்போஸ்தலத்துவம் நமது மீட்பை வலுப்படுத்துகிறன்றது. நாம் அனுபவிக்கும் துன்பத்திலும் வேதனையிலும் நாம் ஒருவிதத்தில் இயேசுவின் பாடுகளில் பங்கு பெறுகிறோம். மேலும் நமது செயல்பாடுகளால் கிறிஸ்துவின் மறையுடலுக்கு வலு ஊட்டுகிறோம்.

திரு அவையில் நாம் இருப்பது நமது உள்ளார்ந்த நோக்கத்தையும், செயல்பாடுகளையும் பாதிக்க வேண்டும். மேலும் நமது ஆன்மிக வாழ்வு, செப வாழ்வு, தியாக வாழ்வு ஆகிய அனைத்திலும் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். திரு அவைதான் உன்னை அப்போஸ்தலனாக உருவாக்குகிறது. திரு அவைதான் உனக்குக் கட்டளை இடுகிறது. உன்னை அனுப்புகிறது. நீ திரு அவைக்குச் சொந்தமானவன்(ள்). உலகுக்கு மீட்பைக் கொடுக்க விரும்பினால், திரு அவையின் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அதற்காக உன் சொந்த விருப்பு வெறுப்புக்களை விட்டுக் கொடுக்க வேண்டும். திரு அவை உனக்குக் கொடுக்கின்ற மறைப்பணியை நிறைவேற்ற திரு அவையின் வழி நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். திரு அவையால் அப்போஸ்தலனாக அனுப்பப்பட்ட நாம் திரு அவைக்குக் கீழ்ப்படிய மறுக்கும் அதே வேளையில் உன் அப்போஸ்தலப் பணியும் உன்னிடமிருந்து எடுக்கப்பட்டு விடும். உறுப்பினர் செபிப்பதன்மூலம திரு அவையை அன்பு செய்ய, பணி செய்ய, பாதுகாக்க, தவறுகளுக்கு வருந்த, இணைந்து செயலாற்ற, திரு அவையில், திரு அவைக்காக வாழ அறிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு செய்தவன் மூலம் உன் மறைத் தூதுப் பணியில் திரு அவையைப் பிரசன்னப்படுத்துகிறோம்.

- ❖ கிறிஸ்துவின் அன்பைப்போல உன்னால் அன்பு செய்யமுடியும்.
- ❖ உன்னையே மறுப்பதன் மூலம், உன் உண்மை அன்பை வெளிப்படுத்தலாம்.
- ❖ உன்னையே மறுத்து, உன்னை முழுவதும் அர்ப்பணிப்பதை உன் செயல்பாட்டின்முலம் வெளிப்படுத்தலாம்.

**பகுதி நான்கு: திரு அவையில் கூட்டுத் தோழமையோடு:**

கடந்த சில வருடங்களாக பொதுநிலையினர் மத்தியில் திரு அவையில் மற்றும் உலகில் தங்களது பணி என்ன என்பதைப் பற்றிய விழிப்புணர்வு தோன்றியுள்ளது. தங்களது திருமுழுக்கைப்பற்றியும், திரு அவையில் தாங்களும் ஒரு உறுப்பினர் என்பதை நினைத்து பெருமகிழ்ச்சி அடைகின்றனர். மேலும் தாங்கள் திரு அவையில் முழுநேரப் பணியாளர்களாக அங்கீகரிக்கப்படவும், தங்களுடைய கடமைகள், உரிமைகள் என்ன என்பவை பற்றி வரையறுக்கப்படவும் வேண்டுமென விரும்புகிறார்கள்

இரண்டாம் வத்திக்கான் பொது அவையில் ஆயர்கள், தூய ஆவியானவரின் குரலுக்குச் செவிமடுத்து அதன் விளைவாக அகில உலக திரு அவை தன் கரங்களை விரித்து அனைத்து சமூக, நாடுகள் மற்றும் உலகநாடுகளிலுள்ள கிறித்தவர்களுக்கும் சென்றடைய வேண்டுமென்று பறைசாற்றினார்கள்.

**1. பெரிய இறையரசுக்குழுவுக்கு இயேசுவே குழுத்தலைவர்**

**இயேசுவின் பணியில் ஆண்,பெண்:**

ஒவ்வொரு அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவனைப் போல இறைத்திருவுளச்சபை உறுப்பினர்களும், இயேசுவைப்போல அகில உலகிற்கும் பொறுப்பானவர்கள் என்பதை உணரவேண்டும். இறைத்திருவுளச் சபையார் உலகைஅன்புசெய்து அவற்றை மீட்க விரும்ப வேண்டும். பரந்து விரிந்த மனித இதயத்தோடு அனைவரும் ஒன்றிணைந்து, முழு அர்ப்பணத்திற்கு எடுத்துக்காட்டான இயேசுவைக் கொடுத்தற்காக இறைத்தந்தைக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்.

திரு அவை இந்த உலகை மீட்க விரும்புகிறது. நாமும் இறைத்தந்தை தன்மகன் இயேசுவில் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை நினைத்து பெருமிதம் கொள்ள வேண்டும். உலகை மீட்கும்பணியில் அவரது குழுவாக இருக்கிறோம் என்பதை உணரவேண்டும் இதை நீ உணர்ந்துவிட்டால், அர்ப்பணிக்கப்பட்ட நம்மிடம் எத்தகைய மேலான அன்பு இருக்கவேண்டும். உணர்ந்து, நமது செயல்களோடு இயேசுவின் தாராள செயல்பாடுகளும் இணைந்து செல்லவேண்டும் அப்போதுதான் நம்மால் உலகை மீட்க முடியும். திரு அவையின் உண்ணமயான திருமுகத்தை அதாவது அன்புத் திருமுழுகத்தைக் கண்டுகொண்டுவிட்டால் திரு அவையின் அழைப்புக்கு எவராலும் மறுப்புச் சொல்ல முடியாது.

**II. திரு அவை மற்றும் இறையரசுக்குழு:**

இயேசுவின் சிறகுகளுக்குள் அடைக்கலம் பெற்ற குடும்பங்களின் தொகுப்புத்தான் திரு அவை. இவர்கள் தங்களுக்கென வாழாமல், கடவுளுக்கென வாழ்பவர்கள். கடவுளிடமிருந்து தாங்கள் பெற்றுக்கொண்ட அனைத்தையும் பிறருக்காக வாரி

வழங்குபவர்கள். எனவே கிறிஸ்துவைப்போல, கிறிஸ்துவின் தலைமையில் செயலாற்றுவது என்றால்:

- பிறருக்கு இயேசுவின் சாட்சியாக இருத்தல்.
- அகில உலகையே ஆட் கொள்கின்ற அன்புச் செய்தியைப் பறை சாற்றுதல்.
- பிறர் கடவுளைக் காணவும், கண்டுகொள்ளவும், அன்பு செய்யவும், பணி செய்யவும் உற்சாகப் படுத்துதல்.
- அயலாரை மன்னித்து, இருப்பதை அவர்களோடு பகிர்ந்து கொள்தல், பிறருக்காக தங்களையே இழத்தல்.
- சோர்வின்றி எப்போது பிறருக்கு உதவத்தயாராக இருக்கும் பண்பை வளர்த்துக் கொள்தல்.
- அன்புச் செயல்களில் பயிற்சி பெறுதல்.
- ஒற்றுமையையும் அமைதியையும் நிலை நாட்டுதல்.

திரு அவை மறைஉடல் என்கின்ற பெரிய குழுவாகும். இதில் உனக்கும் கடவுளுக்கும் எந்தவிதமான இடைவெளியும் இருக்கக்கூடாது எங்கெல்லாம் தலைமைக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் இடைவெளி இருக்கின்றதோ அங்கே இயேசுவின் பணியில் பிரிவும்,சோர்வும் இருக்கும். மனிதப் பண்புகளை மட்டும் கொண்டு உலகில் மீட்பைக் கொண்டுவர முடியாது.மாறாகத் திரு அவையால் மட்டுமே முடியும். திருமுழுக்கின் வழியாக இயேசு இத்தகைய அருள் வாழ்வைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுப்பவராக வாழ நம்மைப் பணிக்கின்றார்.

திரு அவை ஓர் அன்பின் குடும்பம். ஒரு சமூகத்தையோ, நிறுவனத்தையோ, குழுவையோ, சீர்திருத்த விரும்பினால், நீ எந்த நிலையில் இருக்கிறாய் என்பதை முதலில் உணரவேண்டும். முதலில் நாம் நம் உள்ளத்தின் ஆழத்தில் நம்மைச் சீர்திருத்தினால்தான் இது சாத்யமாகும்.

**காணும் திரு அவையை நம்புதல்:**

திரு அவையின் மனநிலையைக் கொண்டிருக்கிறோமென்றால் திரு அவையைப்போல பிறருக்குப்பணிபுரிவதை நம் நினைவிலும் வாழ்விலும் கொண்டிருக்கவேண்டும். இதை அடைய வேண்டுமென்றால், உறுப்பினர்களின் மத்தியில் நம்பிக்கையும், வாழவேண்டுமென்ற ஆர்வமும் திரு அவைக்குத் தேவைப்படுகின்றது.

**கடவுளின் மீது நம்பிக்கை:**

கண்காணாத, எண்ணங்களுக்கு எட்டாத, நம்மைக் கடந்து நிற்கின்ற கடவுளின் மீது நம்பிக்கை கொள்தல்.

**திரு அவையின் மீது நம்பிக்கை:**

உன் ஆன்மாவின் உள்ளொளியில் வெளிப்படுத்தப்படுவதை நம்பவேண்டும். திரு அவையின் மறையுண்மையையும், திரு அவை நிறைவேற்றுவதையும், உன்னால் புரிந்து கொள்ள முடியாத மறை உண்மைகளையும், மனிதவரம்புகளுக்குள் கட்டுப்படுத்த முடியாத கடவுளை நம்புவதையும், உள்ளடக்கியது, எனவே, திரு அவையை அகில உலக மீட்பின் கருவியாக நீ நம்பி ஏற்றுக் கொள்ளவேண்டும். இத்தகைய நம்பிக்கைதான் உன்னைப் பண்படுத்தி, உன் சக்தியை நீடித்து நிலைத்து நிற்கச் செய்யும்.

**திரு அவையில் அதிகாரத்தை ஏற்றுக் கொள்தல்:**

திரு அவையை நான் அன்பு செய்கின்றேன் என்றால் திரு அவையில் பல்வேறு நிலையில் பொறுப்பில் உள்ளவர்களுக்குக் கீழ்ப்படிதல். திருத்தந்தை முதல், ஆயர்கள் குருக்கள் மற்றும் உன் அருகிலிருப்பவர் வரை அனைவருக்கும் பணிந்திருக்கவேண்டும். நீ திரு அவையை அன்பு செய்வது போல, திரு அவையில் பல்வேறு நிலைகளில் உள்ள பொறுப்பாளர்களும், அனைத்துக் கிறித்தவர்களையும் அன்பு செய்கிறார்கள். இதில் எந்தப்பாகுபாடும் இல்லாமல், ஏழை,எளியவர், புறக்கணிக்கப்பட்டோர் அனைவரையும் அன்பு செய்கிறார்கள். நீ உன்நாட்டில் உள்ள மக்களுக்கு மட்டும் நற்செய்திப் போதனையை அறிவிப்பதில் நின்றுவிடாமல் அயல்நாடுகளிலும் உனது நற்செய்திப்பணி தொடரவேண்டும்.

திரு அவையில் பல்வேறு நிலையில் உள்ள பொறுப்பாளர்களின் ஒரு சில குறைகள்ளக் கடந்து மிக உயர்ந்த நிலையில் அவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். திரு அவையை அன்பு செய்வதென்றால், கனிவோடு பணிந்திருத்தல். அப்போதுதான் உன் மறைத்தூதப் பணி வாழ்விற்கு, பொறுப்பிலிருப்பவர்களுக்குப் பணிந்திருத்தல் மிகத் தேவையான ஒன்றாக உணர்ந்து கொள்வாய். எந்த அளவுக்குத் திரு அவைக்குப் பணிந்திருக்கிறாயோ, அந்த அளவுக்கு கிறிஸ்து உன்னைத் தன் பணி செய்யப் பயன்படுத்துவார். இந்த முழு நற்செய்திப் பண்பானது திருவுளச் சபையாரைச் செயல்பட பணிக்கின்றது.

**உலகுக்கு நற்செய்தியை அறிவிக்க:**

புனித பவுலடியார் இவ்வாறு வலியுறுத்திக் கூறுகிறார். ‘‘ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவையே நாங்கள் உங்களுக்குப் போதிக்கின்றோம்’’ (2கொரி:4:5) நற்செய்தியை அறிவிப்பதென்றால் ஆன்மாக்களை இயேசுவின்பால் இட்டுச் செல்ல (உரோ: 15:16) இன்றைய தொலைத் தொடர்பு சாதன வளர்ச்சியால், தொலைக்காட்சிகளில், பூமியில் உள்ள பல்வேறு வகையான மக்களை ஒரு நொடிப் பொழுதில் காண முடிகிறது. பெரிய மனுக்குலக் குடும்பத்தைப் பற்றிய தெளிவான அறிவும், புரிதலும் கிடைக்கின்றது. அதேவேளையில் பத்துக்கட்டளைகள் நமக்குக் கற்றுத் தருகின்ற பிறரை மதிக்க

வேண்டும் என்றபண்பும், இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டிய அன்பைப்பற்றியும் சரியான புரிதல் இருக்கின்றது. உனது அகில உலக அன்பானது இயேசுக்கிறிஸ்வின் அன்பின் பிரதிபலிப்பாகும்.

- கடவுளின் திருமகன் நமக்காக இறந்தார்.(உரோ: 5:8)
- தம்மையே வெறுமையாக்கி அடிமையின்வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். (பிலிப்: 2: 6-8)
- நமது மீட்புக்காக அவர் தன்னையே கொடுத்தார். (கலா: 1:4)
- நம் பாவங்கள் அனைத்தையும் மன்னித்து விட்டார். (கொலோ: 2:13)
- அவரே நமது வாழ்வு. (கொலோ: 3:4)
- கிறிஸ்துவே நமது ஞானம், நமது நீதி, நமது மீட்பர், நம்மைக் கடவுளுக்கு ஏற்புடையவராக்கியவர். (1கொரி: 1:30)

எனவே இயேசுவைப் போல நீ ஓர் அப்போஸ்தலனாக இருக்க விரும்பினால், உன்னை அவருக்கு அர்ப்பணமாக்கி, உன்னை முழுவதும் அவருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும், அவர் மன்னித்ததுபோல நீயும் பிறரை மன்னிக்க வேண்டும், அருளின் வழியாக இயேசுவே உனது வாழ்வும், மீட்புமாக இருக்கிறார். உனக்கு அவர் வழங்கியுள்ள இயற்கைக்கு அப்பாற்பட்ட அருள்வாழ்வின் மூலம், தனது இரக்கத்தினால் உனக்கு மீட்பும், நிபந்தனையற்ற விதத்தில் உனக்கு மன்னிப்பும் வழங்குகிறார்.

எவரும் இந்த உயர்ந்த நிலையைத் தானாகப் பெற முடியாது. நீ வாழும் காலத்தில், நீ ஒருசிலரோடு குழுவாக இணைந்து கடவுளை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ள முடியும் மேலும் திரு அவையையும், உனது அயலாரையும் அறிந்து அன்பு செய்ய முடியும். இவ்வாறாக உனக்கு வழங்கப்பட்ட இறையருள் வல்லமையால் உனது அழைத்தலுக்கும், மறைத்தூதுப் பணிக்கும், தாராளமாக உன்னையே அர்ப்பணிக்கமுடியும்.

*****